உ

ஸ்ரீ கணபதிக்கு வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டமயம்.

ஸ்ரீ சிவஞானபோத மாயாவாத தத்துவப்பிரகாசிகை

என்னு முரையின் மறுப்பாய

சிவத்துவப்பிரகாசிகை.

இது

ஸ்ரீ சிதம்பரம் ஸ்ரீ சிவஞானத்திருக்களி

திரு அவைபுடையருட் சிறந்தோரும்

ஆடூர் உபாத்தியாயருமாய

ஸ்ரீமத்-சிவப்பிரகாச சிவசாரதி யவர்களா லாக்கப்பட்டு

ஸ்ரீ சிதம்பரம் அச்சுக்கூடத்திலும்

சென்னை பிரிட்டிஷ் இந்தியா அச்சுக்கூடத்திலும்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை ரூபா இரண்டு.

உ

ஸ்ரீ கணபதிக்குவணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டமயம்

ஸ்ரீ சிவஞானபோத மாயாவாத தத்துவப்பிரகாசிகை

என்னும் வியாக்யானத்தின் மறுப்பாகிய

சிவத்துவப்பிரகாசிகை.

[illegible]-பாஷையும் பிறபாஷையும் தெரியும், அதில் 4-பாஷையில் மிகத் தேர்ச்சி 4-பாஷையும் பிறவும் பழக்கம் என்றும், அளவில்லாத கல்வி சாமர்த்தியம் உடையரென்றும் கூறினார். இவைகளுக்கு ஏது என்னை, ஒன்றுமில்லாமையால் இவ்வாறு கூறும் இவரையும், யாம் அளவில்லாத கல்வி சாமர்த்தியம் உடையரென்கின்றோம், தவிரவும் அவ்வாறே அவரையுமாறி அளவுள்ள கல்வியிலும் சாமர்த்தியமில்லை யென்கின்றோம். இந்த இரண்டும் இவர்க்கு உடன்பாடா, அல்லவா? உடன் பாடானால், எமக்கும் அவர்கூறும் கூற்று உடன்பாடாம். அல்ல வானால் எமக்கும் அது உடன்பாடல்ல என்று இவ்வாறு யாம் ஏது வாயிலாக ஏதுவின்றி அவர்கூறும் கூற்றைக் கண்டித்தவாறு காண்க. இவ்வாறே இவர் கூறுவனவெல்லாம் ஏதுவில்லாத உபசாரக் கூற்றாத லால், மன்னனென்படி மன்னுயிரப்படி, என்றபடி, ஆசிரியர் ஏதுவின் றிக்கூறுதல் இயல்பாதலால் அவ்வாறு அவர் மாணாக்கரும் ஏதுவின் றிக்கூறுதல் இயல்பாதலறிக, இனி இவர் அவரைபரிசுத்த வாழ்வுடைய ரென்கின்றார் அதற்கும் ஏதுக்கூறினாரில்லை, ஆதலால் அதுவும் உபசார மாதலறிக, இனி சன்னியாசி என்ற சொல்லளவுக்குத் தக்கபடி உண் மைச்சன்னியாசி அவர் என்றார். அவரோ 331-ல் சாதுக்களைக்கண்டு தெளியமுடியாது, வேடமில்லாவிட்டால் என்று கூறுதலால் அதுவும் உபசாரமாதலறிக. அறியவே அவரே சுவாமியென்று கூறற்குரியவர் என்றார். என்றதும் அவ்வாறே உபசாரமாதலறிக, சித்தாந்த ஆதார வான இந்நூல் அவர் போன்றவரே விரிவுரையெழுத எல்லாவித்தத் தானும் வல்லவர் என்றார். சித்தாந்த ஆதாரவு இந்நூலெனவே

சிவாகமமெல்லாம் சித்தாந்தத்திற்கு ஆதாரவு என்பது பெறப்பட்டது. அதுவும் உபசாரமேபோலும். ஆனால் அவரே என்று கூறாமல் அவர் போன்றவரென்று கூறுகின்றது யாரை ஒப்பிட்டோ அறிகிலம். ஆனால் அவரேஎன்று கூறுவதே இவர்கருத்தாதலால், அவர்போன்றவரென்றது உபசாரமேயாம். வியாக்யானமுறை யறியாமல் சிவாசாரியர் வியாக்யானத்தைக் கண்டு பெரும்பாலும் அதைப் பின்பற்றியும், சிறுபான்மை தம்முடைய எதிரியாரைப் பின்பற்றியும், எழுதினவராயினும், சிவாசாரியர் வியாக்யானம் விபரீத வியாக்யானமென்றறியாமல் அவருக்கு சிவாசாரியப் பட்டமிருத்தலாலும், சிவாகம வசனங்களை உதகரித்தலாலும், அவர் வியாக்யானம் சிவாகம உண்மை முறையே போலும். ஆதலால் நாம் அதை அனுசரித்தலால் நாமுஞ் சிவாகமியாய்விடுவேம் என்று, மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கினவன் போல் அம்முறையை அனுசரித்து, அவ்வாறனுசரித்தது, பிறர்க்குத் தெரியாமல் செய்தாராயினும், முறை அவர் வியாக்யானமுறையேயாம். எதனாலென்றால், அவர் ஒருவாக்கியம் கூறி, அதற்கு ஒன்பதினாயிரம் வசனம் உதகரிக்கும் முறையுடையர். அந்த முறைபற்றி இவரும் ஒரு வியாக்கியானம் கூறி, ஒன்பதினாயிரம் வசனம் உதகரித்தலாலும், அவர் வசனங்களையே மறைத்தெடுத்து உதகரித்தலாலும் அறிக. இனி இந்நூலுக்கு 4 உரையுள்ளதென்றார். ஸ்ரீ கண்டர் வியாக்யானம், ஞானப்பிரகாசர் வியாக்யானம், சதாசிவ சிவாசாரியர் வியாக்யானம், முதலிய வியாக்யானங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆதலால் இவர் நாலென்பதும் உபசாரமேயாம். இனி அந்த வியாக்யானங்களில், சிவஞானஸ்வாமி வியாக்யானம் முந்தினது. சிவாக்கிரயோகிகள் வியாக்யானம் பிந்தினது என்றார். சிவஞானஸ்வாமியே, சிவாக்ரயோகிகள் வியாக்யானம் ஞானப்பிரகாச வியாக்யானம் முதலிய வியாக்யானமெல்லாம், தனக்குமுன்னே இருக்கின்றன என்று கூறினார். இவற்றில் உண்மையெது, உபசாரம் எது என்றால், உபசாரம் கூறுதல் இவர் முறையாதலால், இவர் கூற்றே உபசாரமாதலறிக. இனிச் சிவஞானஸ்வாமிகள் வியாக்யானம் உண்மையாலேயே மிகவும் ஆராய்ந்தெழுதப்பட்டது. அரிய விஷயம் அரிய நடையுள்ளது. வித்துவத்தை விளக்கும் பரிபாஷையுள்ளது. அதுபல இலக்கியங்களும் தொல்காப்பிய இலக்கணமும் கற்றவர்களே அறிவார் என்றார். முதலில் உண்மையாலேயே மிகவும் ஆராய்ந்து எழுதப்பட்டதென்றவர் தாமே பின்னே அவர் தனது வித்துவத்தை

காட்ட எழுதினதென்று கூறினார். இவ்விரண்டில் உபசாரம் இது,
உண்மை இது, என்று தெரியவில்லை, ஆனாலும் பின்னை குப்புசாமி
ராசுவோடு, சிவஞானசுவாமியை ஒப்பிடுகிறது மகாபாவம் என்றும்,
அவர் அச்சில்லாத காலத்தினராதலாலும், இவர் அச்சுள்ள காலத்தின
ராதலாலும், சிவஞானஸ்வாமியிலும் குப்புசாமிராசு கல்வியிற் பெரிய
வர் என்றுங்கூறுதலால் முந்தியது உபசாரமாதலறிக. இனிச்
சாமானிய கல்விமான்களாலும் இலேசிலறியக் கூடியதாயுள்ள இப்
புதிய உரைவந்தது மிகமனக்கிளர்ச்சியை தரத்தக்கது.

ஆனாலும் இப்புதிய உரையில் பரிபாஷையும், அரிய நுட்பங்களும்
இல்லாமலில்லை. சிவஞானஸ்வாமிகள் உதாரணத்தை அனுசரித்து,
அவசியமான இடங்களில் விரிவுரைகளும் எழுதப்பட்டது. ஒவ்
வொரு சூத்திரங்களுக்கும் விரிவுரை இயற்றியுள்ளார், இதில் நூதனாம்
சங்களும் உண்டு என்றார். சாமானிய கல்விமான்களென்றது,
மாயாவாதகல்வி மான்களே போலும். ஏனென்றால் அவரே
சாமானிய கல்வியுடையராதலாலும், சாமான்யமான கல்வியுடையவர்
கள் இலேசிலறியக்கூடியதாயுள்ள, விஷயம் மாயாவாதமென்பது உல
கப்பிரசித்தமாதலாலும், சித்தாந்தம் அவ்வாறன்றி அரிதென்று கூறு
வது உலக வழக்கமாதலாலும், இனி மனக்கிளர்ச்சியை தரத்தக்
கது என்பதற்கு வினைமுதல் கூறாமையாலும், சைவசித்தாந்திகளால்
மிகவும் விரும்பப்படத்தக்கது என்பதுமாறி, நம்மால் மிகவும்
வெறுக்கப்படத்தக்கதாய் இருத்தலாலும், அது உபசாரமாதலறிக.
இனி பரிபாஷையும், அரிய நுட்பமும் இல்லாமல் இல்லையெனவே,
அது எவையும் இல்லை என்பார்க்குக் கூறும் உபசாரவார்த்தையாத
லறிக, இனிப்பாசத்தோடுளை என்பதற்கு, மலத்தோடு கட்டுற்றாய்
என்று சிவஞானஸ்வாமி கூறியதை மறுத்து, பிராந்தி சித்தனை
யென்றும், இன்னுமிவ்வாறே சிவஞானஸ்வாமி மெய்கண்ட சிவன்
முதலியோர்களை தூஷித்திருக்கவும், சிவஞானஸ்வாமி உதாரண
த்தை அனுசரித்து அவசியமான இடங்களில் விரிவுரையும், ஒவ்
வொரு சூத்திரங்களுக்கும் விரிவுரையும் எழுதியுள்ளாரென்பது
உபசாரமாதலறிக. இனி சிவஞானசுவாமி உதாரணமென்றது எவ்
வாறு உபசாரமோ, அவ்வாறே அவசியமான இடங்களில் விரி
வுரையென்பதும், ஒவ்வொரு சூத்திரங்களுக்கும் விரிவுரை யென்
பதும் உபசாரமாம். இனி சிவாசாரியர் விபரீதப் பொருள் கூறி
அதற்கு ஒவ்வாத, சிவாகம வாக்கியங்களை வாரிக்கொட்டினது

போல் இவர் விவர்த்தப்பொருள் கூறி, அதற்கு ஒவ்வாத உபநிஷத் வசனங்களையும், சிவாசாரியர் வாக்கியங்களையும், வாரி வாரிக் கொட்டுதலையே விரிவுரை விரிவுரையென்று, இரண்டு முறை கூறினார் போலும். அவ்விருமுறை மாயாவாத முறையன்றி சிவாகமமுறை யன்மையறிக. இனி இதில் நூதனம்சங்களும் உண்டு என்றார், உம்மையால் இல்லாமையே பெறப்பட்டது. படவே உம்மை உபசாரமாதலறிக.

இனி நூதனம்சங்களென்பதும், பரிபாஷையென்பதும், எமக்கு நன்றாய் விளங்கவில்லை. ஆனால் மறைத்துப் பேசுவதையே பரிபாஷையென்று, உலகத்தில் வழங்குவதுண்டு, அதனால் சிவதூஷணம், சிவாகமதூஷணம், சிவாசாரிய தூஷணங்களை மறைத்துக்கூறுதலால், அத்தூஷண மறைப்பையே பரிபாஷை என்றார் போலும். ஆகவே நூதனம்சமென்றது சிவாகமத்தில் மாயாவாத அம்ஸங்களை நூதனமாகக் கூறுதலாம். அரிய நுட்பம் எனவே எளிய நுட்பமும் பெறப்படும். இனி சிவாகம உபாதானத்தை தூஷித்து, விவர்த்தோபாதானம் முதலியன கூறுதல் அவசியமான இடங்களில் விரிக்கும் விரிவுரையாகும் போலும். ஆனால் சிவஞானஸ்வாமி உதாரணததை அநுசரித்து அவசியமான இடங்களில் விரிவுரை எழுதினாரெனவே, அவசியமில்லாத இடங்களில் விரிவுரை செய்யவில்லை. யென்று பெறப்படுதல் ஒவ்வொரு சூத்திரங்களுக்கும் விரிவுரை யெழுதினாரென்பதோடு மாறுபட்டு, உபசாரமாய், விரியாத உரையெழுதலை விளக்கி, அதுவும் உபசாரமாய் உரையன்மைக்கு சாக்ஷியாதலறிக. இனி வேதாகமங்களின் உண்மைப்பொருள் ஒன்றே யென்றார். அவை அவ்வாறே ஒன்றேயாயின், இரண்டு பேர்பெற்று இரண்டு நூலாதல் கூடாது. அது குப்புசாமிராசு அவர்களும் பொன்னம்பலப்பிள்ளை அவர்களும் போலாம். ஆகவே, ஒன்றேயானால் ஒரு நூலாகாமல் இருநூலாதல் உபசாரமென்பது அவர் கருத்துப் போலும். ஆனாலும் முடிவில் ஒரே கருத்தை உடையன என்று கூறி அதற்குப் பிரமாணம், "வேதமொடு ஆகமம்," என்னும் திருப்பாட்டென்று கூறினார். அந்தப் பிரமாணத்தில் இரண்டந்தம் அபேதமும் என்று கூறப்படுவதன்றி, ஒன்றென்று கூறப்படாமையால் அது உபசாரமாதலறிக. இனி அதில் அபேதமென்றது ஒன்றென்னும் பொருளாயின், எகாத்ம வாதமென்பதற்குப் பதிலாய் அபேதாத்மவாதமென்று கூறுதல் வேண்டும். அவ்வாறு அவர் கூறாமை

யாலும் ஏகம் அபேதம் என்பன ஒரு பொருட்கிளவி ஆகாதபடியாலும், அன்றியும் அதில் பொதுச்சிறப்பு என்பதோடு மாறுபடுதலாலும் அது உபசாரமாதலறிக. இனி அப்படி அல்லவானாலும் அவ்விரண்டின் கருத்தும் ஒன்றென்று நிரூபித்தார் என்றார். இரண்டின் கருத்தும் எவ்வாறு ஒன்றாகும், இனி பொருளொன்றாகாத இரண்டு நூல்கள் கருத்தொன்றாவ தெவ்வாறு, ஆதலால் பொருளொன்றாகாத வேதாகமம் இரண்டும் கருத்தொன்றாமென்பது உபசாரமன்றி உண்மை ஆகாதாம். ஆகவே அவற்றின் கருத்து ஒன்றென்று நிரூபித்தாரென்பதும் உபசாரமாதலறிக, இன்னுமிரண்டிற்கும் இருப்பதாகக் கருதும் வேற்றுமையை ஒற்றுமைப்படுத்திக் காட்டி இருக்கிறார் என்றார், அதுவும் இவ்வாறே உபசாரமாதலறிக. அவ்வாறானால் வேதாந்த சித்தாந்த சமரசமென்று கூறுவது என்னையெனில், சமரசம் அபேதம் ஒன்று என்பன ஒரு பொருட்கிளவி ஆகாதபடியால் அச்சமரசப்பொருள், அச்சமரசம் கூறினார் வழி வந்தவர்கள் மாட்டுக்கேட்டுணர்க. இனி ஒவ்வொரு முக்கிய விஷயங்களுக்கெல்லாம் அச்சாகாத நூல் வசனங்களை காட்டுதலால் அவர் கல்விச் சாமர்த்தியம் அறியலாம் என்றார். சிவஞானசுவாமிகள் அச்சில்லாத காலத்தவரானபடியால் இவரினும் கல்வியில் குறைந்தார், இவர் அச்சுள்ளகாலத் தவரானபடியால் கல்வியில் அவரினும் பெரியர் என்றார் தாமே, அச்சாகாத நூல் வசனமெடுத்துக் காட்டல் பெரிய கல்விச் சாமர்த்தியம் என்று கூறுகின்றார். ஆனால் இது உபசாரத்தின் உபசாரமேயாம். என்னை, இவர் அவர் அச்சாகாத நூல் வசனங் காட்டினேன் என்று, அவர் சொல்லக்கேட்ட வசனங்களெல்லாம் சிவாசாரியர் காட்டிய அச்சில் வந்த வியாக்கியான வசனங்களல்லது, அச்சில் வராததாய் இவர் சொந்தமாய்க் காட்டியதொன்று மில்லாதபடியால் இன்னும் அச்சில் வராத வசனமென் றிவர்கூறும் வசனங்கள் சிவாசாரியர் வசனமென்பதற்குச் சாக்ஷி, அவர் உபநிடத வசனங்கட்கு கணக்குக் காட்டுதலும், அவ்வாறே அந்த வசனங்கட்கு அச்சில் வராதவசனமென்று அவர் கூறும்வசனங்களுக்கு கணக்கு காட்டாமையுமே சாக்ஷியாம். இனி முன்னே அச்சில்லாத காலத்தவராகிய சிவஞானசுவாமி அச்சுள்ள காலத்தவராகிய இவரிற் கல்வியிற் குறைந்தவரென்று கூறிவிட்டு, அச்சில் வராத வசனத்தை இவர் காட்டுதல் பற்றி இவர் கல்வி சாமர்த்தியம் பெரிதாமென்கிறார். அச்சில் வந்த வசனங்களை அதா

வது, அச்சில் வாராத வசனமென்பது பற்றி சாமர்த்திய மென்றார் போலும். இனிச் சிவஞானஸ்வாமி இக்காலத்திலிருந்தால் இன்னுங் கற்பார், எப்படியானாலும் நான் கூறினதே உண்மை.

அதாவது குப்புசாமிராசு சிவஞானசுவாமியிற் பெரியரென்பதே உண்மையென்றார். அவர் சிவஞானசுவாமியிற் பெரியவரென்பது அவரோடு சிவஞானசுவாமிகளை ஒப்பிடுதல் பாவம் என்று கூறியது பற்றி ஆக்ஷேபனை கிடையாது. இனி இவை உண்மை உபசாரங்களாதல். அச்சில் வாராத நூலென்று, அச்சில் வந்த நூலையெடுத்து, அவர் கூறுதல்பற்றி நன்றாய் விளங்கும். இனி குப்புசாமிராசு பல வருஷங்களாக இடைவிடாது உழைத்து இவ்வுரையை முடித்துக் கொடுத்துவிட்டு காசியாத்திரை போய்விட்டாரென்றார், ஆனால் சிவாகமத்தை மாயாவாதமென்று புரட்டிக் கூறுதல் ஒருவருஷம் 2 வருஷங்களில் முடியுமா? இல்லை, பன்னிரண்டு வருஷங்களில் முடியுமா, முடியாது, என்னை? பல வருஷஞ் செல்லுமானாலும் அவைகளிலும் இடையில் விட்டால் புரட்டு யுத்திகள் மறந்துபோம். ஆனபடியால் பல வருஷமாக இடைவிடாமல் உழைத்தால்தான் சிவாகமங்களை குட்டிச்சுவராக்கும்படி எடுத்துகொண்ட சங்கதை முடியும். ஆதலால் அப்படியே முடித்துக் கொடுத்துவிட்டு, அவர் தனது வியாக்கியான முடிவு 331-ல் தான் கூறும், இப்பொருள் சுருதியாதிக்கட்கு உடன்பாடேயாம். ஆனாலும் அது இச்சூத்திரப் பொருளல்ல என்னும் முகவுரை 3-ல் சிவாகமம் 28-ம் அவைதிகம் (46)ல் பௌஷ்கரவசனம் விவரீதம் என்றும், இவ்வாறே சிவதூஷணம் சிவஞானபோத தூஷணம், சிவாகம தூஷணம், சிவாசாரிய தூஷணம் முதலிய தூஷணங்கள்தான் செய்தது மகாதோஷமென்பது அவருக்குத் தெரிந்த விஷயமாதலால் கெங்காஸ்நானத்தினால் அது தீர்ந்து சுத்தப்படலாம் என்று காசியாத்திரை போயிருக்கின்றார் போலும், போனாலும் அவர்களுக்கு சிவஞானபோத வியாக்கியானமென்று பட்டம் சூட்டினது எவ்வாறு விவர்த்தமோ, அவ்வாறே அவரெண்ணமும் விவர்த்தமாம். எதனால் என்றால் அச்சிவதூஷணம் சிவாகம தூஷணம் சிவாசாரிய தூஷண முதலிய தூஷணங்கட்குப் பரிகாரமில்லையென்று சிவாகமம் கூறுதலானும், அச்சிவாகம மூலை யவர் அறியாதபடியாலும். அது கிடக்க. இனி யாம் அவர் கூற்றின் கண்டனமண்டன நூலுக்கு பொன்னம்பலப்பிள்ளை அவர்களை தன் நூலுக்கு முகவுரை கொடுக்கும்படி அவர் கேட்டதுபோல் யாம

கேட்கமாட்டோம். எதனாலென்றால், அவர் வியாக்யானத்தில் இல்லாதவற்றை உள்ளனபோல் உபசாரமாக்க் கூறினபடியாலும், அவ்வாறே எமது நூலிலும் உள்ளனவற்றை இல்லாதனவென்று கூறுவராதலாலும். நித்யாநந்தம் நிறை பரிபூரணனென்பது 162-ல் பிரமம் அவித்தையினால் மறைபட்டுள்ள, பிரபஞ்சவிஷய ஆனந்தங்களை அந்தக்கரண பிரதிபிம்ப சிதாபாச அறிவாகிய, சீவாத்மாவாயிலாக அறிந்தனுபவிக்குமென்றுஞ் சுருதியாதிகள்பற்றி அநித்யாநந்தம் நிறைபுமென்னுமவர் சுருதிக்கு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி நிறைபரிபூரணனென்பது 5-பக்கம் குடம் சுவர்முதலிய பதார்த்தங்கள் யாவும் பிரமத்தின் வேறில்லை எனவே 20. வியாபக வியாப்பியத் தன்மை மித்தையென்பதுபற்றி அபரிபூரணனென்பதற்கு மாறுபட்டு மாயாவாதமாதலறிக, இன்னும் நிறைப்பரிபூரணனெனவே, நிறையாத பரிபூரணனாதல் பெறப்படுதலுமது. இனி சுத்தன் ஏகன் சொலற்கரும்பான்மையன் என்பன, அசுத்தன் அனேகன் சொலற்கெளியன் என்னுமவர் சுருதியாதிகட்கு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி எறும்புகடையானை யெண்ணிலுயிரும். உறுகிரிமுதலா உற்ற பல் பொருள்களுந்தானேயாகிய தத்துவன் உத்தமன் என்புழியென்பது, யானைமுதல் எறும்புகடையெனவே, மக்கள் தேவர் நாகர் அடங்காமை, கிரி முதலிய பொருளெனவே, எறும்பு முதலிய பொருளாகாமை, பொருளுயிராகாமை உயிரும் பொருளுந் தானேயாகிய தத்துவனெனவே, தானே யாகாத தத்துவனாதல்கள் பெறப்படுதலும் 65 கற்பிதபேதத்தால் அவனே வேறு கர்த்தாவாகிய வீசனாதல் குடம் சுவர் முதலியனவாதல்கள்பற்றி மத்திமனாதலும் அதமனாதலும் பற்றி, உத்தமனாகாமை பெறப்படுதலும் பற்றி, மாயாவாதமாதலறிக. இனிபானேர் மொழி பங்கனென்பது ஏகன் என்பதற்கு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி பரமனென்பது கற்பிதபேதத்தால் வேறு கர்த்தாவாகிய அபரனென்பதற்கு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி மக்கள் மெய்யுணர்வு மாறுதுற்று எனவே, மக்களல்லாதன மெய்யுணர்வு மாறியுறலாமென்பது பெறப்படுதலின் அது மாயாவாதமாதலறிக. இன்னும் மெய்யுணர்வு மாறுதுற்றெனவே, முன்னுள்ள மெய்யுணர்வு மாறுமைக்காக மொழியப்பட்டது. வேதமென்பது பெறப்படுதலின் அது 181, பிரபஞ்சத்தை நோக்கியபின் பந்தப்பட்டுணர்வுமாறு மென்பதோடு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி தக்க நன்னிலையைச் சார்ந்திடுமாறெனவே

தகாதநன்னிலை யென்பதொன்று பெறப்படுதலின் அது மாயாவாத மாதலறிக. இனி வேதப்பொருள் முரணுறுதறிய வழிவழியாக வரும் பலநூல்களுளொன்றாயுள்ள உயர் சிவாகமத்துளெனவே, முரணுவதாகிய வேதப்பொருள் முரணுறுதறிய ஆகமாதி பல்நூல்கள் வந்தனவென்பது பெறப்படுதலின், அது முகவுரை (4) காமிகாதி பேதங்கட்கு மகேசுரன் கருத்தாவென்பதோடு மாறுபட்டு மாயாவாத மாதலறிக. இனி வழி வழியாகவரும்வழி வழியும் மாயாவாதமாதலறிக. இனி மக்கள் மெய்யுணர்வு மாறுதுற்று தக்க நன்னிலையைச் சார்ந்திடுமாறு, மொழி. வேதப்பொருள் முரணுறுதறிய வழிவழியாகவரும் பல நூலெனவே, மக்கள் மெய்யுணர்வு மாறுதுற்று தக்க நன்னிலையைச் சார்ந்திடுமாறு மொழிந்தது வேதமொன்றே, வழி வழியாகவரும் பலநூல் முரணுதலறிய வந்தனவன்றி மக்கள் மெய்யுணர்வு மாறுதுற்று தக்க நன்னிலைமை சார்ந்திடுமாறு வந்தனவல்ல என்பது பெறப்படுதலும், அவர் வேதம் அபௌருஷேயம் என்பதற்குமாறாக மொழி வேதமெனவே, வேதம் பௌருஷேயம் என்பது பெறப்படுதலும் மாயாவாதமாதலறிக. இனி சிவாகமத்துள் நன்றாய் விளங்கும் நற்சிவஞானபோதமெனவே, சிவாகமத்துள் நன்றாய் விளங்காத பொல்லாச் சிவஞானபோதமொன்றுன்மை பெறப்படுதல் மாயாவாதமாதலறிக.

இனி, அதற்குப் பொருளறியாமலே நிறையவியற்றினர். பலருரை அவ்வுரைமக்கட் காணுகாது வெவ்விய தீமைவிளைத்து வருவது என்புழி, பலருரை விளைத்துவருவது என்பது எவ்வாறு முடிவறியாது, எத நிறைய எழுதினரோ அவ்வாறே பொருளறியாமைக் கேது இது என்னது பொருளறியாமலென்றெழுதவே, ஏதநிறைதல் அரணுகாமை தீமைவிளைத்தல்கள் ஏதநிறைந்து மாயாவாத மாதலறிக. இனி தன்மய நிலையைச்சார்ந்த மகாமுனியென்பது. 181-ல் பிரமம் மேலுமேலும் பிரபஞ்சத்தை நோக்கித் தன்மயமாய் பந்தப்படுமென்பதற்கு மாறுபட்டு மாயாவாத மாதலறிக. இனி, நல்லோர் பொருந்து மிவ்வுரை யெனப்புகல வென்பது மாயாவாத முறைபற்றி இவ்வுரை பொருந்துதற் கேதுவின்றிப் பொருந்துமென்று புகலு நல்லோருளொருவராகிய இவர் ஏதுவின்றிப் பொருந்துமென்று புகன்றவற்றை யாம் ஏதுவாயிலாகப் பொருந்தாதென்று புகலுறும். ஆகலின், ஏதுவின்றி நல்லோர் பொருந்து மிவ்வுரையெனப்புகல என்பது பெறப்பட்டு அது மாயாவாதமாம். ஆகவே, அவ்வுரைசுருதி அர்த்தத்தைச்

செவ்வே விளக்கிவரும். வருதலின் சிவஞானபோத அர்த்தத்தைக் கோணலாய் மறைக்குமென்பது பெறப்பட்டு, நானுமறியேனவளும் பொய் சொல்லாள், என்னும்படி மொழிபற்றிச் சிவஞானபோதப் பொருளை கோணலாக மறைத்து மாயாவாதப் பொருளையே செவ்வை யாய் விளக்கினரென்று யதார்த்தங் கூறினாராயிற்று.

ஆகவே, சிவஞான போதத்துக்கு உரையெழுதுவதுபோலக்கூறி அதனையுஞ் சிவாகமங்களையுங் கெடுத்தற்கே வந்தாரன்றி, உரை யெழு தற்கு வந்தாரல்லரென்பது தானே பெறப்பட்டது. படவே சங்கரா சாரியர் தமது உபநிடத பாடியத்துள் மாயாப்பிரதிபிம்ப ஈசரனாற் செய்யப்பட்ட சிவாகமம் அப்பிரமாண்ணியம் எனக் கூறிய சிவாகமம் அச்சங்கராசாரியர் வழி வந்த உரையாசாரியர் பிரமாணமென்று கூறும். கூறும் கூற்று, புறத்திலே பிறருக்கு சிவாகமத்தை பழிச் சினவர்போற் கூறி, அகத்தே சிவாகம தூஷணஞ் செய்தாரே தவிர வேறன்றென்பது இனிது புலப்பட்டது. சீனிவாசகஸ்மார்த்தர் முதலிய பின்னோரும், சங்கராசாரியர் முதலிய முன்னோரும், இவ் வுரையாசாரியரும், பிறரும், சிவாகமதூஷணஞ் செய்திருந்தும் மறு படி இவ்வுரையாசாரியர் சிவாகம பூஷணஞ்செய்கிறேனென்பது அய தார்த்தமேயல்லது, யதார்த்தமாமாறு எவ்வாறு. இது பற்றியும், இவர் சிவாகமதூஷணக் கருத்தெல்லாம் வெட்ட வெளியாய் விளங்குதலின், பொன்னம்பலப்பிள்ளை அவர்கள், சுப்பிரமணிய சாஸ்திரிகள் பால சுப்பிரமணியபிள்ளையவர்கள் முதலானவர்கள் கூறுவனவெல்லாம் விவர்த்தமாதல் பின்னே கூறுதும். அதுகிடக்க, “அத்வைத பிரம வித்யாமபி நிஷ்டமூபேயிவான், சர்வதர்சன நிஷ்ணாத சகலாகம் சார வித்வியதா நித்யாம் சிவாத்வைத சுகசந்தான சித்தயே சிவஞான போதஸ்ய வியாக்யா தத்வப் பிரகாசிகா சந்த்ரதாரகம்” என்புழி, மேல் அத்வைதம் என்பது, கீழ் சிவாத்வைதம் என்பதோடு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. அன்றன்று அத்வைதம் கூறுமாயாவாதமும் சிவாத்வைதம் கூறும் சிவாகமமும் மாறுகாவாம். அதற்கு முகவுரை 7-ல் உரையெழுதப் புகுந்த உண்மை நோக்கமிதுவே, யென்னு முரை யாசாரியர் வாக்குப் பிரமாணமெனில் அற்றன்று, சிவாகமம் சிவாத் வைதம் கூறுமென்பது, இவர் வியாக்கியானத்துக்கு வழிகாட்டின் சிவாசாரியர் வியாக்கியானம் ஆதலால் அது நமக்கு உடன்பாடன் றென்றறியாமல் இவர் கூறினர் போலும். முறையே அல்லது சிவாகம முறையன்றென்க. இனி “சாவதான நிஷ்ணாத சகலாகம சாரவித்”

என்பது மாயாவாத முறையாதல் எவ்வாறு, அவ்வாறே சந்ரதாரகம் என்பது, கடசல சந்திரனென்னும் மாயாவாதமுறையாதலறிக. அது நிற்க. இனி, "பொன்வரையிினொளிர் சிமையக்கயிலை வடவடி வாழும் புனிதன் முன்னாள், என்வரையு மருள்பழுத்த வெழில் நந்திக்குலகுய்ய இயம்பும் வேதச்சென்னியுரை பொருட்சாரச் சிவ ஞானபோதம்'' என்புழி.

நந்திக்கு உலகுய்ய இயம்பும் சிவஞானபோதமென்பது முகவுரை 2-ல் குருமுனிவருக்கு எல்லா ஆகமங்களின் சாரமாக பன்னிரண்டு அனுட்டிப்புச் சந்தசுவடிவ சூத்திராத்மகமான சிவஞானபோதமென் னும் சாஸ்திரத்தினை பரமசிவம் சதாசிவமூர்த்தியை அதிட்டித்து நின்று உபதேசித்தருளினரென்றும், உரையாசாரியர் முகவுரையோடு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. இனி, வேதச் சென்னியுறை, பொ ருட்சாரச் சிவஞானபோதமென்பது, முகவுரை, 2-ல் எல்லாவாகமங்க ளின் சாரமாக, 12 சூத்திரார்த்மகமான சிவஞானபோதமென்னும் ஸாஸ்திரத்தினை உபதேசித்தது என்பதற்கு மாறுபட்டு மாயாவாத மாதலறிக, இனி பொன்வரையினொளிர் சிமயக்கயிலை யென்பது மூல மின்றிப்படைத்த மாயாவாத முறையென்பது அவர் முகவுரை மறுப் பில் யாம் கூறுமாறு பற்றியறிக. இனி, என்வரையும் அருள் பழுத்த வெழில் நந்தி என்பது, இவ்வுரையானது எவ்வாறு, உரைபோற் காட்டி, இந்நூலையுஞ் சிவாகமங்களையும் கெடுத்தற்கு வந்ததோ அவ்வாறே, இந்நூலைக் கெடுத்தற்கு வந்த சிவாசாரிய தூஷண வாக்கியமாதல், அவர் தம் வாக்கியத்தில் எங்கும் இவ்வாறு கூறுமை பற்றி அறியப்படும் இனி, 11 உரைவல்லார்களொத்திடவே வேதாந்த மொன்றென்றே சித்தாந்த தத்துவப்பிரகாசிகை என்றோருரை, நன் றருளினன் என்றார். என்புழி வேதாந்த சித்தாந்த மொன்றென் றார். வேதாந்த சித்தாந்த மென்னு மிரண்டும் ஒன்றாயின் அவை இரண்டுமொன்றென்பதற்கு ஏதுக்கூறப்படுக. படா மையால் இரண்டுமொன்றென்பது எவ்வாறு சிவாநந்தசுவாமிகள் குப்புசாமிராசு என்னுமிருவரும் ஒருவராகாமல் இருவரேயாதல் எவ்வாறு அவ்வாறே வேதாந்த சித்தாந்த மென்னுமிரண்டும் இரண் டல்ல ஒன்றென்றலாம் ஆதலால், அது ஏகமே என்று மாயாவாதமாத லறிக. இனி, இரண்டும் ஒன்றாயின் அவை வேதாந்தம் சித்தாந்த மென்று வேறு வேறு பெயர் பெறுமாறு எவ்வாறு, இன்னும் அவ் வாறே அவ் விரண்டும் ஒன்றானால் ஒரு பெயர் பெறுக. ஒரு பெயர்

பெருது இரு பெயர் பெற்றவற்றை ஒன்றென்பது வேதசித்தாந்தம் இரண்டுமறியாது கூறும் கூற்றேயாமென்றறிக. அற்றன்று வேதாந்த சித்தாந்த சமரசம் என்று கூறுதலால் அவ்வேதாந்த சித்தாந்த மிரண்டும் ஒன்றேயாமெனின், அற்றேல் அவ்வாறே வேதாந்த சித்தாந்த மொன்றென்னு நன்னிலே என்று விளங்க கிளந்து பாடப்படுக, படாமையாலும், ஒன்று சமரசம் என்னுமிரண்டும் ஒருபொருட்கிளவியாகாமையாலும், அவ்விரண்டும் ஒன்றென்பதற்கு அது எடுத்துக் காட்டாகாமையாலும் அது மாயாவாதமாத லறிக.

ஆனாலும் "நாதனுரை இவை நாடிலிரண்டதம் பேதமதென்னிற் பெரியோர்க்கபேதமே" என்று கூறுதலால் வேதாந்த சித்தாந்த மென்னுமிரண்டுந் தம்முள் ஒன்றேயெனில் அற்றன்று. அது இரண்டந்தமும் அபேதமென்று கூறியதல்லது. இரண்டந்தமும் ஒன்றென்று கூறாமையாலும், ஒன்றென்பதும் அபேதமென்பதும் ஒரு பொருட் கிளவியாகாமையாலும், ஆமாயில் ஏகான்மவாத மென்பதற்குப் பதிலாக அபேதான்மவாதம் என்று கூறப்படுக. படாமையாலும் சமரசம் அபேதம் ஒன்று என்பன தம்முள் வேறுவேறு பொருளுடைய வேறுவேறு, சொல்லாதலாலும் வேதாந்த சித்தாந்த மென்னுமிரண்டும் ஒன்றென்பது முழுமாயாவாதமாதலறிக. அரியவேயுரைவல்லோர்கள் ஓத்திடவென்பது குறிப்புக்கூற்றாதலால் ஒவ்வாமையாதல் பெறப்படும், படவே. தத்துவப் பிரகாசிகை யென்னும், உரை சிவஞானபோதத்தை மறைத்தற்குவந்த கோணவுரையாய் மாயாவாத சுருதி அர்த்தத்தைச் செவ்வே விளக்குமென்பதனை வற்புறுத்தியவாறு காண்க. ஆதலால் வேதாந்த சித்தாந்த மென்னுமிரண்டின் இயல்புகளை அறியாதவர்களும், அவ் இரண்டினையும் ஒன்றெனக் கூறுரென்க. அதுநிற்க.

இனி சிறந்தனவாகலின் சிவஞானபோதம் எனப்படும் என்புழி எனவே, இந்நயம்பற்றி இவ்வுலகிற் சிறந்தபொருள் எது எது அது அதுவெல்லாம் சிவஞானபோத மெனப்படல்வேண்டும், படாமையாலும், அல்லது மாயாவாத நூலில் சிறந்தனவாய சங்கரபாடியம், பகவற்கீதை முதலியன சிறந்தனவாயும், சிவஞான போதமெனப்படாமையாலும் அவ்வேது மாயாவாத ஆபாச ஏதுவாதலறிக. ஏது ஆபாசமாகவே அதன்பொருள் இனிதில் விளங்க, நூல் பலகாட்டி நுண்ணிதி னாராய்ந்து, ஒப்பிகந்துயர்ந்த உரைவகுத்தருளினரென்னும் பிரதிஞ்ஞை சூனியாதலுங்காண்க. இனி சுருதி அர்த்தத்தை செவ்வே

விளக்கியெனவே சிவாகம அர்த்தத்தை கோணலாய் மறைத்தென்ப தோடு அதன்பொருள் இனிதில்விளங்க ஒப்பிகந்துயர்ந்த உரைவகுத் தருளினரென்பது மாறுபட்டு மாயாவாதமாதல்காண்க. அதுநிற்க. இனி அவர் முகவுரை வருமாறு. ஸ்ரீமன் மேருபர்வதத்தின் சோதி சிகாமென்னும் பெயரையுடைய மகாகயிலாயத்தில் சுத்த மாயா சொரூப வடவிருக்ஷத்தின்கீழ் சுத்த வித்யாமய மந்திரபீடத்தில் சீவர்களின் பாசத்தினை நீக்குதற்பொருட்டு தக்ஷணாமிமுகமாய் வீற் றிராநின்ற சீகண்ட பரமேசுவரனை ஸ்ரீ நந்திகேசுரர் நமஸ்கரித்து சுவாமிமுன்னே சரியாகிரியா யோகபாதங்கள் அனுக்கிரகிக்கப்பட் டன. இப்போது பக்குவான்மாக்கள், நல்ல மோக்ஷத்தை யடைதற் பொருட்டு, ஞானபாதத்தினை அனுக்கிரகிக்க வேண்டுமென்று அதி வினயத்தோடு கேட்க, பகவானும் அந்தப் பிரசினத்தால் சந்தோஷ மடைந்து அவ்வாறே யாகுக என்றனுக்கிரகஞ் செய்யலாயினர் என் னூர். ஸ்ரீ மேருவில் சோதிசிகாமென்னும் பெயருடைய கயிலாய மென்பதொன் றுண்டென்பதற்கு வசனமில்லாமையாலும், காந்தமுத லியவற்றுள் மேருவின்மேல் சோதிட்க மென்பதொன்றுண்டு, அது உருத்திரவாசமென்று கூறப்படும். அன்றி, அவை அதனைக் கயிலாய மென்னுமையின் அதனை கயிலாயமென்பது மாயாவாத முறையாத லறிக. இனி சுத்த மாயாசொரூப வடவிருக்ஷம் என்றும், சுத்த வித்தியாமயமந்திர பீடமென்றுங் கூறுவனவும் மேற் கூறியனபோல் மூலவசனமில்லாத மாயாவாத மாதலறிக. அல்லாமலும் அது சுத்த வித்யாமயமந்திர பீடமென்பது யாதும் தாற்பரியமில்லாமையறிக. இனி மயமந்திர பீடமென்பதும் தாற்பரிய மில்லாமையறிக. இனி மயமான மந்திர பீடமென்றால், மயமாகாத மந்திரபீடமு முண்டென் பது பெறப்படும் அவ்வாறொரு மந்திரபீட முண்டென்பதற்கு வசன மில்லாமையால் அது மாயாவாதமுறை யாதலறிக.

இனி சீவர்களின் பாசத்தை நீக்குதற்பொருட்டுத் தக்ஷிணாபி முகமாய் வீற்றிராநின்ற ஸ்ரீ கண்ட பரமேஸ்வரன் எனவே, ஸ்ரீகண்ட பரமேஸ்வரன் தக்ஷிணாபி முகமாயிருத்தல் சீவர்களின் பாசத்தை நீக்குதற் பொருட்டென்பது பெறப்பட்டது. அதற்கு வசனமில்லாமை யால் அது மாயாவாதமாதலறிக. இனி அவ்வாறு கொள்ளினும் வடக்கணுமுக முதலிய முகமாய் வீற்றிருந்து சீவர்களின் பாசத்தை நீக்குதலாலும், இன்னும் ஏனைக்கிழக்கணுமுக மேற்கணுமுகமா யிருந்து ஸ்ரீ கண்ட பரமேசுவரனல்லாத பரமேஸ்வரன்கள் பாசத்தை

நீக்குதலாலும் 181ல் பிரபஞ்சத்தை நோக்கித் தன்மயமாய்ப் படும் பந்தம் 182ல் அதிட்டானமான குருவினால் விடப்படும் என்று கூறிய விடத்து, தெக்ஷிணாபிமுகமாய் இருந்து அப்பதத்தை நீக்குதல் கூறப் படாமையாலும் அது மாயாவாத முறையாதலறிக. இன்னும் ஸ்ரீ நந்தியென்று நந்திக்கு விசேஷணங்கூட்டிக் கூறுதலும், அவராசிரிய ருக்கு விசேஷணங் கூட்டாது கூறுதலும் அது மாயாவாத முறை யாதலறிக. இனி முன்னே சரியா கிரியா யோகபாதங்கள் அனுக்கிர கிக்கப்பட்டன. இப்போது பக்குவான் மாக்கள் நல்ல மோக்ஷத்தினை அனுக்கிரகிக்கவேண்டும் என்று இப்போது பக்குவான்மாக்கள் நல்ல மோக்ஷத்தினை அடைதற்பொருட்டு எனவே, அபக்குவான்மாக்கள் கெட்ட மோக்ஷத்தை அடைதற்பொருட் டென்பதும் சரியாதிகள் அபக்குவான்மாக்கள் பொருட்டென்பதும் பெறப்பட்டு பாரபக்ஷ மாதலறிக.

இனி முன் சரியாகிரியாயோக பாதங்கள் அனுக்கிரகிக்கப்பட் டன. இப்போது பக்குவான்மாக்கள் நன்மோக்ஷத்தை யடைதற் பொருட்டு ஞானபாதத்தினை அனுக்கிரகிக்க வேண்டுமென்று கூறு மாறே, ஞானபாதம் கூறினாரென்று கூறாமல் முன்னே கூறிய, சரியா பாத முதலிய மூன்றையும் மறுபடியுங் கூறினாரென்று பின் கூறுத லும் பிறவும் மாயாவாதமாதலறிக. இனி சிருட்டிக் காலத்திலே பரமசிவம் சதாசிவ மூர்த்தியை அதிட்டித்து ஈசான முகத்தினின்று சிவாகமங்களைத் தோற்றுவித்து, அவற்றைப் பிரதிசங்கிதைக் கிரமத் தால் பிரணவர் முதலிய சிவர் பதின்மருக்கும், மகாருத்திரர் முதலிய ருத்திரர் பதினெண் மருக்கும் காமிகாதி இருபத்தெட்டினையும் அனுக்கிரகம் செய்தருளினர், அவர்கட்கு உபதேசிக்கும் காலத்தில் உபசுரோதாவாயிருந்த ருருவென்னும் முனிவர் ஞானமார்க்கத்தினைச் சங்கிரக வடிவமாக உபதேசிக்க வேண்டுமென்று கேட்க, அப்போது அவருக்கு எல்லா ஆகமங்களின் சாரமாக பன்னிரண்டு அனுட் டிப்புச் சந்தசுவடிவசூத்திரார்த்தமகமான சிவஞான போதமென்னும் சாஸ்திரத்தினை உபதேசித்தருளினர். அதனோடு அவ் ஆகமங்க ளெல்லாவற்றையும் மகௌகக்கிரமத்தால் வித்தியேசுரர் எண்மருள் முதல்வராகிய அநந்தேசுவர தேவருக் கனுக்கிரகித்தார். அந்தப்படியே அவர் எனக்கு உபதேசித்தார், யான் கேட்ட வண்ணமே யாம் உனக் குபதேசிக்கின்றோம், நீயும் பக்குவான்மாக்கட்கு உபதேசிப்பாயாக என்றருளினர். இத்தகைய சர்வ வேதாகம சாரபூதமாயுள்ள இதனைத்

தாந்திரிகமென்றும், துவைதப் பிரதிபாதகமென்றும், அவைதிகமென்றும், பாராது பராமுகப் படுகின்றனர். ஸாஸ்திரங்களில் வேத பாக்கியமான வாமாதியாகமங்களே தாந்திரிகமென் றொதுக்கப்படுவன வேதசாரமான காமிகாதிகள் அங்கீகரிக்கத் தக்கனவேயாம் என்றும், அதனை "சைவாகமோ பிதுவிவிதஶ்ச்ரௌதை: ஸ்வதந்த்ர இதரோமத: ஸ்வதந்த்ரோ தசதாபூர்வம் ததாஷ்டாத சதாபுன: காமிகாதி சமாக்யாபி சித்தாந்த சம்ஞித: சுருதி சாரமயோயஸ்து சதகோடி ப்ரவிஸ்தா" என்பது சைவாகமம் ச்ரௌதம் அச்ரௌதம என்று இருவகையாய்க் கருதப்படும், சுருதி சாரமயமானது ச்ரௌதமாம் சுவதந்திரமானது அச்ரௌதமாம். சுவதந்திரம் பூர்வம் பத்துவகையாகவும், சித்தாந்தப் பெரினது மறுபடியும் பதிணெண்வகையாகவும் காமிக முதலிய பெயர்களால் சித்துள்ளதாம் சுருதி சாரமயம் எதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதா மென்னும் வாக்கியத்தாலும், நீலகண்டாசாரியர் வாக்காலும், வித்தியாரணிய சுவாமிகள் வாக்காலும் தெளிவதோடு யாம் சுருதியாதி பிரமாண பூர்வமாக காட்டிய உரையினைக்கொண்டு, இது வேதாசாரமே யென நிச்சயித்து இதனைச் சிவானுபூதிச் செல்வர்கள் பெரியோர் முகமாய்க் கேட்டு சிந்திக்கத்துத் தெளிந்து நிட்டைகூடி அச் சிவானுபூதிச் செல்வரவர்களாக உரையெழுதப் புகுந்த உண்மை நோக்கமிதுவே. இதில் புத்திப் பிரம்சத்தால் யாதேனும் விரோதமுளதாகும். ஆனால் அதனைப் பிரமாண பூர்வமான யுத்தியோடு எவரேனும் எடுத்துக் காட்டுவாரானல் அதனை ஆதரவோடு கொண்டு அவர்கள் செய்யும் நன்றியையும் மிக மேன்மையாய் பாராட்டப்படும், அத்திருத்தமும் மறுபதிப்பில் வெளிப்படும் என்னூர், பரமசிவம் சதாசிவ மூர்த்தியை யதுட்டித்து ஈசானமுகத்தினின்று சிவாகமங்களைத் தோற்றுவித்து என்பதற்கு மூலவசன மில்லாமையால் அது மாயாவாத முறையாத லறிக. இனி அஃதவ்வாறுயில் பரமசிவம் எம்மனேரை யதுட்டித்தலுமறியப்படுதலால் யாமாக்கும் இச் சிவத்துப்பிரகாசமும் அவராக்கிய தத்துவப் பிரகாசமும் பிறவும் சிவாகமமாதல் வேண்டும். ஆகாமையால் அது மாயாவாத முறையாதலறிக. இனி விபரீத வியாக்யானம் பண்ணின சிவாசாரியர் வியாக்கியானம் சரியான வியாக்கியானமென்று கொண்டு விவர்த்த வியாக்யான மெழுதி சிவாகம தூஷணம் பண்ணினதுபோல, அவர் முகவுரையும் 3 சரியையென்று நம்பியதுந் தவிர அது அவர் முகவுரையென்பதை மறைத்து தன் சொந்தம் போலச்

கூறுகின்றார். அது நிற்க. இனி சதாசிவ முகத்திற் றோன்றினது சதாகமமென்று கூறப்படுமன்றி சிவாகமமென்று கூறல் அடாமை யால் அது முழுமாயாவாதக் கூற்றாதலறிக. அல்லாமலும் கௌடபாத காரிகா வியாக்யானத்தில் கரசரணாதியுள்ள பிரம விட்டுணு ருத்திரன் சதாசிவருடையசரீரம் பௌதிகம், ஆதலால் அவை அனித்தியமென்று சங்கராசாரியர் கூறுதலால் பொய்யாகிய ஈசுரனால் செய்யப்பட்ட ஆக மம் பொய்யேயாம். அன்றியும், அபௌருஷேயமாகிய வேதத்துக்கும் பௌருஷேயமாகிய சிவாகமத்துக்கும் வெகு தூரமாம். அன்றியும் பரமசிவம் சதாசிவரை யதிட்டித்தலென்றால் சிவபூசை விவர்த்த மாகும். அன்றன்று அதிட்டிக்கும் வாயிலாக என்று கொள்ளுதலால் விவர்த்தமாகாதென்றால் அவ்வாறுஞ்ல் பரமசிவம் அவ்வாறே திரு மால் முதலிய எம்போலிகளிடத்தும் அதிட்டித்துக் கொள்ளுதலால் அச்சிவாகமங்களையும் எம்போலிகள் முகத்துநின்று தோற்றுவித்து, கொள்ளலாம். அவ்வாறு தோற்றுவித்துக் கொள்ளாமல் சதாசிவன் முகத்தினின்று தோற்றுவித்தல் விவர்த்தாகம முறையாதலறிக. மேலுமது, பிருகதாரணியத்தில் வேதம் பிரமத்தின் மூச்சுக்காற் றென்று கூறுவதோடு முரணுதலால் அதிட்டித்துச் செய்தலென்பது விவர்த்தமாதலறிக. இனி ஆகமங்களை நருமுனிவர் உபசுரோதா வாக இருந்து கேட்டு, பின் ஞானமார்க்கத்தைச் சங்கிரகமாகக் கூறும் படி கேட்டார். கேட்டபடி உபதேசித்த உபதேசமே சிவஞான போதமென்பதற்கு வசனமில்லாமையாலும், சிவஞானபோதம் நரு வுக்குக் கூறினதல்ல நந்திக்குலகுய்ய வியம்பும் வேதச் சென்னி யுறைபொருட் சாரச்சிவ ஞானபோதமென்று சிவானந்த ஸ்வாமிகள் கூறின சுருதியோடு மாறுபடுதலாலும் அது விவர்த்தமுறையாதலறிக. இனி சரியை, கிரியை, யோகம் மூன்றும் முன்னே சொல்லி யாய் விட்டபடியால் இப்போது ஞானபாதம் சொல்லவேண்டுமென்று நந்திபிரசினம் செய்தாரென்று உபக்கிரமத்துக் கூறியவாறே பிரசினம் செய்தபடி ஞானபாதத்தைக் கூறினாரென்று உபசம்மாரம் செய்தலே உபக்கிரம உபசம்மார முறையாம். அவ்வாறன்றி நந்தி முன்சொல்லி முடித்த சரியை, கிரியை, யோகபாதம் கூறவேண்டாம், கூறுதிருக் கின்ற ஞானபாதமாத்திரமே கூறும்படி கேட்க, சீகண்ட பரமேஸ் வரன்முன்னே சொல்லிய சரியை கிரியா யோகங்களோடு ஞானபாத மும் கூறினாரென்று கூறுவது எவ்வாறு இயைபும், சரியை கிரியா யோகம் மூன்றும் கூறியாய்விட்டபடியால், கூறாத ஞானபாதமே கூற

வேண்டுமென்று கேட்க, கூறிய சரியை கிரியா யோகபாதங்களைக் கூறினரென்பதே இவர் வியாக்யான விவர்த்தமென்பதை வெளிப் படுத்துகின்றது. மேலும் சிவாகமத் தோற்றம் அவற்றைக் கேட்பித் தல் உபசுரோதா ஞானமார்க்கத்தைக்கேட்டல் முதலியவாகிய கூறு தன கூறுதலும், சரியை கிரியை யோகங்களைக் கூறுதல் கூறியத் கூறலுமாம். ஆதலால் கூறியது கூறல், கூருதது கூறல்கள் விவர்த்த முறையாதலறிக.

இனி ருரு ஞானமார்க்கத்தைச் சங்கிரகமாக உபதேசிக்கக் கேட்டார், கேட்க எல்லா ஆகமங்களின் சாரமாக சிவஞான போதத் தினைசெய்து உபதேசித்தாரென்றூர். சரியை கிரியை யோகஞானம் நான்கும் கூடியதெது, அது ஆகமமாம். ஆகவே, ஆகமங்களின் சார மென்றுல் நான்கு பாதங்களின் சாரமென்றுகின்றது. ஆகவே ஞான மார்க்க சங்கிரகங்கேட்க சரியையின் சாரம், கிரியையின் சாரம் யோகத்தின் சாரம், ஞானத்தின் சாரம் என்னும், நான்கு சாரங்களை யும் கூறினரென்று விவர்த்தம் கூறினர். அவ்வாறு கூறுதல் இவ்வுரை யாசிரியார்க் கியல்புதான் எதனுலெனில், ஞானபாதம்கேட்க முன்னே கூறின சரியை கிரியா யோக மூன்றையும் மறுபடியும் கூறுவதோடு கூருத சிவாகமத் தோற்ற முதலியனவும் கூறினர். என்று விபரீதங் கூறினர். ஞானசங்கிரகம் கேட்க கேளாத சரியாசார முதலிய மூன்று சாரமும் கூறினராதலாலும், ஆதலால் சங்கிரகம் கேட்க சாரம் கூறு தல் விவர்த்தா விவர்த்தமுறையாதலறிக. பசுபுலித்தோல் போர்த்து பயிருக்குள் வந்தால் பயிரைமேபாது நிற்குமா, அதுபோல விவர்த்தா சாரியர் சிவவேடம் பூண்டு சிவஸாஸ்திரத்தில் இறங்கினலும் எண் ணம்மாறுமா; சங்கிரகம் சாரமென்பன ஓரான்மவாத பயிற்சி பற்றி ஒருபொருளென்று கூறும் விவர்த்தாசாரியர் தத்துவப் பிரகாசிகா வியாக்யான வாசாரியராதல் அழகியதேயாம், இனி சிவாகமங்களைத் தோற்றுவித்து அவற்றைப் பதின்மருக்கும் பதினென்மருக்கும் காமிகாதி இருபத் தெட்டினையும், அனுக் கிரகம் செய்தருளினர் என்று விவர்த்தாசாரியர் கூறும் சொன் முடிவையும் பொருள் முடிவையும் பார்க்கும் போது, இவர் வியாக்யான ஆசாரியராதற்கு தக்கவரென்பது இனிது விளங்கும். இனி, எல்லா ஆகமங்களின் சாரமாக பன்னிரண்டு சூத்திரார்த்த மாக சிவஞான போதமென்னும் சாஸ்திரத்தினையும் உபதேசித்தருளி னர் என்பது மவ்வாறும். இனி யான் கேட்ட வண்ணமே, யாம் உனக்

குபதேசிக்கின்றோம். நீயும் பக்குவான்மாக்களுக்கு உபதேசிப்பாயாக என்றருளினர் என்றார். உபதேசிக்கின்றோம் என்று ஆகமங்களை உபதேசிக்க ஆரம்பித்ததே தவிர, உபதேசிக்க இல்லையென்பது பெறப்பட்டது. படவே, இவ்வாறெழுதிய விஷயமும் வெறும் பொய் யென்பது பெறப்படுதல் காண்க. அன்றன்று உபதேசிக்கின்றோம் என்று ஆரம்பித்து கூறிமுடித்தாரெனில், அவ்வாறு ஆரம்பத்திற் கூறி பின் முடித்தாரென்று எங்குங் கூறி இருக்கின்றது. யான் கேட்ட வண்ணமே யாம் உனக்கு உபதேசிக்கின்றோம், நீயும் பக்குவான்மாக்களுக்கு உபதேசிப்பாயாக என்றருளினர். இத்தகைய சர்வ வேதாகம சாரபூதமாயுள்ள இதனை, தாந்திரிகம் துவைதம் அவைதிகம் என்று பராமுகப்பட்டு பார்க்கின்றிலர் என்று கூறியதனுள் ஆரம்பித்துக் கூறி முடித்தாரென்று கூறுமையாலும், உபதேசிக்கின்றோ மென்றது இவ்வாசாரியர் ஆரம்ப வழக்க வார்த்தை யென்பது 2-ல் 2-பக் இந் நூலுக்கு தத்துவப்பிரகாசிகை என்னுமோருரை என்னால் இயற்றப் படுகின்றது என்னும் ஆரம்ப வார்த்தை பற்றி அறியப்படுதலால், இவ்வாறு ஆரம்பத்தைக் கூறி முடித்ததாகக் கூறல் விவர்த்த முறையேயாம். ஆகவே கூறாததைக் கூறியதென்பதனால் இல்லதை உள்ளதென்று கூறினரென்பது பெறப்பட்டது. படவே, அது உள்ளதை இல்லாததென்று கூறும் விவர்த்தாகம முறையாதலறிக. இனி இருபத்தெண்மருக்கும் 28 ஆகமங்களையும் உபதேசிக்கும் காலத்தில் 2 வது கேட்போராயிருந்த ருருமுனிவரானவர் ஞான சங்கிரகம் கேட்க, சர்வாகமசாரமாக உபதேசித்த சிவஞானபோதத்தோடு 28 ஆகமத்தையும், அனந்தேசுரருக்கு அனுக்கிரகித்தாரெனவே, அனந்தேசுரருக்கு உபதேசிக்குமுன் இருபத்தெண்மருக்கு உபதேசிக்கும் காலத்தில் 28-ல் ஒன்றாயுள்ள ரௌரவாகமத்தில் சிவஞான போதமில்லாதபடியால், ருருமுனிவரானவர் ஞானசங்கிரகம் தெரியாமல் கேட்டார்? அவர் அவ்வாறு ஞானசங்கிரகம் கேட்டபடியால் ஆகமசாரமாய்ச் செய்த சிவஞானபோதத்தோடு 28 ஆகமத்தையும் அநந்தேசுரருக்குக் கூறினரெனவே, அனந்தேசுரர் கேட்டற்கு முன் இருபத்தெண்மரும் கேட்ட 28-ல் ஒன்றான ரௌரவாகமத்தில் சிவஞானபோதமில்லை யென்பது பெறப்பட்டது. அது கௌடபாதருக்கு, முன் கவுடபாத காரிகை இல்லாத மாண்டூக்கியத்தில் அவருக்குப் பின் கவுடபாத காரிகை யுண்டாதல்போலும். விவர்த்தாகம முறையாதல் அறியப்படும். படவே, முன் கேட்ட இருபத்தெண்மரும்

கூறக்கேட்ட சங்கிரகமாறிச் சாரமாகிய சிவஞானபோதமகப்படாமை கவுடபாதருக்கு முன்னுள்ளோருக்கு விசேஷமான கவுடபாதகாரிகை அகப்படாததுபோலாம். இனி அவைகள் பின்னுள்ளோருக்கு அகப்படுதல் ஸ்ரீமான் பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் கூறியபடி அச்சியந்திரமில்லாத முற்காலத்திலுள்ள சிவஞானஸ்வாமி சங்கராசாரியர் முதலியோருக்கு விசேட நூல் அகப்படாமைபோலில்லாமல் இவ்வாசாரியருக்கு எல்லா நூலுமகப்படுதல்போலாம். இனி ஞானபாதம் கேட்க, அது கூறுமல் ஆகமங்களைக் கூறுதலால் இத்தகைய சர்வ வேதாகமசாரபூதமாயுள்ள சிவஞான போதத்தைப் பாராமல் பராமுகப்படுத்தற் கேதுவாகிய, தாந்திரிகம் துவைதம் அவைதிகம் என்னுமூன்று குற்றங்களுள்ளன. சாஸ்திரங்களில் வேதபாக்கியமான வாமாதி தாந்திரிகமென்றெழுதுக்கப்படுவன வேதசாரமான காமிகாதிகள் அங்கீகரிக்கத் தக்கனவேயாம். ஆகவே, பாராமல் பராமுகப்படுத்தற் கேதுவாகிய தாந்திரிக முதலிய மூன்று குற்றங்களுள், வாமாதி ஆகமங்களே தாந்திரிகமென்றெழுதுக்கப் படுமென்றதனுல், தாந்திரிக குற்றமொன்றிற்கு மாத்திரம் பரிகாரம் கூறி, மற்றவை கூறியதுகொண்டு கூறுத பரிகாரஞ் சூசிக்கப்படுதல் துவைதம் அவைதிகம் இரண்டற்கும் பரிகாரங்கூறுது விடவே, காமிகாதிகள் துவைதம் அவைதிகம் என்னும் குற்றங்களுள்ளவாய் பாராமல் பராமுகப்படுத்தப்படும். படவே, அவை அங்கீகரிக்கத்தக்கனவல்ல என்பதுபெறப்படும். இப்படிப் படவும், காமிகாதிகள் அங்கீகரிக்கத்தக்கன என்பது விவர்த்தாகம முறையாதல்காண்க. மேலும் சிவாகமங்கள் அங்கீகரிக்கத் தக்கனவல்லவென்று சங்கரபாடியமும், சிவாகமம் செய்த சூலபாணி பௌதிக சரீரமுள்ள அநித்தியன் என்று கவுடபாத காரிகையும் கூறும் வாயிலாக சிவாகமத்தையும், சிவாகமம் செய்த சிவனையும் அங்கீகரியாதிருக்கவும், இவ் ஆசாரியர் அங்கீகரித்தல் விவர்த்தமுறையேயாம். மேலும், சிவஞானபோதம் சர்வ வேதாகமசார பூதமாயுள்ளதெனவே, அது வேதசாரமாதல் பெறப்பட்டது. இனி, வேதசாரமாயுள்ள காமிகாதிகள் எனவே, காமிகாதிகளும் வேதசாரமாதல் பெறப்பட்டன. ஆகவே சிவஞானபோதமும் வேதசாரம், 28-சிவாகமமூலம் வேதசாரம், ஆனல் சிவஞானபோத முயர்ந்ததா, சிவாகமமுயர்ந்ததா. அன்றி இரண்டும் ஒப்பனவா, ஒப்பனவெனில் வேதசாரமான சிவாகமம் முன்னிருக்கவும், வேதசாரமான சிவஞானபோதம் பின்னுண்டாக வேண்டா, அன்றன்று, ஒப்பனவல்ல, ஆகமங்களிலும் சிவஞானபோத

முயர்ந்ததெனில் உயர்தற்கு ஏது என்னை, ஆகமம் வேதசாரமாத்திரம் சிவஞானபோதம் சிவாகமசாரம் ஆகமசாரமாயிருத்தலாலெனில் அற்றன்று. வேதசாரம் சிவாகமம், சிவாகமசாரம் சிவஞானபோதமாயிருந்தால், அச்சிவஞானபோதம் சாரச்சாரமென்னும் பெயர் பெறுக. அவ்வாறு பெயர் பெறுமானால் அதற்கு வேதசாரமென்னும் பெயர் விடுபட்டுப்போம். போகவே சர்வ வேதாகமசாரம் சிவஞானபோத மென்பது இலதுளதாதலும், வேதசாரமான காமிகாதிகளென்பது உளதிலதாதலுமாய் விவர்த்தமுறையாய் முடிதல்காண்க. இனி அதனை "சைவாகமோ பித்விவித ச்ரௌதோ'ச் ரௌதச் ச்ஸஸ்மிருதம் ச்ருதிசாரமய ச்ரௌத ஸ்வதந்திர இதரோம்தச்வதர்தரோத சதாபூர்வம் ததாஷ்டாத சதாபுந காமிகாதி சமாக்யாபிஸ் சித்தசித்தாந்த சம்ஞித் —ச்ருதிசார மயோயஸ்து சதகோடி ப்ரவிஸ்தர என்பது சைவாகமும், சிரௌதம் அசிரௌதம் என இருவகையாய்க் கருதப்படுகின்றது. சுருதி சாரமயமானது சிரௌதமாம். சுவதந்திரமானது அசிரௌதமாம். சுவதந்திரம் பூர்வம் பத்து வகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடியும் பதினெண் வகையாகவும், காமிக முதலிய பெயர்களால் சித்தித்துள்ளதாம். சுருதி சாரமயம் எதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளதா மென்றார். இதனுள் சைவாகமும் என்றும், மறுபடியும் எனவும் வரும் உம்மை இரண்டனுள் ஒன்றாகிய சைவாகமமும், என்னும் உம்மை தழுவும் பொருள்யாதோ, சைவாகமமும் இருவகையாய் கருதப்படுமென்பது, வேதம் இருவகையாய்க் கருதப்படுதலுமன்றி, சைவாகமமும் இருவகையாய்க் கருதப்படும் என்று இறந்து தழுவுதலால் அது விவர்த்தமாதலறிக. அன்றன்று மூலத்துள் அபிசத்து மிருத்தலால் அவ்வாறு கூறினாரெனில் மூலத்துள்ளிருப்பினும், அமூலத்துள்ளிருப்பினும், அதற்குச் சமாதானம் அவரே கூறல்வேண்டும். அதுநிற்க, இவரெடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞையாவது சிவஞானபோதத்தை தாந்திரிகம் துவைதம் அவைதிகமென்று ஒதுக்குகின்றனர். வைதிகமென் றொதுக்கப்படுவனவல்ல, வைதிகங்களாகிய அவை அங்கீகரிக்கத் தக்கனவென்பதேயாம். அதாவது அவைதிகமென் றொதுக்கப்படுவனவா மாதிகளென்பதற்கும் வைதிகமாய் ஒதுக்கப்படாதன காமிகாதிக ளென்பதற்கும் வசனங்கூறப் புகுந்து, அவர் கூறியவசனத்துள் வாமாதிகள் அவைதிகமென்று கூறாமை மேலும், இருபத்தெட்டும் வைதிகாகமங்களே. அவைதிகாகமங்க ளல்லவென்று கூறப்புகுந்தவர்தாமே மாறி, அக்கர

முகாதி இருபத்தெட்டும் அவைதிகாகமங்களே வைதிகாகமங்களல்ல வென்று கூறினர். இவ்வாசாரியரோ ஸ்ரீமான் பொன்னம்பலப் பிள்ளை அவர்களால் சிவஞானசுவாமிகளினும் எத்தனையோமடங்கு உயர்ந்தவர் என்று புகழப்பட்டவர். இனி இவரினும் எத்தனையோமடங்கு தாழ்ந்த சிவஞானசுவாமி சுருதிசாரமயம் என்பதற்கு சுருதியும், அதன் சாரமயமும் என்று பொருள்கூறி, சிவனிலிருந்துவந்த நூல் சிவாகமமென்ன கூறப்படுதல் எவ்வாறு, அவ்வாறே சிவனிலிருந்து வந்த நூலாகிய சுருதியும் சிவாகமம் எனப்படும். ஆதலால் சுருதியும் அதன் சாரமும என்று சைவாகமந் துவிவிதமாய்க் கூறப்படுமென்றார். இன்னுமிவ்வாசாரியார் சுருதி சாரமயமானது பௌருஷேயம், சுவதந்திரமானது அபௌருஷேயம் என்று அநுவாதஞ் செய்தார். செய்யவே அவைமேல் புரோவாதமாய்ச் சித்தித்தல் வேண்டும். தேவதத்தனைக் கண்டோம். தேவதத்தனவன் உண்டான் என்றால், தேவதத்தனவனுண்டானென்னும் அநுவாதத்திற்கு, தேவதத்தனைக் கண்டோமென்னும் புரோவாதஞ் சித்தித்தல்போல, சுருதி சாரமபமானது சுவதந்திரமானது என்னும் அநுவாதங்கட்கு, மேல் புரோவாதஞ் சித்திக்காமையால் அது விவர்த்த முறையாதலறிக. இனி சுவதந்திரம் பூர்வம் பத்து வகையாகவும், சித்தாந்தப் பெயரினது மறுபடியும் பதினெண் வகையாகவும், என்றவிடத்து, சித்தாந்தப் பெயரினது மறுபடி பதினெண்வகையாமெனவே, சித்தாந்தப் பெயரினது முன்னே பதினெட்டுக்கு குறைந்த வகையாயிருந்து, மறுபடி பதினெண் வகையாமென்பது பெறப்பட்டது. இனி சுவதந்திரம் பூர்வம் பத்து எனவே, சுவதந்திரம் அபரம் பத்தல்லவென்பதும் பெறப்பட்டது. இவையெல்லாம் விவர்த்த முறையாதலறிக. அன்றன்று, மறுபடியும் என்பது பூர்வம் பத்தும், மறுபடி பதினெட்டும் என்னும் பொருட்டெனில், அற்றேல், சுவதந்திரம் சித்தாந்தமென்னும் இரண்டும் ஒருபொருட் கிளவியாதல்வேண்டும். அவை ஒருபொருட் கிளவியாகாமைமேலும், சுவதந்திரம் பூர்வமும் சித்தாந்தம் அபரமுமென்பதற்கு நியாமகமென்னை? அம்முறை மாறிச் சித்தாந்தம் பூர்வமும் சுவதந்திரம் அபரமுமாயிருக்கலாம். ஆதலால், இவ்வாறெல்லாம் விவர்த்தங்கூறல் விவர்தாசாரியருக்கே யுரியதென்க. இனி சுருதி சாரமயமெதுவோ, அது நூறுகோடி விஸ்தாரமுள்ளது என்பது "மறைமன்னிய மறுவிலாகமங்கள் அலகில் கோடியாய்விரியும்" என்னும் இம்மொழி பெயர்ப்பினுள், அலகில் என்னும் அள

வின்மையேபோடு நூறுகோடி என்னும் அளவுண்மை மாறுபடுதலால், அச்சியந்திரம் வருகிறதற்கு முன்னுள்ள மொழிபெயர்ப்பாசிரியர் பாண்டியனார், இவ்விவர்த்தாசாரியர்போல் அநேகநூல் அகப்பட்டு பார்த்தறியாமையால், நூறுகோடி என்னும் அளவுள்ளதை அலகில்லன என்று அறியாது மொழிபெயர்த்தார் போலும். ஆயினும் உள்ளதை இல்லதென்பது இவ் விவர்த்தாசாரியரது முறையாம். இங்கு மாத்திரம் உள்ளதை இல்லதென்னாது உள்ளதென்றார். ருநுமுனிவரை உபசுரோதா வென்றதுபோல் தாமும் அதற்கு உபமொழி பெயர்ப்பாசிரியராயிருந்து, பெயர்த்த முறைமாறி, ஆசிரியர் பாண்டியனார் உபமொழி பெயர்ப்பாசிரியராய் மாறி, இவருக்கு உதவியாய் அளவுள்ளதை அளவில்லதென்றார்போலும். இனி "சுருதி சாரமேயாபஸ்து என்று கொண்டபாடம் சுருதி சாரமயோ அங்பஸ்து" என்னும் பாடத்துக்கு மாறுபடுமாறு காண்க. ஆதலால் சிவாகமங்கிடந்த மூலையின் மூலையுமறியாத மாயாவாத ஆசாரியார் சிவாகம வாக்கியங்களுக்கு தெரிந்தவர்போல அர்த்தங்கூறல் நன்று, நன்று, சிவாகமம் வைதிகமென்பதற்கு வசனங் கூறவந்து, சிவாகமம் அவைதிகமென்று அர்த்தம்பண்ணி, சிவாகம தூஷணம் பண்ணினவர் வேதசிவாகம மிரண்டுமொன்றென்று இதில் கூறியிருக்கிறாரென்று பொன்னம்பலப்பிள்ளை கூறுகின்றார். சிவாகங்களின் உண்மையெல்லாம் தெரிந்த நமக்கு சிவாகமத்தின் மூலையின் மூலையுமறியாதவர் ஆசாரியராதல் அழகிதேயாம். அற்றேல் இங்குக் கூறியனவெல்லாம் ஒக்கும். வேதசாரமாயுள்ள சிவஞான போதமென்பது விவர்ந்தமுறை யென்றீர். சிவஞானபோதமாபாடியம் அச்சிட்ட பண்டிதரவர்கள் தக்ஷிணாமூர்த்தியானம் 2 பக்கம் 5 வரியில் வேதாகமங்களின் சாரமாயுள்ள சிவஞானபோதம் என்று கூறியதனை மறந்து கூறினீர்போலும் எனில், நன்றே கூறினீர். நீர் அவருக்கு சேட்டரேயோ கனிட்டரேயோவாதல் வேண்டும். அஃதேல் நீ யார், யாரெனில் யாம் அனிர்வசனீய முறையினேம். அது நிற்க. நீர் இங்கு சிவஞானபோதமாபாடிய மென்று கூறக்கேட்டோம். நீர் சிவானபோதத்துக்கு மாபாடியமென்றீர். சிவஞானபோதத்துக்கு செய்த பாடியஞ் சிவஞானபோதமாபாடியமாகுமானால் அவ்வாறே வேதாந்தநூலுக்கு சங்கராசாரியார் செய்த பாடியமும், வேதாந்தமா பாடியமென்று பெயராதல் வேண்டும். ஆகவே சங்கரபாடியம் மத்துவபாடியம் சோமனாதபாடியம் பண்டிதபாடியம் நீலகண்டபாடியம் என்பன முதலியனவாய் ஆக்கியோர் பெயர்க

ளிடப்பட்டு, நூற்பெயரிடாமல் விடப்பட்டு மாறிக் காணப்படுதலால், ஆக்கியோர்கள் அறியாமையால் அவ்வாறு பெயரிட்டாரென்பதே அறியாமையாய் முடியும். முடியவே வேதாந்த மாபாடிய மென்பதறியாமையும், நீலகண்ட மாபாடியமென்ப தறிவுடைமையுமாய் முடிதல் எவ்வாறு, அவ்வாறே, சிவஞானபோதமாபாடியமென்பதறியாமையும் சிவஞானமா பாடியமென்பது அறிவுடைமையுமாதல் பெறப்படுமாறு காண்க. சிவஞானபாடியமென்பதனை ஒப்பாமல் சிவஞானபோதமா பாடியமென்பதுபோல இன்னும் பண்டிதரவர்கள் சிவஞானசுவாமிகள் கூறுகளை யொப்பாமல், பண்டிதர் தமது பாடியத்திரட்டு 39-ல் காட்சிப் பொருளென்றென்று, சிவஞானசுவாமி கூறுமிருளை பண்டிதர் மாறி சிறப்புப்பாயிரம் 35ல் காட்சிப்பொருள் என்றும், சிவஞான சுவாமிகள் சிவஞானசித்தியில் "விந்துவின் மாயையாகி" என்பது விந்துவைப்போல மாயை என்பதும், விந்துவினின்று மாயை தோன்றுமென்பதும் பிறர் கருத்தென்று இரத்தினத்திரைய நூலார் கூறுவர். ஒன்று கூறியதையொப்பாமல் பண்டிதர்மாறி அவ்விரு வகைக் கருத்துமுடையர் இரத்தினத்திரயக்காரர் என்றும், சிற்றுரை 68-ல் சிவஞான சுவாமிகள் உயிர் உடல் விட்டவுடனே, பூதசார சிரமுற்று அதன்பின் துறக்கம்போகம் என்பதனை ஒப்பாமல் மாறி, பண்டிதர் உயிர் உடம்பு நீங்கினவுடன் பூதசார உடம்பில்லாமல் துறக்கத்தில் போனபின்பு பூதசார முடம்பெடுக்குமென்றும், சிற்றுரையில் ஆறுமுக நாவலரவர்கள் அன்னிலமென்று பதிப்பித்ததனை யொப்பாமல் மாறி, பண்டிதர் சிற்றுரை 313-ல் வன்னிலமென்றும் கூறுவர். இன்னும் அவரிவ்வாறே முன்னோர்கள் கூறுமவற்றை யொப்பாமற் கூறுவன எண்ணிறந்தன. அது நிற்க, இனி மாயாவாத ஆசாரியராகிய இவ்வுரையாசாரியார் சித்தாந்த ஆசாரியராதலும், இன்னுமிவர்போன்ற பிறராலும் சமயங்களெல்லாம் நாலுவகையாய்ப் பிரிதல்போல சித்தாந்த சமயமொன்றே நாலுவகைப் பட்டுப், போதகரும் நாலுவகைப் பட்டனர். விவர்த்தாசாரியர் முகவுரை 3-ல் சர்வ வேதாகமசார பூதமென்பதனாலும், பின் ஆகமத்தை மித்தையாக்குதலாலும், புறப்புறச்சித்தசந்தியும் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அசுத்தாத்துவிதத்தின் மறுதலை சுத்தாத்துவித மென்பதனால் புறச்சித்தாந்தியும், முத்தையப் பிள்ளையவர்கள் மன்னவன் மகன் என்னும் சிற்றுவமையை சிவஞான சுவாமி முற்றுவமையாக்கினர் என்பதனால் அவர் அகப்புறச் சித்தாந்தியும், சுவாமிநாத பண்டிதர் சிவஞானசுவாமிகள் "சிவக்ஞான

போதே சைவார்த்த நிர்ணயம்" என்பதனையொப்பாமல், தக்ஷிண மூர்த்தி தியானம் 2-ம் 5 வரியில் சிவஞானபோதம் வேதாகமங்களின் சாரமென்பதனால் அகச்சித்தாந்தியுமாதல் பெறப்படுமாறு காண்க. அது நிற்க, இனி பிரகிருதமாமாறு அவர் காட்டிய காமிகவசனமும், நீலகண்ட சிவாசாரியர் வாக்கும், எடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞையை சாதியாமையறிக. இனி காலமாதவவியமும் அது சாதியாமையாலும் 11-தத்து வங்கள் சாங்கியப் பிரசித்தமான இருபத்துநாலு தத்துவங்கள் என்பன சிவாகமமுறையா மென்பது விவர்த்தமாம். இன்னுமதனுள் படும் விவர்த்தம் எண்ணிறந்தன. அதுநிற்க, இனி மாயையோடு கூடிக் காட்டி விவரித்து பெறுகின்றதென்புழி, வினைமுதலில்லாமையும் 36 தத்துவத்தை நிரூபித்து காலோற்பத்தியையும் அங்கீகரித்தாரென்றே காலம் 37 ஆதலும் 35 மாறுபடுதலும் பிறவுமறிக. அதுநிற்க. இனி யாம் சுருதியாதி அனேகப் பிரமாணம் பூர்வமாகக் காட்டிய உரையினைக்கொண்டு இது வேதசாரமே என நிச்சயித் தென்புழி, காட்டிய உரை என்று இறந்தகாலத்தாற் கூறவே, இம்முகவுரை முகவுரையாகாமல் முடிபுரையாதல் பெறப்படும். பெறப்படவே, எவ்வாறு முடிபுரை அதன் மறுதலையாகிய முகவுரையாகின்றதோ, அவ்வாறே தத்துவப் பிரகாசமென்னும் உரையும், அதன் மறுதலையாகிய அதத்துவப் பிரகாசமாதல் தெற்றன அறிக. அறியவே, பசுபுலித்தோல் போர்த்து பயிரைமேய்ந்து கெடுத்தல்போல், விவர்த்தாசாரியர் உரை செய்தலென்னும் வேடம் பூண்டது, சிவாகமத்தைக் கெடுத்தற்கென்பது பசுமரத்தாணிபோல் நாட்டப்பட்டமைகாண்க. காணவே, அவர் பிரமம் உலகம் என்றிரண்டின்றி ஏகதத்தும் கூறுமாறுபோல, முகவுரை முடிபுரை என்றிரண்டின்றி ஏகதத்துவங் கூறுதலும், நூல் முடிந்தபின்னர் எழுதும் முடிபுரையை முகவுரை என்றலும் விவர்த்தமாதலறிக. சிவஞானசுவாமி சங்கராசாரியார் முதலியோர்களினும் அனேக சாஸ்திரம் படித்தபடியால் அவருக்கு முகவுரை முடிபுரை அன்னுவய வியதிரேகாதி பேதங்கள் விசேஷமாக விளங்கவில்லைபோலும். அது நிற்க. இனி, இது வேதசாரமே என நிச்சயித்து என்பது, பக்கம் மூன்றில் வேதாகம சாரமென்பதனோடு மாறுபடுகின்றது. இது சிவஞானபோதமாகிய ஒரு தருமி ஒரு காலத்தில் வேதசாரம் எனவும், வேதாகம சாரமெனவும், ஈரியல்புற்று மாறுபட்டு, மாறுபடாமை 180 ஒரு காலத்தில் ஒரு தருமில் விருத்தமான இரண்டு தருமங்கள் இருத்தல் பொருந்தாது

என்பதனோடு பொருந்துதல் காண்க. இனி யாம், சுருதியாதி அநேக பிரமாண பூர்வமாகக் காட்டிய உரையினைக்கொண்டு இது வேத சாரமே யென நிச்சயித்து, இதனைச் சிவானுபூதிச் செல்வரான பெரியோர் முகமாய்க் கேட்டு, சிந்தித்து தெளிந்து நிட்டைகூடி சிவானுபூதிச் செல்வர்களராவார்களாக உரையெழுதப்புகுந்த நோக்கமிதுவே எனவே, ஒருவன் இது வேதசாரமென்றுதானே நிச்சயித்து கொள்ளலாம். பெரியோர் முகமாக இது வேதசாரமோ அன்றோ வென்று சந்தேகப்பட்டுக் கேட்கவேண்டாம்; சிவானுபூதிச் செல்வராதற்கு மாத்திரந்தான் பெரியோர் முகமாய்க் கேட்டால் வேண்டுமென்பது பெறப்பட்டது, அது கூடாது, சிவானுபூதிச் செல்வனிடம் கேளாமல் இவ்வுரையினைக் கொண்டு இது வேதசாரமென்று தானே நிச்சயித்தவன், இவ்வுரையினைச் சிவானுபூதிச் செல்வனிடங் கேளாமல்தானே படித்து சிந்தித்து தெளிந்து நிட்டை கூடி சிவானு பூதிச் செல்வனாகலாமே, ஆதலால் அதற்கு நிதர்சனம் இவ்வுரையாசாரியரேயாம். ஆதலால் இதனைச் சிவானுபூதிச் செல்வரான பெரியோர் முகமாய்க் கேளாமல், தானே படித்து சிவானுபூதிச் செல்வராதல் முடியாதெனில், அவ்வாறே சிவானுபூதிச் செல்வரிடங் கேளாமல், இவ்வுரையினைத் தானே படித்து இது வேதசாரமென்று நிச்சயித்தலும் முடியாமை யறிக. ஐயகோ இவர் இச்சங்கட சிவானுபூதியில் அகப்பட்டுக்கொண்டாரே, இதனை எவ்வாறு நீக்குவார், பொன்னம்பலப் பிள்ளையால் நீக்கிக் கொள்வாரெனில் அற்றன்று, பொன்னம்பல பிள்ளையோ இவர் சிஷியர் எனவே, இவரில் எவ்வளவோ கல்வியில் குறைந்தவராம். ஆகவே, அவராசாரியராகிய இவரிலும் எத்தனையோ மடங்கு கல்வியிற் பெரியராகிய எம்மை அவராசாரியரிலும் எத்தனையோ மடங்கு கல்வியிற் குறைந்த பொன்னம்பல பிள்ளையா வெல்லவல்லவர். யாம் இருப்பது தெரிந்தால் இவ்விவர்த்தாசாரியர் தத்துவப் பிரகாசமாக்குதலும் செய்யமாட்டார், அது நிற்க, இனி சிறிது கூறிவிடுவாம். இது வேத சாரமென்பது மேல் 3-ல் அது அசிரௌதம் என்பதோடு மாறுபடுதல் காண்க. இனி வேதசாரம் வைதிகர்க்குரியதல்லது. சிவானுபூதிச் செல்வர்க்குரியதாகாது. ஆகவே வேதசாரத்தை சிவானுபூதிச் செல்வர் கூறல் பொருந்தாமை யறிக. அன்றியும், சிவ நிட்டரல்லாத பிரமநிட்டராகிய இவ்வாசாரியருக்கும் சிவானுபூதிக்கும் சம்பந்தமென்னை? அன்றியும் கவுடபாதகாரிகையுள் பௌதிகத்தாலாகிய காசரணுதி வடிவுள்ள சிவம் அநித்தம் என்று கூறுதலால், அநித்தியமாகிய சிவானு

பூதிச் செல்வத்தாலாகும் பிரயோசனமென்னை, ஒன்றுமின்றாம். அது நிற்க, உரையெழுதப்புகுந்த உண்மை நோக்கமிதுவென்ற அவ்விது என்றது எதனை ? சிவானுபூதிச் செல்வர்களாதலையா, ஆக்கலையா, அன்றன்று, இது வேதசாரமெனக் காட்டுதலையே, இதுவென்று சுட்டியதெனில், அவ்வாறு பொருள்படுதல் விவர்த்தமுறைபோலும். இனி அவ்வாறு கொள்ளினும் வேதசாரமென்றென்று பிறர் கூற, இவர் அது வேதசாரமென்று புதிதாய்க் கூறுகின்றாரில்லையே, ஆதலால் இது வென்று சுட்டியது அதுவன்றாம். இனி உண்மை நோக்கம் இது எனவே, பொய் நோக்கமதுவென்பது பெறப்பட்டது. அதாவது இது வைதிகமென்பதுபோற் காட்டி, அவைதிகமெனக் கெடுக்கும் நோக்கமேயாம். அதுமேலே காமிகாதிகள் அவைதிகமல்ல, வைதிகமென்று காட்டுவார்போற் புகுந்து, அக்காமிகாதிகள் அவைதிகமெனக் காட்டுதல் பற்றியுமறியப்படும். படவே, ஏகவாதக்காரர் நாலுமேகமேயன்றி, அநேகமாதல் கூடாமையால், ஏகவாதக் காரராகிய இவ்வாசாரியர் ஏகான்மவாதநூலொன்றோடு அநேகான்மவாத நூலையும் கூட்டி, துவைதப்படுத்தல் அவரியல்புக்கு கூடாமையறிக. ஆதலால் ஆகமத்தையுங் கூட்டி துவைதநூல் காட்டினது, ஆகமத்தைக் கெடுக்கும் பொய் நோக்கமும், ஏகான் மவாதத்தை யெடுக்கும் உண்மை நோக்கமாமாறறிக. அது நிற்க, இனி இதில் புத்தி பிரம்சத்தால் யாதேனும் விரோதமுளதாயில் அதனைப் பிரமாண பூர்வமான யுத்தியோடு எவரேனும் எடுத்துக்காட்டுவாராகில் அதனை ஆதரவோடு கொண்டு அவர் செய்யும் நன்றியையும் மிக மேன்மையாகப் பாராட்டப்படும். அத்திருத்தமும் மறுபதிப்பில் வெளியிடப்படுமென்றார். புத்தி பிரம்சத்தால் விரோத முளதாகும் என்று விரோதமுளதாதற் கேதுபுத்திப்பிரம்சமெனவே, பிரம்சமின்றியும் விரோதமுளதாமென்பது பெறப்பட்டது. அதுநிற்க இனி விரோதமாவது ஒருவன் கொள்கைக்கு மறுதலையாம். ஆகவே, இவ்வுரையாசாரியர் கொள்கையாவது இவ்வுரைப் பொருளாம். இவ்வுரைப்பொருளுக்கு மறுதலையாவது விரோதம்,விரோதத்துக் காரணமாவது வெறுப்பாம், ஆகவே, அவ்வெறுப்பாலாகிய விரோதத்தை வெறுப்பின்றி ஆதரவோடுகொண்டு எனவே, அவ்விரோதத்தை அநாதரவோடு கொண்டென்பதும் பெறப்படுகின்றது. என்னை? வெறுப்பாலாகும் விரோதத்தை எவ்வாறு வெறுக்காது ஆதரவோடு கொள்ளுகின்றாரோ, அந்த நியாயம்பற்றி விருப்பாலாகும். அவிரோதத்தையும் விரும்பாது அநாதரவோடு கொள்ளுதல் தக்க

தாதலால், ஆனால் ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டுதருமம் இவ்வாசாரியராகிய ஒருதருமியில் இருக்கின்றனவே, 180ல் ஒரு தருமியில் ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டு தருமம் இருத்தல் கூடாதென்று கூறிய, வாசாரியர் தாமே, ஒன்றுக்கொன்று விரோதமான இரண்டுதருமம் தன்னிடத்திலிருக்கப்படுவரோவெனில், அதற்கு யாம் என்ன செய்குவாம், விகாரமாதலும் விகாரமாகாமையுமாகிய இரண்டு தருமமும் பிரமத்தில் உண்டென்று கூறுதல், விவர்த்த முறைக்கு விரோதமாகாமையால் விரோதமில்லை போலும். ஆகையால் விரோதத்தை ஒப்புக்கொள்ளும் உரையாசாரியருக்கு அவிரோதம் ஒப்பாகாதல்லவா? ஆனதால் நமக்கு புத்திப் பிரம்சமில்லாமையால் இதிலுண்டான அவிரோதங்கள் அளவில்லை. ஆதலால் அவைகளைப் பிரமாண பூர்வமான யுத்தியோடு எடுத்துக் காட்டுவோமானால், அவர் அநாதரவோடு கொள்ளாமையுந் தவிர, யாஞ் செய்நன்றியையும் மிக மேன்மையாகப் பாராட்டமாட்டாரா, அதனால் எமக்குப் புத்திபிரசம்மத்தால் உண்டான விரோதத்தை எடுத்துக் காட்டினோம். இனிமேலும் எடுத்துக்காட்டுகிறோம். அதனை ஆதரவோடு கொண்டு நாம் செய்த நன்றியையும், உம்மையால் செய்யாத நன்றியின்மையையும், மிகமேன்மையாக பாராட்டுவார் என்று கொண்டு, இந்த உரை விரோதத்தை எழுதப் புகுந்தாம். பிரதிஞ்ஞைப்படி இவ் விரோதத்தை அவர் ஆதரவோடு கொண்டு நன்றி பாராட்ட கடமைபட்டவரே தவிர, விரோதம் பாராட்டக் கடமைப்பட்டவரல்லர். இன்னும் இதிலுள்ள விரோதம் பார்க்கப் பார்க்க மிக மேலும்மேலும் விரியும், ஆதலால் சுருக்கமாய்க் கூறிவிடுகின்றோம். அது நிற்க, இனி இச் சாத்திரத்திற்கு பதி பசுபாச விவேகமும், அவ்விவேக வாயிலாக பாச விடுதியால் அகண்டகார சச்சிதானந்த அத்துவ பரிபூரண சிவப்பிராப்தி வடிவ முத்தியும், சத்தினிபாதமுடைய முமுக்ஷுவும், நூலுக்கும் விஷயத்திற்கும் பிரதிபாதக பிரதிபாத்திய பாவமும் முறையே விஷயமும், பிரயோசனமும், அதிகாரியும், சம்பந்தமும், என்றும், இந்நூல் அதிகாரியிரண்டற்கும் அதிகாரி பிரயோசனமிரண்டற்கும் முறையே அத்தியேதவ்விய அத்தியேத்திருபாவமும், பிராபக பிராப்பிய பாவமும், சம்பந்தமாம். இவ்வாறே மற்றைச் சம்பந்தங்களையுமறிக என்றுங் கூறினர். 289-ல் சிவஞானத்தால் சர்வானர்த்த வடிவ பாசங்களும் நீங்கி, பரமானந்த சிவத்தினைப்பெற்று, கிருத கிருத்தியனும் பிராப்த பிராப்யனுமான சீவன் முத்தனுக்கு

இதன்மேற் பெறும் பேறு வேறில்லை என்று கூறிய வாசாரியர் 308-ல் இவ்வாறு பராபத்தியினைச் செய்த சீவன் முத்தனது சரீரம் பிராப்த க்ஷயத்தில் நீங்கும், நீங்கவே, நிருபாதிகனாய் சிவசொரூபனாகவே எஞ்சி நிற்பன், அது பரமுத்தியென்றும் விதேகமுத்தியென்றுங் கூறப்படும். என்று கூறியவிடத்து 289-ல் கிருத கிருத்தியனென்பது பராபத்தியினைச் செய்தல் என்பதனோடு பிராப்த பிராப்பியனுமான சீவன் முத்தனுக்கு இதன்மேற் பெறும் பேறில்லை யென்பது, சீவன் முத்தனது சரீரம் நீங்க-சிவசொரூபமாக எஞ்சி யிருப்பன் என்பதனோடும் மாறுபடுதல் எவ்வாறு, அவ்வாறே இங்கும் அவர் கூறும் பிராப்பியபாவம்; அத்தியே தவ்விய அத்தியேத்திருபாவம், பிரதிபாதக் பிரதிபார்த்தி பாவங்களும் ஆகிய சம்பந்தம் அதிகாரி பிரயோஜனம் விஷயம் என்று நான்கும் மாறுபடுதலறிக. அன்றியும் சத்தினிபாதமுடைய முமுக்ஷுவெனவே சத்தினி பாதமில்லாத முமுக்ஷுவும், அகண்டாகார சச்சிதானந்த அத்வய பரிபூரண சிவப்பிராப்தி வடிவமுத்தியெனவே, கண்டாகார அசச்சிதானந்த அனத்துவய அபரிபூரண அசிவப்பிராப்தி வடிவ முத்தியும் பெறப்படுதலும், விவேகவாயிலாக பாசவிடுதியால் முத்தியென்பது பாசவிடுதி வாயிலாக விவேகத்தால் முத்தியென்னும் சுருதியோடு மாறுபடுதலும், பதி பசுபாச மூன்றனுள் விவேகமே விஷயமென்பது சத்தென்னுமொரு விஷயமே இருந்ததென்னும், ஏகசத்து விவேகத்தோடு மாறுபடுதலும் அறிக. இன்னும் இவைபோலும் பிற மாறுபாடும். அவ்வாறேவிவர்த்தமுறைபாதலறிக. முகவுரையும் இச் சம்பந்த முதலிய நான்கும் அன்னபிறவும் மூலவியாக்கியானி எழுதல் கண்டெழுதிக் கெட்டார். இது காறுங் கூறும் முகவுரை மறுப் புத்தாற்பரியம் என்னவென்றால், மேருமலைக்கு 40-கோடி யோசனை தூரத்துக்கு "அப்பாலாகுமாரிருள் சேரெல்லைதனில் அநாதி யீசர் வாழுமொரு பெருங்கயிலை யுண்டென்றும், "ஏமகூடத்தடவத்தென் பாலிமயவடபாறன்னி லேற்றமிகுங் கயிலை நிற்கும்" என்று காந்தமும், அவ்வாறே உபதேச காண்டம் கடம்பவனபுராணங்களிலுங் கூறுமாறு பற்றி, மேருவிற்கு வேறாக வெகுதூரத்துக்கு அப்பாலுள்ளதென்று பெறப்பட்ட கயிலை, மேருவின்மேலுள்ள தென்றும், அருளால விருட்சத்தை மருளால விருட்சமென்றும், அசுத்தவித்தையை சுத்த வித்தையென்றும், அமந்திரபீடத்தை மந்திரபீடமென்றும், பாச நீங்காதபசுவை பசுக்களின் பாசம் நீக்கு முதலென்றும், நந்தி ஞானபாதம் சொல்லும்படி கேளாதிருக்கவும், அது கேட்டாரென்றும், இனி அவர்

கேட்டாரெனக்கொள்ளினும், அக்கேட்டபடி ஞானபாதத்தைக்கூருமல் முன் கேட்டுவிட்டபடியால், அவர் கூறவேண்டாமென்ற அச்சரியை கிரியாயோக பாதங்களை கூறினுரென்றும், இனி அவ்வளவிலும் விடாமல் பரமசிவன் சதாசிவத்தை யதிஷ்டித்து ஈசான முகத்தினின்றும் ஆகமத்தை தோற்றுவித்தாரென்றும், பரமர்கூறக் கேளாதவர்களாகிய சிவருத்தியாதியரை அவர் கூறக் கேட்டாரென்றும், உபசுரோதா ஆகாதருருவை அச்சிவருத்திராதியருக் கிரண்டர்வதாகக் கேட்டாரென்றும், ருருஞான சங்கிரகங் கேளாதிருக்கவும் அவர் அது கேட்டாரென்றும், இனிக் கேட்டாரெனக் கொள்ளினும், கேட்டபடி அந்த ஞான சங்கிரகங் கூருமை மேலும், ஆகமத்துள் சிவஞானபோதம் முன்னேயுள்ளதாகவும், இல்லையென்றும் அது பின்புதிதாய் செய்யப்பட்டதென்றும், ருருஞான சங்கிரகங் கேட்டதற்கு மாருக ஞானயோக கிரியை சரியாசாரத்தைக் கூறினுரென்றும், அதனேடு ஆகமங்களை அனந்தருக்குக் கூறினுரென்றும், அனந்தர் தாங்கேட்ட ஆகமங்களை தனக்குக் கூறினுரென்ற சிகண்டர் ஞானபாதங் கேட்ட நந்திக்கு அது கூருமல், ஆகமசாரமாகிய அச்சிவஞானபோதம் சிவ ருத்திரருக்கு கூறவில்லையென்றும், அன்றியும் வேதாகம சாரமாகாதவதனை வேதாகம சாரமென்றும், அவைதிகம் துவைதம் தாந்திரிகமாகாதவதனை அம்முக் குற்றமுடையதுபோல் கூறி, மறுபடி அது அக்குற்றமற்றதென்று சமாதானம் கூறுவோர்போல வந்தும், வந்தபடி முக்குற்றமின்மைக்கு சமாதானங் கூருமை மேலும், மேலே ஆகமம் அவைதிகாதி குற்றமுற்றதென்று கூறுது, அது அவைதிகாதி குற்றமுற்றதுபோலவும், அதற்கு அவை இல்லையென்று கூறுவோர்போல வந்தும், வந்தபடி ஆகமம் அவைதிகாதி குற்றமும், அவற்றுள் அவைதிகமுமாகாதென்று கூருமல் மாறுபடாக ஆகமம் அவைதிகமென்றும், மறுபடி அதற்கு மாருக அவைதிகமென்ற ஆகமத்தை வைதிகமென்றும், இவ்வாறு மாறிமாறி ஆகமத்தைப் பற்றிக் கூறியதையும் கைவிட்டு, கட்டகுடி பிரபாதநியாயமாய் மறுபடியும், முகவுரை 3-ல் சிவஞானபோதம் வேதாகமசாரமென்று கூறியதை மறந்து, மறுபடி சிவஞானபோதம் வேதசாரமென்றும், அன்றி விரோதத்தை அவிரோதமென்றும், விரோதத்திற்குப் பிரமாண முண்டென்றும், விஷயமாகாத விவேகத்தை விஷயமென்றும், முத்திக் கேதுவாகாத பிரகிருதி புருஷ விவேகத்தை அதற்கேதுவென்றும், அநித்தியப் பிரயோசனத்தை நித்தியப் பிரயோசனமென்றும், அனதிகாரியை அதிகாரியென்றும், அசம்பந்தத்தை

சம்பந்தமென்றும், இன்னும் இவ்வாறே மாறி கூறுதலானும், அது
பற்றி இது குன்றக்கூறல் முதலிய குற்றம்பத்தும் உடையதாதலாலும்
என்று, இவ்வாறிம்முகவுரை விவர்த்தமாதல் கூறும் வாயிலாக தத்
துவப்பிரகாசம் அதத்துவப் பிரகாசமாதற்கு ஏதுக் கூறியவாறு.
இனி பிரமாணமாகக்காட்ட, அது ஆகமங்கண்டனமாமோ என்றால்
அது இராவணசந்நியாசநியாயமாய் கண்டனமாதல் நாத்திர சத்தி
ரூபாதானமென்றும், பவுட்கராகமம் கண்டனம் வரும், (45-ல் கூறுதும்.
அது நிற்க. இதுகாறுங் கூறுவனவெல்லா மொக்குமாயினும், சிவ
ஞான போதமாயாவாத தத்துவப் பிரகாசிகையின் மறுப்பாகிய இதற்கு
இப்பெயர் இணங்குமோ என்றால், சிவஞானபோத மறுப்பாய் வந்த
தத்துவப்பிரகாசிகை சிவஞானபோத மறுப்பு என்று பெயர் பெறாமை
எவ்வாறு, அவ்வாறே பிரமஞான போதமறுப்பாகிய இதுவுமாம்.
இஃதென்னை? சிவஞானபோத நூலை விளக்குதற்கெழுந்த வியாக்கி
யானம் தத்துவப் பிரகாசிகையாகுமன்றி, அது மறுப்பாதல் அமை
யாததாது போலுமெனில், அஃதன்று, சிவஞானபோத நூற்குரிய
வியாக்கியானம் தத்துவப் பிரகாசமாமென்பதற்கு பிரமாணமில்லாமை
யால் அமையாமை யாங்ஙனமாதாலாலென்பது. அன்றன்று, தத்துவ
மென்பது உண்மைப் பொருட்டாதலால், இந்நூற்கு முன்னுரைத்த
உரையனைத்தும் இந்நூலுண்மையை விளக்காமையாலும், இஃதத
னுண்மையை விளக்குதலாலும் மறுப்பாகாதுபோலுமெனில், அற்
றேல், சிவஞானபோதத் துண்மை விளக்குதற்குரியது சிவத்துவப்
பிரகாசமாகுக. ஆதலால் அஃதப் பெயர்பெறாது இப்பெயர்பெற்று
அப்பெற்றித்தாதல்யாண்டைய தென்றொழிக. அல்லாமலும் முன்
னுரையெல்லாம் அதனுண்மையை விளக்காமைக்கேது இது, இது
அதனுண்மையை விளக்குதற் கேதுவிது என்னுமையால் அது
மாயாவாத விபரீதமாதலறிக.

இனி ஏதுவின்றி அஃதஃதாம், ஏதுவின்றி இஃதிஃதா
மென்றால் அற்றேல், அது வேது முதலிய உறுப்புக்கள்பற்றியன்றி
பொருளுண்மை துணியப்படாமையால் அதன் பொருட்
டெழுந்த உறுப்பு நூல் ஆபாசமாகும். அவ்வாறுறுப்புநூல் ஆபாச
மாகவே, உறுப்பியும் ஆபாசமாதலொருதலையாம். ஆகவே அவ்வினை
முதலும் ஆபாசமாய் முடியும். முடியவே, இவ்வாறு ஏதுவின்றிக்
கூறுவோரும் ஆபாசராம். ஆதலால் அனைத்தும் ஆபாசமாதலறிக.
அது நிற்க.

இனி சித்தாந்தம் சிவாகமம் என்பது சர்வசாஸ்திர சம்மதம், நன்மை தீமையொப்ப இவ்வுலகப்பொருளெல்லாம், அன்னுவயம் வியதிரேகம்பற்றி இருதிறப்படுமென்று, சித்தாந்த நூற்றுணிபு இவ்வாறு கூறும் சிவாகமங்கள் மாயாவாதநூல் ஆபாசநூலென்று ஆண்டாண்டு முழங்குதல் யாண்டும் யார்க்கும் புலனாய் மிக்குநிகழும் பெருவழக்கென்பது, ஆகமங்கற்கும் சிறும்காரர்க்கும் இனிது விளங்கும். அது பற்றியே சங்கராசாரியார் தமது உப்நிடதபாடியத்தில் மாயாப்பிரதி பிம்பித ஈசுரனால் செய்யப்படும் சிவாகமம் ஆபாசம் எனக்கூறும் வாயிலாக சிவாகமமுறைக்கு பிறராகிய தாம், இவ்வாறு பிறர்கூறும் பக்கமாகக் கூறிவிடுத்தார். இது மாயாவாதிகளுக்கெல்லாம் ஒப்பமுடிந்தது, அவ்வாறே வித்தியாரண்ணியர் சிவாகமப்பிரமாணங்கொள்ளுதலால் அது யாண்டுஞ் செல்லாது போலுமென்றால் அற்றன்று, பஞ்சதசை முதலியவற்றுள் எடுத்துக்கொள் ளாமையால் சொல்லாமையாண்டைய தென்றொழிக. சூதசங்கிதை வியாக்கியானத்தில் சில விஷயங்களில் மூலத்தில் சிவாகமப்பொருள் வருதலால், அவ்வியாக்கியானத்திற்கு இன்றியமையாமைபற்றி கொண்டாரன்றி, ஆகமப்பொருள் உடன்பட்டுக்கொண்டாரல்லரென்க. சர்வதரிசனம், சர்வதரிசனங்கிரகமென்பவற்றுள் வருவனவும், அவ்வாறு வருமவையும் விபரீதமாதலுய்த்துணர்ந்துகொள்க. அவ்வாறன்றி அவ்விருவரும் ஏற்றுக்கொண்டாரெனில், அவர் தம் நூல் உரையிரண்டினுள்ளும் ஏற்றுக்கொள்ளப்படாமையால் தாமெடுத்துக்கொண்டவைகளுக்கு இன்றியமையாமைபற்றியே அதுவென்பது தெற்றெனவறிக.

இனி கௌடபாதர் கோவிந்தயோகி முதலிய முன்னோரும், அவர் முன்னோரும், அவர் பின்னோரும், அவரன்னரும், அன்னபிறரும், சிவாகமத்தை எடுத்துக்கொள்ளாமை, சிவாகமம் துவைதம் என்னும். அவர்தம் வழக்குப்பற்றியும், சங்கராசாரியார் சீனிவாசகுமார்த்தர் சிவாகம தூஷணை செய்தமை பற்றியும், உத்தரபூமி மாயாவாதிகள் தந்நூலுரைகளில் சிவாகமவசனம் எடுத்துக்கொள்ளாமை பற்றியும், தென்பூமி மாயாவாதிகள் தமது நூலுரைகளில் எடுத்துக்கொள்ளாமை பற்றியும், ஆகமம் அவைதிகமென்னும் அவர் தம் வாயுரைபற்றியுமறிக.

இது கூறியது யாதோவெனில் முத்திநாதனென்பான் மெய்ப்பொருட்பிரானைப் பகைத்து, பலவேறு நாள்களில் பலவேறுபாயங்க

ளால் பொருதும் வேறலாகாமைபால், இனி இவரைப் பகைத்துக் கோறல் எவ்வாற்றானுமரியது. இயைத்துக் கொல்லுவோமென்று கருதி, நண்புபோற் காட்டி, மயக்கிக் கொன்றாற்போல, மாயாவாதியாகிய இவ்வுரையாசாரியார், இதுகாறும் சிவாகமத்தோடு பகைத்து, வெல்ல முடியாமையால், மாயாவாதம் எதனுனு மெலியது. சித்தாந்தம் எதனுனும் வலியது, ஆதலால் உரையென்பதொரு உபாயவாயிலாக நண்பு போற்காட்டி கெடுக்குங் கருத்தே. இச்செயல் பிறிதென்றென்று கூறியவாறும்.

இனி தத்துவப்பிரகாசமென்பது புறத்தே யுண்மைப்பொருள் படுவதுபோற் காட்டி, தமது தத்துவமசி என்னும் பதம் மூன்றனுள் தத்துவமென்னுந் தற்பத, துவம்பதப்பொருளிரண்டு மறைத்து, ஏனை அசிபதமீண்டுக் காட்டாதொழியும் வாயிலாக சிவாகமம் முப்பதத்துள் தத்துவபதமிரண்டுமே போதித்தற்குரியது, தாழ்ந்தது, மாயாவாதம் அதன்மேல் அசிபதப்பொருள் போதித்தற்குரிய மாயாவாதமெதுவோ அதுவே மேலானது என்று கூறும் வாயிலாக, சிவாகமத்திலும் மாயா வாதமே மேலாதல்கூறி, சிவாகமத்தை தூஷித்துக் கெடுக்குங் கருத்து பற்றிக் கூறிய பெயரேயன்றி வேறன்றென்பது 137 161 178 பக்கங் களில் கூறுதல் பற்றியும் பின்னே முடியும்வரை அவ்வாறு கூறுமை பற்றியுமறிக. அது நிற்க.

இனி சிவஞான போதப்பொருள் சிவநிஷ்டருக்கன்றி, பிரம நிஷ் டர்கள் உணர்தற்கும் உரைத்தற்கும் உரியதொன்றன்று. அவ்வாறாகவும் அது பிரமநிஷ்டராகிய இவ்வுரையாசாரியாராலுணரப்படுதலும் உரைக்கப்படுதலும் யாங்ஙனம், இஃதவரறிவராயில் சிவனிஷ்டர்செய்த சிவத்துவப் பிரகாசமென்று பெயரிடுவார் அறியாது கெட்டார், ஐய கோ யாது செய்குவார். அவ்வாறே பெயரவ்வாறு சொல்லில் அஃ துண்மையாதல் பெறப்படும்போலுமெனில், அற்றன்று. "சொல்லு தல் யார்க்குமெளிய அரியவாம் சொல்லிய வண்ணஞ் செயலாகாலா லென்பது, பிரமநிஷ்டர் தந்நெறியறியாமைக்கு இந்நெறியறியாமை அமையுஞ் சான்றாதலறிக. அன்றன்று பிரமஞ் சிவம் இரண்டும் ஒன் றென்று அறியாது கூறினீரெனில், அவ்வாறே அவை தம்முள் ஒரு பொருட் கிளவியாயில் சிவஞானபோதம் என்றெழுந்த நூல் பிரம ஞானபோதமென்றெழுக. அச்சிவஞானபோதஞ் செய்தாரும் அறி யாது கூறினர்போலும். பொன்னம்பலப் பிள்ளை கூறியவாறே சிவ ஞானபோதஞ் செய்தார் அச்சியந்திரமுள்ள இக்காலத்தில் செய்

யாமையாலும், பிரமநிஷ்டர்போலும், பிரம அறிவில்லாமையாலும் பிரமஞான போதமென்றது சிவஞான போதமென்றார்போலும், இது பற்றியே பிரமஞானபோதம் பிரமநிஷ்டரை நட்டாற்றில் விட்டவாறுங் காண்க. அதுநிற்க.

"வேதசாரம், தந்திரம், வேதாந்தார்த்த மிதஞ்ஞானஞ் சித்தாந்தம், சித்தாந்தத் வேத சாரத்வாத்" நாம் வேதசிவாகமங்கட்கு வேற்றுமை கண்டிலம். "நாதனுரை யிவை நாடிலிரண்டந்தம், பேதமதென்னிற் பெரியோர்க்க பேதமே" "வேதாந்தத் தீதில் பொருள்கொண்டுரைக்கு நூல் சைவம்" என்னுமினரேன்ன நூல் முதல்வழிபுடைகளின் மூலையின் மூலையுமுணராத பிராசீனர் ஆதுனிகருள் ஒரு சாரார் ஸ்ரீ சிவாகமம் அசுரௌத நூலாமல்லது, சுரௌத நூலாகாமையின், அது சுதந்தர நூலாமல்லது அசுதந்தர நூலாகாதென வறிதோதுவதெல்லாம் வெறும் போலியுட் போலியாதல் மேலே எடுத்தோத்தும் பற்றி இனிது துணியப்படும்.

பிழை திருத்தம்.

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
1	1	12	னென்	னெப்
		21	நால்	நாற்கு
2	1	11	தலால்	தால்
	1	22	னென்	லென்
3	1	8	மக	ம
	2	16	டுணே	டுளே
		18	றும்	னும்
		19	திரு	துமிரு
4	2	6	தூத	நாத
		14	உறை	உரை
		23	தம்	தழும்
		24	தழும்	தம்
5	1	29	வாறே அந்த வசனங்கட்கு	வாறே
6	2	22	யான	யானி
		27	இனியாம்	இனி
7	1	7	றுஞ்	னுஞ்
		13	நிறையாத்	நிறை
8	1	18	றுன்	றுண்
	2	1	லே	லேத
		2	காணு	கரணு
		4	எத	ஏத
		12	எது	ஏது
		13	றும்	தும்
9	1	3	படி	பழ
	2	8	ஜினவா	ஜினவர்
		26	டின்	டின
		28	இவர் கூ	கூ
10	1	1	சந்	சந்த்
		5	புரை	யுறை
	2	5	றும்	னும்
		17	தாந்த	தாந்த சித்தாந்த
		18	சித்தாந்தத்	தத்
		25	றலாம்	றலே லாவாம்

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
			என்று	என்னு
11	1	8	டாமை	டாகாமை
	3	9	யாத	யமாத
12	1	5	சிகா	சிகர
		14	சிகா	சிகர
13	1	3	தத்தை	ந்தத்தை
		6	அதுமா	மா
		9	அநுக்கிரகிக்க வேண்டுமென்று	அடைதற் பொருட் டென்புழி
14	1	2	பாக்	பா
		7	சரா	சார
		11	பெரி	பேரி
		12	சித்	சித்தித்
		16	வேதா	வேத
		18	வரவா	வர்
15	1	1	சிவ	சிவன்
		29	நந்தி	நந்திக்கு
16	1	2	யான	யானம்
		9	ஆசிரி	ஆசாரி
	2	13	நாராதலானும்	நார்
		14	தாவி	தவி
		21	னென்	னெண்
		24	ரார்த்தமாக	ராத்மக
18	1	11	பாக்	பா
		12	மாதி	மாதிகள்
		17	படுதல்	படுமாயினும்
19	1	28	வைதி	காமிகாதி வைதி
		34	கர	கா
20	1	1	முகா	மிகா
		30	வர்தா	வர்த்தா
22	1	9	கூறு	கூற்று
		29	சித்த	சித்தா
		30	சந்தி	ந்தி
23	1	6	மாதவ	மாத
		10	வரித்து	வகரித்து
		19	தெற்றன	தெற்றென
24	1	9	டால்	டல்
25	1	6	மெண்	மன்
26	1	24	கண்ட	கண்டா

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
		29	பரவ	பாவ
27	1	2	பிராப்த	பிராரத்த
		11	என்று	என்னு
		27	என்று	என்றும்
29	1	5	ஆகமம்	ஆகம
		7	மென்றும்	மென்னும்
		16	தராது	து
30	1	14	சொல்	செல்
	2	3	ணும்	னும்
31	2	5	துதாழ்ந்ததுமா யா வாதம்	தாய்த் தாழ்ந்தது
32	2	1	சாரம்	சாரமிதம்
		2	தத்	தம்
		6	றைக்	ரைக்

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
2	1	21	துசுக்	து
3	2	5	ருன்	ருள்
4	1	4	னக	னெனக்
4	1	19	ந்து	ந்தது
6	1	8	ஏத்து	ஏதது
6	1	9	ஊ	ஊையும்
,,	,,	10	யாதல் போலா	யுமாகு
6	1	10	லயாகும்	ல
7	1	8	ண	ணமாக
7	1	11	மா	மாக
8	1	13	யாய்	யாய
10	1	16	ரதற்கு	ர்தற்
11	1	15	மண	மாண
13	2	4	யது	டது
14	1	30	டாதா	டரத
15	1	3	ன்ற	ன்றி
15	2	8	வேரு	வேறு
18	1	20	பெரு	பொரு
19	1	16	ளுற	ரு
20	1	1	மப	ம்ப
20	1	1	விவி	விவித
20	1	1	பேவ	பே
20	1	12	அத்	அது
20	1	19	லானு	னு
20	1	4	ர்ப்	ற்
21	1	10	ர்ப்	ற்
21	1	11	ன்னருவன்	ன்
21	1	11	ஞெரு	ஞெருவன்
22	1	3	ர்கே	ர்க்கே
22	1	3	கேதெ	கேதுவெ
22	1	7	வா	வர்
,,	,,	11	கூர	கூற
23	1	14	ஞர்	ஞம்
,,	,,	20	தத	தத்
,,	,,	21	முறை	முனை
,,	,,	23	ன்று	ன்னு
,,	,,	31	ரெ	றெ
25	1	2	சிம்	சிவ
		10	வாயி	மாயி

பக்கம்	பா்ரா்	வரி	பிழை	திருத்தம்
		32	வெனி	வெளி
26	1	18	னும்	றும்
26		26	சம	சம்
	2	5	ம்	மாதலால்
27	6	2	புயெ	புவெ
	1	15	மாட்	மாய்
		20	ன்ம	னப
		23	னுய	றுய
		25	சம	சம்
	2	3	கிய	கி
28	2	10	டல	டில
	14	14	யம	யாய
29	1	23	உளப்	உள
30	1	7	வற்	வ்வாற்
	2	17	மற	மறை
	2	19	தின்	தினை
	2	20	மனற்	மறை
	2	22	சிவா	சீவா
31	1	1	த்தி	த்தை
	1	9	சிவா	சீவா
32	2	16	ன் னுந்தி	ருக்குறளும்
			ன்பது	மின்றி
32	2	16	லவறி	லவுமறி
	2	21	மண்பது	ம்
33	1	26	இதெ	இஃதெ
34	1	4	வாதெ	வாத்தே
	2	17	அத்த	அத
35	1	8	கா	கர
36	1	32	டாகு	டா
37	1	1	வன்	வன
,,	,,	21	தா	தாங்
,,	,,	,,	யேக	வேவ
,,	,,	,,	சிங்ச்யிச்	சித்
		22	திஜஞாத்	திக்ஞாமாத்
		23	நிங்	நிபங்
			அயப்	அப
			மேத்	மேய்த்
		25	வேறெ	வேறு
		26	ல்ல	ல்

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
		29	தால	தால்
37	1	31	ம்	மான தால்
38	1	1	றும்	னும்
40	1	2	திக	தி
	2	30	ரம	ரம்ம
42	1	34	லாம	லாவ
43	1	19	அன்	அற்
		30	ரியை	ரிகை
44		16	யம்	யம்பு
		18	நிய	தியர்
		22	த்து	த்த
		32	விவே	வே
47	1	17	ம்பா	ம்மா
48	1	18	சக	சச
		17	தாவே	தாமெ
		34	அச்	அத்
49	1	1	ல	பி
		10	னும்	றும்
50	1	31	விங்	உங்
51	1	15	ம்	ம்
		19	அத	ஆத
		19	வதெ	வவெ
		22	விப	விவ
52		14	கி	கிய
		20	து	தும்
		29	னும்	றும்
		33	த்	த்த
53		31	சக	ச
54		7	வோண்	வேண்
		15	தும்	து
		19		
		30	றுங்	று
		33	களுக்கு	கள்
55		23	கரு	சுரு
		25	லும்	ல்
		23	னம்	னமும்
56		24	உத்த	த்த
57		8	வித்ற்	ற்
		18	அதீ	அனுதீ

பக்கம்.	பாரா.	வரி.	பிழை.	திருத்தம்.
		28	சைன்	சைதன்
58		12	என்ஞறு	என்னு
		29	சித்த	சித்து
		32	அவ்	அ
59		29	என்று	து
60		21	ன்,	ன்
		24	நித்	அநித்
61		6	ன்று	ன்னு
61		18	பாள	பால
		20	வன்	வள்
		24	மாவா	மவா
		28	னப்	ன
62	1	4	றம்	னும்
		7	வாபி	வபி
62	1	13	தும்	து
		14	கரா	கார
		27	ருன்	ஞன
64	1	1	யான	மான
		9	றறி	றி
		14	சாங்	பிராங்
		24	மன்று	மன்ற
		32	பிரம	பிரமம்
		33	மனு	மமு
			நந்த	ந்த
		34	கூறி	கூறிய
66	1	5	னும்	றும்
67	1	8	தி	திர
		29	லேள	லெ
68	1	17	அங்	இங்
		19	வசி	வசிய
		31	றும்	னும்
70	1	7	ரென்	றென்
		10	ரணு	ரண
	2	1	இனிஇ	இ
71	1	25	டெ	டொ
			என்று	என்றும்
73	1	25	அரோ	ஆரோ
		27	தே	தோ
		31	பிச	பிசத

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
74	1	15	விவர்	விவர்த்
		17	டதெ	டவெ
		21	அரோ	ஆரோ
		23	றுன்	றென்
		32	றுலுருகருத்தன் று	று
75	1	8	ஆகி	ஆசி
76	1	26	யாய	யாய்
		30	வால்	வாதல்
77	1	9	னுமாய்	ஞய்
		11	ஞயிய	ஞய்
78	1	3	மாய்	ஞய்
			ளமா	ளனுமா
79	1	1	நிற	நிற்
		5	ந்து	ந்துகூடமல்
		9	தம்	திம்
			யிரு	யிந
		26	என்பதற்கு சி	சி
82	1	3	மவா	மவர்
		19	சம்	அசம்
		20	இச்	இச்சா
		31	மாய	மாயா
83	1	29	யரை	வரை
85	1	31	மம்	மப்
			கன	கன்ம
86	1	23	கந்தி	சந்தி
87	1	8	றஞ்	னுஞ்
		15	ஆஞ்	அஞ்
		21	றம்	னும்
		29	வடிவு	வடிவ
		30	வடிவு	வடிவ
88	1	2	வில்	வியாய்
		5	றைத்	றந்
		6	யம	யாய
89	1	3	தலே	தல்
90	1	27	பல	மல
91	1	7	ஆச	ச
		8	சீவ	சிவ
		32	கார	கர
92	1	4	றும்	னும்

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
		27	வரம்	வாரம்
		28	ஆசா	ஆச்சா
93	1	27	றியுது	றி
			றுஇவர்	று
94	1	6	யா:	யர்
		8	பாஷை	பாஷை
		19	யென்	வென்
95	1	7	மாள	மான
		18	கர்	கர
		20	ளுள்	ளுா
		26	பிரி	விரி
95	1	29	தாமே	தமே
96	1	17	சம்	சாம்
		24	கஞ	கதஞ
97	1	7	கணு	கனு
		15	க்ணு	கனு
		17	படா	பாட
	2	7	யும்,	யும்
98	1	5	க்கா	க்தா
		11	புலி	புவி
		21	சத	சுத
		30	கர	கார
100	1	12	பிருகி	பிருக
101		130	சீவ	சிவ
102	1	15	அவர்	அர்
		31	மௌன	ம்
		32	பிரி	பிரிய
103	1	6	துஇருக்கிறது	து
		25	தங்	துவங்
		26	தங்	துவங்
104	2	2	து.	து
		21	கா	காத
		28	தோர	தோர்
		34	லா	லாவ
105	1	11	பவன	பவன்
108	1	5	தெருட்	தெருப்
109	1	8	றும்	னும்
		9	டி	டிய
110	2	1	கியா	கிரியா

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
		2	பர்த்	பாதத்
		3	தம்	தம
111	1	3	னின	னி
		15	பனெ	பெ
		23	வாம்	லாம்
		26	மவ	மல
		28	க	கக்
		29	தேய	தேய்
112	1	17	சற்	சத்
		29	வும்	வம்
		31	காரம்	கரம்
113	1	19	சிரா	சிர
114	1	9	வறெ	வரெ
		13	னும்	றும்
		18	ரிர	ரிர்
		32	யா,	யா
115	2	16	திர	தர
		23	பது	ரு
116	1	1	கி	கிய
	2	7	பதம	பதம்
		8	காரி	சாரி
		12	தத	தத்த
117	1	4	தம	த்ம
		29	தேசி	தேச
118	1	16	தரு	வரு
	2	8	படி	டி
119	1	1	யா	கியா
		9	பிராம்	பிராப்
		18	வர்	வார்
120	1	6	லப	ல்லே
		13	யின்	யன்
	2	10	போ	மே
121	1	34	கா	காமை
122	1	3	ரம	ம
	2	8	துகா	வதுகா
		12	மான	மாய்ச்
		24	மிது	மெது
123	1	16	வார்	வா
			று	ற

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
124	1	2	மப	மப்ப
		12	அப்	அப
		13	அம்	அப
	2	1	ரீனை	ரீனை
		3	பிரார்	பிரார
		15	தன்	தன
125	1	4	வ	சிவே
		8	மானு	தனதனு
	5	1	வைத்த	வைதத்
		2	வைத்த	வைதத்
		6	றும்	னும்
127	1	13	ஞய	ஞய்
		27	து	தும்
		34	யது	ப்
128	1	13	யுண்	யண்
	2	2	கிய	கி
		11	சத	சத்த
		21	ல	லாத
129	1	26	தப்பொரு	தப்
130	2	5	பிள்ராள்	பிரார
		9	கித	குத
131	1	7	யாணி	கியாணி
	2	13	சர்	சா
		22	கரித்	கரித்த
132	1	15	ராப்தல்	ராரப்த
133	2	1	யா	கியா
		3	கரர	கார
			வன்	வன
		4	கரா	கார
		7	பிரார்	பிரார
133	2	10	பிரார்	பிரார
		17	ஞய	ஞய்
134	1	10	வன்	தன்
		24	சீதா	சிவா
		28	தந்	தந்தி
135	1	1	போர்	போற்
		12	மறைபு	ப
		14	னுக்	னுக்கு
			வர்	வர்த்

பக்கம்	பாரா	வரி	பிழை	திருத்தம்
136	1	5	பரா	பராவ
		11	விய	வியய
137	1	1	எகஞு	கஞு
		20	பாக்	பா
		30	சாதா	சாத
138	1	3	யில்	யில
		7	சாதா	சாத
		26	நிர்ணே	நிர்ண
139	1	21	வாங்க	வாங்
140	1	9	சனம்	தனம்
		26	பது	று
		31	வாங்க	வாங்

உ

ஸ்ரீ கணபதிக்குவணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டமயம்

சிவஞானபோத

மாயாவாத தத்துவப்பிரகாசிகை என்னும்

வியாக்யானத்தின் மறுப்பாகிய

சிவத்துவப்பிரகாசிகை.

ஓம் கணேசாயநம:- ஓம் ஸ்ரீசிவாயபரமகுருவேநம:- ஓம் ஸ்ரீ சிவகாமவல்லிசமேதசிதம்பரேசாயநம:- ஸ்ரீ சிவஞானபோத உரைமங்கலம் ஸ்ரீகணநாதரையும் நந்திகேசுரர் முதலிய ஆசாரியர்களையும் தக்ஷிணாமூர்த்தியும் மகாதேவரும் சச்சிதானந்தசொரூபியுமான பரமசிவனையும் நமஸ்கரித்து- முமுட்சுகட்கு எளிதில் சிவானுபவம் சித்திகதற்பொருட்டு இந்நூலுக்கு தத்துவப்பிரகாசிகையென்னும் உரை என்னால் இயற்றப்படுகின்றது என்றார். முதற்கண் ஓம் என்றது மாயாவாதமுறைபோலும். . அது நிற்க, இனி பின்நமஸ்கரித்தற்கு நின்ற சிவனுக்கு ஓம் ஸ்ரீஎன்னும் ஈரடையும் முன் நமஸ்கரித்தற்கு நின்ற கணேசருக்கு ஸ்ரீ அடையின்றி ஓமென்ற ஓரடையும்- ௩-வது- ஓம்ஸ்ரீசிவகாமவல்லியென்று சிவகாமிக்கு ஓம் ஸ்ரீ அடைகளும பரமகுருவாய சிவன் சிவகாமவல்லி சமேத சிதம்பரேசன் இருவரும் ஒருவராகாமையும் சிவஞானபோதத்திற்கு ஸ்ரீஎன்னும அடையும் அதனையுடையபௌரவாகமத்திற்கு ஸ்ரீ அடையின்மையும் மாயாவாத முறைபோலும். இனிகணநாதர் நந்திமுதலியோர்களை பரமசிவனோடு ஒன்றுய்வைத்து நமஸ்கரித்தல் மாயாவாதமுறையேயாம். அது நிற்க இனி கணநாதருக்கு ஸ்ரீஎன்னுமடையும் கணநாதர்தந்தை

க்கு அவ்வடைபின்மையும் அவ்வாறாம். இனி முமுட்சுகட்குஎளிதிற்
சிவானுபவம் சித்தித்தற்பொருட்டு என்றாலேஇந்நூலுக்கு உரை
இயற்றப்படுகின்றதெனவே இவ்வுரையாசாரியார் இதற்குரைசெ
ய்யாதுபோனால் முமுட்சுகளுக்கு பிரமானுபூதி அரிதிற்சித்திக்கு
மென்பது பெறப்பட்டதுபடவே இவ்வாசாரியார் இதற்குரைசெய்
தற்குமுன்னிருந்த சங்கராசாரியார் முதலியமுமுட்சுக்கள் பிரமா
னுபூதி அரிதிற்பெறுதலும் இப்போதிருக்கும் நம்போலிகள் பிர
மானுபூதி எளிதிற்பெறுதலும் பெறப்பட்டன. இன்னும் முமுட்சு
முமுட்சுகள் இருவரும் நூலுரை வேண்டாமென்பது முதலியமா
யாவாத முறையெல்லாம் அறிந்த இவ்வுரையாசாரியருக்கு இம்
முறையொன்றுமாத்திரம் அறியாமையன்றுமறதிபோலும். அது
நிற்க இனிவிபரீதவியாக்கியானஞ்செய்த சிவாசாரியார் வியாக்கி
யான ஆரம்பங்கண்டு அதுவே உண்மைமுறைபோலுமென்றுகொ
ண்டு இவ்வாறுவிவர்த்தங்கூறினார் இவர்முறையெல்லாமவர்முறை
யாதலால் ஆரம்பமெவ்வாறு விவர்த்தமோ அவ்வாறேமுடிவுவ
ரையும் விவர்த்தமாமென்பது கூறவேண்டாம் ஆனாலுஞ்சிறிது கூ
றுகின்றோம். கூறுமாறு, இப்போது இக்காணப்படுமுலகிற்குவேறா
க ஓர்பொருளில்லையென்பார்க்கு அனுமானப்பிரமாணத்தால் உண்
டெனச்சாதித்து அப்பொருளின்தடத்த இலக்கணங்கூறுகின்றார்
என்றாரிவ்வுரையாசாரியர். இப்போது இக்காணப்படுமுலகெனவே
அப்போது அக்காணப்படுமுலகும், காணப்படுமுலகெனவே கா
ணப்படாத உலகும் உண்டென்பது பெற்றாம் இவ்வாபாசம்
பின்னேகூறுதும். அதுநிற்க. உலகிற்கு வேறாகஒருபொருளில்லை
என்பார்கக்கு என்றார்; அவ்வாறு கூறுவார்யாருமிலர் அவர்தாமே
கூறக்கேட்டனம் ஆதலால் பரிபூரணானந்தபோத ஆசாரியார் தம்மை
த்தாமே பிறர்போலக்கூறுவதுகண்டு இவருமவர்போலக்கூறுகின்
றார்போலும். இனி இல்லையென்பார்க்கு அனுமானப்பிரமாணத்தால்
உண்டெனச்சாதித்து என்றார் உண்டெனச்சாதிக்கப்பட்டதெது
என்றுகேட்டால் அதுஇது என்பதொன்றுமில்லாமையால் அஃதா
பாசமாதலறிக அன்றன்று அவ்வொருபொருளெனவரும் பொரு
ளேயதுவெனில் அற்றன்று அவ்வொருபொருளென்பது இல்லை
யென்பதோடு முடிந்தபோதல்லால் அஃதஃதாமாறு யாங்ஙனம்.
இனி இல்லையென்பார்க்கு அஃதுண்டென்றனைப்பின் அமையுமா,

றறிக. இனி அனுமானப்பிரமாணத்தால் சாதித்தல் மாயாவாத முறையல்லது சித்தாந்த முறையல்லாமையறிக அல்லாமலும் அநுமானப்பிரமாணத்தாற் சாதிப்பதென்பது சிவம் சிவாகமமொன்றாலன்றி அறியலாகாமைபோல் பிரமம் வேதமொன்றாலன்றி அறியலாகாதென்பதோடு விரோதமாமாதலால் அதுமாயாவாதமாதலறிக இனி உலகிற்கு வேறாக ஒருபொருளில்லையென்பார்க்கு உண்டெனச்சாதித்து எனவே இவ்வுலகமேபொருள் உலகிற்குவேறாக ஒருபொருளில்லை என்பாரொருமதத்தாரிருக்கின்றாரென்பது பெறப்படும்படவே அவ்வாறு உலகமே பொருளென்பார் பிரமமே உலகம் ஆகலால் அப்பிரமத்திற்கு வேறாக உலகமும் உலகிற்குவேறாக பிரமமுமில்லையென்பார் அவர்தாமேயாமென்றறிக. இனி அப்பொருளின் தடத்திலக்கணமும் கூறுகின்றாரென்றவிடத்து உம்மை எச்சப்பொருட்டாகி அதாவது சொரூபவிலக்கணங்கூறுவதன்றி தடத்தவிலக்கணமுங்கூறுவதாமெனில 177-ல் சொரூப இலக்கணங் கூறுகின்றார் என்று கூறுதலால் அதுமாயாவாதமாதலறிக. அன்றன்று அப்பொருளுண்மையும் அதனிலக்கணமுமாமெனக்கொள்கவெனில அவ்வாறேல் அவ்வாறே அப்பொருளுண்மையும் அதன் தடத்த இலக்கணமுமென்று கூறப்படுக படாமையால் அவ்வாறுதல்யாங்ஙனமென்றெழுக ஆதலால் அவாந்தவதாரிகை மாயாவாத ஆபாசமாய் முடிந்தவாறுகாண்க அன்றி அதற்கதுவே அவதாரிகையாமெனில் அற்றேல் அவ்வாறே ஏனைவாதிகள் தத்தம்பொருளெல்லாம் அதற்கவதாரிகையெனக் கூறப்படும் படுகவெனில் அவ்வாற்றானுமிகூரால் கெடுகஎன்பதே அவர்முயற்றுதலால் அது அவர்க்குடம்பாடேயாகுல் எமக்கதுவும் அநுகூலத்தது கூலமல்லது பிரதிகூலமாகாமை பின்னேகூறுதும்.

அவ்வாறேபிறர் கூறும் பொருளெல்லாம் அமையுமென்றது யாங்ஙனம் அஃதறியும் பேரவாவுடையேன்கூறுகவெனில் அவ்வவதாரிப்பொருள் சூத்திரப்பொருளோடு இணங்காமைகூறும் வாயிலாககூறுதும் கூறுமாறு உலகின்வேறாய் ஒருபொருளின்று என்றதனால இவ்வுலகமே பொருள் இவ்வுலகின் வேறாய் ஒருபொருளின்று என்பது பெறப்படுகின்றது அது மா

யாவாதிகருத்தாமென்றறிக. அது இத்தருமதத்தனேதேவதத்த
ன் இவனின்வேறுய் தேவதத்தனென ஒருவனிலன் என்பானெ
ருவன் கூறறை உடன்படாது மறுப்பானெருவன் இவ்வேதுப்ப
ற்றி தருமதத்தனின் வேறுப் தேவதத்தன உளனெக்கூறுதல்
இவ்வுலகிற் கண்டாம் அதுபோல உலகமேபொருள் உலகின்வே
றுய் ஒருபொருளின்றென வினவும் வினவிற்கு விடைகூறற்கெழுந்
தது இச்சூத்திரமெனில் அதற்குவிடை இச்சகத்தின் வேறுய்
ஒருபொருளுண்டென்றுதக அவ்வாறுகாத உலகமே பொருள்
உலகின்வேறுப் ஒருபொருளின்றென்னும் தடைக்கு சகத்திற்கு
கருத்தாவுளன என்பது விடையாமாறு யாங்ஙனம். இனி ஒருவன்
இவ்வுலகுசெயற்கையன்று இயற்கையாதலால் அதனையாக்கும் வி
னைமுதலின்றென்றுவினவின் அதற்குவிடை சகத்திற்கு கருத்தா
வுண்டென்றேதப்படும அவ்வாறன்றி உலகமேபொருள் உலகின்
வேறுபொருபொருள் இன்றென்பதற்கு சகத்திற்குகருத்தாவுண்
டென்பது இறையாதல் தருமதத்தனேதேவதத்தன். இவனின்
வேறுய் ஒருதேவதத்தன் இலன் என்பானை மறுத்தற்கு இத்தரு
மதத்தனுக்கு தந்தையுளனென்பதுபோலும் ஆதலால் இவ்வுல
கமே பொருள் இவ்வுலகின்வேறுபொரு பொருளின்றென்பா
னை மறுத்தற்கெழுந்து உலகிற்குகருத்தா உளனென்று கூறுத
லென்பது மாயாவாதமாதலறிக. இவ்வுரையாசாயாருக்கு சிவாகம
நூற்பயிற்சியின்றேனும் சிவாகமநூற்பயிற்சியுடையவரோடாயி
னும் பயின்றதுண்டேல் அவதாரிகை இவ்வாறெழுதலாம் இவ்
வாறெழுதலாகாது என்று தெரிகுவர் ஆதலால் தெரியாமல் இவ்
வாறெழுதினரென்க இனிஉலகம் பிரமாபாசம் என்னுந்தாற்பரிய
மாகுப்படிஉலகமே பொருள் உலகின்வேறுய் ஒருபொருளின்
றென்றுகொண்டு அவ்வாறென்றுனும்சூரியதரிசனுது என்னும் வா
க்கியத்துக்கு தாற்பரியமில்லாமையறிக அஃதென்று தாற்பரியமது
வேயாமெனில் பொருளுந்தாற்பரியமும் தம்முள் ஒருநெறிப்ப
டாமல் இவ்வாறுவெறுப்பொருள் கூறல் எற்றுக்கென்றொழிக ஒளி
ஒளிப்பொருளுளினுளதாமன்றி இருட்பொருளினுளதாகாது இனி
இருளும் இருட்பொருளினுளதாமன்றி ஒளிப்பொருளினுளதா
காது இது நாற்றுணிபு ஆதலானும் சிவாகமும் மாயாவாதமும்
ஒளிபுமிருளும போலுமென்பது மிருகேந்திரவசனப்பற்றி

பிற்கூறப்படும். ஆகலானும், மாயாவாதப்பொருள் மாயாவாதநூலுட்பெறப்படுமல்லது சிவாகமநூலுட்பெறப்படுவது யாங்ஙனம். அல்லாமலும், காமிகம் மிருகேந்திரம், பௌட்கரம், சுப்பிரபேதம், லளிதம்புரோற்கிதம்ரௌரவமுதலிய சிவாகமங்களில் விவிதபேதசமாயாவாதத்சித்திபுருஷார்த்தேஷு பரித்திபசேத்,, என மாயாவாதநூற்பொருளாபாசமென்று கூறுதல் காணாராயினும் இப்போது அச்சில்வந்தகாமிகம் மிருகேந்திரம், பௌட்கரம் சுப்பிரபேதங்களில் மாயாவாதமாபாசமென்று முழங்குதல் கண்டுவைத்தும் குழியைவழியென்றுகண்டு விழுவார்போல மாயாவாதமாபாசமென்று மறுக்கும் சிவாகமநூல், ஒளி இருளுடைத்தென்பதுபோல மாயாவாதப்பொருளுடைத்தென்று சத்தை அசத்தென்று சாதிக்குமியல்புடைய பிரமபிஷ்டர் தத்துவப்பிரகாசமென்னும் வியாக்கியானத்தால் போதிக்கின்றார். இதனால் இந்தநூலில் மாயாவாதப்பொருளிணங்கும் இந்தநூலில் மாயாவாதப்பொருள் இணங்காதென்னும் வரையறையின்றி எந்தநூலிலும் மாயாவாதப்பொருளிணங்குமோ "நர்த்தேதபிரயோசனுதிஷ்டம் முக்யசப்தார்த்தலங்கனம்,, என்பதுபற்றி தத்தம்பயனெய்தவேண்டும் நூல்களிலெல்லாம் மாயாவாதப்பொருள் கூறலாமெனில் உரைக்குப்பயனாவது பூர்வபட்ச பரிகாரமாத்திரையேயல்லது வேறன்றென்க. இனிஅவ்வாறன்றி பூர்வபட்சிகள் தங்களுடைய மனக்கொள்கைகளையெல்லாம் எல்லா நூல்கட்கும் பொருளாயிணங்குப்படி எல்லாநூலினும் கூறலாமெனில் அவ்வாறு கொள்வார்க்கு இந்த நூல் மாயாவாதம். இந்த நூல்மாயாவாதமன்றுஎன்னும்வரையறையின்றாம் இனிஇவ்வரையறையாற் பயனின்றெனில் நன்றேபோதினும் நாஸ்திகமதத்தை மறுத்தற்கெழுந்த இச்சூத்திரம்நாஸ்திகவாதம் சாத்திதற்கெழுந்ததென்று கொண்டுநாஸ்திகமதானுகூலமாகவும் பொருளுரைக்கலாமன்றோ என்னை வியாக்கியானஞ்செய்தற்கண் தத்தங்கொள்கையே அன்றி நூற்பொருள் பொருளன்றுஎன்றலால்ஆனால் இச்சூத்திரம் நாஸ்திகவாதமாமாறு யாங்ஙனமெனில்அஃதாமாறுகூறுதும்அதற்கவதாரிகை வருமாறுஇவ்வுலகம் வினைமுதலுடைத்தென்பார்க்கு அஃதின்றென்றுகூறி அவ்வில்லாமைக்கேதுகூறுகின்றது இனி சூத்திரார்த்தம் வருகின்றதுசகத்கர்த்தா அஸ்தியென்பது இவ்வுலகம்வினைமுதலுடைத்தன்றென்றவாறு அஸ்தியென்பதுஉடம்போடுயிரை

நட்டெபன்பது போலக்குறிப்பு மொழியாய் நின்று வினைமுதலில்லா
மையை உணர்த்திபவாறு ஆற்றேல் அதற்கேது வென்னையெனில்
காரியதர்சனுதுஎன்பது காரியமாதல் காணப்படாது நித்தப்பொரு
ளாதலால் என்றவாறு. ஈதர்சனுது என்புழிககரம்தலைக்குறை, அஃ
தேல் அதுபல்குமாறுபாங்ஙனமெனில் ஸ்திரீபுங்கபுஞ்சகாதித்வாது
என்பது ஆண் பெண்கள் தம்முட்கூடும் கூட்டம்பற்றி யென்ற
வாறு உலகம் பல்கற்கேதிக்கூறப்புகுந்தார் நபுஞ்சகமும் உடன் கூ
றினர். சவத்தி றுத் நவாசிறுசத், என்பது அவ்விவ்வுலகம் பொன்
றல் தோன்றல்களுடைத்தென்றவாறு பிறவினைதன்வினை தன்வி
னை பிறவினை யாதல்போலாகும் அஸ்மத் அரபிரபு என்பது இவ்
வாறுயினும்மதனபகவான் மாதரின்பமாகியமுத்திக்கேது பூதனு
தலால் அத்துணையினவன் மனிதர்க்குத் தலைவன் என்றவாறுகாம
த்தினுல் இறப்போர்க்கு மூர்ச்சை செய்தலால் மன்மதன் அரனென
ப்பட்டனன் இவ்வாறு உலகாயதமதக்கொள்கையாகப் பொருள்
கூறப்பட்டவாறு காண்க. அவர் அவதாரிகைப்பொருள்வேறு
சூத்திரப்பொருள் வேறு கூறுதல்போலாமல் கூறும் இப்பொருள்
பற்றி அவ்விரண்டுந் தம்முள் வேற்றுமைப்படாது ஒற்றுமையு
டையவாதல் காண்க அது நிற்க, இனி இச்சூத்திரத்திற்கு பவுத்
தமதக்கொள்கைபற்றிப் பொருள் கூறுதும் அவதாரிகை
இவ்வுலகிற்கு உபாதானகாரணமாக மாயையுண்டென்பார்க்கு அஃ
தின்றெனக்கூறி அதற்கேதுக்கூறுகின்றது " சகத் கர்த்தா அஸ்தி
என்பது இவ்வுலகிற்கு உபாதானகாரணமாக மாயை யென்பதொ
ன்றின்று முத்திபெற்ற தன்போல்பிறரும் முத்திபெறச்செய்த
பிடகநூற்கருத்தாவாகிய புத்தகடவுளேயுளன் என்றவாறு, பல்
பொருட்கேற்பின் நல்லதுகோடல் என்பதுபற்றி ஈண்டேற்புழிக்
கோடலால் கர்த்தாவென்பது பிடகநூற்கருத்தாவின்மேற்று; கர்
த்தாவவனெனப்படும் ஏவகாரம் விகாரத்தாற்றொக்கது பிடகநூற்
கருத்தாவேயுளன் எனவே உலகிற்கு உபாதான காரணமாக மா
யையின்மையும் நிமித்தகாரணமின்மையும் தாமேபெறப்பட்டன,
காரியதர்சனுத் என்பது அதுகணபங்கமாதல்காணப்படுதலால்
என்றவாறு காரியமென்றது உபசாரம்பற்றி கணபங்கத்தின்மே
ற்று, அரபிரபு என்பது ஞானமே ஆன்மா என்றவாறு ஞானம்
புத்திஞானம் அதுகணந்தோறும் பொன்றித்தோன்றலால் அர

னெனப்பட்டது பிரஉபசர்க்கம் புருடன் பும் என்பன ஒருபொரு
ட்கிளவி பும் என்பது பு எனத்திரிந்து நின்றது ஸ்திரீபுங்நபுஞ்சகா
தித்வாது இறுத்வசிறுச்சத் என்பது ஆதலால்ஆண்பெண் அலி
யென்னும் உலகுகணந்தோறும் பொன்றித்தோன்றுமென்றவாறு.
இவ்வாறுபவுத்தமதப்பொருள் கூறப்படுமாறுகாண்க இப்பொருட்கு
அவர்கூறும்பொருள் மாறுபடுதல்போல மாறுபாடின்றும் அறிக.
இனிசாங்கியமதம்பற்றியும் இச்சூத்திரத்துக்குப்பொருள் கூறலா
மென்பதுக்கூறுதும் அவதாரிகை இவ்வுலகத்துக்குபாதான்காரண
மூலப்பகுதியின்றென்பார்க்கு அதுஉண்டெனக்கூறிஅதற்கேதுக்கூ
றுகின்றது கர்த்தாவென்பது சாங்கியநூல்கர்த்தாவாகிய கபில
முனிவனென்றவாறுசக அஸ்தியென்பது உலகிற்குபாதானகாரணமா
மூலகப்பகுதியுண்டென்று கூறுவர்சகமெனகாரணங் காரியமாகஉப
சரிக்கப்பட்டது என்ப என்பதுசொல்லெச்சம் ஸ்திரீபுங்நபுஞ்சகாதி
த்வாது என்பது ஆண்பெண் அலியாகிய இவ்வுலகைஎன்றவாறு இ
றுத்வாசிறுச்சதி அஸ்மாது என்பது ஒடுக்கித்தோற்றுவித்தலால் எ
ன்றவாறு சஅர்பிரபு என்பது அம்மூலப்பகுதியே தலைமையுடைத்
தென்றவாறு இவ்வாறுசாங்கிய மதப்பொருள் போமாறுகாண்க இ
ன்னும்இவ்வாறே அவ்வப்பரமதங்களுக்கெல்லாம் இணங்குமாறு அ
றிவாற்றல்பற்றி இனைச்சூத்திரங்களையும் அவ்வப்பரபக்கப்பொருளு
க்கிணங்குமாறு இணக்கி வேறு வேறு பொருள் கூறலாம். அவை
யெல்லாம் அவ்வவ்வாதிகளுக்குப்பயன் படுவன. ஆதலால்அவரெல்
லாம்முகவுரை பக்கம்மூன்றில்இத்தகைய சர்வவேதாகமசாரபூதமா
யுள்ள இதனை தாந்திரிகம், துவைதப்பிரதிபாதகம், அவைதிகமெ
ன்றுபாராது பராமுகப்படுகின்றனர் என்று கூறியவாறே இத்தகை
ய லோகாயதவேதசாரபூதம், பவுத்தாகமசாரபூதம், சாங்கியாகம
சாரபூதமாயுள்ள இதனை அத்துவிதப் பிரதிபாதகம், துவைதப்பிரதி
பாதகம் நிமித்தப்பிரதிபாதகம் என்று பாராமல் பராமுகப்படுகின்
றனர். என்றென்றுலோகாயத சாஸ்திரிகள் பவுத்தசாஸ்திரிகள்சா
ங்கியசாஸ்திரிகள்கூறுகின்றனர். ஆதலால் இவர்இவ்வாறு கூறுத
ல் பற்றியாகும் விசேஷம் என்னை? அவ்வளவினமையாமல் யாம் 77
ல் சுருதியாதி அநேகபிரமாண பூர்வமாகக்காட்டிய உரையினைக்
கொண்டு இது வேதசாரமென நிச்சயித்து சிவானுபூதிச்செல்வர்க
ளாவார்களாக உரையெழுதப்புகுந்த நோக்கமிதுவே என எளிதிற்

கூறினர் இவ்வாறே யாம் மேல்லோகாயதநூல் பவுத்தநூல் சாங்
கியநூலாதி அனேக பிரமாண பூர்வமாகக்கூறிய உரையினைக்கொ
ண்டு இது லோகாயத சாஸ்திரசாரம், பவுத்தசாஸ்திரசாரம், சா
ங்கிய சாஸ்திரசாரமென நிச்சயித்து இதனை லோகாயதானுபூதி
பவுத்தானுபூதி சாங்கியானுபூதிச்செல்வரானபெரியோர்முகமாய்க்
கேட்டுச்சிந்தித்துத்தெளிந்து அவ்வம்மதானுபூதிச்செல்வர்களாக
என்றென்று அவ்வவ்வாதிகளும் கூறுகின்றனராதலால் அவ்வாற
வர் கூறும் கூற்றுப் பற்றியாகும் விசேஷமென்னை அஃதன்று
வரம்பின்றியோடுதலால் அதுபற்றி அவர்கூற்றுபொய்என்பதே பய
ன்ஆதலால் அவ்வாதிகட்கு மவ்வப்பயன்படுக, ஆதலால் அவ்வாறு
கவெனில் அவ்வாறுவேறுபடுத்துக்கூறில் சிவாகமமெல்லாம்,பொரு
ள் வேறுபட்டுக்கெட்டொழியும் ஆதலால் இக்கேட்டிற்கெல்லாம்வ
ழிகாட்டியாய்இவர் போந்தமையால் மிகப்பெரியர்தாமென்றொழிக
ஆதலால் அவ்வம்மதநூல்கட்கு அவ்வம்மதநூல் முற்றும் உள்ளவா
றுணர்ந்து அவ்வம்மதநூல்:பிறவற்றிற்கெல்லாம் இணங்குமாறுநோ
க்கி அவ்வமதநூலெவற்றிற்கும் மாறுபடாமல் அவ்வம்மதநூல்களு
க்கு அவ்வம்மதமுடையார் தாமேவியாக்கியானமாக்கல்வேண்டுமெ
ன்பது சர்வமத சம்மதமாதலால் மாயாவாதாசாரியர் சிவாகமநூ
ற்கு அச்சிவாகமநூல் யாதுமுணராமல், அச்சிவாகமநூலெவற்றோ
டும் மாறுபடுமாறு தமது மாயாவாதப்பொருள் போதித்தல் யாது
ம் யாண்டும்யார்க்கும் யாதானுமடாதென்பதிதுபற்றி அறிந்துகொ
ள்க. இனி இவ்வுலகமே பொருள் இவ்வுலகிற்கு வேறாக ஒருபொரு
ளின்றுஎன்னும்பிரச்சன்னபவுத்தமதமும் நாஸ்திகமதமாதலாலும்
அதுபற்றி மேற்கூறும் நாஸ்திகமதங்களும் பிரசன்னபவுத்தமாகி
ய மாயாவாதமுமோரினமாதலாலும் அவ்வாறு கூறுதலுந்தமக்கு
பகாரமெனக்கொண்டு அப்பொருளை இவ்வுரையாசாரியர் உடம்ப
டினும் அவை சிவாகமவிரோதமாதலால் ஆபாசமாதலறிக அது
நிற்க. இனி உலகமேபொருள் உலகின் வேறொருபொருளில்லை எ
ன்பார்க்கு உண்டெனச்சாதித்தெனவே உலகுபொருளல்ல உலகி
ன் வேறொருபொருளின்றென்பார்க்குச்சாதித்தல்வேண்டாமெ
ன்பதூஉம் உலகுசெயற்கையல்ல இயற்கையாதலால் அவ்வுலகிற்கு
வினைமுதலில்லையென்பார்க்கு வினைமுதலுண்டெனச்சாதித்தல்வே
ண்டாஎன்பதூஉம் உண்டென்பார்க்கு பிறிதொன்றிணங்குமெனில்

அவ்வாறு இணங்குமென்று சாதித்தல்வேண்டாளென்பதூஉம்பெறப்
பட்டன அதுநிற்க. இனி இப்போது காணப்படும் உலகிற்குவேருக
ஒருபொருளில்லை யென்பார்க்கு உண்டெனச்சாதிட்டதெனவே இவ்வு
லகமேபொருளாம் ஆகவே, இவ்வுலகின்வேறுமொருபொருளுண்டெ
ன்பதெவ்வாறு அதாவது இவ்வுலகின்வேறுமொருபொருளில்லையெ
ன்பார்க்கு அதாவது இவ்வுலகுமித்தை இதற்கு வேருகஅமித்தியா
ப்பிரமாண்முண்டெனச்சாதித்தல் என்பது பெறப்பட்டது. படவே
அது உலகமேபொருளென்பாரொருவரில்லாமையால் அவரை மறுத்
தற்கெழாமை மேலும் ஏகான்மவாதப்பொருளின்று அனேகான்மப்
பொருளுண்டென்பார்க்கு மறுப்பாயெழாமையுமறிக. இதனைலேகொ
துகுக்கோட்கஞ்சி புலிக்கோட்பட்டான் போல அனேகான்மவாதத்
திற்கஞ்சி அநான்மவாதத்துட்பட்டவாறுகாண்க. இனி தடத்த இலக்
கணமென்னுமும்மை நிமித்தமாதல் சாதிப்பதேயன்றி தடத்தில
க்கணமும் கூறுகின்றதென்னும் பொருட்டெனில் அது பத்தியத்
திற்கன்றி கத்தியத்திற்கேலாமை யறிக. இனி அப்பொருளினின்
று என்று பிளவுபடுத்துக்கூறல்ஆபாசமாம். அஃதன்று, அஃதாமெ
னில்,சாமானியகல்வியுடையாராலும் எளிதிலறியவுள்ளது இப்புதிய
வுரையென்பது ஆபாசமாதலறிக அதுகிடக்க, இனி, இதனைச்சங்கா
ரஞ்செய்பவன் காரணனவன்என்ருர் என்புழி இதனல் என்றது
ஈதனையென்றவாவியவழி சகத்திற்குகருத்தாவுளன் அக்கருத்தா இவ்
வுலகைச்சங்கரித்துப் படைக்கிருன்என்னுமிதனையென்று அவ்வவா
ய் நிலைநிரப்பப்படுமாஞல் ஈமேசங்காரஞ்செய்பவன்காரணமாமென்
பதற்கேது மேலேசங்கரித்துப் படைத்தலால் என்பதேயாம். ஆத
லாற்சங்காரப்பட்டுப் படைக்கப்படும்உலகிற்கு கருத்தாவுளன் என்
னும் அக் கருத்தாவுக்கும் அக் காரணத்திற்கும் தம்முள்சம்
பந்தமென்னை?. ஒன்றுங்காண்கிலம். இனிச்சகம் காரியம் ஆக
லால் அதற்கொருகருத்தாவுண்டு லோகவேதாதிகரணநியாயத்தால்
ஒடுக்கற்கருத்தாவே அக்கருத்தா பிறகருத்தாகருத்தா அல்ல
ஆதலால் அக்கருத்தா அவ்வொடுக்கற்கருத்தாவாகிய அரனேயா
மென்றுரைப்பின் உபக்கிரமத்தெடுத்துக்கொண்டகருத்தாவே உப
சம்மாரத்தும் வந்திணங்குதலால் அவைதம்முள் இயைபுடை
யனவாம் அவ்வாறன்றி கருத்தாவுளன் அக்கருத்தாசங்கரித்துப்
படைக்கின்ருன் இதனைச் சங்கரிப்போன் அக்காரணமாவனென

உபசம்மாரஞ்செப்தகாரணசத்தம் உபக்கிரமத்தெழுந்த கருத்தாவோடு இயையுமாறுயாங்ஙனம், இனிகருத்தாகாரணன் என்னும் இருமொழியும் ஒருபொருட்கிளவிஎன்றார். அவ்வாறாயின் உபசம்மாரத்துள் காரணபாவனென்றுரைத்தவாறேஉபக்கிரமத்துள்ளும் சகத்திற்கு கருத்தாவுளனென்றுரையாது சகத்திற்கு காரணனுளனென்று அக்காரணசத்தமெடுத்துரைக்கப்படுக படுமாயின் காரணனுள்ள சகம் காரியமாதலால் கருத்தாசங்கரித்துப் படைக்கிறான் ஆதலால் அரனேகாரணன் என்று கூறப்படும். படுமாயின் முதலும் முடிவும் தம்முளியையும் அவ்வாறன்றி சகத்திற்குகருத்தாஉளன் அவன் காரணனென்னும் உபக்கிரம உபசம்மாரலிங்கங்கள்தம்முள் ஒவ்வாமையால் அது சந்தேகமாய் விவர்த்தமாதலறிக. இனி மீமாஞ்ச நூலார் ஐயமருட்கை நிகழாமல் நூற்கருத்துணர்ந்து சொற்பொருள் துணிதற்குரிய கருவி உபக்கிரமஉபசங்காரம் முதலியன என்றுகூறுவார். ஆகவே அக்கருவிபற்றியன்றியுரைத்தல் சொற்பொருள்துணியப்படாமையால் நூற்கருத்துணர்தற்குஹேதுவாகாதாம் ஆகவே ஐயமருட்கைகளேநிகழுமென்பது ஒருதலையாம், ஆதலால் முற்கூறுமாறு பற்றி உபக்கிரம உபசங்காரமென்னுங்கருவிகள் தம்முளியைவுபடாதுரைத்தலால் கூறுமாறுபற்றி ஐயமருட்கைகள் நிகழ்ந்துநூற்கருத்துணரலாகாமையறிக. அதுகிடக்க, இனிதடத்த இலக்கணமுங்கூறுகின்றாரென்றார், கூறுகின்றாரென்றிவ்வாறு கூறுதல்சிவாகமமுறையாகாது மாயாவாதமுறையாதலறிக. சிவாகமமுறையுணர்ந்துரைப்பினன்றேவழுவாதுரைக்கப்படும். அது மதங்கமுதலிய சிவாகம வியாக்கியானங்கள்பற்றியறிக. அறியவே செட்டியார்கூறியவாறு வெவ்வியதிமைவிளைத்து வாராமைகாண்க.

இனி இவ்வீட்டிற்குகருத்தா உண்டு என்பதுபோல உலகிற்கு கருத்தாஉண்டு என்பதல்லது உலகிற்கருத்தா உளனென்று கூறல் மாயாவாத முறையாதலறிக். இதனால் இவ்வுரையாசாரியர் எல்லாப்பாஷைகளும் இனிதுணர்ந்தவாறும் இனிதுணர்ந்தாம், ஈண்டெழுவாய் . உலகமாதலால் எழுவாயாகிய உலகம் எவ்விலிங்கம் அதனிறுவாயுமவ்விலிங்கமாதல் வேண்டுமென்பது அறிக. இதனாலே வியாகரண உணர்ச்சியும் இனிதுணரப்பட்டது, இலக்கணநூற்கண் கொண்டுணரும் நியாயநூலுணர்ச்சியில்லாமை

முன்னே பெறப்பட்டது. படவே இவ்விரு நூற்கண்ணில்லார் அந்நூற்கண்கொண்டன்றி உணரப்படாத சிவாகம நூலுணர்தலும் அதன்பொருளுரைத்தலுஞ் சாலப்பெரிதுநகைப்பாம். ஏகான்மவாத வேதாந்தம் ஆபாசம் என்றென்று ஆண்டாண்டுச் சிவாகமங்கள் முழங்கவும் அவ்வனேகான்மவாத சித்தாந்த நூற்பொருளை ஏகான்மவாதப்பொருளாக்குதற்கு எண்ணிய எண்ணம் இன்ணமேயாம் சிவஞானபோதமதற்கு ப்பொருளறியாமல் இயற்றினர் பலருரை அவைவெவ்வியதீமைவிளைத்து வருவதென்பது காற்றெதிருமிழும் வாய்நீர்போல தீமைவிளைத்தொழிந்தவாறு காண்க. இனி பலருரை தீமைவிளைத்துவருவதென்பது பற்றி இவர் வியாகரண நியாயமல்லமையும் தன்மயிலலைச்சார்தலும் சுருதி அர்த்தத்தைச் செவ்வேவிளக்கல் விருந்தாதல் தீபமாதல் மருளில் நெறியைவாய்ப்பக்காட்டல்களும் பிறவும் குறிப்புமொழிகளாய் த்தம் அபாவப்பொருளாமாறு காண்க. இனி. இது அனுமானப்பிரமணமென்பது மாயாவாத முறையாதல் மேற்கூறுதும் இச்சிறிய அவதாரிகை ஆபாசம் விரிக்க விரிக்க மேன்மேல் விரிதலால் இவ்வாபாசம் ஆயிரங்கோடிகடல்களினும் பெரியவாம் ஆதலால் இதனால், இ ஃ த ா ப ா ச ம், இதனுவிஃதாபாசமென்று. தனித்தனி ஏதுவாயிலாகவிரித்தாக்கல், ஒருவாரணம் ஆயிரங்கோடி கடல் நீரைத்தனித்து முகந்தேற்றல் போலும். ஆதலால் அஞ்சுதும் அஞ்சி கைவிடுதுமெனில் இஃதாக்குகவென்று ஆணைதந்து நின்ற ஆன்றோர்க்கு அஃதாகவென்றுடம்பட்ட மொழிமொழியுமென்றஞ்சுதும் யாதுசெய்குதும் ஆனால். ஒருவயினிருசெயல் நிகழுமோ சதசதம் ஒருவயினதலாபாசமென்னும் இவ்வுரையாசாரியார் தாமே சித்தசித்திரண்டும் ஒருவயினமென்றலால் ஆமெனக் கூறுதும் முற்கூறுமாறிபற்றி ஆக்கல் அரிதாயினும் அக்கடலினும் பெரிய பிறவிக்கடலை கடக்கும்உபாயமறிந்துடையயாம் இவ்வாபாசக்கடலைக்கடத்தல் ஒருகலையாம் ஆயினும் பிற்பாதி ஆபாசம். எமது துணைவர் கூறற்காக்கி முற்பாதி ஆபாசத்துள்ளும் ஸ்தாலீபுலாகநயம்பற்றி அறச்சுருங்க ஆக்குதும்.

ஆக்குமாறு, காணப்படுஞ்சடகாரியமாகிய ஒருகடத்தைகண்டபோது இதனைச்செய்த சேதனனொருவன் உளன், எனநிச்சயிக்கப்படுதல் போல இக்காணப்படும் காரியமான சடவுலகத்தினை

கண்டு அக்காரியத்தன்மை ஏதுவால் இதனை ஆக்கியோனாகியகாரணசேதனனொருவனுளன் என்பது அனுமிக்கப்படுகிறது என்றார், ஒருகடத்தைகண்டபோது அதுசெய்த சேதனன் நிச்சயிக்கப்படுமெனவே இருகடமுதலியவற்றைக்கண்டபோது செய்த சேதனன் நிச்சயிக்கலாகாது. அசேதனனை நிச்சயிக்கப்படுமென்பது பெற்றும். அதுகாட்சியளவு பற்றியின்மையின் மாயாவாதமாதலறிக.

இனிசெய்த சேதனனென்றது செய்தானொருவனுளனென நிச்சயிக்கப்படுமென்னினும் ஆபாசமாம் என்னை அக்குடமுதலிய இயற்கையென்பாரும் உளராதலால் இனிசடமாகிய குடமென்னும் விசேஷணம் ஆபாசமாம் என்னை, 54 ,, 11ல் அசடகாரியம் அதாவது சித்காரியமான குடமுதலியசகத்து என்று கூறுதலால் இனிஇதனைச்செய்த சேதனனென்பது மவ்வாறும், செய்யாதசேதனன் என்று கூறுதலால். இனிசேதனனொருவனுளனெனவும் நிச்சயிக்கப்படுதலும் மவ்வாறும். அவ்வாறு நிச்சயிப்பாரின்மையா இதனை ஆக்கியோனாகிய காரணவடிவசேதனனொருவனுளனென்ன அனுமிக்கப்படும் என்னும் பொருளும் நிச்சயிக்கப்படுமென்னுமுவமமும் தம்முள் ஒற்றுமை உறாமையானும்இனி ஒருவனுளனென்பதுமவ்வாறும். அவ்வழக்கின்மையாலென்பது இனிசடஉலகமென்பதுமவ்வாறும், சடமின்றுலகில்லாமையானும் சடகாரியம் என்னும்உவமம்பொருந்தாமையானும் இனிகாரியமான சடஉலகமென்பது மவ்வாறும், சடகாரியமான குடமென்னுமுவமமேலாமையால் இனிசடகாரியம்காரியசடம் என்பனதம்முள் பொருளொருமையுறாமை யறிக. இனிகாணப்படுமுலகென்பது மவ்வாறும், காணப்படாத உலகமின்மையாலென்பது இனி காரணவடிவசேதனன் எனவிசேடித்ததுமவ்வாறும். உவமத்துள் அவ்விசேடணமின்றி சேதனனெனக் கூறப்படுதலானும் மூலஉரையுள்காரணமாவன் என்பதனோடு மாறுபடுதலானும் இனிகாரியத்தன்மை ஏதுவால் அனுமிக்கப்படுமென்பதுமவ்வாறும். அது காரியத்தன்மை ஏதுவால் காரணங்காணப்படுமல்லது அனுமிக்கப்படாமையானும் உவமபதத்தாற் பயனின்மையானும், விரிப்பிற்பெருகும். ஈண்டுகூறுமாறுபற்றி இன்னுமின்னோரன்ன ஆபாசம்பிறவும் இவ்வாறே விரித்துரைத்து மறுத்துக்கொள்க,

இனி பும்நபுஞ்சகாதித்தன்லமயான காரியமென்றமைபால் சொல்லும் பொருளுமாகிய இருகூற்றுப்பிரபஞ்சமென்பது தெரிவிக்கப்பட்டதென்றார். என்றதாபாசமாம் தன்மையான காரியமெனவிசேடித்துக்கூறல் மேல் ஸ்திரீபுந்நபுஞ்சகம்முதலிய அவயவப்பகுப்புடைமையால் காரியங்காணப்படுதலால் எனவிசேடியாது வேறுவேறு கூறுதலோடுபொருந்தலாலும் கருமைத்தன்மையான குதிரையென்பதுபோல நபுஞ்சகாதித்தன்மையான என்பதனால், விசேடிக்கப்பட்ட காரியசத்தமானது பிரபஞ்சம் இருவேறுகூறுடைமை கூறுமைபாலும் கூறும் இலிங்கமூன்றனுள் ஒன்றொழித்து ஒழிந்தஇரண்டும் கூற்றுக்கு இயைபின்மையாலும். அஃதன்று அவ்வாதிசத்தம்பற்றி அதுபெறப்படுமெனில்அற்றன்று ஸ்திரீபுந்நபுஞ்சகமுதலிய அவயவப்பகுப்பென, அதனை பிரபஞ்சவிசேஷணமாகிய அவயவச்சாதியாய்க்கூறுதலைமறந்து ஈண்டுப்பிரபுஞ்சச்சாதியாய்க் கூறுதல் பூர்வாபரவிரோதமாதலாலென்பது ஆதலால் இருகூற்றுப்பிரபஞ்சம் தெரிவிக்கப்படுமென்பது ஆபாசமாதலறிக. ஒருகூறுடையஅவர் இருகூறுகூறுதல் கண்டு கூறுமித்திபாவாதக்கூற்றல்லதுபிறிதன்றெனக. இருகூறுஎன்னு மூலவியாக்கியானங்கண்டு இவ்வாறு கூறிக்கெடடாரெனக.

இனி அவனிவ்வுலகினையழித்துப்படைக்கின்றான் என்றமையால் முத்தொழிலுடைய அவன் இத்தொழிற்குட்படாத சர்வஞ்ஞத்வாதிலக்ஷணமுடையவனாதல்வேண்டும் என்பது பெறப்பட்டது. படவே, பிரகிருத்திக்கும் கிஞ்சிகஞ்ஞாகிய சீவனுக்கும் கர்த்திருத்துவம் சம்பவியாதென்பது சூசிக்கப்பட்டதென்றார் அழித்துப்படைத்தலென்புழி காணப்படுந்தொழில் ஒன்றேயன்றி இரண்டுமின்றாம் ஆகவேமுத்தொழில் சூசிக்கப்படுமாறுயாங்ஙனம், இனி அவ்வாறாகுமேனும் அழித்துப்படைத்தலாகிய இருதொழில் முத்தொழிலாதல் ஆபாசமாதலறிக. இனி அவ்வாறாயினுமாக அவன் முத்தொழிலுட்படாமைக்கு ஏதுவென்னை ஏது இன்றி ஆதல் ஆபாசமாதன்மேலும் முத்தொழில்செய்யும் மூவரும் அம்முத்தொழிலுட்படுதலால் முத்தொழிற்படுவோன்முத்தொழிலுட்படான் என்பது ஆபாசமாம் ஆகவேமுத்தொழிலுடைய அவன் முத்தொழிலுட்படாதசர்வஞ்ஞாதிலக்ஷணமுடையனென்பது ஆபாசமாம் என்னை 56 ல் சாக்ஷாத் உபாதியினால் சர்வஞ்

ஞத்தன்மையுடைந்தவன் எவனே அவன் என்புழிவரும் சர்வக் ஞாதிலக்ஷணமுடையவன் சாக்ஷாத்உபாதியினல் முத்தொழிற் ப்படுவன் என்று உரையாசாரியர் தாமேகூறுதலால் சடமாகிய பிரகிருதிக்கும் கிஞ்சிக்ஞனுபஜீவனுக்கும் 56ல் சம்சாரநாசத்தினைச் செய்பவள் என்றும் 83 ல் பசுக்களெல்லோரும் புசிப்பரென்றும் 85 சேதனபேதம் மாயையினுற்றுனேகற்பிக்கப்பட்டதென்றும் சாக்ஷாத்உபாபதியினல் சிருஷ்டிக்கயோசித்தான் என்றும் கிஞ்சி க்ஞராகிய (63) பிரமாதி மூவர்முத்தொழில் செய்வர்என்று அம்மூ வர்க்கும் கர்த்திருத்தவமுண்மை சூசிக்கப்பட்டதாம். இனி உரை யாசாரியார் எடுத்துக்காட்டுமுண்டகத்தில் அவர் கூறுமாறு அவனிடத்திலிருந்து உண்டாகுமென்றுகூறுமவைகட்கு கர்த்திரு த்துவமின்றி முத்தொழில் உடையவனுக்கு முத்தொழில்இன் றென்று கூறுதல் மேலும் நாமரூபம் அன்னங்கள் அவன்கணன்றி அவன்கண்ணும் தோற்றுதலால் அதிஅதிவியாத்தியாதல்மிக இனி அதனுட்படும் சர்வஞ்ஞன் சர்வவித்து என்பவைகட்கு முறையே சாமானியவடிவாயறிதல் விசேஷவடிவாயறிதல் என்று உரையாசாரியர் கூறுமாறு பொருந்தாமை அவருடைய பெருநூல் கவிரகாண்க. 28ல். அவனிடத்திலிருந்து இரணியகருப்பனெ ன்னும் பிரம நாமரூபான்னபூர்வகமான இது என்று வருவ தோடு இரணியகருப்பனும் நாமமும்ரூபமும் அன்னமும்தோன்று மென்பதுமாறுபடுமாறறிக இனி பின்வரும், பவுட்கரம் மிருகேந்தி ரங்களில் ஜீவப்பிரகிருதிகட்கு கர்த்திருத்தும் இன்றென்றும் முத்தொழிலுடைய அவன் முத்தொழிலுட்படாதசர்வஞ்ஞனென் றும் கூறப்படாமையால் அவை அவற்றிற்கு பிரமாணமாகாமை மேலும் மறுதலைபாதலும்காட்டுதும். பரமான்மா ஒருவனே சேதனு சேதனமாகிறுன் இச் சராசரப் பிரபஞ்சமெல்லாம் அப் பரமான்மாவே அன்றி அதனின் வேறுபொருளின்று என்று. வேதாந்திகள் கூறுகின்றனர். அவ்வேதாந்தநூல் முதலியன செய்தகர்த்தாக்கள் அசர்வஞ்ஞர்கள் ஆதலால் அவர் அறிவிற்கு எட்டாதா சிவாகமத்திற்சொன்னபொருள்நிச்சயம் அவர் அறி யாமையால் அவர் செய்த நூல்களில் பொருள் நிச்சயமும் பய னும் சாதனமும் உள்ளனவல்ல இச் சிவாகமநூல் அப்பசு பாசங்கட்கெட்டாதசர்வஞ்ஞனுகிய பரமசிவனுற் செயயப்படுதலால்

இச் சிவாகமப் பொருளெல்லாம்மேலாம் ஆதலால்வேதாந்தப் பொருள் பொருந்தாது. என்னையெனில் பரமான்மா ஒருவனே சேதனுசேதனுகிறுன் இச்சரிசரம்அனைத்தும் அவனேயன்றி வேறன்று. என்றுஇவ்வாறுகூறுங்கூற்றை உபபத்தி அனுபபத்தி பற்றி ஆராயாது உடம்படலாமன்றி ஏதுஉதாரணங்கள் பற்றி நிச்சயித்தற்கு பிரமாணமின்று அல்லாமலும் வேதப்பிரமாணம் உளதெனில் எல்லாம்ஆன்மாவன்றி வேறுபொருளில்லாமையால் அவ்வேதமும்ஆன்மாவேயாம். அன்றி அது அதனின்வேறு மெனில் அதனின்வேறுபொருளெல்லாம் மிச்சையாதலால் மிச்சையாகிய வேதம்பிரமாணமாமாறு யாங்ஙனம். இனி அவ்வேதம் ஆன்மாவேயெனில் ஆன்மாதானே பிரமாணப்பிரமேயங்களாம் பூண்டுப் பிரமாணம்பிரமேயம் இரண்டுமுண்டு ஆண்டுபிரமாதா பிரமிதிபிரண்டுமுண்டாதல் ஒருதலைபாம். அவ்வாறேல் அத்வைத ஹானியாகும். அன்றேல் பிரமாணம் இன்றும் அல்லாமலும் பல வேறு பயனீதற்கு உயிர்தோறுந்தனித்தனி இயைந்த அறம் பாவங்களும் ஒன்றெனபடியால் யாவருக்கும் அனுபவம்ஒப்பஉள வாருக. இனி காரியவான்மா காரணவான்மாவாவதுமுத்தியெனில் மறுபடியும்காரியமாய்வருதலால் அதுமுத்தியாகாது அல்லாமல் சிரவணம்மனனநிதித்பாசனங்களுமில்லை, அல்லாமலும் சடாசடங் கட்கு பரமான்மாவே உபாதானமெனில் காரியம் காரணத்தின் இயல்புடையது என்னு நியாயம்பற்றி பரமான்மாவுஞ்சடாசடமா கும் இருளும் ஒளியும்போலசடாசடம் இரண்டும் இடமொன் றில், காலமொன்றில் இருக்கு மென்பது, ஏலாது, இன்னும் இவைபோலுங்குற்றம்பலவுள. ஆதலால் ஆன்மாத்துவைதம் ஆகாமையால் வேதாந்தமதம் நிராகரிக்கப்பட்டது என்னும் பொருளுடைய மிருகேந்திரமும்

வெதாவெ தஸாஂ ஸஂஸஂஸசுவதாவயவி,கூதா
ஷேஷஸஸாய நாகூருஷிகொவிஸஷஸ்ரீவா ஙெ॥
ப்ரணைஸவாவெஷிகுவெ நஷூவொவஸூஸஂ ஹூ:।
உவாயாஷஹஷாஸூவெவெவஸவா ஷிஂவஸீ॥

சித்தாகிய பிரமத்தினின்றும் பழுதையிற்பாம்புபோல் அத்தியாசமாக சித்தின்பிராந்தியால்உலகுதோன்றியதென்று வேதாந்தியால்கூறப்படுமெனில் அவ்வாருனல் பழுதையிற்பாம்புபோல்சகமித்தையாதல்வேண்டும். சர்வபிரமாணங்களாற்பெறப்பட்டசகத்து சித்தின் பிராந்தியாற்றோன்றுமாறெவ்வாறு என்னும்பவுட்கரவசனமும்மாயாவாதமறுதலைப்பொருள் போதித்தலறிக. இவ்வாறுமறுதலைப்பொருள்கூறுஞ் சிவாகமப்பொருள் மாயாவர்தத்துக்குடன்பாடென்று இவ்வுரையாசாரியர் எடுத்துக்காட்டுதல் ஒளிஒளியன்று இருளென்பதொக்குமாறறிக. அதுநிற்க இனிவாக்குமனோகோசரனுயினும் முத்தொழில்பிரசித்தமாய்க் காணப்படுதலால் அத்தொழில் தனக்கு ஆசிரயமானகருத்தாவை இன்றியமையாதகாரணமாக அதனுல் கருத்தாலக்ஷிப்பப்படுகிறுன் என்றார். 54 குடம் சுவர்முதலிய பதார்த்தங்களும்புவனங்களுமானயாவும் பிரமத்தின்வேறுகவில்லை அவையெப்போதும்சத்தாகியபிரமமேபாம்என்றுகூறுமுரையாசாரியர் ஈண்டு கிரகிக்கக்கூடாதவனென்றுகூறுதல் யாதும்அடாது இனி முத்தொழில் பிரசித்தமாய்க்காணப்படுதலால் என்றார். 48 ஈசுரனது சொரூபத்திலும் சகத்தின்சிருஷ்டிமுதலியவற்றிலும் அதீந்திரியம்எனவே முத்தொழில் அப்பிரசித்தமென்று அவர்தாமே பின்கூறுமதனை மறந்து முத்தொழில்பிரசித்தமென்பது மாயாவாதமுறையாதலறிக. இனிமுத்தொழிவில்லாமை மேற்கூறினும் சூத்திரத்தில் இருதொழிலேவருதலானும் காணப்படுவதுநிலைத்தொழில்ஒன்றேயாதலானும் முத்தொழில் பிரசித்தமென்பது அடாது இனிநிலைத்தொழில்காணப்படினும் அதுவும் பிரசித்தமாதலடாதாம் ஆகவே அத்தொழில்தனக்குஆசிரயமானகருத்தாவைஇன்றியமையாமைகாரணமாக கர்த்தாலக்ஷிப்பப்படாமையால்லக்ஷிப்படுமென்பது அடாமைகாண்க. இனிலக்ஷியத்துக்கு அவரெடுத்துக்காட்டும்வசனத்தில் லயமுதலியமூன்றுவியாபாரம், இறவாஇயல்பு,சத்தியுடைமையென்னுமூன்றுமுடையபொருள் யாதுஅது பதியெனும்பெயருடையது என்னும்" லயபோகாதிகாராத்மவியாபாரதிரயலக்ஷித: ச்வபாவாதச்ச்யுதச்சக்த; பதார்த்த: பதிசம்ஞித: என்னும் வசனத்தில் பிரசித்தலாகாமை அளவையாலளக்கப்படாமை வாக்குமனங்களுக்கெட்டாமையுடையனுயினும் முத்தொழில்பிரசித்தமானதால அத்

தொழிற்குஆசிரயமானகர்த்தாவாகக்கூறப்படுகின்றான் என்று அவர் கூறும்பொருள்வராமையால் அதுயாதும் அடாமையறிக. இனி உரையாசாரியர் கூறியவாறே லயம்போகம்அதிகாரமெனும் வடிவினதாகியவியாபாரம்மூன்றால்லக்ஷிக்கப்படுவனும்இயல்பாகசொருபத்தில்நின்று நழுவாதவனுமானசத்திபுடையவனெவனோ அவன் பதியென்றுசொல்லப்படுகின்றான்என்னும்பொருள்பற்றியும் அப்பொருளில்லாமையால் அப்பொருளடாமையறிக. அறியவே உரையாசாரியர்பொருள்திரிபுடைமையேமேலும் பதார்த்தம் என்னும்பாடத்தை சா என்றும் சம்ஞிதம் என்னும் பாடத்தை பரிபட்டியமே என்றும் திரிபுபடுத்திக்கூறினர். இவ்வாறு சொற்பொருட்டிரிபுகூறுதல் இவ்வுரையாசாரியற்கு இயல்பாம் அவர்தமக்கு அனுகூலமாகக்காட்டிய பவுட்கரம்பிரதிகூலமாதல் காண்க. அது நிற்க. இனி இவ்வாறு சங்காரகர்த்தாகாரணமாவனென்றமையால் அவன்நிமித்தகாரணமாவதுடன் உபாதானகாரணமுமாவன் என்பது பெறப்பட்டதுஎன்றார்அவன் உபாதானமாதற்கேது இவ்வாறுசங்காரகர்த்தாகாரணமாவனென்றமையால் என்கிறார். அவர்சங்காரகர்த்தாகாரணமாவனென்னுமேது போலியென்பது யாம் முற்கூறிய ஏதுக்கள் பற்றி இனிதுவிளங்குதலால் அவன் நிமித்தஉபாதானமாவன்என்னும் பிரதிஞ்ஞை ஆணியாய் முடிதல்காண்க. மூலத்தில் அவன் நிமித்தஉபாதானமாவன் என்னுமையாலும் அது அநேகஆன்மவாத சித்தாந்தம் அல்லாமையாலும் ஏகான்மவாதவேதாந்தமாதலாலும் பவுட்கரம் மிருகேந்திரம் முதலியசிவாகமங்களெல்லாம் நிமித்தோபாதானம் அடாதென்றுகூறுதலாலும் அது மாயாவாத முறையென்றொழிக காரணமாவன் என்றமையால்நிமித்தமாவதுடன் உபாதானமுமாவனென்பதுபெறப்படுமெனில் அவ்வாறே 131இறப்பாதிகட்குக்காலங்காரணமெனவே அக்காலம் நிமித்தமாவதுடன் உபாதானமாதல் வேண்டுமென்றுஆண்டுங்கூறவேண்டும் கூறாமையால்அதுமாயாவாதவிபரீதமாதலறிக. அது நிற்க. இனி பிரபு என்பது பலவாகஆகின்றான் என்னும் விற்பத்தியால்உபாதானமென்பதை அறிவிக்கின்றது என்றார். என்பது யஸ்வயபரம் நாஸ்திச பிரபுஎன்னும் வியுற்பத்தியால் தனக்குமேற் பொருள் இல்லவனெவன் அவன் பிரபுஎன்னும் வியுற்பத்தியைபராமுகப்படுத்திபாராத உரையாசாரியர்ஆனவர் சங்கராசாரியார் முதலியோர் இந்நூலைப்

பாராமல்பராமுகப்படுத்துகிறார் என்பதுபராமுக அர்க்கியமேபா மென்க. அதுநிற்க இனி பிரபுஎன்பதுபலவாகஆகிறான்என்னும் பொருளென்று கொள்ளுதும் கொண்டுஅது உபாதானப்பொருட் டோ அன்றேவென்றுஆப்தூம். பலவாக ஆவோனெவன் அவன் பிரபுஎன்பதற்கும் உபாதானத்திற்கும் சம்பந்தமென்னை விற்பத்தி யானதுபலவாகஆவோனெவன் அவன் பிரபுஎன்றதன்றி அப்பிரபு எவன் அவன் உபாதானம் என்னுமையாலும் அல்லாமலும் அரனே பிரபு அரனே உபாதானமென்னுமையாலும் பிரபுஎன்றமாத்திரத் தால் உபாதானமாதல் அடாதென்பது இதனுலறிக. அல்லாமலும் பிரபுசத்தம்உபாதானப்பொருட்டெனில் 76ல் சிவன் பிரபு என்பு ழியும் இவைபோன்ற பிறவிடத்தும்வரும் பிரபு சத்தமெல்லாம் உபாதானப்பொருட்டாகுக ஆகாமையாலும் மூலத்துள் அரன்பிரபு எனப்பட்டதன்றி பிரபு உபாதானமென விதந்துகூறுமையாலும் அவ்வாருயின்“ அஸ்திகர்த்தா இறுத்வைதத்சிறுதத், உபாதானமாம் என்று இவ்வாறு விதந்துகூறப்படுக அவ்வாறு விதந்து கூறப்படா மையாலும் இன்னுமிவைபோலும் பிறவேதுவாலும் பிரபுசத்தம் உபாதானமாகாமைஅறிக. அது உபாதானமாதற்குஉபாயந்தேடிய உரையாசாரியர் இவைஅறியகில்லார் இன்னும் பிரபு என்பது பல வாக ஆதலெனக்கொள்ளினும் அரன் பலவாகஆவோனெனப்பொ ருள் படுமல்லது அரன்காரணனெனப்பெருள்படாமையறிக. இன் னும்அரசத்தபரியாயம் பிரபுஎன்றுநிருத்தநூலுட் கூறப்படாமை யால் பிரபு காரணமென்பன ஒரு பொருட்கிளவியாகாமையறிக. இனி காரணசத்தபரியாயம்பிரபு எனக்கொள்ளினும் உபாதனப் பொருட்டோ அன்றேவென்றுஆராயில்அவைதம்முள் ஒரு பொருட் கிளவியாயில்காரணசத்தம் வந்துழியெல்லாம் அது உபா தானப்பொருட்கும்உபாதானசத்தம்வந்துழியெல்லாமது காரணப் பொருட்டுமாதல்வேண்டும் அவைவரும் ஆண்டாண்டெல்லாம் அவ் வாறுகாமையால்அது ஆபாசமாம் ஆதலால்யஸ்வயபரம் நாஸ்தீச;; ரபீதிஎன்னும் எடுத்தோத்துப்பற்றி அரனேதலைவன் அல்லர் அன் னால்லரென்பதல்லது அரன்காரணனென்னும்பொருளாகாமைதெற் றெனவறிக. அறியவேசங்காரஞ்செய்பவன்காரணமென்றமையால் அவன்நிமித்தமாவதுடன் உபாதானமுமாவன்என்பது மாயாவாத ஆபாசமுறையல்லது சிவாகமமுறையன்றென்பது .ஒருதலையாம்

ஆகவே ஒருவன் ஒருவனோடுபுறத்திற்பகைத்து வெல்லமுடியாமல் பின்பல்வேறுபாயங்களால் அவனை உட்பகையாற்கோறற்குச்சூழ்ந்து அதுசெய்துமுற்றாது தாமேகெட்டதுபோல இவ்வுரையாசிரியராகியமாயாவாதியாரும் சிவாகமிகளாகிய எம்மோடுபுறத்திற்பகைத்து எம்மைக்கெடுக்கமுடியாமையால் உபாயப்பற்றி உட்பகையாய்க்கெடுக்கச்சூழ்ந்து இதற்குஉரைகூறுவார்போலநடித்துக்கெடுக்கமுயன்ற முயற்சிமுற்றாமை இதனால் அறிந்துகொள்ளுக. இனி பிரகர்ஷேண விவிதேநபவதீதி பிரபுபல்வாகிறான் என்பதால் பிரபுஎன்னும்விற்பத்தியால் பிரபுஎன்னும்சொல் உபாதானம்என்பதனையே அறிவிக்கிறது எனில் அவ்வாறானால் பிரகர்ஷேண என்பதன்பொருள்என்னை அல்லாமலும்விவிதேநபவதீதி என்பதுபற்றிபிரபுஉபாதான மெனில்அதுயாண்டும்அவ்வாறாதல்வேண்டும்சம்பூர்ணம்பிரபுஎன்பது 319 ல் ஞானிக்குப்பேராலும் பொருளாலும் மகாதேவனான பிரபு என்னும் பிரபுவும் 259 ல் மகாபிரபுவும் 115 சத்தையுடைய சிவனாகியபிரபுவினிஃது என்னும்பிரபுவும் உபாதானப்பொருளவோ அல்லாமலும்பரப்பொருளில்கருத்தாஎன்றாரல்லது காரணமென்றாரல்லர் ஆதலால் அக்கூற்றுமேலேகருத்தா வென்பதோடு இயையப்படாமையால் ஆபாசம்என்றொழிக இனிஅவன்நிமித்தகாரணமாவதுடன் உபாதானகாரணமாவன் என்பதுபெறப்பட்டது என்பதற்குரியசியாமகமென்னை ஒன்றுங்காண்கிலம் அன்றன்று காரணசத்தம் பொதுமொழியாதலாலும் அக்காரணசத்தம் அனைத்திற்கும்செல்லுமாதலாலும் அதுவேவிபாமகமெனில் அஃதேலது நிமித்தகாரணம்உபநிமித்தகாரணம்உபாதானகாரணம் உபஉபாதானகாரணம் துணைக்காரணம் உபதுணைக்காரணம் என்னுமிவைபோலுங்காரணங்களெல்லாமாதல்வேண்டும் அஃதேல் காரணமாவனெனவே எல்லாக்காரணமுமாவன் எனக்கூறப்படாமையால் அதுமாயாவாதமுறையாதலறிக. ஐயகோ அதுஇவ்வாறுமென்பதறியகிலர் அறியின் உபாயம்வேறு நாடிக்கூறுவர் அவர்உபாயம் எதுநாடினும் மற்றொன்றுசூழினுந்தான்முந்துறும்என்பதுபற்றி அவர்சூழுஞ்சூழும் அவருழாய்முடியுமாறுகாண்க. ஆர்குடியைக்கெடுக்கவோ இவ்வாறாண்டிவேடம்பூண்டார் என்று அறியகிலம் என்னும்பழமொழிப்படி எங்குடிகெடாமையும் அவர்கெடுதலுமேகாண்க. கூற்றுமாறுபற்றி பிரபுஎன்பது உபாதானமென்பது சிறிதுமடாமையறிக அஃதன்று

சூத்திரத்துள்பிரபுஎன்வருதலாலும்விவிபேவதீதி பிரபுஎன்றலாலு
ம் உபாதானமென்றுரெனில்அற்றன்று மூலத்துள் மேல்கர்த்தாஎ
ன்பதனையேகீழ்பிரபுஎன்று உபசம்மரிக்கப்பட்டது ஆகலால் அது
ஆபாசமாதலறிக அல்லாமலும் பலவாக ஆதல்பற்றி பிரபுவாமெ
னில் அவ்வாறேபலவாக ஆதல்பிரகிருதிக்குமுண்மையால்அதுபற்
றிப்பிரகிருதியும் பிரபுவாதல்வேண்டும்ஆதலால்அது ஆபாசமாதல
றிக, அல்லாமலும், காரணமாவனென்றமையால் அவன்நிமித்தகார
ணமாவதுடன் உபாதானகாரணமாதலும்பெறப்படும் எனில்அந்
ய்யப்பற்றிப்பிரகிருதி உபதானகாரணமென்றமையால் அது உபாதா
னகாரணமாவதுடன் நிமித்தகாரணமாதலும்பெறப்படும். படிக
மெனில்நாஸ்திகம்ஆஸ்திகமாகும் ஆஸ்திகம் நாஸ்திகமாகும் இன்
னும் சத்திதுணைக்காரணமெனவே அத்துணைக்காரணமாவதுடன்
நிமித்தஉபாதானமுமாமெனல்பெறப்படும் அல்லாமலும்காரணமா
வனென்றமையால்அவன்நிமித்தமாவதுடன்உபாதானமாவன்என்
பதுஉபமேயமாதலால்உவமானத்திலும் அவ்வாறுபெறப்படும் பட
வேகுலாலன் குடத்துக்குநிமித்தகாரணமெனவே அவன்நிமித்தமா
வதுடன்உபாதானகாரணமாகிய மண்ணுமாவனென்பதுபெறப்ப
டும் படவே அந்நயம்பற்றி மண்உபாதானகாரணமெனவே அம்மண்
நிமித்தமாகியகுலாலனுவதுடன் துணைக்காரணமாதலும்பெறப்படு
ம் இனி தண்டசக்கராதிகள் துணைக்காரணமாவதுடன்உபாதான
நிமித்தமாதல்களும் பெறப்படும்அல்லாமலு தூமகாரணத்தால்தீ
உண்மைஅனுமிக்கப்படுமெனில் தூமம்காரணமெனவே தூமம்
காரணமாவதுடன் தீயாதலாலும்பெறப்படும் என்றின்னுமிவை
போலஎண்ணிறந்தவிறு நிகழுமாதலால் காரணமாவனென்றமை
யால் நிமித்தமாவதுடன் உபாதானமாவனென்பது அடாமையறிக.
இத்துணை ஆபாசங்கட்கு இடமாதல்பற்றியேயன்றே சங்கராசாரி
யர்முதலியமுன்னோரும் சீனிவாசகசுமார்த்தர் முதலியபின்னோ
ரும் சிவாகமம்தபதுமாயாவாதப்பொருட்கு மறுதலைபாதலினிது
ணர்ந்து சங்கராசாரியர்தமது பாடியத்துள் மாயாப்பிரதிவிம்பாசு
ரனால் செய்யப்பட்ட சிவாகமம் அப்பிராமணியமென்றும்சீனிவாச
ககமார்த்தர்தமது பத்திரிக்கையுள் அபுருஷேயமாகியவேதமேமே
லாம்சிவாகமம்புருஷேயம்ஆதலாற்கீழாமென்று சிவாகமதூஷணம்
செய்தார்கள் உரையாசாரியரும்தமெழுதியசங்காசாரிய நீலகண்

டாசாரியசம்வாதத்துள் சிவாகமப்பிரமாணிபாகிய நீலகண்டர் சைவர் என்றுகூறும்வாயினாற் சிவாகம அப்பிரமாணியமென்றுகூறும் சங்கராச்சாரியார் அசைவரென்றுகூறியதனைமறந்து இப்பொழுது தாம் அவர் தம்மினும் பெரிதுமறிந்தார்போல் முகவுரைபக்கம் 3-ல் இத்தகைய சர்வவேதாகமசாரபூதமாயுள்ள இதனைத்தாந்திரிகம் த்வைதம் அத்வைதம் எனப்பாராது பராமுகப்படுகின்றனர் என்றார். எனவே அவ்வாறு அதனைப்பாராது பராமுகப்பட்டவர் சங்கராச்சாரியர் கோவிந்தயோகி கவுடபாதர் முதலியோரென்பதுபெறப்படும். படவே பராமுகப்பட்டு பாராத சங்கராச்சாரியார் பெரியரென்பது பெற்றாம் எற்றாற்பெற்றாமெனில் சங்கராச்சாரியர் முதலியோர் சிவாகமம் அநேக ஆன்மவாதநூல் ஆதலால் அது ஏகான்மவாதப்பொருள் அன்றென்றுகூறுதலால் பெற்றாமென்க.

இனி ஒன்றுகூறுதும் ஒருவன் பிறனொருவன் பொருளை எனதென்றுவழக்கிடுதல் பொருட்பிரபஞ்சவழக்கல்லாது, சொற்பிரபஞ்சவழக்கல்ல இக்கலிகாலம்பற்றி சொற்பிரபஞ்சவழக்கும் நிகழ்கின்றதே என்னை எமது சிவாகமநூலை மாயாவாதிகள் எனதென்கின்றாராதலால் அஃதேதல் நீரும் அவ்வாறே அவர் பகவற்கீதையை சிவாகமநூலெனக்கூறுக. அது அவ்வாறன்றிநமது எமதாயிற்றென்று கூறற்கவெனில் இதுவுமொரு சமாதானந்தான். ஆயினும் யாங்கூறுங்கூற்றுப்பற்றி இவ்வுரையாசாரியர் எம்மிடங்கற்றுக்கூறுங்கூற்றேயன்றி வேறன்று ஆயினும் அது வழிபடுமுறையால் வழிபட்டு பெருமையால் வழுவாயிற்று வழுவென்னையோவெனில் சிவத்துவிசனொருவன் ஒருவன் வைத்த மிருத்பாண்டத்தை ஸ்மார்த்தனொருவன் அதனைத் தனதென்று தீண்டிக்கொண்டனன். பின்பு சிவத்துவிசன் என்பாண்டத்தை நீ தீண்டியதென்னையென்றுகேட்க ஸ்மார்த்தன் அவ்வாறாயில் யான்நுமதுபாண்டத்தை தீண்டியதெவ்வாறு அவ்வாறே நீரும் எமதுபாண்டத்தைத்தீண்டிக்கொண்டு இது நின்பாண்டமன்று என்பாண்டமென்று வழக்கிடுதலேமுறையன்றி இது நினதென்றல்சாலாதென்பதெதற்கும் என்னை தன்னில்தாழ்ந்த சுமார்த்தன் தீண்டின பாண்டத்தை சிவத்துவிசன் தீண்டலாகாததாலும் தன்னிலுயர்ந்த சிவத்துவிசன் பாண்டத்தை சுமார்த்தன் தீண்டலாமாதலாலும் இது அதுபோலுமாதலாலும் அதுநிற்க இனி

இதற்கு இது இயையும் அதற்கு இது இயையாதென்னும் உய்த்துணர்ச்சியின்றி கற்பனைவிற்பத்திகாட்டிச் சிவாகமத்தை கெடுக்கநினைக்கில் அந்நினைவு அவர்கேகேட்டிற்கேதென்பது‘ அ:பிரபுஎன்றதற்கு சங்காரஞ்செய்வோன்காரணனென்பதேசாக்ஷியாதலாலறிக. அல்லாமலும் காரணமாவனெனஈசன்கொடுத்துக்கூறினர். பிரபு என்புழி சன்னின்மையால் அவ்வாறு பிரபு ஆவனெனஈசன்கொடுத்துக்கூறியதடாதென்றறிக. இனி அவாமுறைப்படி சத்து அசத்தாதல் எவ்வாறு அவ்வாறே அசத்து சத்தாதலுமாம். ஆமெனில் பிரபு என்பது காரணமாகானென்னும்பொருட்டாதல் வேண்டும். ஆதலால் அது அடாமையறிக. இனி ஈயுமொருவனை நோக்கி மகாப்பிரபு என்று கூறல்காண்டும் அதல் அந்தப்பிரபு பொருளுண்டாதற்கு பெரிய உபாதானம் என்றி கூறுகின்றனென்று உரையாசிரியர் விற்பத்திபற்றி அதுபெற்றும் அபிப்பிராயக்காரர்கூறியவாறே இவ்வுரையாசிரியரும் இவ்வியாக்கியானபிரபுவாமன்றே, இவ்வாறிவ்வுரையாசிரியரை வியாக்கினப்பிரபு என்றமையால் இவர் இவ்வியாக்கியானத்திற்கு நிமித்தகாரணமாவதுடன் உபாதான காரணமாதலும் அவர்விற்பத்தியால் பெறப்பட்டது படவே எமதுவிற்பத்தியால் உபாதானகாரணமென்றமையால் அவர் உபதானமாவதுடன் துணைக்காரணமாதலும்போதரும் அஃதேல் அவர் சுருதியாதி அநேகப்பிரமாணபூர்வமாக பிரமம்நிமித்தோபதானமாதல்காட்டினர் அவ்வாறே இவ்வியாக்கியானத்துக்கு அவர்நிமித்தகாரணமாவதுடன்உபாதானமாதற்கு நீர் காட்டிய சுருதியாதிபிரமாணமென்னையெனில் அவர்விற்பத்திகாட்டியதெவ்வாறு அவ்வாறே யாமும்விற்பத்திகாட்டினமாதலால் காட்டாமையாண்டையதென்றொழிக. ஒழியவேஇவ்வியாக்கியானத்துக்கு இவ்வுரையாசிரியர் நிமித்தமெனவே அவரதற்கு நிமித்தமாவதுடன் உபாதானமுமாவரென்பது ஆபாசமாதலெவ்வாறு அவ்வாறே சங்காரஞ்செய்பவன் காரணமாவனென்றமையால்அவன் நிமித்தமாவதுடன்உபாதானமுமாவனென்பதுபெறப்படுமென்பதும் ஆபாசமேயாம். அதற்கு மூலமொழியின்மையாலும் சிவாகமவிரோதமாதலாலும் குப்புசாமிராசு தத்துவப்பிரகாசவியாக்கியானத்துக்கு நிமித்தகாரணமென்றமையால் அவர்அதற்குநிமித்தமாவதுடன் உபாதானகாரணமுமாவர் என்பதும், பெறப்படுமென்பது ஆபாசமாதல் போலும் என்னும் அனுமானம்பற்றியும் அது ஆபாசமாதல் பிரகாச

மாதல்காண்க. அதுநிற்க இனிப்பிரமஞானபோதத்திற்குப்பிரமத்துவம் பிரகாசித்தல் எமக்கு மிக்கபெரும் அருவருப்பேயாம். ஆதலால்எமக்கு இனி இதன்மேல்சேறற்கு மனஞ்செல்லாது. ஆதலால்இதுஇத்துணைபிறெழுதுமெனில்சிவத்துவம்பிரகாசிக்கைமுடியாமையாலொழிந்தார் என்று பிறர் கூறற்கு அஞ்சியெழுந்தனம்என்னையாம் இத்துணையுங்கூறியகூற்றிற்குமுக்காரணராகிய அவர் தாமேயாங்கூறுமாறுகாரணராயில் ஆபாசமாமென்பது அதுநிற்கஇனிஅதுபற்றியே மெய்கண்டதேவநாயனாரும்சங்காரகர்த்தாமுதற்காரணமென்றுமொழிபெயர்த்தார். என்றார், இனிஇவ்வாறேயாமுங்கூறுதும் கூறுமாறு அதுபற்றியேயென்பது சங்காரகர்த்தா நிமித்தமாவதுடன் உபாதானமாதல் என்பதுபற்றியேயாதலால் சங்காரகர்த்தா நிமித்தமாகாமையுடன் உபாதானமாகாமையுமாவான் என்பதுபற்றியே மெய்கண்டதேவநாயனாரும் சங்காரகர்த்தா முதற்காரணமாவன் என்று மொழிபெயர்க்காராயினர் என்றுகூறினர் இவ்வுரைஆசாரியார் இவ்வாறே எதிர்வருமென்றறியாமல் கூறினர்யாதுசெய்குவார் அது நிற்கஇனிஇவ்வாறுகோள்ளாக்கால் இதுஇறைவனதுதடத்தலக்கணமாதலமைபாதென்றார் யாம்இனிகூறுமாறு இவ்வாறுகொண்டக்கால் இது இறைவனது அதடத்தலக்கணமாதல் அமையுமென்றவாறு கொள்ளாக்காலென்று கூறுமாறுஎவ்வாறு அவ்வாறேயாங்கொண்டக்காலென்று கூறுமாறுமென்பதறிக. இனிதத்துவம்பிரகாசமென்றுமுறைவருமாறு எது எதனினறுண்டாகி எதன்கண் நிலைபெற்று எதன்கண் ஒடுங்குகின்றதோ அதற்கு அதுவே முதற்காரணம் என்று நியாயத்தால் உலகொடுங்கியவிடமான சங்காரகர்த்தாவே முதற்காரணமென்பதுதோன்ற அரன்பிரபு என்றார் என்றுகூறினர். இனி சிவத்துவப்பிரகாசம் வருமாறு எது எதனின்றுண்டாகாது எதன்கண் நிலைபெறாது எதன்கணொடுங்காதோ அதற்கு அது முதற்காரணமன்றாம் என்னும் நியாயத்தால் உலகொடுங்காத இடமான அச்சங்காரகர்த்தா முதற்காரணமன்றென்பதுதோன்ற அந்தமாதி என்றார் என்பதாம். அவ்வாறானல் இவ்வாறென்று உமக்கு அந்நூல்காரர்கூறினரோவெனில் அதின்பதில் இவ்வாறேல் இது இவ்வாறென்று உனக்கு அந்நூல்காரர்கூறினர்கொல்லோ என்க. இத்தருக்கமுறை கற்றாரிருக்குமூரிலிருந்தவரல்லர். இவ்வுரையாசாரியரென்பது அவருரைபடும்பாட்டால் அறி

யப்படுதல்காண்க. இனி இவ்வாறுகொள்ளாக்கால் இது இறை
வனது தடத்த இலக்கணமாதல் அமையாது ஆகலால் தடத்த
லக்கணமாதலமைதற்கு இவ்வாறுகொள்க. அதாவது இறைவன்
நிமித்தமாவதுடன் உபாதானமாவதுங்கொள்க எனவே தடத்த
இலக்கணமாவது மாயாவாததடத்தலக்கணமோ சிவாகமதடத்
தலக்கணமோ முன்னையதெனில் கூறியதுபற்றிக்கூறுததுகொண்டு
தடத்தலக்கணம் அமைத்தலும் அமைக்கப்படுமத்தடத்தலக்கண
மும்மாயாவாத நான்முறைபற்றியில்லவேயில்லை. இனிச்சிவாக
முறைத்தெனில் ஒன்றறியானொருவன்பலவறியானென்பது கூற
வேண்டாம். அதுபோல மாயாவாதம் அறியாதவர் சிவாகப்
பொருள் அறிந்துகூறுமாறு யாங்ஙனம் சீனிவாசகல்மார்த்தர்
சித்தைக்சத்தென்றறியாது மொழிபெயர்த்தாரென்று இகழுமாறு
போல இவ்வுரையாசாரியர் சங்காரகர்த்தா முதற்காரணமென்று
மொழிபெயர்த்தனரென்று கூறும் மாபிலாக சங்காரகர்த்தா முத
ற்காரணமென்று மொழிபெயர்த்தற்குரிபதனை அவ்வாறு மொழி
பெயர்க்க அறியாமல் அந்தம் ஆதியென்று மொழிபெயர்த்தாரெ
ன்று உள்ளே இகழ்ந்து கூறியவாறுகாண்க. அற்றன்று இதெ
ன்னை இவ்வுரையாசாரியர் மெய்கண்டதேவநாயனர் என்று உபச
த்திக்கூறவும் நீர் அவரை இகழ்ந்துகூறினிரென்பது யாங்ஙனம்;
அவ்வாறேல் முதற்காரணமும் ஆதியும் ஒருபொருட்கிளவிபல்ல
வாகவும் அந்தமாதிஎன்புழி ஆதிபிரபு அதாவது முதற்காரண
மென்று மொழிபெயர்த்தாரென்று இல்லது கூறுதல் இகழ்ச்சியே
யல்லது புகழ்ச்சியாமெனில் யாம் இவ்வுரையாசாரியர் பிரபு என்
பதனை முதற்காரணமென்று மொழிபெயர்த்தனர் எனக்கொள்ளு
வம். மொழிபெயர்க்கவும் இவ்வுரையாசாரியர் பிரபு என்பதை
முன்தெய்வமென்று மொழிபெயர்த்தாரென்றுகூறுகின்றும் பிரபு
என்பதை முதற்காரணமென்று மொழிபெயர்க்கவும் இவர் பிரபு
என்பதனை முன்தெய்வமென்று மொழிபெயர்த்தாரென்று யாங்
கூறுவது இகழ்ச்சியன்றி புகழ்ச்சியன்றே அதுபோல பிரபு என்
பதனை ஆதியென்று மொழிபெயர்க்கவும் பிரபு என்பதனை முதற்
காரணமென்று மொழிபெயர்த்தாரென்றுகூறல் இகழ்ச்சியினும்
இகழ்ச்சியாதல்காண்க. இவ்வாறு சிவாசாரியதூஷணஞ்சிவாக
தூஷணஞ்செய்யுமாறுகாண்க. அதுபற்றியன்றே சிவாகமங்கட்

டெல்லாம் அச்சாணியாகிய இச்சிவாகமநூலுள்நிமித்தோபதானம் கூறப்பட்டதென்று கூறினர். கூறவே அச்சிவாகமஞ்செய்த சிம் தூஷணமுஞ்செய்தவராயிற்று. ஆகவே சிவநிந்தை சிவாகமநிந்தை சிவாசாரியநிந்தை என்னும்பரமநிந்தைமூன்றும் செய்தபரமபாதக ராதல்காண்க. இனிமெய்கண்டசிவதூஷணஞ்செய்தன்மாத்திரை யினமையாது உலகந்தானொடுங்குதற்குரிய நிலைக்களமான்சங்கா ரகருத்தரின் நின்றன்றிஉளதாகாதென்றுசிவஞானசுவாமிகளும் உரைத்தமைகாண்களென்று சிவஞானசிவதூஷணஞ் செய்தவாறு காண்க அன்றன்றுமெய்கண்டசிவதூஷணஞ்செய்ததென்பதுஒக்கு வாயினும் இதுஒவ்வாதுபோலுமெனில் அற்றன்றுஉலகந்தானொ டுங்குதற்குரிய நிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றிஉள தாகாதென்பதில் நிமித்தோபதானம்உளதாமாறுயாங்ஙனம்மரமா னதுதானொடுங்குதற்கு நிலைக்களமானவித்தில் நின்றன்றிஉளதா காதெனில் மரத்திற்கு வித்துமுதற்காரணமேயாங்கொல்லோ ஆத லால் இதுதூஷணமல்லது பூஷணமாகாமை (97) பாசத்தொடுகளை காண்என்பதற்கு சிவஞானசுவாமிமலத்தோடு கட்டுற்றுநின்றபா தலால் பசுவெனப்பட்டாயென்றுகூறும்பொருளையிகழ்ந்து அதற்கு பொருளபிராந்திசித்தனைப் இருக்கின்றாய் என்றும் அகரவுயிரின் றேல்அக்கரங்களில்லை என்பதற்கு சிவஞானசுவாமி அகரவுயிரில்லை யாயில் அக்கிரமங்களில்லைஎன்னுமிக்கிரமத்து ஒன்று இன்று என் னும் இருக்குஎன்பதற்குசிவஞானசுவாமி இம்முறைபற்றிபிரமமில் லையாயின் ஒருபொருளில்லையென்னும்வேதம்என்பதனைஇகழ்ந்து இம்முறைபற்றி ஒன்றாகியபிரமம்இல்லையாயில் உலகமில்லைஎன்று இருக்குவேதங்கூறும்என்றும் இகழுமாறுகாண்க. இனி அவனுள னுமல்லனுமாமங்குஎன்பதனை அவனுளனுமாய் அல்லனுமாமங்கு என்றுபாடமாற்றி கூறுமாறுபற்றிமெய்கண்டதேவரை இகழ்ந்த வாறுகாண்க. இகழவே 1ம் பக்கம் கணநாதர் நந்திகேசுரர் முத லிய ஆசாரியர் தக்ஷிணாமூர்த்திஆகியபரமசிவன் இவர்களை நமஸ் கரிக்கின்றோம் என்றதும் புறத்தேநமஸ்கரிப்பார்போற்காட்டி அகத்தே இகழ்ந்தவாறுகாண்க. அன்றன்றுநமஸ்கரிக்கின்றேன் என்றுவெளிப்படையாய்கூறவும் அதனைதூஷணமென்பதூ கூடா தெனில் அற்றன்று இவ்வுரையாசாரியர்தாமியற்றிய நாரதபத்தி சூத்திரவிருத்திமுதலியவற்றில் இவ்வாறுவணக்கங்கூறாமையானும்

இதனுட்கூறுதலானும் என்பது அஃதன்று எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்பகூறப்பட்டதெனில் அற்றன்று முகவுரைபக்கம் 3-ல் சர்வவேதாகமசாரம்என்றுகூறுமிடத்து இதுவும் அதுவும் தம்முள் வேறென்றுகூறுமையாமென்பது இன்னும்இந்தநமஸ்காரம் பயின்றறியாதநமஸ்காரமென்பது ஆசிரியவர்க்கத்தோடு பரமசிவனையுமொருங்குவைத்தலானும் ஆசிரியர்களைமுன்னர்கூறி பரமசிவனை பின்னர்கூறலானும் தூஷணமாதல்காண்க. இதனாலே சிவநிந்தை சிவாகமநிந்தை சிவாசாரியநிந்தைகள் செய்தமை தெற்றென அறிக. பிறவுமன்ன அதுநிற்க. இனியது எதனின்று தோன்றிப்பொன்றும் அதற்கு அதுவேமுதற்காரணமென்னும் நியாயத்தால் ஒடுங்கிய சங்காரகர்த்தாவே முதற்காரணமென்பது தோன்ற அரன்பிரபு என்றார். இக்கருத்தினை மெய்கண்டதேவர் வார்த்திகம்பொழிப்புரையில் சங்காரமேமுதலென்றது என்னும் கருத்துரையில் சங்காரகாரணனையுள்ளமுதலே முதலாகவுடைத்து இவ்வுலகம்என்னும் உலகம்தானொடுங்குதற்குநிலைக்களமான சங்காரகருத்தாவினின்றன்றி உளதாகாதென்று சிவஞானசுவாமிகளும்உரைத்தமைகாண்கஎன்றுகூறினார்மெய்கண்டதேவர்என்றும் என்னும் என்றும் சிவஞானசுவாமிகளும் உரைத்தமைகாண்க என்னும் முடிபுவிவர்த்தமாதலஎவ்வாறு அவ்வாறேபொருண்முடிபும் விவர்த்தமாமென்பதுகாண்க. இன்னுமொன்று இவர்வார்த்திகப்பொழிப்பை கருத்துரையென்றும் கருத்துரைபைவார்த்திகமென்றும் மாறிக்கூறினர் இவ்வுரையாசாரியர் இதுகாறுமாக்கிய வியாக்கியானம்மூலோபாக்கியானம்இதுவியாக்கியாவியாக்கியானம் இதுவேசர்வசப்பிரதிபன்னமாம் ஆகையால் இவ்வாறுஇல்லதை உள்ளதாகஉரைத்துக்கெடுதல் இவ்வுரையாசாரியல்லென்பதுமேலுங்கூறினும் பொழிப்பிது கருத்திது என்றறியாதகல்விமான் வியாக்கியானஞ்செய்வதில் மகாநிபுணராதலால் இவரேயன்றி இந்நூலுக்கு வியாக்கியானம்மற்றையோராலாக்கவேமுடியாது.

அதுநிற்க இனி அவ்வாறு கூறியவர் இவ்வாறுகூற அறியகில்லார் என்னை நிமித்தகாரணமெனவே• உபாதானகாரணமும் பெறப்படுமென்றார் என்றவாறே ஆதியாவது முதல் முதலெனவே நிமித்தத்தால் உபாதானம்பெறப்படுதலெவ்வாறுஅவ்வாறே உபாதானத்தால் நிமித்தமும்பெறப்படும். இனிபிரபு என்பது பலவாகஆமேவான்

எனவே முதற்காரணம். என்பதுபோலஆதியென்பது முதலாதலால் ஆதியென்றமையால் முதற்காரணமும் பெறப்பட்டது சன்றேதல் அதனினுஞ்சிறந்தபொருளாம் இவ்வாறாகவும் பிரபுவென்பது காரணப்பொருட்டு என்றுகூறி மறுபடி காரணமெனவே நிமித்தஉபாதானகாரணங்களாம் என்றுஒன்றுவிட்டு ஒன்றுபற்றி மசாஇடர்பட்டுக் கூறுவதிலும்அஸ்திநபுரியைகுருதிக்கோட்டுக்குஞ்சரநகாம்என்பது போலவும் சந்திரசேனனை மதிவிரவியசேனன் என்பது போலவும் முதற்காரணத்தினை ஆதியென்றாரென்றுகூற அறியாது, பிரபுஎன்பதனை முதற்காரணமென்று மொழிபெயர்த்தாரென்றார். அம்மட்டோ இவ்வுரையாசாரியர் சங்காரஞ்செய்வோன் காரணனென்றார் அவர் சங்காரகாரணனென்றார். எனவே செய்வோன் உபாதான காரணமென்று மொழிபெயர்க்காது தவறினாரென்று கூறியவாறாயிற்றுஆகவே உபாதானம் அர: என்று சூத்திரபாடஞ்செய்யாத பரமசிவனை இகழ்ந்துகூறியவாறு காண்க. அம்மட்டோ பக்கம் 38-ல் தோற்றமுமீறுமாப் நின்றாய் என்பன முதலியன கூறுதலானும் பூவின்கண் வாசனை மலை, நிலம, நீர், தீ, வளி, ஆகாசம், ஈசனை என்பன முதலியன கூறுதலானும். ஊனாப், உயிரானாப், என்யன கூறுதலானும் வானாகி மண்ணாகி என்பன முதலியனகூறுதலானும் தானே திசையொடு தேவருமாய் நிற்கும் என்மன முதலியன கூறுதலானும் இவன்முதலையன்றி முதலில்லை என்பனமுதலியன கூறுதலானும் கற்றநூற்பொருளும் சொல்லும் என்பன முதலிய கூறுதலானும் சமயாசாரியர் திருமந்திரமுடையர் உந்திக்களிறுயர்போதஞ்சித்தியுடையர் முதலிய சிவாசாரிய தூஷணங்கள் செய்தமையுங்காண்க.

இன்னும் இவ்வாறே புறத்திலே புகழ்வார்போல் அகத்தே இவரிகழுமிகழ்ச்சிகள் பல அவையெல்லாம் ஆண்டாண்டு காண்க விரிக்கிற்பெருகும். அதுநிற்க இனி சமஸ்கிருதவியாக்யானமியற்றியசிவாச்சாரியரும்தமதுரையில் கர்த்தா ஏகோபிசக்தி துவார அநேகோபூத்வா சுத்தா சுத்தமாயாவிசிட்டதயா அபின்ன நிமித்த உபாதான கஸ்ஸன் பிரபஞ்சோற்பத்தியாதிகம் கரோதி என்றெழுதி இருக்கின்றனரென்றார். அந்தமாதியென்று மொழிபெயர்த்தவரும் சங்காரகர்த்தாவினின்றன்றி உளதர்காது என்றவரும் விரோதிகளாதல்தக்கதேயாம் அன்றி அவர் இவருக்கு சகபாடியாகிய அபின்ன நிமித்தோபதானம்கூறினவர் விரோதியென்றுகூற நமக்குவாயேது.

அவர் இவருக்கு வியாக்கியான வழிகாட்டி இவரைக்கெடுத்தவர் ஆதலாலும் அவர்சிவாத்துவிதியாதலால் இவருக்கு சகபாடியாதலா லும் அது நமக்கு பாதகமாகாது,

அதுநிற்க, இனி எது எதனின்றுண்டாகி எதன்கண் நிலை பெற்று எதன்கண் ஒடுங்குகின்றதோ அதற்கு அதுவே முதற்கார ணம் என்னும் நியாயம்பற்றி ஒடுங்கியஇடமானசங்காரகருத்தாவே முதற்காரணமென்றார் இந்நியாயம்யாண்டுள்து. பூர்வமீமாஞ்சை நியாயங்களினும் உத்தரமீமாஞ்சை நியாயங்களினும் இது ஒன்று தல் யாங்கண்டிலம் அஃதன்று லோகவேதாதிகரணநியாயம் என் றுளதாலோவெனின் அஃதிஃதோ வேறோ என்று நாடுதும் எது எதனின்றுண்டாகி எதன்கண்நிலைபெற்று எதன்கண் ஒடுங்குமென் பது மரம் வித்திலுண்டாகி வித்திலொடுங்குகின்றதன்றி வித்தின் நிலை பெறக்கண்டலமன்றே. ஆதலால் இது லோகாதிகரணநியாய முமன்று. இனி மாயாந்துப்பிரகிருதிப்வித்யாது என்பதுமற்றி வேதாதிகரணநியாயமுமன்று ஆதலால் எது எதனின்றுண்டாகி எதன்கண் நிலைபெற்று எதன்கணொடுங்குகின்றதோ அதற்கு அது முதற்காரணமாதல் ஒரு நியமமென்பது அநியாயமாய் மாயாவாத முறையாகி சிவாகமுறையன்றாய் முடிதல் காண்க.

இக்காலம் பலபாஷைகளும் கற்றற்கேதுவாகிய அச்சியந்திர முள்ள காலமாயினும் இவர் யாங்கூறும் இந்நியாயங்கண்டறியாமை யின் ஸ்ரீமான் பொன்னம்பலப்பிள்ளையவர்கள் அச்சியந்திரமில்லாத காலத்தவராகிய சங்கராச்சாரியர் சிவஞானசுவாமி முதலியோரிலும் இவர் கற்றவரெனத்துணிந்து கூறுங்கூற்று உபசாரமல்லது உண் மையன்றென்க. அதுநிற்க சங்காரகர்த்தா முதற்காரணமென்பது சிருஷ்டிகர்த்தா முதற்காரணம் என்னும் நியாயத்தோடுமுரணுத லாலும் பொன்றலினும் தோன்றல்வலியுடைத்தாகலாலும் அவர் ஞாயத்தினும் எமது நியாயம் வலியுறுதல் காண்க. அஃதேல் சங்க ராச்சாரியரிலும் இவர்பெரியரோஎன்னின் ஆமென்று நிச்சயமாகயாங் கூறுவோம் அவர் அச்சுக்காலத்தவரல்லாராதலாலும் இவர் அச்சுகா லத்தவராதலாலும் அல்லாமலும் சங்கராச்சாரியர்இந்நூலைப்பாராது பராமுகப்பட்டனர் ஆதலாலும் இவர்பராமுகப்படாது பார்த்தனரா தலாலும் சங்கரபாடியம் வித்தியாரண்யர் வியாக்கியானம் இவ்வுரை யாசாரியர் முன்செய்த பஞ்சதசை முதலியவெல்லாம் வேதசார

பூதம் என்று இவர் அறியாத முன்காலஞ் செய்தலால் அவையும் அவ்வாறே செய்த இத்தேசத்து மயாவாத ஆகமங்களும் உத்தரதேச மாயாவாத ஆகமங்களும் அவைதிகம் துவைதம் தாந்திரிகம் என்பது இவ்வுரையாசாரியர் கருத்தாதலறிக. அது பற்றியே இவ்வுரையாசாரியர் (பக்கம் ௧௪௧) ஆணவமாகிய மாயை என்னும் அவித்தை ஏகமென்றமையால் ஒரு ஆத்மாவுக்கு ஞானத்தாற் பந்தமோக்ஷமானல் எல்லோரும் முத்தராதல்வேண்டும். அதனல் பந்தமோக்ஷ வியவஸ்தை சித்தியாதாகுமெனில் அங்ஙனமன்று. இருளொன்றே யாயினும் அம்சபேதத்தால் பலவற்றையும் மறைத்துப் பிரகாசமுண்டாகிய விடத்து மாத்திரம் நீங்கி ஒழிந்த விடமெல்லாம் மறைந்திருப்பது போல அவித்தையும் ஒன்றேயாயினும் அம்சபேதத்தால் பலவாய்ப் பலவாத்மாக்களை மறைத்து ஞானமுதிக்கப்பெற்ற ஆத்மாவினை மாத்திரம் மறையாதொழிந்து பிறவாத்மாக்களை மறைத்தே நிற்றலால் பந்தமோக்ஷ வியவஸ்தை பொருந்துமென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி இடர்ப்படுவர். அவர் கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூற்களிற் காண்க என்று இவ்வாறெல்லாம் வற்புறுத்திக் கூறினர். சமாதானங் கூறுமாயாவாத ஆகமம் உணர்ந்தோர் பலருளராயினும் இவ்வாறு இவர்போல் நுண்ணிய சமாதானங் கூறுவோரிலர். இங்கே இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி இடர்ப்படுவர் என்று சொல்லப்படுவோர் சைவாகமிகளாகிய யாமே அவர் கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூல்களிற் காண்க என்புழி பெருநூலென்பது மாயாவாத ஆகமங்களைப் பெரியதெனப் பொருள்படும் பிரமத்தையே பிரதிபாதித்தலால் மாயாவாத ஆகமம் பெருநூலெனப்படும். ஆணவமாகிய மாயை என்பது பக்கம் (141)ல் அவித்தை யாகிய ஆணவமலம் என்பதனேடு மாறுபடுதலால் ஆணவத்தை மாயையென்றமையால் அது மாயையாவதுடன் அவித்தையாதலும் பெறப்படும் என்பது இவ்வுரையாசாரியர் உபாதான நியாயம்பற்றி கொள்ளப்படும். அங்குக் கூறுதலால் இங்குக் கூருதொழிந்தார். இனி அவித்தையாகிய ஆணவமென்பதனை முன்பின்னுக ஆணவமாகிய அவித்தையென்று மாறிக்கூறி அவித்தை மாயை என்பன ஒரு பொருளவென்றலு மொன்று. இனி இருள் ஒன்றே அம்சபேதத்தால் பலவற்றை மறைக்குமென்றும் உவமத்துள் அம்சபேதத்தால் பலவற்றை மறைக்கு மென்புழி அவித்தை யொன்றே யாயினும்

அம்சபேதத்தால் பலவாய் பலவான்மாக்களை மறைக்குமென்னும் உபமேயமும் அம்சபேதத்தால் பலவாய் பலவாத்மாக்களை மறைக்குமென்புழி இருள் பலவா யென்றதை உபமானமும் முரணும் போலுமெனில் முரணாது. என்னை? இஃதறியார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி இடர்ப்படுவர் என்று கூறி இஃதறிந்த உரையாசாரியர் தமக்கு வேண்டாதவாறு கூறி இடர்ப்படாதவராதலாலும் அன்றியும் பக்கம் (53)-ல் வித்வான்களால் எவற்றாலு நிரூபிக்கப்படாது என்றமையால் அவித்வான்களால் சத்தியமென்று நிரூபிக்கக் கூடியதாம் என்பது அறிவிக்கப்பட்டமையை அறிந்து அறிவித்தவராதலாலுமென்பது.

அது நிற்க, இனி திருவள்ளுவ நாயனாரும் கடவுளின் தடத்திலக்கணம் உரைப்பாராய், "அகர முதல—ஆதிபகவன் முதற்றேயுலகு" என்று உரைத்தமையாலும் நிமித்த உபாதானமாதல் தெளிக என்றார். திருவள்ளுவநாயனார் கடவுளின் சொரூபலக்கண முரைப்பாராய் "அகர முதல—ஆதிபகவன் முதற்றே யுலகு" என்று உரைத்தமையால் நிமித்த உபாதானமல்லவாதல் தெளிக என்று அவரது அறிஞரும் பெரியாரும் கொள்ளுவரா. கொள்ளுவது தெரியாமையால் திருவள்ளுவர் தடத்திலக்கணங்கூறினர் என்பது மாயாவாத முறையாதல் காண்க. அது நிற்க இனி இவ்அபிப்பிராயத்தினையே வெளிப்படையாகக்கூறும் சுருதியாதிகள் வருமாறு என்றார். எவ்அபிப்பிராயத்தினை என வினவினர்க்குக் கடவுளின் தடத்திலக்கணம். அதாவது பிரமம் நிமித்த உபாதானமாதல் அதனை வெளிப்படையாகக்கூறும் சுருதிகள் எனவே ஆகமாதிகள் வெளிப்படையாகக் கூறாது மறைப்பாகக்கூறும். அவ்வாறன்றி இச்சுருதியாதிகள் மறைப்பாய்க்கூறாது வெளிப்படையாய்க்கூறும் ஆதலால் அவை வரும் வழி இது வென்கின்றார் எனவே இவ்வாசாரியர் மறைப்பாய்க்கூறும் ஆகமவாதிகளின் மறப்பை நீக்கி விளக்குவோரென்றவாறும். ஆகவே பக்கம் (162) ல் சூரியன் நேரே பிரகாசித்தற்கு ஏதுவாகாத இருட்டறையிலுள்ள பதார்த்தத்தின் ஒரு கண்ணாடியினது சாயாப்பிரகாசவாயிலாக விளக்குவது போல அவித்தையினால் மறைக்கப்பட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரணபிரதிவிம்ப சிதாபாச அறிவாகிய தத்துவப் பிரகாசஞ் செய்த குப்புசாமிராசுவாகிய சிவாத்துமாவின் வாயிலாக வெளிப்படையா யறியுமென்பது பெறப்பட்டது. படவே பிரபஞ்சம் சிதாபாச வறிவாகிய சீவாத்மா எவ்வாறு மித்தையோ அவ்வாறே தத்து

வப் பிரகாசஞ் செய்த சிவாத்மாவும் மித்தியாதல் பெறப்பட்டது. படவே மறைக்காது வெளிப்படையாய்க் கூறும் சுருதியாதிகளைப் பார்த்த சங்கராச்சாரியர் முதலியோர் மறைத்துக்கூறும் ஆகமங்களைப் பாராது பராமுகப்படுத்தினர். இவ்வாசாரியர் பராமுகப் படுத்தாது பார்த்தார்.. ஆதலால் இவர் அவரினும் மேலவரே யாம். உரையாசாரியர் இவ்வாறு உபாதானம் மறைப்பாகக்கூறும் ஆகமாதிகளுக்குக் கஷ்டப்பட்டு வியாக்கியானஞ் செய்து உபாதானம் வெளிப்படையாய்க் கூறும் சுருதியாதிகளுக்கு வியாக்யானஞ் செய்யாதது வேண்டாமென்பது பற்றியேயாம் அது நிற்க.

இனி இப்பூதங்கள் எதினின்றும் தோன்றும் எதனால் நின்று பொன்றி எதனில் ஒடுங்கும். அதனை அதுவே பிரமம் என்று விசேஷமாய் அறிய விரும்புக என்றது உவமேயம். இனி உவமானம் வருமாறு: இக்குடங்கள் எதனின்று தோன்றி எதனால் நின்று பொன்றி எதனில் ஒடுங்குகின்றனவோ அதனை அது குயவன் என்று அறிக வெனில், குடத்துக்கு உபாதானம் குயவன் ஆகாமை எவ்வாறு? அவ்வாறே பூதங்கட்கு உபாதானம் பிரமமாகாமையறிக. அறியவே பிரமம் நிமித்த உபாதானமாதல் இச்சுருதியுள் வெளிப்படையாய் இல்லாமை. மேலும் மறைப்பாயுமில்லாமை அறியப்படும். படவே அவர் பிரமம் நிமித்த உபாதானமாதல் வெளிப்படையாய்க்கூறும் என்ற சுருதி வெளிப்படையாய் கூறுமை மேலும் மறைப்பாயும் கூறுமையால் இவ்வாறே இவர் கூறுவனவெல்லாம் வெளியன்று, மறையன்று, இரண்டுமன்று, இவற்றின் வேறுமன்று என்னுஞ் சூன்யவாத மென்று கொள்க. அஃதேல் ஏகான்மவாதம் சூன்யவாதத்தோடு முரணுதோ எனில் அதுவும் ஆன்மா ஏகமென்று கூறுதல் பற்றி விரோதமாகாமையறிக. இதனாலே பிரபு என்பது காரணப் பொருட்டு சங்காரகர்த்தா காரணமாவன் என்றமையால் அவனிமித்தமாவதுடன் உபாதானமும் ஆவன் என்பதெல்லாம் மாயாவாத முறையாதலால் அம்முறை சிவாகம முறைக்கு மாறுமுறை என்பதும் அம்மாறு முறையை நேர் முறைபோல் காட்டி, சிவாகமத்தை எதிர்க்கவந்த தொருதீக்கொள்ளி இவரென்பதுந் தெற்றெனவறிக. அறியவே இவ்வுரையாசாரியர் இவ்வாறே வெளிப்படை யென்பன மறைந்துமில்லாமையும் மறைப்பென்பன கிஞ்சித்து மில்லாமையுமாம் என்பது பெறப்படுமாதலாலும் இவ்வாறு கூறுவனவெல்லாம் வெறும் பொய்மையிற் பொய்மையாதலாலும் பிரமாணம் பிரமாணமென்றென்று

காட்டுவனவெல்லாம் அப்பிரமாணமேயல்லது வேறில்லை ஆதலானும்,
அவர் கூறும் பிரமாணமெல்லாம் இதுபற்றி பொய்யாதல் தானேயறி
யப்படும். அது நிற்க.

இனி வாசக வாச்சியார்த்தம் வருமாறு: எதனின்று பூதங்கள்
பிறக்கின்றனவோ என்பது எதார்த்தமாய் நின்று இப்பூதங்கள் பிறக்கு
மென்பதாம். எதம் என்புழி லள ஒற்றுமைபோல நம ஒற்றுமைபற்றி
எதம் என்பது எதனனென வந்தது. யதம் என்பது எதார்த்தமாம்.
அஃதேல் அது மித்தை என்பதனோடு முரணுமெனில் இங்கு அம்
மித்தைச் சத்தம் இல்லாமையால் எதார்த்தமித்தை இரண்டும் ஒருங்கு
வந்துழிச் சமாதானங் கூறுதும். அஃதன்று இவ்வுரையாசாரியர் சிவாகம
நூற் பயிற்சி யில்லாமையால் பிரபு, ஆதி, முதல், காரணம், உபாதானம்
என்பன தம்முள் ஒக்குமெனத் தமக்கு வேண்டியவாறே கூறி இடர்ப்
படுகின்றார் ஆதலால் அவர் இஃதறியாது தத்தமக்கு வேண்டியவாறே
கூறி இடர்ப்படுவாரென்று சொல்லுதல் யார்க்கும் எளிது என்பது
பற்றி அவ்வாறு எளிதிற் சொல்லவல்லவர் ஆதலானும் அவ்வாறெழு
தியதும் சிவஞானசுவாமி எழுதினதைக் கண்டு எழுதினவராதலா
னும் அவர்தம்மாயாவாத ஆகமங்களில் இவ்வாறு எழுதாமையால்
இவ்வாறு எழுதஅறியாமை பெறப்படுதலானும் சொல்லுதல் யார்க்
கும் எளிய என்னுந் திருக்குறளும் இவர் எளிதிற் சொல்லவறியாமை
யறிக. அஃதன்று. எதனினின்று என்று கூற வேண்டியதனையே எத
னின்று என்று கூறினர் எனக்கொள்ளுதுமெனில் அஃதன்று.
பின்னை இவ்வாறு வருமிடமெல்லாம் எதனின்று எதனின்று என்றே
கூறுகின்றார் ஆதலால், இனி எதனினின்று கூறினர் என்றே கொள்ளு
தும். இப்பூதம் எதனினின்று தோன்றும் என்பது சங்காரஞ் செய்
வோன் நிமித்தமாவதுடன் உபாதானமாதல் இதனில் வெளிப்படை
யாய்க் கூறப்படுகின்றதோ மறைப்பாய்க் கூறப்படுகின்றதோ இப்பூதம்
எதனினின்று பிறக்குமென்பது தத்துவப் பிரகாசிகை எதனினின்று
தோன்றுமென்பது போலாம். ஆகவே இத்தத்துவப் பிரகாசிகை எதனி
னின்று தோன்றியதென்னும் வினவுக்கு விடை குப்புசாமி இராசுவி
னின்று தோன்றியதென்று விடுக்கப்படும். படவே இதுபோல இப்
பூதம் எதனினின்று தோன்றும் என்னும் வினவுக்கு விடை பிரமத்தி
னின்று தோன்றுமென்று விடுக்கப்படும். படவே குப்புசாமி இராசு
வில் நின்றுதோன்றிய இத்தத்துவப் பிரகாசிகைக்குக் குப்புசாமி இராசு
காரணமென்றமையால் அவர் இத்தத்துவப் பிரகாசிகைக்கு நிமித்த

காரணமாவதுடன் உபாதான காரணமாவரென்று பெறப்படுமாயில் பிரமத்தினின்று தோன்றிய பூதத்திற்குப் பிரமம் காரணம், என்றமை யால் பிரமம் நிமித்த காரணமாவதுடன் உபாதான காரணமாமென்பது பெறப்படும் இது பெறப்படாமையால் அதுவும் பெறப்படமையறிக. அன்றன்று. (48) ல் ஈசுவரனது சொருபத்திலும் சகத்தின் சிருட்டி முதலியவற்றிலும் அதீந்திரியம் என்று இவ்வுரையாசாரியரே கூறுதல் நீர் கண்டிலீர்போலுமெனில் அஃதேல் எம்மினின்று தோன்றும் இந்த சிவத்துவப் பிரகாசிகைக்குக் காரணம் யாமேயாம். ஆகவே இதற் கும் யாம் நிமித்த காரணமாவதுடன் உபாதான காரணமாதல் வேண் டும் அவ்வாறுகாமை காக்ஷிப்பிரமாணம் பற்றி யறியப்படுதலால் எம் மில் நின்று தோன்றிய இச்சிவத்துவப் பிரகாசத்துக்கு யாம் முதற் காரணமாகாமை எவ்வாறு அவ்வாறே பிரமத்தினின்று தோன் றிய பூதங்கட்கு, பிரமம் முதற் காரணமாகாமை தெற்றெனவறிக. இவ்வுவமானத்தையும் (19) ல் வித்துவான்களால் எவ்வாற்றானும் நிரூபிக்கக்கூடாது எனவே அவித்துவான்களால் சத்தியமென்று நிருமிக்கக்கூடியதாம் என்று அறிவிக்கப்பட்டது என்று சால்சாப் புக்கூறமுடியாது. முற்கூறுமாறுபற்றியும் இனிக்கூறுமாறு பற்றி யும் யாமே வித்துவானும் அவர் அவித்துவானும் என்பது இனிதுசாதிக்கப்படும். எந்தச்சாலமெவ்வாறுபண்ணினும் வித்துவா னுகிய எமக்கும் அவித்துவானுகிய அவர்க்கும் வெகுதூரமாம். ஐயகோ! இது இவ்வாறு வருமென்றறிந்தால் இதெழுதற்குத் தலைப்படமாட்டாரே. அது நிற்க எம்மினின்று தோன்றும் இச்சிவத்து வப் பிரகாசத்திற்கு எவ்வாறு யாம் உபாதானமன்று அவ்வாறே பிரமத் தில் நின்று தோன்றும் பூதங்கட்கு பிரமம் உபாதானமன்று. குப்புசாமி இராசுவினின்றுதோன்றும் தத்துவப்பிரகாசத்திற்குக் குப்புசாமி இராசு முதற்காரணமாகாமை போலும் என்னுமனுமானம் பற்றியும் அஃதற்றேயாதல் தெற்றெனவறிக. இதனாலே உரையாசாரியர் சங் காரஞ் செய்வோன் உபாதானமென்பது உடம்பொடு உயிரிடை நட்பு என்பது போல குறிப்பு வாக்கியமாய் நின்று உபாதான மின்மையைக் காட்டியவாறு. அது நிற்க.

இனி அதனை அது பிர்மமென்றுஅறிய விரும்புக என்னும் தைத்திரியம் முதலாக பின்வரும் பிரமாண மென்பன எல்லாம் இவ் வாறே பிரமமானது நிமித்தஉபாதானமாதற்கு பிரமாணமாகாமை அறிக. அவ்வாறுயினும் அது பலவாக பிறப்பேன் என்னும் தைத்

திரியம் உபாதானப்பொருட்டெனில் அவ்வாறே இஃதெழுதும் யாமும் பல யோனியாய் பிறப்போம். எனில் அப்பிறவிகட்கு யாம் முதற்காரணமாதல்வேண்டும். அவர்க்கு இஃதொக்குமாயில் எமக்கும் அஃதொக்கும். ஒக்குமெனில் அவர்க்கு ஒவ்வாதென்னை? நிர்விகாரமாய் பிரமம் விகாரப்பட்டு, சக்மாதலொத்த அவருக்கு ஒவ்வாமையேது, ஆதலால் நிமித்தஉபாதான மாதற்கு அவர் இவ்வாறு சுமந்து சுமந்து கொட்டும்குப்பையெல்லாம் எதனின்று பூதம் தோன்றும். நான் பலவாக ஆகிறேன் என்பன போல்வனவாம். ஆதலால் அவையெல்லாம் மாயாவாதமாதலறிக. இனி வெளியன்று மறையன்று இரண்டுமன்று வேறுமன்று என்று இங்கும் ஒட்டிக் கொள்க. அது நிற்க.

இனி இவ்வுரையாசாரியர் மொழி பெயர்ப் பெல்லாம் ஆபாசம் (11) கடருத்தீரியம் அதில் பிரம பூதாத்மா என்பதற்கு, பிரம வடிவ ஆத்மாவில் நின்று என்றார் என்றமையால் பிரம வடிவ ஆத்மா உண்மையும் பெறப்பட்டது. படவே அது ஆபாச மாதலறிக. இனி சித்விவர்த்தனமாகிய சகத்தாகிய இதற்குக் காரணமான சித்து நான் என்று மௌனத்தை ஆசிரயி என்கின்றார். பக்கம் 4. சடவுலகத்தினைக் கண்டு என்று கூறியதை மறந்து இங்கு சடவுலகை சித்தென்கின்றார். சித்தும் சடமும் தம்முள் பகைப்பொருளாம். அவ்வாறாகவும் பகையை நண் பென்கின்றார். பக்கம் 180ல் ஒரேகாலத்தில் ஒரு தருமியில் விருத்தமான இரண்டு தருமங்கள் இருத்தல் பொருந்தாது என்ற உரையாசாரியருக்குச் சடசித்து இரண்டும் விருத்த தருமமாய் இரண்டு தருமிலிராமை பொருந்தலுங்காண்க. யாமிது காறுங் கூறுமாறு பற்றி இப்பூதங்கள் எதினின்று பிறக்கும் என்றன் முதலியனவும் பிறவும் ஆகிய அவரது சுருதியாதிப் பிரமாணங்கள் நிமித்த உபாதான மாதற்கு பிரமாணமல்ல என்று ஏது திருஷ்டாந்த பூர்வமாகச் சாதித்தாம். இன்னும் அவர் கொட்டுங் குப்பை யெல்லாம் இவ்வாறே நிமித்த உபாதான மாதற்கு பிரமாணமாகாமையால் அவருரை அத்தத்துவப்பிரகாசமாதல் காண்க, இனி பக்கம் 12 எதனால் ரூபத்தைப் பார்க்கிறான் என்பது முதலியனவும் நிமித்த உபாதான மாதற்கு பிரமாண மாகாமை மேற் கூறியவாறு பற்றி அறிக. பக்கம் 13 அக்ஷரமென்றது மூலப் பிரகிருதியாகிய மாயையினை யென்றார். அது பக்கம் 19 அக்ஷரமென்பது பிரமம் என்பதனோடு மாறுபடுதல் மாயாவாத முறையாதலறிக. இனி மூலப் பிரகிருதியாகிய மாயை யென்பதுங். பக்கம் 147 ஆன்

மாவாகிய மாயை யென்பதும். ஒன்றோ அன்றோ அறிகிலம். அது நிற்க, பக்கம் 15 இது முன் ஆத்மாவாகவே இருந்தது என்பது இந்த நன்செய் முன் புன்செய்யாகவே இருந்தது எனில் நன்செய்க்குப் புன்செய் நிமித்த உபாதான மாகாமை எவ்வாறு. அவ்வாறே இதற்கும் ஆத்மா நிமித்த உபாதான மாகாமை அறிக. இவ்வாறே பின்வரும் ஐதிரேயமும் சாந்தோக்கியமும் நிமித்த உபாதானம் கூறுமை காண்க. பக்கம் 16 ஜீவனுய ஆத்ம வடிவால் அனுப்பிரவேசித்து நாமரூபவியாகாவாணீதி என்பது தருமதத்தனுகிய வடிவால் வேடம் பூண்டு நாளநாடகஞ் செய்வேன் என்புழி நிமித்த உபாதானம் பெறப்படாமை மேலும் செய்வேன் என்பதற்கு வினைமுதல் இன்மையுமறிக. பக்கம் 17 ஆத்மாவினின்று பிராணன் என்றார் என்றது இப்பூதம் எதனின்று தோன்றுமாறு போலும். ஆதலால் இதுவுமது. பக்கம் 18, இவ்வெல்லாமென்பதுமது. மேல், கீழ், முன், பின், திசை நான்கு எல்லாம் பிரமமென்றார் இதுவுமது, இனி சிலந்தி நூலாக்கல் புருஷனின்று கேசலோமங்கள் உண்டாதல் இவற்றின் காரணம் உயிரன்று உடம்பாதலால் அவை வேறு வேறு நிமித்த உபாதனங்களுண்மை அறிக. பக்கம் 19 புருஷவேதம் விசுவம் என்பது தருமதத்தனே இவ்விராமவேஷம் என்பது போலும். ஆதலால் அது நிமித்த உபாதானம் கூறுமை யறிக.

இனி 20 பக்கம் புருஷனினின்று பலவிதமான உள்பொருள் உண்டாகின்றன என்பது இப்பூதம் எதனின்று தோன்றும் என்பது போலும். ஆதலால் இதுவுமது. இனி இவனெல்லாவற்றின் யோனி யென்பது இவள் தேவருக்கு யோனி யென்பது போலும். ஆதலால் இதுவுமது, இது முன் சத்தாகவே இருந்தது என்பது இது முன் புன்செயாகவே இருந்தது என்பது போலும். பக்கம் 21 போக்தா போக்கியம் பிரேரிப்பவன் எல்லாம் பிரமம் என்பது இச் சிவாகமம் உபாகமம் எல்லாம் ஆகமம் என்பது போலும். அன்றியும் பசுக்கள் போக்தா சுகதுக்காதி சம்சாரம் போகம் போலும் ஆதலால் இதுவுமது இனி ஸ்திரீ நீ புருஷன் நீ என்பன முதலியன பிரம நீ, சத்து நீ, ஆன்மா நீ என்பன போலும். ஆதலால் இதுவுமது. பக்கம் 22 பிரபஞ்சத்துக்கு பிரமத்தைவிட வேறு உபாதானமில்லை ஆதலால் எல்லாப் பிரஞ்சமும் பிரமமே அன்னியமன்று. எல்லாம் ஆத்மாவென்னுங்கட்டளையால் வியாப்பிய வியாபகத் தன்மை மித்தையாம் என்புழி பிரமோபாதானமாதல் கேட்கப்படுவதெனில் பக்கம் 46-ல் சட

மான மாயையினைக்கற்பித்து அதனின்று எல்லாவுலகத்தையும் படைத்தான் என்பதே சர்வ சாஸ்திரங்களின்சம்மதம் என்னும் சர்வ சாஸ்திர சம்மதம் பெரிதோ யோக சிகை யென்னும் ஒருசாஸ்திரம் பெரிதோ ஆனல் வேதம் ஆகமம் இரண்டற்கும் வக்தா ஏகனுதல் போலப்பிரபஞ்சத்திற்கு பிரமத்தைவிட்ட வேறு உபாதானமில்லையென்று கூறியவர் தாமே. பக்கம் 46-ல் சடமான மாயையினைக் கற்பித்து அதனின்று எல்லா வுலகத்தையும் படைத்தான் என்பதே சர்வ சாஸ்திரங்களின் சம்மதமென்கின்ருர். ஆனல் முன்னுக்குப் பின் தெளிவுண்டாதல் வழக்கமாதலால் பக்கம் 22-ல் சொன்னதிலும் பக்கம் 46-ல் சொன்னதே விசேஷம். ஆனதால் பக்கம் 22-ல் பிரபஞ்சத்திற்கு பிரமத்தைவிட வேறுபாதானமில்லை என்பதிலும், பக்கம் 46-ல் சடமான மாயையினைக்கற்பித்து அதனின்று எல்லாவுலகத்தையும் படைத்தானென்பதே சர்வசாஸ்திரங்களின் சம்மதமென்பதே சர்வ சாஸ்திரசம்மதமாம். நானுமறியேன் அவளும் பொய்சொல்லாள் என்னும் பழமொழிப்படி அவர் கூறிய மாயமோபாதனமே சர்வ சாஸ்திர சம்மதமாதல் சர்வசம்பிரதிபன்னமாதலால் பிரமோபாதனமென்பது அசாமஞ்சசமாதலறிக. இனி பக்கம் 23, 24-ல் வாதுளம் என்று கூறிய விஷயத்துள் விந்து ரூபம் பராசத்தியாம் நாதம் ஆதி சத்தியாமென்று அங்கிகரிக்கப்படுகின்றது என்றும் அரயேக ஏவாவசிஷ்டக: என்பது சிருட்டிக்கு முன் அரனொருவனே எஞ்சியிருப்பவன் என்பது மிருகேந்திர மென்னும் அகமேகோநமேகஸ்மின் நாகம் அன்யஸ்யகஸ்ய சிதுநதம் பஸ்யாமியஸ்யாகம் தன்னபஸ் யாமியோமம என்பது யானொருவனே; எனக்கு ஒருவரும் இல்லை. யான் மற்றெவனுடையவனுமல்லன்; யான் எவனுடையவனவேனே அவனை யான் காணேன் என்பது சர்வ ஞானேத்திரமென்றும் இவை பிரமோபாதானம் சாதிப்பனவென்றும் சாதித்தார். இவ் விவர்த்தாசாரியர் காட்டும் உபநிடத வசனங்களுக்கெல்லாம் அத்தியாயாதி சுலோகாதி கணக்கிடுகின்ருர். அவ்வாறே ஆகமம்; ஆகமம் என்று காட்டும் வசனங்கட்கு கணக்கிடாமை என்னே? அவை படலம் சுலோகமென்னும் பிரிவுகள் உள்ளனவோ, இல்லனவோ? உள்ளனவாயின் உபநிடத வசனங்கட்கு கணக்கிடுதல்போல் ஆகமம் என்னும் வசனங்கட்கும் கணக்கிடவேண்டுமன்றே. அவற்றிற்கு கணக்கிடாகுமையால் அவ்வாறு கணக்கிடாமைக்கும் உபநிடத வசனங்கட்குக் கணக்கிடுதற்கு வேறு வேறு காரணமிருத்தல் வேண்டும், காரண

மென்னையெனில் ஆகமவசனமென்றென்றெழுதுவன் உள்ளபடி தாம் நேரே ஆகமங்களைப்பார்த்தவரல்லர் சதாசிவசிவாசாரியர் விபரீதமாக எழுதுவனவற்றைக்கண்டு தாமேசொயமாக பார்த்தவர்போலெழுது கின்றார். அவர் கணக்கிடாதபடியால் இவருமக்கணக்கறியாமல் கணக் கிடாதுவிட்டாரென்பதேகாரணமாம். இனி அரயேகயே வாவசிஷ்ட: என்னும் வசனம் மிருகேந்திரத்துள் எங்குமின்று அவ்வாறே அகம் யேகோயென்பது சர்வஞானேத்திரம் என்று அவர் கூறும்வசனமும் அந்தச்சர்வ ஞானேத்திரத்தில் எங்குமில்லாமையறிக. இன்னும் இவ்வாறே இவ்வாசாரியர் சோச்சந்தாகமம் பாச்சந்தாகமம் கோச்சந் தாகமம் பாரமேசுராகமம் என்னும் பெயர்களிட்டுக்கணக்கிடாது எழு தும் வசனங்களெல்லாம் சதாசிவசிவாச்சாரியர் வசனமாதல் இதனல் அறிக. இனி சிருட்டிக்குமுன் அரன்ஒருவனே எஞ்சி இருப்பவன் என்னுமிருகேந்திரவசனம் பிரமோபாதானம் கூறுவதெனில் மிருகேந் திரம் மாயாப்பிரகரணம் எட்டாவது சுலோகம் "தேஷாம் வித்தர் மகாத்தே தோரச்யுவ ஜாயதே தேஷாம் தூமோந லிங்கோ ஜலம கிம் நாது மீயதே" யென்பது மாயாவாதிகள் சேதனனன ஆத்மாவிலிருந்தே அசேதனமான சகத்து உண்டாகின்றதென்கின்றார். அவ்வாறு விருத்த காரணத்திலிருந்து விருத்த காரிய முண்டாகுமாகில் சலத்திலிருந்து புகையுண்டானதென்று புகையைக்கொண்டு சலத்தை அவர்கள் அனு மிக்கலாம். ஏன் அனுமிக்கவில்லையென்றும் பரமோக்ஷ நிராசப்பிரகர ணம். 12-ல் வேதா தைஷ்வேக யேகாத்மா சிதசிங்ச் யிக்திலக்ஷித: ஆத்மைவேதம் சகத்சர்வம் நேக நானஸ்தி கிஞ்ச்ந பிரதிஜ்ஞாத்ர மே வை தந்திச் வயம் கிங்கிந்தநம் அயப்ரமாணந்தத்ராத் மாப்ரமேத்வம் ப்ர பத்யதே என்பது பிரமமே சடாசடமாகக் காணப்படுகின்றது எல்லாம் பிரமமே பிரமமன்றி வேறென்றுமின்று என்று வேதாந்திகள்சொல்லு கிறார்கள். இது சொல்லமாத்திரமேயன்றி ஏது திருட்டாந்தங்களால் நிச்சயிக்கப் பிரமாணமில்லை. வேதப்பிரமாணம் உண்டெனில் வேதாந் திகள் பிரமத்தின் வேறானவெல்லாம் அசத்தியம் என்பதால் வேறான வேதம் பிரமாணமாகாது அசத்தியமானதால் வேதம் பிரமமே யெனில் பிரமாணப் பிரமேயம் இரண்டும் ஒன்றாகும் என்று பிரமோபாதா னத்தை மறுத்துக்கூறும் மிருகேந்திரம் பிரமோதானங் கூறுமாறெவ் வாறு ஆனல் தாறுமாறாக இவரே பக்கம் 22-ல் பிரமோபாதானம் என் றும் பக்கம் 46-ல் பிரமோபாதானம் இல்லையென்றும் இருவிதமுங் கூறுதல்போல அதுவுங்கூறுமெனில் தஸ்மாதே காத்மவாதோயம் கல்

பிதோ மூடசேதனகை. என்றும் மூடர்களுக்கல்லது சிவத்துக்கேலா மையறிக. இனி பக்கம் 24. இதன்சன்மாதி எதனின்று முண்டாகின் றது சாஸ்திரத்திற்குப் பிறப்பிடமாதலால் "ஈக்ஷதேர் நாப்தம்" என்னும் பிரமமீமாஞ்சையும் மறைப்பாக கூறுமையுந்தவிர, பிரமமுபாதான மாதலே வெளிப்படையாற் கூறுமையுமறிக. இந்த சகலசகத்தும் வாசு தேவனென்னும் அக்கினிபுராணம் இந்த சகலசனமும் மாயாவாதி யெனில் மாயாவாதம் சனத்துக்கு உபாதானமாகாமை எவ்வாறு? அவ் வாறே இதுவுமாதலால் இதுவுமது பக்கம் 26. என்னிடத்தினின்று சகத்துண்டாயிற்று என்னும் சூத சங்கிதையும் அது. இனி பிரம கீதையில் இவ்வெல்லாம் பிரம மாத்திரமாயிருந்தது என்பது இவ் வெல்லாச்சனமும் சிவபக்தாள் என்பதுபோலும். இனி பக்கம் 28, பிரமகீதையில் அக்ஷரமாகிய பிரமத்தினின்று விசுவம் சம்பவிக்கும் என்பது பக்கம் 13-ல் அக்ஷரமென்பதி மூலப்பிரகிருதியாகிய மாயையினை யென்பதனேடு மாறுபடுதல்காண்க. இனி எவன் சர்வஞ் ஞன் எவன் சர்வவித்து எவனுடைய தபசு ஞானமோ அவனிடத்தி லிருந்து இரண்யகர்ப்பன் என்னும் பிரமரூபான்ன பூர்விகமான இது வென்பது பக்கம் 4-ல் எவன் சாமானிய வடிவமாக எல்லாவற்றையு மறிவனே, விசேஷ வடிவமாக எல்லாவற்றையும் அறிவனே, எவனுக்கு சிருட்டிக்கப்படும் சர்வபதார்த்த உணர்ச்சி மயமான தபசு உளதோ அவனிடத்திலிருந்து இந்த காரணவடிவ இரணிகருப்பனும் நாம மும் ரூபமும் அன்னமும் உண்டாகின்றன வென்பதனேடு மாறுபடு தல் காண்க. இவையும் பிரமோபாதானம் கூறுமைகாண்க. இனி முதலில் சகம்படைக்கும் நானெருவனே இருந்தேன். இருக்கின்றேன் இருப்பேன் என்பதுமது; இதனுள் இருந்தேன் இருக்கின்றேன் இருப்பேன் என்ற முக்காலமும் முதற்காலத்துண்மை விவர்த்தமாத லறிக. பக்கம் 29. இது பிரமமே என்னும் சூதசங்கிதையுமது. இனி பூதம் சம்பு என்பன முதலியனவும் பிரம்மோபர்தானமாதல் கூறுமை யறிக. பக்கம் 30-ல் இவ்வுலகு சராசரவடிவமென்னும் காலோத்தர மும் பிரமோபாதானங்கூறுமையறிக.

இனி பக்கம் 30-ல் சிவமாகிய என்னிடத்து நின்றே உலகமுண் டாகிறது என்னும் சிவகீதையும் பிரமஉபாதானங்கூறுமையறிக. இனி அனுதி அவித்தையோடு கூடியவனய் சகற்காரணத் தன்மையை அடைகின்றேன். அனிர்வாச்சியமான மகாவித்தை பரிணமமுள்ளதாய் உலகவடிவத் தன்மையை அடைகின்றது என்பது. பக்கம் 11-ல் சித்

ஒன்றே சற்காரணமென்பதோடு மாறுபட்டு விவர்த்த முறையாதலறிக. கீழே மகா அவித்தை என்னிடத்தில் உலக வடிவத்தன்மை அடைகின்றது என்பதனுள் சங்காரம் நிமித்தோபதானமாதல் கூறுமையறிக. 32. மேலே முழுதுஞ் சிவத்தினின்றுண்டாயின என்பதும் கீழே சங்கரன் தானே அருவமும் உருவமுமாய்ப்பிறக்கின்றான் என்பதும் பிரமம் உபாதானமாதல் கூறுமையறிக. இனிஎல்லாஞ் சிவமயம் என்பதும் சிவத்தின் வேறான திரிசியமில்லை என்பதும், 33. இச்சிவத்தின் வேறான திரிசியம் இல்லை என்பதுமது. 34. சிவம் அரியனுலறியப்படாதது என்னும் ஞானசங்கிதையுமது இனி அச்சிவத்தினின்று எல்லாமுண்டாயிற்று என்னும் ஞானசங்கிதையுமது. 35. ஒருவன் அனேகன் அனேகனுயினுமேகன் என்பது 180-ல் ஒருகாலத்தில் ஒரு தருமியில் விருத்தமான இரண்டு தருமமிருத்தல் பொருந்தாதென்பதோடுமாறுபட்டு விவர்த்தமாலறிக. 36 ஞாதா ஞானம் ஞேயமென்னு மெல்லாசகத்தும் சிவம் என்னும் ஞானசங்கிதை பிரம உபாதானங்கூறுமையறிக. இனி அவரை ஒருவருமறியாரென்பது 32-ல் சங்கரன்தானே ரூபமும் அரூபமுமாய்ப் பிறந்து காணப்படுகின்றான் என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி ஞாதாஞான ஞேயமெல்லாம் சிவமென்பது எல்லாவற்றையும் அவரே அறிகின்றார் என்பதோடும் மாறுபட்டு விவர்த்த மாதலறிக. இனி சகத்விலக்ஷண மான பிரமமென்பது 33-ல் பிரமத்தினுண்டான சகத்துக்குப்பிரமத்துவம் சாஸ்வதம் என்பதேனுடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி துவைத விஷயமான மதியின் பேதம் அஞ்ஞானமென்பது 54-ல் அஞ்ஞானமும் அதன் காரியமும் ஒன்றுகியபிரமமே வேறில்லை என்பது நிச்சயிக்கப்பட்டமதியாம் என்பதனேடு மாறுபட்டு விவர்த்த மாதலறிக. 37 அவனினின்று காயம் யாவும் காரணத்தோடு முண்டாகின்றன என்னும் ஆபஸ்த்தம்ப சூத்திரமும் பிரமமுபாதானமாதல் கூறுமையறிக. நான் எல்லாசகத்தினது ஆக்கமும் அழிவுமாவேன் என்பது 38-ல் எல்லாவற்றினது உற்பத்திகாரணன் என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. எல்லாம் வாசுதேவனென்பதுமது பூதங்களின் வெவ்வேறு விதானபாவம் என்னிடத்தினின்றுமுண்டாயினவென்பதுமது இனி சகத்து ஈசனுல் பிறந்தது என்னும் கருடபுராணமும் பிரமோபாதானங்கூறுமையறிக. தோற்றமு மீறுமாய் நின்றாய் என்பது முதலியனவும் பூவின்கண் வாசனை, மலை, நிலம், நீர், தீ, வளி, ஆகாசமாமிதனை என்பன முதலியனவும் ஊனுனுய், உயிரா

னுய், உடலானுய், உலகானுய், வானுனுய், நிலனுனுய், கடலானுய் மலையானுய் என்பன முதலியனவும் வானுகி மண்ணுகி என்பன முதலியனவும் உயிராய் உலகமதாகி என்பன முதலியனவும் பிரமோபாதானங்கூறுமை வெளிப்படை. இனி 43 "பொன்ருதது வாய் விகாரப்பொருளாய் என்பது" 180-ல் ஒரு தருமியில் விருத்தமான இரண்டு தருமம் இருத்தல் பொருந்தாது என்பதனேடு மாறுபட்டு விவர்த்தமாதன் மேலும் பிரமோபாதானம் கூறுமையறிக. 44. காசி காண்டம் சராசரங்களனைத்துமாகியென்பது பிரமோபாதானங் கூறுமையறிக. இனி ஏகனுமாகியநேகனுமானவன் என்னுந்திருவுந்தியும் சிவன் முதலேயன்றி முதலில்லையென்னும் திருக்களிற்றுப்படியும் அக்கரங்களுக்கெல்லாம் அகாவுயிர் நின்றுற்போலென்னும் உண்மைவிளக்கமும் இலயித்ததென்னும் உதாரணமும். நின்றனன் பரனும் என்னும் சித்தியும், பிரமோபாதானங் கூறுமை யறிக. யாமிது காறும் கூறுமாறுபற்றி அநாகமாசாரியர். 2-ல் உலகிற்கு வேருக ஒரு பொருளுண்டென்றும் அப்பொருளின் தடத்திலக்கணமாவது உலகிற்குபாதானமாதலென்றும், அவ்வுபாதானமாகும் பொருள் சங்காரஞ் செய்யும் பொருளென்றும், அது உபாதானமாதற்குக்காரணம் பிரபுசத்தமென்றும், அச்சத்தம் அவ்வாருதற்கு விற்பத்தி இதுவென்றும், அவ்விற்பத்தியறியாமல் மெய்கண்டார் விவரீதமாக மொழி பெயர்த்தாரென்றும், சிவஞானசுவாமி அம்மொழிபெயர்ப்பு விபரீதமறியாமல் விபரீதவுரை கூறினுரென்னும் திருவள்ளுவர் மிருகேந்திராகமக்காரர் சர்வஞானேத்தரக்காரர் சமயாசாரியர் நால்வர்திருமந்திரக்காரர் உந்திக்களிறு உண்மை விளக்கக்காரர் சுயவபிப்பிராயமாக வெண்பாச்செய்த மெய்கண்டார் சிவஞானசித்திக்காரர் பவுட்கராகமக்காரர் என்னும் 15 பேரும் இன்னுமவர்போலுமாகமக்காரர்களெல்லோரும் விபரீதமாகப்போயினுர் என்றும் இவ்வாறு விபரீதவப்பிராயத்தால் இவர் கூறிய விபரீதவிஷயங்களையும் 45-ல் பிரமத்துக்கு விவர்த்தமான சகத்துக்கு எவ்வாறு பிரமமாகுமென்பதுபோலும். ஆக்ஷேபங்களை செய்யப்படாது ஆதலால் பிரம உபாதானமாகலாம் அது நிமித்தமுமாகலாம் மண்போல் உபாதானம் வேறுவேண்டாம் அது சர்வசத்தியையுடையபடியால் அநிர்வசனமாயைக்கற்பித்து அதினின்று எல்லாஉலகங்களையும் படைத்தது என்பதே சர்வசாஸ்திர சம்மதம். ஆதலால் சடம்சித்திலிருந்து உண்டாகலாம் மாயை கற்பிதமாய் எப்படியுமெப்போது முண்டாகலாம் பிரமத்துக்குப் பிராந்தியுண்

டாகலாம் பிரமகிருத்தியத்திற்குக் காரணம்வேண்டாம் என்று இவ்வாறு பிரமாணவேதுக்களில்லாமல் அவர் கூறியவற்றையும் அன்னபிறவற்றையும் அவர் கூறியவாறே கூறுமல் பிரமாணவாயிலாக ஏது திருட்டாந்தங்களால் சர்வாகமங்களுக்கும் அவற்றையுள்ளபடி யுணர்ந்து போதிக்கும் சர்வாகமிகட்டும் சம்மதமாகும்படி விவர்த்தமாதல் இனி துசாதித்தாம் இவ்வாறேபின்வருவனவற்றையும் உய்த்துக்கொண்டுணர்க அதுநிற்க. அவ்விறைவன் விவர்த்தோபாதான மாவானேயன்றி பரிணாமியுபாதானமாகான் அவ்விறைவனது சத்தியும் பரிணாமியுபாதானமாகாது. எதனுலெனின் அது சிவனைப்போல் சித்ரூபமாதலால் அச்சித்திற்குப் பரிணாமம் சொல்லப்பட்டது அசித்துக்கில்லை ஆதலால் கற்பிதமான பரிக்கிரக சடசத்தியே சகத்திற்கு பரிணாமியுபாதானமாம் அதற்கு அதிட்டானமாதல் பற்றி சிவத்தைமுதற்காரணமென்றது சிவம் சித்துருபம் அது சடத்துக்கு எவ்வாறு உபாதானகாரணமாகும் அது நிமித்தகாரணமாதலால் உபாதானம் மண்போல் வேறுதல் வேண்டாமோ என்னும் இவைமுதலிய பிரசின்னங்கட்கு சர்வசத்திமானுகிய சிவனிடத்து சிறிதுமவகாசமின்று உலகத்திற்போல உவமிக்கப்படாதவனுதலால் அங்ஙனஞ்செய்யும் ஆற்றலில்லையாயில் அவன் சர்வசத்திமான் என்னும் தன்மைக்கிழுக்குண்டாகும் அவன் தனது சத்தியினுல் சடமானமாயையினைக்கற்பித்து அதனின்று எல்லாஉலகங்களையும் படைத்தானென்பதே சர்வசாஸ்திரங்களின் சம்மதம் ஆதலால் சடம்சித்திலிருந்து எப்படியுண்டாகும் மாயை கற்பிதமாகில் அது எப்படி எப்போதுண்டாயிற்று பிரமமாகிய சிவத்திற்குப் பிராந்தி யுண்டாகாலாமா குயவன் முதலியோருக்குத் தண்ட சக்கிராதியைப் போல் அவனுக்குக் காரணம்யாது உபாதானம்யாது என்பன முதலிய இத்தகைய சங்கைகளைச்செய்யலாகாது ஏனெனில் அத்தகைய காரியங்களைச் செய்யும் அனந்தசக்திகள் அசிந்தியனுயுள்ள பரமாத்மாவினிடத்துள்ளனவாம் அவையாவும் புத்தி கற்பனைக் கெட்டாவாதலால் சுருதியாதிப் பிரமாணங்கள் கொண்டே நிச்சயிக்க வேண்டியனவாம் இதில் பிரமாணங்கள் சூதகீதையும் பிரமகீதையும் ஆமென்றூர் இவைபெல்லாம் விவர்த்தமாதல் பின்னே கூறுதும் இவர் இங்கே முதலில் எடுத்துக்கொண்டது "நாத்திசத்தி ரூபாதானம் சித்ரூபத்வாதுயதாசிவக: பரிணாமோ அசித: புரோக்த சித்ரூபஸ்ய நயுஸ்யதே" என்பதாம் "சிதோவிவர்த்தி ஏவோக்தஸத் ரத்வேகார்ய சூன்ய தாசர்வப் பிரமாணசம்சித்த சித்விவர்த்தம் கதம் சகத்து" என்

னும் பவுட்கரம் விந்துப்படலம் நாலாவது சுலோகமாம் அதற்கு கீழுள்ளது அவர் மேலே காட்டியுள்ள 5-வது சுலோகத்தின் அர்த்தம் வருமாறு சித்ரூபமாய் இருக்கிற பிரமத்தினின்று பழுதையிற் பாம்பு விவர்த்தமாகத் தோன்றினாற்போல் விவர்த்த ரூபமாக சித்தினிடத்திற் பிராந்தகமாக சகத்துண்டாயிற்றென்று வேதாந்திகளாற் சொல்லப் பட்டதெனில் அவ்வாறாயில் பழுதையினிடத்தில் சர்ப்பம்போல் சகத்துமித்தையாகவேண்டும். சர்வாகமப்பிரமாணங்களாற் சித்தித்த சகத்தானது எவ்வாறு சித்தினிடத்தில் பிராந்தியினாற்றோன்றும் என்பதாம். மிருகேந்திரத்தில் வேதாந்த சாங்கியம் சதசத்பதார்த்தக மதாதிகஷு சசாதனை முக்லரஸ்தி கோவிசேஷஸ் சிவாகமே பிரணே திருசர்வாவேதித்வாநஸ்புடவோவஸ்து சங்கிரக: உபாயாச சபலாஸ் தத்தவத் சைவேசர்வமிதம்வரம் வேதாந்தேஷு ஏக ஏவாத்மா சிதசித் வியக்திலக்ஷித: ஆத்மைவேதம் சகத்சர்வம் நேகநாநாஸ்திகிஞ்சந: பிரதிஞ்ஞாமாத்திரம் எவைதந்த நிச்சயகாகிந் நிபந்தனம் அதபிரமாண த்த் ராத்மா பிரமேயத்துவம் பிரபத்தேயத்ரை தநுபயம் தத்ர சதுட் டயம் அவிஸ்திதம் அத்வைத ஹானிரேவம் ஸ்யாத் நிஷ்பிரமாண கதாந்யதா போக சாம்யா விமோக்ஷேளச சௌச யௌநேஷ்டா வாத்ம வாதிபி: என்னும் வசனார்த்தம் பின் கூறப்படும். அது நிற்க பவுட்கரத்துள் மேல் கூறிய 5. சுலோகத்திற்கு மாறாக அவரது சூத கீதை கூறுமாறு சித்ரூபன் சிவன் சராசரமான சகத்து முழுதும் சட மாம் அவ்வாறாகவே விருத்தமான அந்தச் சகத்து எவ்வாறு சிவனா கும் இத்தன்மை முதலிய வினாவின் சம்பவம் இங்கில்லை எங்கு வேத விரோத முளதோ அங்கு வினாவின். சம்பவமாம் வேதப்பிரமாண முள்ள தருமத்தில் வினாவின சம்பந்தம் எப்படி இல்லையோ அப் படியே வேதப்பிரமாணத்தாலறியத்தக்க சிவனிடத்தில் வினாவின் சம்ப வமில்லை ஆதலாலால் இவ்வர்த்தம் சாஸ்திரத்தினாலன்றி பிறிதொன்றி னால் நிச்சயிக்கப்பட மாட்டாது ஈசுரனது சொரூபத்திலும் சகத்தின் சிருட்டி முதலியவற்றிலும் அதீந்திரியம் மற்றவற்றிலும் நமக்கு நிச்ச யமாகச் சுருதியே பிரமாணமாம் அல்லது தேவதேவனது நிகழாதன எல்லாவற்றையும் நிகழ்த்து விக்கும் சத்தியுள்ளது அந்த மாயையினால் யாவும் நிகழும் உண்மையாக அந்த மாயை தோற்றமாத்திரத்தினால் பெறப்பட்டது இதிற் சம்சயமில்லை நிகழாதன நிகழ்த்துவிக்கும் அம் மாயையால் யாவும் அச்சிவனுக்குப்பொருந்துகின்றன நிகழாதன வெல்லாமற்றையும் நிழ்த்தும் அம்மகாமாயைநிற்க வேதப்பிரமாணத்

தினால் செவ்வையாய்ப் பெறப்பட்டுள்ள அவை நிச்சயமாக கிரகிக்கத் தக்கவேயாமென்பதாம் அங்கு சித்துரூபன் சிவன் சராசரமான சகத்து மூழுதும் சடமாம் என்னும் விருத்தமான சகத்து எவ்வாறு விருத்தமான சிவனாகும் என்னும் இத்தன்மைய முதலிய வினாவின் சம்பவம் இங்கில்லை எங்கு வேத விரோதமுளதோ அங்கு வினாவின் சம்பவமாம் என்றும் கூறுஞ் சூதகீதைக்குமாறாக சித்துரூபமாயிருக்கிற சிவனிடத்தினின்றும் பழுதையின் பாம்பு அத்தியாசமாய்த் தோன்றுவது போல் அத்தியாசரூபமாக சிவனிடத்தில் பிராந்தமாக சகத்துண்டாயிற்றென்று வேதாந்திகளாற் சொல்லப்பட்டதெனில் அவ்வாறாயில் பழுதையினுடத்தில் பாம்பு மித்தையாதல் போல சகம் மித்தையாதல் வேண்டும் சர்வாகமப் பிரமாணங்களால் சித்தித்திருக்கிற சகத்தானது எவ்வாறு சிவனிடத்தில் பிராந்தியினாலுண்டாகும் என்று சிவன் கூறியவசனம் வேதமா அன்று வேதமாயின் சித்தினிடத்து அசித்தாகிய சகந்தோன்றாது என்று கூறும் வேதவசனத்தோடு அது விரோத மாதல் பற்றிவினா நிகழுதலால் சூதகீதை வசனமென்பது விவர்த்த மாதலறிக. அன்றன்று சூதகீதை வேதாந்த மாதலாலும் பவுட்கரம் சித்தாந்தமாதலாலும் வேதாந்ததிலுஞ் சித்தாந்தம் குறைந்தபடியால் சூதகீதை கூறியபடியே வேதங் கூறுமன்றி பவுட்கரங்கூறியபடி வேதங்கூறாது எனில் அன்றேல் முகவுரை மூன்றில் வேதசாரமான காமிகாதிகள் அங்கீகரிக்கத்தக்கன என்றும் சிவஞான போதம் சர்வவேதாகமசாரமாயுள்ளது என்றும், முகவுரை இரண்டில் சிவஞானபோதம் எல்லா ஆகமங்களின் சாரம் என்றுங் கூறும் இச்சிவஞானபோத வேதத்துக்கு அதற்குமாறாகிய சூதகீதை முதலிய வற்றை எடுத்துக்காட்டுவதென்னை ஆதலாலும் இவையெல்லாம் தூஷணங்களே யன்றி வேறில்லை ஆதலாலும் விருத்தமான சகத்து சித்தினிடத்துண்டாகும் என்னுஞ் சூதகீதை பவுட்கரவசனத்தோடு விரோதப்படுதலாலும் விவர்த்த மாதலறிக, நாத்திர சத்திரூபாதானம் என்னும் சுலோகத்தின் கீழ்வரும் சிதோவிவர்த்தி என்று சிவன்கூறும் கூற்று கூடாதென்று தூஷிக்கும் இவ்விவர்த்தா சாரியார் கூற்று கூடுமாறு எவ்வாறு அன்றன்று கவுடபாதகாரிகையிலும் சங்கரபாடியத்திலும் கூறியபடி சிவன் பவுதிக சரீரமுடைய அநித்தியராதலாலும், அதனால் அந்த மாயா பிரதி விம்ப ஈசுரனாற் செய்யப்பட்ட ஆகமம் அப்பிரமாண முடைய படியினாலும் அபுருஷேயமாகிய வேதம் பிரமாண மானபடியினாலும் வேதவாக்கு கொள்ளுதலும் ஆகமவாக்கு தள்ளுத

னும் வேண்டுமெனில் அவ்வாறே சிவன் பௌதிக சரீர முடைய வர் அவரால்சொல்லப்பட்ட ஆகமம் அப்பிரமாணியமென்றால் அற்றேல் விரத்தியாரணியர் சங்கராசாரியரும் இந்த விவர்த்தாசாரியரும் பூதசரீரமுடையவர்களா அன்று உடையவர்களாயில் அவர்கள் வாக்கும் அப்பிரமாணியமா அன்று அற்றேல் ஆகமம் அப்பிரமாணியமாதல் எவ்வாறு அவ்வாறே இம்மூவர் வாக்கும் அப்பிரமாணிய மாதல் சரிதான். இனி வேதம் அபுருஷேயம் ஆதலால் அது பிரமாணமாமெனில் அற்றன்று வேதம் அபுருஷேயமாயில் அவ்வாறே அதனினின்று தோன்ற மற்ற நூல்களும் அபுருஷேயமா மென முடியும் அற்றேல் இதற்கு ஏது என்னே வேதம் அபுருஷேயம் என்பதற்கு 4 வேதம் பிரமாணமெனில் அற்றன்று சிவன் வேதகிருத் என்றும் வேதம் பிரமத்தின் மூச்சுக்காற்று என்றும் கூறும் வேதம் அதற்கு மாறாக கூறுமா ஆதலால் அபுருஷேயம் என்று வேதம் யாண்டுங் கூற வில்லை. கூறுமாயில் கூறும் வசனமிது என்று கூறுக. கூறாமையால் வேதம் அபுருஷேயம் என்பதற்கு வேதம் பிரமாணமல்ல ஆதலால் வேதம் சுயம் என்றும் அதனால் அதுவே பிரமாணம் மற்ற நூல்கள் புருஷேயம் அதனால் அவை பிரமாணமல்ல என்றும், கூறுதல்விவர்த்த மாதலறிக. இனி சிவன் அநித்திய விவர்த்தாச்சாரியர் நித்திய ரென்றால் சித்துரூபமாயிருக்கிற பிரமத்தினிடத்தில் பழுதையிற் பாம்பு போல அத்தியாசமாக சித்தின் பிராந்தமாக சகமுண்டாயிற்றென்று வேதாந்திகளாற் சொல்லப்பட்டதெனில் அவ்வாறானால் பழுதையிற் பாம்புமித்தையாதல்போல சர்வப்பிரமாணங்களாற் சித்தித்து சகத்து எவ்வாறு சித்தினிடத்தில் பிராந்தியால் தோன்றுமென்று கூறும் பவுட்கரவேதாந்த சாஸ்திரங்களைச் செய்த இராணிய கர்ப்பகணதைபதஞ்சலி முதலானவர்களெல்லாம் சர்வஞ்ஞரல்லாதபடியாலும் தாழ்ந்தவர்களாகையாலும் தங்களறிவுக்கெட்டாத ஆகமத்திற் சொன்ன வஸ்து நிச்சயம் அவர்களுக்குத் தெரியாதபடியாலும் அவர்கள் செய்த சாஸ்திரங்களில் வஸ்து நிச்சயமும் சாதனமும் பயனும் ஸ்பஷ்டமாயிருக்க மாட்டாது. இச்சைவசாஸ்திரம் பசு பாசங்கட் கெட்டாத சர்வார்த்த விஷய ஞானக்கிரியாசத்தியுள்ள பரமசிவனாற் செய்யப்பட்டபடியால் இதிற் சொன்ன சர்வ விஷயமும் மேலானவாயிருக்கும். ஆனால் விவேதாந்தாதி மதங்களில் அஸ்பஷ்டமாயிருப்பது எப்படியெனில் பரமான்மா ஒருவனே சேதன, சேதனசேதனரூபமாக காணப்பட்டிருக்கிறான் காணப்படும் ஸ்தாவர சங்கம ரூபபிரபஞ்சம் யாவும் அவ்வான்

மமே யன்றிவேறொரு வஸ்துவுங்கிடையாது என்று வேதாந்திகள் சொல்லுகின்றார்கள். இது யுக்தமன்ற. எவ்வாறெனில் இவ்வாறு சொல்வதை உபபத்தி, அநுபத்தி, ஆலோசனையின்றி ஒப்புக்கொள்ள லாமே. தவிர எது திருட்டாந்தங்களாலே இதை நிச்சயிக்க என்ன பிரமாணமிருக்கிறது. சத்தப்பிரமாணமாகிய வேதம் இருக்கிற தெனில் அதுவும் ஆன்மாவா வேறா, வேறானல் அசத்தியமானபடியால் பிரமாணமாகாது. ஆன்மாவேயானல் தானே பிரமேயமுமாக வேண்டி வரும். ஆனலென்னையெனில், எவ்விடத்தில் இந்தப்பிரமாணம் பிர மேயம் இரண்டும் இருக்குமோ, அவ்விடத்தில் பிரமாதா பிரமாதிரு என்னு மிரண்டும் அவசியமிருக்க வேண்டும். அவ்வாறு வரில் என்ன வெனில் சொன்ன அத்வைதவானிவரும். இல்லாவிடில் பிரமாணமே இல்லாமற்போம். மேலும் பலவிதமான பலங்கொடுக்க பிராணிகள் தோறும் தனித்தனி யேற்பட்ட புண்ணிய பாவகன்மமென்பது வேறாக இல்லாமற் போனபடியால் எல்லோருக்கும் போகம் சரி யாக இருக்கவேண்டும். காரணமாகிய பரமான்மா ஆகிறது மோட்ச மெனில் மறுபடி தோன்றுவதில் மோட்சமே இல்லாமற் போகும். மோட்சமில்லாமற்போனல் அதற்குச்சாதனமான சிரவணுதிகளும் வியர்த்தமாய்ப்போகவேண்டும். தவிரவும் சேதன சேதனப்பிரபஞ் சத்திற்குப் பரமாத்மாவை உபாதானகாரணமாகச்சொன்னல் காரி யம் காரணத்தின் சுபாவம் உள்ளதாயிருக்குமென்னும் நியாயத் தால் காரணமான பிரமமும் சேதன சேதன ரூபமாகவேண்டும். ஆனல் இருளும் வெளிச்சமும் போல சைதன்யமும் அசைதன்ய மும் ஓரிடத்தில் ஒரு காலத்தில் இருப்பது யுக்தமன்று. இன் னும் இவைபோல பல தோஷமுண்டாகிறபடியால் ஆன்மவைக் கியம் ஒருபோதும் ஒவ்வாது ஆதலால் வேதாந்தமதம் நிராகரிக் கப்பட்டது என்னுமிருகேந்திரம் பரமோக்ஷ நிராகரணப்பிரகரண வசனமும் "இபற்ற கவஸ்யம்பும் பிரகிரதியோ விவேகாத் வியோபா ஸர்வம் பிரமத்வா விராமகயாபாகா சின்முத்யகபானுசன்யா தாஸ்தாகா சர்வ பேதமயாந்தி சிருட்டபூ." என்பது வேதாந்திகள் பிரகிருதி புருஷ விவேகத்தால் முத்தியென்பதும், சர்வமும் பிரமமயம் என்றறிந் தொழிவது முத்தியென்பதும், பாசங்களாகிய மனமுதலானவைகளே பந்தமோக்ஷம் ஏதுவென்றறிவது முத்தி என்பதும், இவை முத லாகிய முத்திகள் யாவும் சிருட்டி யாரம்பத்தில் வேறுபடும். ஆதலால் இத்யாதி அஞ்ஞானம் "மூடானும் மதம் ஆச்சிரியத்திய நூர்த்தியகா

அபவர்க்கம் அபீப்சுந்திகத்யோதாத்பாப நவகார்த்திநக" என்பது இவை முதலாக அஞ்ஞான மூடர்களுடைய மதத்தை ஆசிரியித்து புத்தியில்லாதவர்கள் மோக்ஷத்தை யிச்சிப்பது, மின்மினிப்பூச்சி யிடத்தில் அக்கினியை விரும்புவதுபோலென்று மிருகேந்திரம் பர மோக்ஷ நிராசப்பிரகரணத்திலும் "பிரேணிதி ரூபஸி ஸாஸ்தாராணும் பசூன்ஸனுவர்த்தினே ன்சுவாசாத்திய உகாரகோ வேதான்கால தாமவ திஸ்திதான்'' என்பது வேதாந்த சாங்கிய அருகாதி பசுசாஸ்திரங்க ளைச்செய்யும் இரணிய கற்பகபில அருகாதிகளையும் அந்தச்சாஸ்தி ரானுட்டானம் செய்யும் பசுக்களையும் அவ்வச்சாஸ்திரத்திற் சொல் லிய பலத்தோடும் சாதனத்தோடும் கூடினவர்களாக காலாக்கினிருத் திர புவனபரியந்தம் இருப்பவர்களாகச்செய்கின்றாரென்று மிரு கேந்திரம் பதிஸ்சொருப பிரகரணத்திலும் "பஹிநோவபங்க மக்ஞன் நோர்விஸ்தரேண புருஷாகா பசுபாசரூபம்'' என்பது சர்வமும் ஆத்ம சொரூபமென்று பசுரூபமாக பரமாத்மாவை அறிபவர்களும் பாசங் களே கர்த்தாவென்று பரமான்மாவை பாசரூபமாக அறிபவர்களும் எவ்வளவுதூரம் அறிந்திருந்தபோதிலும் தாங்களும் கரையேறமாட் டார் அறியாதவர்களையும் கரையேற்றமாட்டார் என்று மிருகேந்திரம் பஞ்சகிருத்தியப் பிரகரணத்திலும் "ஏஷாம் சித்தர்மகாத்தேஃதார் சிதம்பியுபாசாயதேதேஷாம் தாமேனலிங்கேசைலம் கிம்நா றமீயதே'' என்பது வேதாந்திகள் சேதனமான பிரமத்திலிருந்தே அசேதனமான பிரபஞ்சம் உண்டாகிறதென்கின்றார் அவ்வாறு விருத்தகாரணத்தி லிருந்து விருத்தகாரியமுண்டாகில் சலத்திலிருந்து புகையுண்டான தென்று புகையைக்கொண்டு சலத்தை அனுமிக்கலாம். அவர் அவ் வாறு ஏன் அனுமிக்கவில்லை என்று மிருகேந்திரம் மாயாப் பிரகரணத் திலும் "பிராந்தோயம் சபிகல்பத் வாதுரச் சுவன்நேஷிய தாமிதிசர் வேஷாம்ரக்வாத கும்பஸ்ரணும் மாலாய வேக்ஷதேயத் நவம்ரச்சுகதா சித்து யதஸ்சர்ப்பாயதே நிர்ணும் மாலாயதேதத்தன்றியேழாம் நைவம் கும்பகடாதயம்'' என்பது ரச்சுசர்ப்பம்போல் இந்தப்பிரத்தியக்ஷ ஞானமானது பிராந்தியினுலுண்டாகின்றது சவிகல்பஞானமானபடி யால் என்று சொல்லப்படாது. எக்காரணத்தால் சர்வ சனங்கட்கும் எக்காலத்திலும் குடம்குடமாகத்தானே காணப்படுகின்றது. அது போல ரச்சுவானது ஒருகாலும் சர்ப்பமாகத்தோன்றவில்லை. எக் காரணத்தால் மனிதர்கட்கு அந்த ரச்சு ஒருகால் சர்ப்பம்போல் தோன்றுகின்றதோ அவ்வாறே இதராளுக்கு மாலைபோலத் தோன்று

கின்றது. அதுபோல் கடகலசாதிகள் மாறுபாடாகத் தோன்றுது என்றும் "கிஞ்சாகிரச்சுசாம் எனபிரார்ந்திர்த்ரோபத்ய தேசிதோர் கடாது ஞுபேணபிரதீ தௌகாசமானதாம்" என்பது அன்றியும் பாம்பிற்கும் பழுதைக்கும் தீர்க்கவர்ாதி சமானபாவ மிருக்கையால் இந்தத் திருட்டாந்தத்தில் பிரார்ந்தி ஞானமானது கூடும் சைதன்யத்திற்குக் கூடாது அது கடாதி ரூபத்தோடு தோன்றுகையால் என்ன சமாதானமிருக்கிறது என்றும் "கிஞ்சயேன பிரமாணேன பிரபஞ்சாபாவயுச் யதேதற்பிரமாணம் பிரம்மாணம் வானவேதி பரிகிம்பதாம் பிரமாணஞ் சேத்பிரபஞ் சோஸ்றிதத்தத் காந்தர்கதம் யதஃப்த்தியம் பிரமாணஞ் சுதாரம் பாவரூபம் சகத்பவேதா" என்பது அன்றியும் வேதப்பிரமாணத்தால் பிரபஞ்சத்தினுடைய அபாபம் சொல்லப்படுகிறதோ அது பிரமாணமோ, அப்பிரமாணமோ, என்று விசாரிக்கத் தக்கது. பிரமாணமாகில் பிரபஞ்சமானது இருக்கிறது எனில் அந்தப் பிரமாணமானது அந்தப்பிரபஞ்சத்திற்பட்டதே. அதனல் பிரபஞ்சம் இல்லையென்கிற ஞானம் பிரமாணமானுல் அதாவது அபாவமாகாமற் பாவமானுல் அதனுலே சகத்தும் அபாவமாகாமல் பாவமாதல் சித்திக்குமென்று பவுட்கரம் பாயாப்பட்டலம் 24,25,26-ல் "ததிகாஞ்ஞானமாதிரூஞ் சேதஞுனுபவ: சிமஞ்சதா அன்றியதாவிருத்தி பாசோவாகதிரன் யாவித்தியாதே ஞானபவோாசாஞ்ஞானம் தஸ்யாகிஞ்சித்காத்வத அன்யதாக் ஞானம் தஸ்யாபி அனுதயாத்சுவத:| சுக்திகராசத ஞானம் நப்வேத்படலம் விநா| கிஞ்விசத்தன் யதாஞானம் ஆகருதுகம் இதேதரத்| ஆக்ஞ்சுகசஞ் சிரகாலஸ்தி போதீபர்:| சிரகாவதமோ்ப: என்பது மலந்திரவியம் அனேக தர்மங்கள் உளதாகையால் இனி வேதாந்திகள் மலமானது அஞ்ஞான மாத்திரமே என்று சொல்லில் அந்த அஞ்ஞானமானது ஞான அபாபமோ விபரீதஞானமாத்திரமோ என்று இரண்டு விகற்பத்தைத் தவிர வேறுகதி இல்லாதபடியால் இரண்டிலொன்றுகும் இவ்வாகமத்தில் வேதாந்தமதத்தில் கூறப்பட்ட அஞ்ஞானமானது ஞானுபாவமன்று. ஏனெனில் ஞானபாவத்திற்கு ஒரு காரியஞ்செய்யும் சாமார்த்திய மில்லாதபடியால் எக்காரணத்தால் கடத்தின் அபாவம் சலத்தைக்கொண்டுவரமாட்டாதோ அதுபோலாம். ஆனதால் அஞ்ஞானமானது ஞானத்தினுடைய பிராகபாவம் என்று சொல்லில் ஞானேற் பத்திப்பிரசங்கம் வரும். இனி பிராந்தி ஞானம் எனில் அது சுத்திகாரசிதம் போல ஓரிடத்திற் சத்தியமும் ஓரிடத்தில் மித்தையுமாயிருக்கிற பூர்வானுபவத்தைத் தவிர

வாராது. இனி அந்தப்பிராந்தி ஞானமானது, நடுவேவந்ததாயில் அனாதியேயிருக்கிற பிரமத்தை மறைக்காது. இனி பிரமம் போல் பிராந்தியும் அனாதி எனில் பிராந்தி அனாதிப்பொருள் அன்று ஆதலால் அந்தப்பிராந்திஞானம் சத்திகாரசதஞானம்போல் அநித்தியமாதலால் அது நித்தியமான பிரமத்தை பாதிக்காது. ஆனதால் பிரமமானது பிராந்தி ஞானத்தால் பாதிக்கப்படமாட்டாது. ஏனெனில் சுத்தியில் இது சுத்தி என்கிற ஞானமானது சத்துஞானத்தைப் பாதிக்கமாட்டாதது போல். ஆனதால் பிராந்தி ஞானமானது அனாதியானாலும் அனாதியாயிருக்கிற பிரமத்தை மறைக்கமாட்டாது. எதுபோலென்றால் அனாதியாயிருக்கிற பிரகாசமானது அனாதியே இருளைப் போக்கடிப்பது போலாம். என்று பௌட்கரம் பசுப்படலத்திலும், "சைதன்யஸ்யேக நிருபஸ்யகதம் சன்மேதி சேன்மதி அத்யஸ் * * * பமிதயே வைதே நித்யாதேகிந்திரியாக: * வித்யதேவா வோநாவா வோவித்யதேசத:|| தஸ்மாதேகாத்மவா தோயம்" கல்பிதோ மூடசேதனை: என்பது, ஆகமத்தால் நித்தியமான ஆன்மாவிற்குப் பிறப்பு எவ்வாறுண்டாகும் என்னும் புத்தி உண்டாகுமெனில் இது ஸ்வல்பபுத்தியாம். எவ்வாறெனில்: தேகேந்திரியங்கள் அநித்திய மென்பதாவென்பது சத்திரூபமாககாரணத்தில் இல்லாத சகவிஷாணாதிகட்கு சன்னியமானது இல்லை. சத்திரூபமாக காரணத்திருக்கிற கடாதிகட்கு சனன அபாவமானதில்லை. கூறிப்போந்த நியாயங்களால் வேதாந்திகள் கூறும் ஏகான்மவாதம் மூடபுத்திகளால் கற்பிக்கப்பட்டதேயன்றி யதார்த்தமன்று என்று பவுட்கரம் பசுப்படலத்திலும் கூறுதலுந்தவிர விவர்த்தவாதம் ஏகான்மவாதம் நிமித்தோபாதானம் மாயை கற்பித்தமென்றல் அசித்தாகிய பிரபஞ்சமுண்டாதல் பிரமத்துக்குப் பிராந்தி ஆணவமில்லை அவித்தை ஞானபாவம் பிராந்திஞானம் கிலந்திபுவமைகள் கயிற்றரவு பழுதையிற்பாம்பு, வந்தியாபுத்திரன், கந்தர்ப்பநகரம், மாயாப்பிரதிபிம்பம் சிதாபாசம், சகதுபாதானம் பிரமதடத்தம், பிரமம் உருவுமருவுமாய்ப்பிறத்தல், அஞ்ஞானபிரமம், மாயை அநிர்வசனம், பிரமம் கற்பனையால்வேறு கர்த்தாவாதல் கடாகாயம், கடசல்சந்திரன், மூலப்பிரகிருதிவிந்து, ஆணவமாகியமாயை, அவித்தையாகியமலம், சிதாபாசம், பிரபஞ்சத்தைநோக்கிப்பந்தப்படுதல், மலபரிபாகமாவது அவித்தைநாசம். சத்திநிபாதமாவது அவித்தைகுறைதல் இருவினையொப்பாவது அசுவமேதப்பிரமகத்திகள் ஒத்தல். தீக்ஷையாவது நான் பிரமமென்றல், திரோதமாவது அநாதியவித்தை. மாயேயமாவது அத்தியாசம். ஆரோ

லதன்மை சேதனு சேதனவுலகம், சுகதுக்கம் அந்தக்கரணனுபவம், சோகம் பாவனையாவது பிரமம் நானென்றல், சீவன் முத்தனெல்லாஞ் செய்யலாம், அவனுக்கு ஆகாமியமில்லை. ஆகாமியமாவது கல்பிதமாயை, பிராரத்தமாவது அந்தக்கரண சுகதுக்கம், சஞ்சிதமாவது அநாதி அவித்தை, சீவன் முத்தனுக்குப் பிராரத்தமில்லை. அவன் சர்வசாக்ஷி, சிவோகம் பாவமாவது சகோகம் பாவம், பிம்பப்பிரதி பிம்பம் சாயுச்சியமாவது பிரமாத்துவிதம், அல்லது சிவாத்துவிதம், உலகம் மித்தை, என்றென்று இவ்வாறு மாயாவாதிகள் கூறும் கூற்றெல்லாம் பிராந்தியால் மூடர்கள் கூறும் கூற்றே யன்றி வேறில்லை. என்னும் பவுட்கர முதலிய சிவாகமங்கள் முழங்குமாறறிக. அது நிற்க. இனி ஒன்று கூறுதும். பிரமம் சித்தாயினும் சடமாகிய சகத்திற்கு உபாதானமாதல் கூடும். பிரமம் நிமித்தமாதலால் மண்போல் அதனின் வேறான உபாதானம் வேண்டும் என்பது வேண்டா அது உலகம்போலுவமிக்கப்படாததாதலால் இவ்வாறன்றி பிரமத்துக்கு வேறாக உபாதானம் வேண்டுமெனில் பிரமம் சர்வசத்தி உடையதென்பது கூடாதென்றால் அந்த நியாயம் பற்றி (45) ல் பிரமம் விவர்த்தோபாதானமாவதேயன்றி பரிணாமி உபாதானமாகாதென்பதுமிதுவாம். என்னை பிரமம் அவ்வாறே பரிணாமி உபாதனமாக மாட்டாதானால் அந்தப்பரிணாமி உபாதானமாகிற சத்தி இன்றாகி அது குன்றும் அன்றோ? ஆதலால் பிரமம் பரிணாமி உபாதானம் ஆகாதென்று கூறிய அனேகமாசாரியர் (45) ல் உபாதானம் மண்போல வேறு வேண்டாமோ பிரம்மானது சித்துருபம். அது சடத்திற்கு எவ்வாறு உபாதானமாகுமென்னும் இவை முதலிய பிரச்சின்னங்கட்கு சர்வசத்தியுடைய பிரமத்தினிடத்து சிறிதும் அவகாசமில்லை அவகாசமுண்டானால் அது சர்வசத்திமான் என்னுந் தன்மைக்கு இழுக்கு என்று கூறும் வாயிலாக சிவாகமத்தில் அவ்வாறுகூறவது முழுவதுந்தப்பு என்று தூஷணஞ் செய்தவாறும். என்னை சித்தில் அசித்து பழுதையிற் பாம்புபோல மித்தையாய்த் தோன்றுமென்று வேதாந்திகள் கூறுவரெனில் அவ்வாறேல் அச்சகம் மித்தையாதல் வேண்டும் காரியம் எவ்வாறே காரணமும் அவ்வாறும். என்னுநியாயம் பற்றி காரியம் மித்தையாகவே காரணமாகிய பிரமமும் மித்தையாதல் வேண்டும். ஆதலால் சர்வாகமப்பிரமாணங்களால் சித்தித்த சகத்து எவ்வாறு சத்தினிடத்து பிராந்தியால் தோன்றுமென்றும் இன்னு மிவ்வாறே வருஞ்சிவாகமப்பொருளை தூஷித்தமை காண்க. ஆதலால் வேதாந்திகள் சேதனமான பிரமத்தி

லிருந்தே அசேதனமான பிரபஞ்சமுண்டாகிறதென்கிறூர் அவ்வாறே விருத்த காரணத்திலிருந்து விருத்த காரியமுண்டாகில் சலத்திலிருந்து புகையுண்டானதென்று புகையைக்கொண்டு சலத்தை யனுமிக்கலாம். என்று பரமசிவம் பௌட்கரம், மிருகேந்திரம், சூக்குமம் முதலிய சிவாகமங்களில் 45 ல் கூறியது சிவம் சர்வ சத்தியுடையது. ஆதலால் இவ்வாறு கூறில் அச்சர்வ சத்தியுடையதென்னுந் தன்மைக்கு இழுக்கென்று அறியாது கூறியதுபோலும். இவ்வாறுகவும் இவ்வாசாரியர் பரமசிவம் சிவாகமத்துள் இவ்வாறு கூறுதல் இழுக்கென்று கூறுகின்றூர். ஆகமம் கூறிய பரமசிவமும் ஆகமஞ் சொல்லாத இவரும் ஆகிய இருவருள்ளே பெரியார் யார், ஆகமஞ் சொன்ன பரமசிவனுனவர் அவ்வாகமத்தில் "பிரமஞ்சித்து சகம் அசித்து" ஆதலால் விருத்த காரணத்திலிருந்து விருத்தகாரியமுண்டாதல் கூடாது என்று ஆக்ஷேபிப்பது சரியில்லை அது அவ்வாறுனுல் பிரமத்தின் சர்வசத்திக்கு இழுக்காகும் ஆதலால் பரமசிவம் வினவும் வினு சரியின்றென்று அனுகமாசாரியர் கண்டிக்கின்றூர். ஆகமாசாரியர் வாக்கு அனுகமாசாரியர் வாக்கு இரண்டினுள் மேல் கீழ் எதுவென்று பார்க்கில், இந்த அனுகமாசாரியாருடைய ஆசாரியர் சங்கராசாரியர், அவர் தமது பாடியத்தில் கரசரணுதிகள் எல்லாம் பௌதிகமாதலால் அநித்தியமாம், ஆகையால் மாயாப்பிரதி விம்பனுகி அநித்தமாகிய உருவுடைய சூலபாணியாற் செய்யப்பட்ட ஆகமம் அப்பிராமாணிய மென்கின்றூர். ஆதலால் ஆகமாசாரியர் வாக்கு கீழும் அனுகமாசாரியர் வாக்கு மேலுமெனில், அவ்வாறுனுல் அநித்தியமாகிய பௌதிக சரீரம் உடைய சிவன் அனித்தியன் என்று சொன்ன சங்கராசாரியர் உருவுடையரோ, அன்றோ, உருவுடையரெனில், உருவெல்லாம் பூதகாரியமாகி அநித்தியமென்று அவர் பாடியத்துள்கூறியபடியால் அவர்கூறியபடி அவரும் அநித்தியமாம். ஆகவே அவர் கூறிய அனுகமும் அப்பிரமாணியமாம். ஆகவே, அநித்தியம் அநித்தியத்திலும் அப்பிரமாணியம் அப்பிரமாணியத்திலும் மேலாதலெவ்வாறு. ஆதலால் அனுகமாசாரியர் கூறிய அனுகமத்திலும், ஆகமாசாரியர் கூறியா ஆகமம் தாழ்ந்ததென்பது கூடாது. இனிச்சமமெனக் கொள்ளுவமெனில் சமமென்பதற்குப் பிரமாணமில்லாமையால் அதுவுங்கூடாதாம். ஆகவே ஒன்றுக்கொன்று யாவும் ஒப்பும் இல்லாமை பெறப்படும். இனி முற்கூறியவாற்றுல் ஒன்றுக்கொன்று தாழ்வுகூறுதல் முடியாதாம். இனி, முன்பின்பான காலத்தால் ஏற்ற தாழ்ச்சி கொள்ளுதல் கூடும். ஆதலால் சிவன் முற்காலத்தவரும் சங்கரா

சாரியர் இவ்வாசாரியர் இருவரும் பிற்காலத்தவர்களு மானதால் பின்னிருந்துகூறினர் வாக்கிலும் முன்னிருந்துகூறினர் கூற்று ஏற்றமாதலால் அனுகமத்திலும் சிவாகமம் சிறந்ததாகலறிக. இது வரையுங் கூறுமாறுபற்றி பிரமம் பரிணாமமாகாது விவர்த்தமாகும் என்று தெருப்பாட்டுபாடி "நாத்திரசத்தி:" என்று அவர்காட்டிய வசனத்துக்கு கீழ்வருவதாக யாமேற்காட்டிய வசன முதலிய சிவாகமங்களைத் தூஷித்ததுந்தவிர சிவனையும் சிவாசாரியர்களையும் தூஷித்தல் யாதுமுய்ப்பலாகாத குற்றமாதல் கூறியவரறெனக்கொள்க. இன்னுமிது பற்றி இவர் சிவாகமந்தெரிந்தவர்போலவும் அதற்குரைசெய்வார்போலவும் காட்டி சிவாகமத்தை குட்டிச்சுவராக்கியது வெட்டவெளியாதலறிக. இன்னு மிவர்கூற்றெல்லாம் யாதும் பிரயோசன மில்லையென்பது ஒன்றுபற்றி கூறுதும். அது இது இனி பிரமம் விவர்த்தோபாதானம் ஆவதன்றி பரிணாமி உபாதானமாகாது என்று 45-ல் கூறினர் 9-ல் சுருதியாதிப் பிரமாணம் எனவும் 46-ல் இதில் பிரமாணமெனவும் பிரமாணங் கூறும். அனுகமாசாரியர் பரிணாமமாகாது என்பதற்குகூறிப் பிரமாணம் என்னை ஒன்றுங்காண்கிலம். ஆதலால் பிரமம் பரிணாமியுபாதானமாவதன்றி விவர்த்தோபாதானமாகாதென்ப தறிக. அவ்வாறே பரிணாமி ஆகும். விவர்த்தமாகாதென்பதற்கு அவர் கூறிய பிரமாண மென்னை ஒன்றுங் காண்கிலம். அதலால் அவர் கூறுவதெவ்வாறு அவ்வாறே யாமுங் கூறினமாதலால், ஆகவே பிரமம்பரிணாமி ஆகாது விபர்த்தமாகும் என்பதற்கு பிரமாணம் வேண்டாம் என்றும், விவர்த்தமாகாது என்பதற்கு பிரமாணம் வேண்டுமென்றுங் கூறுதல் விவர்த்தவாதமாதலறிக. அறியவே, பரிணாமி உபாதானமாகாது எனவே விவர்த்தோ உபாதானமாகாது என்பதற்கு பிரமாணம் வேண்டாம் என்பது பெறப்படும். ஆயினும் யாமொருபிரமாணங் கூறுதும். கூறுமாறு சங்காராசாரியர் மாயாவாதி எனவே, அவர் மாயாவாதியாவதுடன் அவர் சிஷ்யராகிய இவ்வுரையாசாரியரும் மாயாவாதியாதலெவ்வாறு, இவ்வுரையாசாரியர் ஆகமவெதிரேகியெனவே அவராசாரியரும் ஆகம வியதிரேகியே யாம். அதுவே பிரமாணமாம். இன்னும் பிரமாணம் ஒன்று கூறுதும். 67-ல் சங்காரகர்த்தா காரணமென்றமையால், அவன் நிமித்த காரணமாவதுடன் உபாதானகாரணமாவன் என்று இவ்வுரையாசாரியர் கூறும் அக்கூற்றே பிரமாணமாம். என்னை நிமித்த காரணமெனவே நிமித்த காரணமாவதுடன் உபாதான காரணமாதலெவ்வாறு அவ்வாறே பரிணாமியுபாதானமாகான் எனவே, விவர்த்தோபாதான

மாகான் என்பது பெறப்படுமாதலால் அது நிற்க. இனி 46-ல் அவன் சர்வசத்திமான் தனிது சத்தியினுல் மாயையினைக்கற்பித்து அதனின்று எல்லா உலகத்தையும் படைத்தான் என்பதே சர்வ சாஸ்திரங்களின் சம்மதமென்ற வாசாரியர்தாமே அச்சத்தியால் மாயையினைக் கற்பிக்க முடியாமை அது கற்பிக்குஞ் சத்தியுடைமைகளுக்கு இழுக்கென்ருர். அவ்வாறேல் கற்பிக்கமுடியாச் சக்திக்குக் கற்பிக்கமுடியாமை இழுக்கோ அன்றே, கற்பிக்கவல்ல சத்திக்கு கற்பிக்கமாட்டாமை இழுக்காதலெல்வாறு, அவ்வாறே கற்பிக்கமாட்டாத சத்திக்குக் கற்பிக்க வல்லமை இல்லாமை இழுக்காதலுமறிக. இதனுலே செய்யமுடியாமை இழுக்காதலாலும் சர்வசத்திமான் என்னுந் தன்மைக்கு இழுக்கென்பது விவர்த்த வாதமாய் முடிதலாலும் அவன் சர்வசத்திமானுதலிற் பிரச்சினத்திற்கு சிறிதும் அவகாசமில்லை. ஆதலால் உபாதானம்மண்போல் வேறுவேண்டாம். சித்தாகிய பிரமம் சடமாகிய சகத்திற்கு உபாதானமாகலாம், ஆதலால் சித்தாகிய பிரம்மசடமாகி உலகத்திற்கு உபாதானமாதல் கூடாதென்று பௌட்கரம், மிருகேந்திரம், அஞ்சுமான், முதலிய ஆகமங்களில் பரமசிவம் கூறிவைத்தது இழுக்கு என்று பரமாப்த வாக்கியமாகிய சிவாகமதூஷணஞ் செய்தது விவர்த்தமாதலறிக. இன்னுமவர் 46-ல் தனது சத்தியினுல் சடமானமாயையினைக் கற்பித்து அதனின்று எல்லாவுலகத்தையும் படைத்தானென்பது சர்வசாஸ்திரங்களின் சம்மதமாமென்பதுமேல் 45-ல் கற்பிதமான சடசத்தியேசகத்திற்கு உபாதானமென்பது கூடாது என்று தாங் கூறிய கூற்றிற்கு மாருகத்தாமே கூறுதலால் தமது சாத்திர சம்மதமுமில்லாமையால் சர்வசாஸ்திரங்களின் சம்மதமென்பது அஸர்வ அஸாஸ்திர அசம்மதமாய் சூனியமாய் முடியும். இவ்வாறே சடம் சித்திலிருந்து உண்டாகாது என்றும் ஆகம வசனத்தை தூஷணஞ் செய்து சகம் சடத்திலிருந்து உண்டாகும் மாயை கற்பிதம் அல்ல என்னும் பவுட்கர மிருகேந்திர வாக்கியங்கட்கு மாருக மாயை கற்பிதமென்றும் பிரமத்திற்குப் பிராந்தியில்லை என்னும் அவ்வாகமங்கட்கு மாருக பிரமத்துக்கு பிராந்தி உண்டென்னும் ஆகம வசனங்கட்கு மாருக சிருட்டிக்குத் துணைக்காரணம் இன்று என்றும், வேறு உபாதானம் உண்டு என்னும் ஆகம வாக்கியங்கட்கும் மாருக வேறு உபாதானம் இல்லையென்றும் இன்னு மிவ்வாறு பரமசிவ வாக்கியங்களைத் தூஷணஞ் செய்த விவர்த்வாசாரியரை பொன்னம்பலப்பிள்ளையவர்கள் இவர் சிவஞானசுவாமியினும் ரொம்பவுந்

தெரிந்தவரென்றது சரிதான், அவர் பௌட்கர மிருகேந்திரம் முதலிய சிவாகமங்களில் பரமசிவர் கூறிய வாக்கியங்களை இவ்வாசாரியர் கண்டித்திருப்பது தெரிந்திருக்கமாட்டார், தெரிந்திருப்பாராயில் பரமசிவனினும் எத்தனையோ மடங்கு பெரியவரென்று எழுதாது விடவேமாட்டார். இவர். உட்பகையாயிருந்து புறத்திலே சிவாகமபூஷணஞ் செய்வார்போல் காட்டி, வெளிப்படாமல் மறைத்து தூஷணம் பண்ணினது பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் தெரிந்திருப்பாராயினால் இவ்வாறு பரமசிவ் வாக்கியங்களாகிய சிவாகமங்களை தூஷித்த இவர் பரமசிவனினும் பெரியவர் என்றும், இவர் வாக்கு சிவாகமத்திலும் மேலானது என்றும், நான் நிச்சயமாகக்கூறுவேன் என்று மறைக்காமல் வெளிப்படையாக எழுதுவார். எழுதினால் அவர் முகவுரையில் இச்சிவாகமதூஷணியை சிவாகமபூஷணியிலும் பெரியரென்று கூறக்கேட்டபாவத்திலும் இச்சிவாகமதூஷணி சிவாகமஞ்செய்த சிவனிலும் பெரியவர் என்றும், அவர் சிவாகமதூஷணவாக்கு சிவாகமவாக்கிலும் மேலானது என்றுகூறும், சிவநிந்தை, சிவாகமநிந்தை, கேட்டல் பெருங்கொடும் பாதகமாம். ஆதலாலிவர் தூஷணஞ்செய்ததறியாமையாம். முன்செய்த தவமேயாம். அதுநிற்க, இனி இவ்வாறு ஆக்ஷேபிக்கக்கூடாது என்பதற்கு அவர்பிரமாணங்கூறுகின்றார். சித்துரூபன்சிவன் சராசரமான சகத்துமுழுவதும்சடமாம். அவ்வாறாகவே விருத்தமான அந்தச்சகத்து எவ்வாறுவிருத்தமான சிவனாகும் என்னும் இத்தன்மையது முதலிய வினாவின் சம்பவம் இங்கில்லை, எங்குவேதவிரோதம் உளதோ அங்கு வினாவின் சம்பவமாம், என்று சூதகீதையில் சூதர் கூறினரென்றும், அதற்குகீது பிரமாணமென்றுங்கூறுகின்றார். மிருகேந்திரம் மாயாப்பிரகரணம் 8-ல் வேதாந்திகள்சேதனமான பிரமத்திலிருந்து அசேதனமானபிரபஞ்சம் உண்டாகிறதென்கின்றார். அவ்வாறுவிருத்தகாரணத்திலிருந்து விருத்தாகாரியம் உண்டாகில், விருத்தகாரணமாகிய சலத்திலிருந்து விருத்தகாரியமாகய புகைபுண்டாகலாம். ஆதலால் எங்கு புகையுண்டு அங்கேசலமுண்டு, எங்குசலமில்லை அங்குபுகையில்லை, என்றுபுகையாகிய விருத்தகாரியவேதுவால் சலமாகிய விருத்தகாரணத்தை அவ்வேதாந்திகள் ஏன் அனுமிக்கக்கூடாதென்கின்றார். அனுமிக்கலாமாதலால் புகையாகிய விருத்தகாரியமானது சலமாகியவிருத்தகாரணத்துண்டாகாமை எவவாறு அவ்வாறே விருத்தகாரியமாகிய அசேதனசகம் விருத்தகாரணமாகிய சேதனப்பிரமத்தில் உண்டாகாது. ஆதலால் பிரமம் உபாதானமாமென்பது தெவ்வாறு என்று இதே

ஆக்ஷேபணையைப் பரமசிவம் ஆக்ஷேபித்திலிக்கின்றார். சூதர் அவ்வாறு ஆக்ஷேபிக்கப்பட்டாதென்று கூறுகின்றாரென்று இவர்கூறுகூறுகின்றார் பரமசிவன் அவ்வாறு ஆக்ஷேபிக்கலாமென்று கூறுகின்றார் என்று யாம் கூறுகின்றாம். பரமசிவன் சூதர்யாம் இவ்வாசாரியர் என்னும் இருபிரிவிலுள்ள 4 பேர்களில் பரமசிவன் சூதர், என்னும் இருவரிலும், யாம் இவ்வாசாரியர் என்னுமிருவரிலும், உயர்வுதாழ்வுடையவர்யார் என்று விசாரித்து நிச்சயிக்கவோண்டும். அதுமேல் நிச்சயித்துவிட்டபடியாலும், பரமசிவபரத்துவத்தைப்பற்றி சூதர்கூறுதலாலும், பரமசிவ வாக்கே உயர்ந்தது. சூதர்வாக்குதாழ்ந்தது என்பது பெறப்படும். படவேசூதர்கூறினரென்று கூறுமிவர் வாக்கும், பரமசிவம் கூறினரென்று கூறும் எமதுவாக்கும், அவ்வாறேகொள்ளப்படும். அதுநிற்க. பதினெண்புராணங்களும் 18 உபபுராணங்களும் அவ்வாறே ஸ்மிருதி 36-ம் 66 கலைக்ஞானங்களும், நியாயம், மீமாஞ்சைகளும், இவற்றிற்கு மூலமாகிய வேதஉபவேதங்களும், இன்னுமிவைபோலும் ஏனை நூல்களும், பரமசிவபரத்துவமே கூறுவனவென்பதும், அந்நூல்களை உள்ளவாறுதெரிந்து தெரிந்தவாறே போதித்த அரத்தாசாரியர் அப்பையதீக்ஷதர்முதலிய முன்னோர்களின்கொள்கை. அவ்வாறாகவே மேல் கூறும் இந்தச்சர்வஸாஸ்திரங்களையும் ஐயந்திரிபின்றிக்கேட்டு, தெரிந்து தெரிந்தவாறே பரமசிவபரத்துவம் போதிக்கும் ஆசிரியர் சூதனார் அந்தப்பரம்பொருளாகிய பரமசிவன் சிவாகமத்தில் விருத்தகாரணமாகிய பிரமத்திலிருந்து விருத்தகாரியமாகியசகம் தோன்றுமென்பது அஞ்ஞான மூட வேதாந்திகள் கூறும் கூற்று என்று கூறுவது நன்றாய் தெரிந்திருந்தும், அதேவாக்கியத்துக்கு மாறாக விருத்தகாரணமாகிய பிரமத்திலிருந்து விருத்தாரியமாகிய பிரபஞ்சந்தோன்றுமென்று ஆசிரிய சூதனார் கூறுவர் என்று இவ்வாசாரியர் கூறில் இதற்கு யாம் கூறுவதென்னை, இனி இவ்வாறே சில ஆகமவசனங்கட்கு மாறாக இவ்விஷயங்களைப் பிரமகீதையுள் பிரமர் கூறி அவை நிச்சயமென்பதற்கு நெருப்பில் பழுக்கக்காய்ச்சின இரும்பைக் கையிலேந்துவேன் என்றும் யாம் கூறுவது பொய்யானால் எமது தலை வெடிக்குமென்றுங் கூறினரென்றும், அப்போது பரமசிவன் தோன்றி அது வாஸ்தவந்தான் என்று கூறினரென்றும், இவர் கூறினர். சங்கராசாரியார் கூறியபடி அநித்தியமாகிய பௌதிக வடிவுடைய பரமசிவத்தைக்காட்டிலும் நித்தியமாகிய பிரமநிட்டர்களுக்கு மேலானவர் அவ்வாறே அவரிற்கீழான பரமசிவம் வந்து தன்னில மேலான பிரமநிஷ்

டார்களுடைய சந்தேகத்தை நீக்கினதென்று கூறுஞ் சங்கராசாரியார் விருத்த காரணத்திலிருந்து விருத்தகாரியந் தோன்றுமென்பதை ஒப்புக்கொள்ளுவர். அல்லவா, என்னை, அநித்தியசிவன் நித்தியப் பிரமங்களின் சந்தேகத்தை தீர்ப்பாரென்பதையும் ஒப்புக்கொண்டபடியால். ஆதலால் இந்த நியமங்கொண்டு நித்தியரை அநித்திய ரென்றும், அநித்தியரை நித்தியரென்றும், ஒப்புக்கொள்ளுவரென்பது நிராட்சேபனை. ஆதலால் சங்கராசாரியார் அநித்யரென்ற பரமசிவன் நித்தியராதலும் நித்தியப் பிரமமென்ற தாங்கள் அநித்தியப் பிரமமாதலும், பரமசிவம் வெளிப்பட்டு சந்தேகந்தீர்தாரென்பது வெளிப்பட்டு தீராமையும், ஒழுகக்காய்ச்சிய இரும்பைக்கையில் பிடித்துக்கூறுவேன் என்று கூறியது அவ்வாறு கூறுமையுமாம். இன்னுமவர் கூறு மிவை போல்வனவும் அவ்வாறே கூறுமை பெறப்படும். படவே, விருத்த காரணமாகிய பிரமத்திலிருந்து விருத்த காரியமாகிய சகம் தோன்றுமென்பது கூடாது என்று பரமசிவனவர் மிருகேந்திரம், பௌவுட்கர் முதலிய ஆகமங்களில் கூறியிருப்பதை இச்சூத முனிவர் பார்த்திருந்தும் அதற்கு மாறுக விருத்தகாரணமாகிய பிரமத்திலிருந்து விருத்தகாரியமாகிய சகம் தோன்றுமென்று சூதகீதையில் கூறியிருக்கின்றுரென்பதும், அவ்வாறு கூறவில்லை என்பது சங்கராசாரியர் வாக்குப்பற்றி பெற்றும். அற்றேல், நீர் இதுகாறுங் கூறுமாறு பற்றி பரமசிவன் கூறியிருப்பதை சிவாகமங்களில் பார்த்திருந்தும் சூதர் அதற்கு மாறுகக் கூறமாட்டாரென்பது சரிதான், ஆனாலவ்வாறு மாறுகக் கூறும் கூற்றுக்கு கதி யென்னையோவெனில் அது கூறிய அவரே அதற்குக் கருதியும் கூறற்குரியராம். யாம் அதற்கு உரியமல்லமெனில் அஃதன்று. நீர் அவர் கூறும் கூற்று விபரீதம் என்று கூறுதலாகாது. விபரீதங்கூறுவோர் கூறுங் கதியும் விபரீதமாய் முடியுமாதலானும் நீரே அதற்கு கதி கூறுகவெனில் இவ்வாறு வற்புறுத்திக் கதி கூறுக என்று கூறுதலால் கூறுதும். தேவதத்தன், எச்சத்தன், தருமதத்தன், இவர் மூவருங் கூறுங் கூற்றில், தருமதத்தன், எச்சத்தன், இருவர் கூற்றுப்பொய்யல்ல; மெய்யெனவே, சேஷிதத தேவதத்தன் கூற்றுபொய் யென்பது . பாரிசேஷத்தால் பெறப்படுதல்போல் பரமசிவன், சூதர், சங்கராசாரியர், மூவரில் பரமசிவம், சூதர், இருவரும் ஒருவருக்கொருவர் விரோதமிலரெனவே பாரிசேஷப் பிரமாணத்தால் சங்கராசாரியரே அவ்வாறு விரோதியாகி மாறுகக்கூறினரென்பது சர்வ சம்பிரதிபன்னமாம். அது மாயாப் பிரதிபிம்ப சூலபாணியாற் செய்யப்பட்ட

சிவாகமம் அப்பிரமாணியம் என்று சங்கராசாரியர் கூறுதலாலும், சூத கீதை, பிரமகீதைகளில், சூதரும் பிரமரும் ஆகமங்களுக்கு விரோத மாகக் கூறுதிருக்கவும் . அவைகளில் ஆகமங்களுக்கு விரோதமாகக் கூறுதலாலும் அவ்வசனங்கள் கற்பிதப் பயிற்சியுடைய சங்கராசாரியர் கற்பித்த கற்பிதவசனங்களே அன்றி, சூதர் பிரமர்களின் வசனங்க ளல்ல என்பது அறிக. அது நிற்க. இனி 49-ல் வேதவிதியான தர்மத் தில் விஷ்ணுவின் சம்பவம் எவ்வாறு இல்லையோ, அவ்வாறே வேதவிதி யால் அறியத்தக்க சிவனிடத்தில் விஷ்ணுவின் சம்பவம் இல்லை, ஈசுரனது சொரூபத்திலும் சகத்தின் சிருட்டி முதலியவற்றிலும் அதீந்திரியமாம். மற்றவற்றிலும் நமக்கு நிச்சயமாக சுருதியே பிரமாணம். தேவதேவனது நிகழாதவெல்லாம் நிகழ்த்தும் சத்தியாகியமாயை உளது. அம்மாயையி ஞல் யாவும் நிகழும். இதில் சம்சயமில்லை. நிகழாதவெல்லாம் நிகழ்த்து மம்மாயையால் யாவும் அச்சிவனுக்கு பொருந்தும். நிகழாதவெல்லாம் நிகழ்த்தும். மாயை நிற்க, வேதப் பிராமணத்தால் செவ்வையாய் பெறப் பட்டதெல்லாம் நிச்சயமாய் கிரகிக்கத்தக்கது என்று இவ்வாறு கூறும் ஆகமவிரோத வசனங்களெல்லாம் முற்கூறுமாறு பற்றி சங்கராசாரியர் கற்பித்தவசனமாதலறிக. இவ்வாறே முன்னும்பின்னும் சிவாகம வாக்கி யங்களுக்கு மாருக சூதகீதை, பிரமகீதை, என்றென்று வருவன எல் லாம் சங்கராசாரியர் கற்பித்த வசனமாமென்பது யாமுற்கூறுமாறு பற்றி நிச்சயமாக அறிக. நிகழாததெல்லாம் என்றும் பெறப்பட்டதெல் லாம் கிரகிக்கத்தக்கது என்று வரும், இவைபோலும் ஏகவசன பகு வசன முடிவுகள் அறியாமையாகிய சாட்சி பற்றியும், அவை கற்பித வசனமாதலறிக. இனி 50-ல் சனதனம் சுத்தமும், சர்வப்பிரமாணங் களின் உத்தமோ உத்தமமுமான சுருதி ஆத்மாவுக்கு அத்வைத நிர் மலத் தன்மையினையும், நிர்விகாரத் தன்மையினையும், கூறுகின்றது. அதீந்திரியார்த்தங்களில் விசேஷ ஞானத்தில் நமக்கு நிச்சயமாகச் சுருதியே பிரமாணமாம். சுருதி ஒன்றினாலேயே அறியத்தக்கதான சூக்ஷுமார்த்தத்தில் அந்தத் தர்க்கமென்ன செய்யும், சுருதிப் பிரமாண அனுக்கிரகமுடையதாம். அந்தத் தருக்கம் ஒருகாலும் சுவதந்திரமா காது என்று கூறும் பிரமகீதையும், சங்கராசாரியர் கல்பிதமாதலறிக. இவ்வாறிச்சூதகீதை பிரமகீதைகளைக் காட்டினவர் சரணுசாரிய கீதையில் சிவவாக்கியத்தால் உருத்திர வாக்கியமும், அதனல் விண்டு வாக்கியமும், அதனல் பிரம வாக்கியமும், அதனல் தேவவாக்கியமும், அதனல் இருஷி வாக்கியமும், அதனல் மனித வாக்கியமும், மறுக்கப்

படும். ஆதலால் கீழ் கீழுள்ளன மென்மையும், மேல் மேலுள்ளன வன்மையுமாம். என்று கூறுதலால் ராமகீதை, ரிபுகீதை, சூரியகீதை, கண்ணகீதை, சூதகீதை, பிரமகீதை, குருகீதை, அட்டவக்கிரகீதை, முதலிய கீதைகளெல்லாம், சிவாகமங்களோடு மாறுபடுமாயில், அவை அப்பிரமாணியமாதலறிக. அது பற்றியே "வேதத்தை அக்கினியை பிள்ளையொடு விடற்குசிதமான கீதைச் சொன்னூல்களைக் கற்றிடல், மாதர்களைத் துக்கம் செய்தல், வேள்விக் கோதிற்றனுசிதமல்லார்களை யாகமுயற்றுவித்தல், தமையனிற்க சாதலிற்றம்பி வேள்வி செய்திடல், தானியந்தன்னைக்கருதிவிற்றல், இவை உபபர்தகமென்று பிராயச்சித்த நூல் கூறியவாறு. ஆதலால் விடற்குசிதமான கீதையைக் கேட்டல் உபபாதமாகாதலறிக. அது நிற்க. இனி முன்னே சத்தியுபரானந்தப்பிரகாசத்தினை முக்கியமாக தனது லக்ஷணமாக உடைய பிரமம் எனவே, அந்தப்பிர்மம் சகத்தாகக் காரியப் படும்பொழுது அசத்திய, அபரானந்த, அப்பிரகாசத்தை, அமுக்கியமான தமதிலக்கணமாக உடையதுபோலும். இனி சத்தியப் பரமானந்த பிரகாச முக்கிய லக்ஷணமென்பது. 171-ல் ஆனந்தமே முக்கிய லக்ஷணமென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. 48-ல் சிருட்டி முதலியன அதீந்திரியமென்பது 33-ல் அதீந்திரியமென்பதனோடு மாறுபட்டு மாயாவாதமாதலறிக. அது நிற்க. 52-ல் நித்தியமான ஒரே அத்வைதங் காரணமென்றார். எனவே, அது அநித்தியமான இரண்டானது வயகாரியத்துக்கு காரணமென்பதாயிற்று. ஆகவே, இது காரணம் நித்யம் ஏகமே வாத்வயம் என்பதன் தாற்பரியமல்லவாம். இனி உலகில் குலாலாதிகட்கும் மண் முதலியவைகளுக்கும் பேதங் காணப்படினும் சடமாகிய மண் முதலியவை குலாலாதிகளை அவாவுகின்றன என்றார். ஏகான்மவாத நூலினின்று தோன்றிய தத்துவப்பிரகாசம் அநேகான்மாவாதப் பொருளாகாது, அநேகான்மாவாத நூலினின்றும் தோன்றிய சிவத்துவப் பிரகாசிகை ஏகான்மவாதப் பொருளாகாது, இவ்வெடுத்துக் காட்டுபற்றி அசைதன்னிய காரியம் அசைன்னியமாதலெவ்வாறு, அவ்வாறே சைதன்னிய காரியம் சைதன்னியமே ஆதலால், அவை மண் முதலிய அசைதன்யமாகாவாம். ஆகவே. சைதன்யம் பிறிதோர் சைதன்யத்தை அவாவுதல். விவர்த்தமாதலறிக, இனி அசித்தை அபேக்ஷிக்கின் அசித்தாகமாட்டாமையால் சர்வசத்திமானென்பது இழுக்காதல் காண்க. இனி, அத்வைதமும் சுத்தமுமான சைதன்யம் காரணமென்றார். எனவே, துவைதமும் அசுத்தமான சைதன்யம்

காரியமாதல் பெறப்பட்டது. அதனால் பிறிதொரு சேதன நிமித்தத்தினை அவாவாதென்றார். சேதன காரியமான மகன் சேதன காரணமான பிறிதொரு நிமித்தத்தை அவாவுதலின் அது விவர்த்தமாதலறிக. இனி அசித்தை அபேக்ஷிக்கின் அசித்தாகமாட்டாமையால் சர்வசத்திமானென்பது இழுக்காதல் காண்க. இனி அத்வைதமும் சுத்தமுமான சைதன்யம் காரணமென்றார். எனவே, துவைதமும் அசுத்தமான சைதன்யம் காரியமாதல் பெறப்பட்டது. அதனால் பிறிதொரு சேதன நிமித்தத்தினை அவாவாதென்றார். சேதன காரியமான மகன் சேதன் காரணமான பிறிதொரு நிமித்தத்தை அவாவுதலின் அது விவர்த்தமாதலறிக. இனிச் சுயஞ்சேதனமாயும் இக்காரணம் குலாலனைப்போல் மண்ணிற்குச் சமமான அசித்துவடிவ காரணத்தினை அவாவாது என்றார். சேதனமாயு மிக்காரணம் என்புழி ஆயும் என்ற மாயும்மைப் பொருள் சேதனமாகாமையைக் குறிக்கும்போலும். அது நிற்க, இனி 46-ல் அவன் தனது சத்தியினால் சடமாகிய மாயையைக் கற்பித்து அதனின்று எல்லாவுலகத்தையும் படைத்தான் என்பது சர்வ சாஸ்திர சம்மதமென்றவர் தாமே, இங்கு அவன் சடவடிவ காரணத்தினை அபேக்ஷிக்கிறதில்லை என்று இவ்வொரு சாஸ்திரம் கூறுகின்றார். இந்த சாஸ்திரம் அந்த சர்வ சாஸ்திரத்துள் அடங்கினதாதலால் அது விவர்த்தமாதலறிக. இனி சேதனவடிவ வேறு நிமித்தத்தை அபேக்ஷியாதெனவே அசேதனவடிவ வேறு நிமித்தத்தை அபேக்ஷிக்குமென்பது பெறப்பட்டது. ஆதலால் அசித்து வடிவினதும் தமோமயமும் எவ்வாற்றானும் வித்துவான்களால் நிருபிக்கக் கூடாததுமான பிரமத்தின் சத்தி, கேவலம் தோற்றமாத்திரத்தாலிருக்கிறது. நிகழாததனை நிகழ்த்து மனந்தசதித்யோடு தாதாத்மியத்தினாலேயே கூடியதாய் சத்தும், சித்து வடிவால் காரணமும், சிருட்டிப்பதும், ரக்ஷிப்பதும், சங்கரிப்பதுமாம், இந்த ரூபத்துக்கு சத்தியத்துவம், யுத்தம், அசித்துரூபமான பழுதையில் பாம்பு, முதலியவற்றிற்கு நிச்சயமாகப் பொய்மை சம்மதிக்கப்பட்டது. ஆதலால் அக்காரணம் சாசுவதமான சத்தொன்றேயாமென்றார். அச்சத்தும் சித்தவடிவால் காரணமும், முத்தொழிலுமாமெனவே அச்சத்தும் அசித்துவடிவால் காரியமும் முத்தொழிலின்மையுமாதல் பெற்றாம். அதுநிற்க. இனி வித்துவான்களால் எவ்வாற்றானும் நிருபிக்கப் படாதெனவே அவ்வித்துவான்களால் சத்தியமென்று நிருபிக்கப்படுமென்றார். முற்கூறுமாறுபற்றி யாம் வித்துவானும், அவர் அவித்துவானும் என்பது, சர்வசம்பிரதிபன்னமாம். 'ஆகவே நிருபிக்கும்

சாமர்த்திய மெமக்குண்டென்பது கூறவேண்டாம், அதுமுன் யாம் நிரூபித்தவாறு பற்றியும் அறியலாமாதலால் வித்துவான்களால் எவ்வாற்றானும் நிரூபிக்கக்கூடாதென்பது விவர்த்தமாதலறிக. அது நிற்க, இனி அச்சத்திதோற்ற மாத்திரத்தாலிருக்கின்றது என்றார். இருப்பதாவது சத்து, அது குடமுதலியவற்றில் இருப்பதென்னும், சத்தை என்று அவர் கூறுமாறுபற்றியும் அறியப்படும். படவே, இருக்கிற பொருள் தோற்ற மாத்திரமாகாது. தோற்றமாவது இருக்கிறதாகாதாம். ஆகவே அது விவர்த்தமாதலறிக. அறிவே சித்துரூபத்திற் சத்தியம் ஒருபோது யுத்தமாம். ஆதலாலவர்கூற்று விவர்த்தமாதலறிக. இனி பிரமஞ் சத்தியோடு தாதாத்மியவென்பது அவர்தாமே பிரமஞ் சத்திக்கு வேறென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாம். இனி பழுதையிற் பாம்பு பொய்யென்பது நிச்சயமாதல் சம்மதிக்கப் பட்டதென்றார். முற்கூறுமாறுபற்றி அது சம்மதிக்கப்படாமையால் விவர்த்தமாதலறிக. இனி அக்காரணம் சாசுவதமான சத்தொன்றேயாம் என்றார். அவர் உலகம் கற்பிதமாயையினின்றும் தோன்றுமென்பது பற்றி அக்காரணம் அஸாஸ்வதமான கற்பிதமாயையுங்கூட இரண்டாதலால் விவர்த்தமாதலறிக. (54) இனி இவ்வெல்லாச் சகத்தும் முன்சத்தாகவே இருந்தது என்றார். மேல் அவர் கூறுமாறே அசத்து வடிவமாயையாக இருத்தலால் சத்தாகவே இருந்ததென்னும் ஏவகாரம் விவர்த்தமாதலறிக. இனிக் குடஞ், சுவர், புவனம், பூத முதலிய யாவும், பிரமத்தின் வேறாக இல்லை, அவை எப்போதும் சத்தாகிய பிரமமேயாம் என்றார். அவை அசத்தாகிய மாயை யாதல் முன்னே அவர் கூறுமாறு பற்றி பெறப்படுதலால் அது விவர்த்தமாதலறிக. இனி பிரமரூபம் பிரமஞ்சத்தின் வேறாகியதென்பது 117பக்கம் பிரமரூபம், குடம், சுவர், முதலிய பிரபஞ்சம், பிரமத்தின் வேறாக இல்லை என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி இவ்வெல்லாம் அஞ்ஞானமயமே என்றுபேசுதலும் பேச்சேயன்று, பிரமத்தின் வேறாக அஞ்ஞானமில்லாமையால், அஞ்ஞானமும் அதன் காரியமும், ஒன்றாகிய பிரமமே வேறில்லையென்பது என்று நிச்சயிக்கப்பட்ட மதியாமென்றார். பக்கம் 33ல் அஞ்ஞானத்தினுற்றன் காரியத்திலும் பேதம் அங்கீகரிக்கப்படுகிறது. என்று பக்கம் 36ல் துவைதவிஷய மானமதியின் பேதம், அஞ்ஞானமாம் சகத்து விலக்ஷணமான பிரமத்துக்கு மறுபடியும் இரண்டாவது இல்லை. வைசேஷிகாதி சாத்திரங்களிலும் மதிபேதமான அஞ்ஞானம் காணப்படுகின்றது என்புழி

அஞ்ஞானம் பிரமமல்லவென்பது (117) அஞ்ஞானம் பிரமமென்ப தோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி இவ்வெல்லாம் ஆத்ம சொரூபமென்றார். அது 36ல் இப்பிரமத்திற்கு சகத்து விலக்ஷணம் என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி பிரமமேயுளது என்னும் ஸ்திரபுத்தி எதுவோ அது எப்போதும் சித்தாந்தம். அவ் வாறே மற்றவை பூர்வபக்ஷமென்றார். இதுகாறுங் கூறுமாறு பற்றி சத் தாகிய காரணத்தினின்று தோன்றும் காரியமாகிய சகத்து சத்தாதல் பெறப்படாமையால் பிரமமேயுளது வேறில்லை யென்பதே ஸ்திரபுத்தி யும் சித்தாந்தமும் என்பது விவர்த்தமாதலறிக. ஆதலால் சகம பிர மத்தைவிட வேறில்லையென்பது சித்தாந்தமும் சகம பிரமத்துக்கு வேறாதல் பூர்வபக்ஷமுமென்பது விவர்த்தமாதலறிக. அதுநிற்க. இனி இதுவே பிரசித்தமான வேதார்த்தம், வேறில்லை, காய்ச்சியமழுவை யேந்துகின்றேன் சத்தியம், சம்சயமில்லை, விசுவாசத்தின் பொருட்டு சிவனைத்தொட்டு யான் முக்காலும் ஆணையிடுகின்றேன் என்று, பிர மாக்கூற அவரால் தொடப்பட்ட சிவன் சொல்லலாயினர். யாவும் யானே, நிரூபிக்குமிடத்தும் நிரூபிக்காதவிடத்தும் என்னைவிட வேறொ துவுமில்லை, இதுவே வேதத்தின் மேலான நிஷ்டையும் எனது அனுபூதி யுமாம். சம்சயமில்லை என்று கூறினரென்பது பிரமகீதையாம் என்றார். கௌடபாத காரிகையுள்ளும் சங்கரபாடியத்துள்ளும் சிவன் அநித்தி யன் அவன் வாக்கியமாகிய சிவாகமம் அப்பிரமாணமென்று கூறப்படு மச்சிவன், வாக்கியம் சந்தேகமற்றவரும் நித்தியருமாகிய பிரமங்களது சந்தேகத்தை நீக்கியதென்று கூறுவதெவ்வாறு, தவிரவும் அநித்திய ராகிய அச்சிவன் நித்தியர்களது சந்தேகந் தீர்த்தாரென்பது எவ்வா றாகும். ஆதலால் நித்தியராகிய சிவனை அநித்தியரென்று விவர்த்தமாய் கூறியதெவ்வாறு, அவ்வாறே அச்சின் சந்தேகமுடையரென்று கூறி யதை மறந்து சந்தேகம் தீர்க்கவந்தாரென்று கூறுவதும் விவர்த்த மென்று கூறுவதே யன்றி, யாம் வேறு பரிகாரம் யாது கூறுவாம். கவுடபாதகாரிகையுள் சிவன் அநித்தியரென்று படித்து வைத்த சங்கரா சாரியர் பிரகீதையுள் ஏகாத்மவாத நிச்சயத்துக்காக அந்த அநித்திய சிவன் சாக்ஷியென்று சாக்ஷி கற்பிதது எழுதுகின்றார். இதென்ன மூடத்தனம், அற்றேல் ஈசுரகீதை பிரமகீதை சூதகீதை முதலியவற் றில் சிவாகமத்தை மறுத்து ஏகாத்மவாதங் கூறும் வசனமெல்லாம் சங்கராசாரியர் கற்பனை வசனமானல் அந்தக் கற்பனையில்லாத கீதை கள் சிவாகமத்துக்கு மாறாய்க் கூறுதுபோலுமெனில் நன்றேகூறினாய்.

அதுவே என்னபிப்பிராயம். ஆதலால் அவ்வாறேல் கூறற்குசிதமல்லாக் கீதைச் சொன்னால் கேட்டல் உபபாதகமாவதென்னை யெனில், அவை அட்டவக்கிறகீதை, குருகீதை, விண்டுகீதை, முதலிய சிவாகம விருத்த கீதைகளேயாம். அன்றி சிவகீதை முதலிய கீதைகளல்ல வேதாந்தம் ஆகமமென்பன வேறு வேறு இருவகைப் படுதலெவ்வாறு அவ்வாறே கீதையும் இருவகைப்படுதலறிக. கூறற்குசிதமல்லாக் கீதை என்று மடைமையு முற்று நோக்குக. ஆதலால் சிவனைத் தொடுதல், சிவன் யாவும் யானே என்றல், முதலிய எல்லாம் விவர்த்தமாதலறிக. இனி நிரூபிக்குமிடத்தும், நிரூபிக்காவிடத்தும் என்னைவிட வேறெதுவுமில்லை என்புழி, நிரூபிக்காவிடத்தும் ஏகான்மாவே தவிர, அநேகான்மா இல்லையாம். ஆகவே, சங்கராசாரியர், இவ்வனுகமாசாரியர், சீனிவாசகசுமர்த்தர், கவுடபாதர், வித்தியாரண்ணியர், முதலான ஆசாரியர்கள் நிரூபிக்காத விடத்தும் ஏகான்மவாதமே. ஆகவும் ஏகான்மவாதத்தை ஒருவர் நிரூபிக்க வேண்டாம் என்று கூறுவதைக் கேளாமல் வெகு பிரயாசைப்பட்டு ஏன் நிரூபித்தார்கள். ஆதலால் அவர் நிரூபித்ததும் நிரூபியாமையேயாம், தண்டுலஸ்ய யதாசாம்ய தாதாமிரஸ்ய காளிமாவஸ்ய தண்டுலஸ் வேவமலம் சகஸம் அபியலம் என்று கூறும் சாபாளயுபநிடத வேதாந்தவசனமறியாமல் சிவாகமத்தை மறுத்தல் விவர்த்தமாதலறிக. இது நிற்க, இனி 56 சித்துரூபி பராநந்தை சம்சார நாசை தேவி சிவா பின்னை சிவத்தைச் செய்பவன் என்றார். முன் என்னை விட வேறெதுவுமில்லை என்று கூறி, இங்கு இவை தன்னைவிட வேறு என்று கூறுங் கூற்று விவர்த்தமாதலறிக. இனி பிரமத்தோடு சிற்சத்தியும் அச்சிற்சத்திபுங் கூட்டி முப்பிரமங் கூறியவாறு காண்க. யாம் அநேகான்மாவாதங் கூறுதல் போல் அனேகப் பிரமம் கூறுமவர்க்கு முப்பிரமும் இருபிரமும் கூறுதல் குற்றமல்ல, எமக்கு ஏகான்ம வாதங் குற்றமாதல்போல, அவர்க்கு அனேகான்ம வாதங் குற்றமாம். இனி நமக்கு அநேகப்பிரமவாதம் குற்றமாதல் போல, அவர்க்கு ஏகப் பிரமவாதங் குற்றமாம். ஆதலால் நமக்கு ஏகான்மாவாதமும் அநேகப்பிரமவாதமும் பகையாதலெவ்வாறு, அவ்வாறே, அவருக்கு அநேகான்மவாதமும், ஏகப்பிரமவாதமும், பகையாதலறிக. அது நிற்க, இனிச் சகத் காரணமானப் பிரமமொன்று, சாக்ஷாத் உபாதியால் சர்வஞ்ஞத்தன்மையடைந்த பிரமம் ஒன்று, சாக்ஷாத் உபாதியால் சிருட்டித்தற்கு யோசிக்கும் பிரமமொன்று, இம்மூன்று பிரமங்களுக்கும், இந்த ஒரு சிவன்தானே சத்தி,

அந்த பிரமங்கள் இச்சத்தியின்றி பயன்படமாட்டா என்றூர். அது நிற்க. இனி சாக்ஷாத் உபாதியால் சர்வஞ்ஞத் தன்மையடைந்த பிரமத்தின் சர்வஞ்ஞமும் 4-ல் முண்டகவசனத்தில் வரும் சர்வஞ்ஞர் என்றும் சர்வஞ்ஞப்பிரமும் ஒன்று, அன்று, அவை சாமான்னிய வடிவப் பிரமும் விசேஷவடிவப்பிரமம்மாகும் போலும். இனி பிரம மூன்றுதல்போல சர்வஞ்ஞமும் இரண்டாகும் போலும். இனி சிவா பின்னே என்பது 46-ல் மாயை சிவாபின்னே என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி மாயை சத்து என்பது 46, 53 முதலிய இடங்களில் மாயை அசத்து என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி யிச்சூதசங்கிதையும் விவர்த்தோபாதானங் கூறுமை யறிக. இனி 57 அவ்வியத்தமாகிய காரணம் எதுவோ அது ஆத்மாவினல் செவ்வையாய் அதிட்டிக்கப்பட்டதாகி மகதாதி விசேஷ அந்தத்தினை சிருட்டிக்கின்றதென்பதும் சம்மதம் என்னும் சிவபுராணம் விவர்த்தோபாதானங் கூறுமையறிக. இனி 6-ல் சங்கராகர்த்தா காரணமாவனென்றமையால் அவன் நிமித்த காரணமாவதுடன் உபாதான காரணமுமாவன் என்பதுபோல் அவ்வியத்தம் காரணமென்றமையால் அது உபாதான காரணமாவதுடன் நிமித்த காரணமுமாகி விவர்த்தமாதலறிக. இனி 58 சர்வஞ்ஞனுகிய மகேசுவரனே சகத்துக்குக் கர்த்தா. பிரகிருதியின் பரிணமமும் புருஷனது பிரவிருத்தியும் அவனணையினுலேயே பிரவிருத்திக்கின்றது என்றூர். . என்புழி என்பதும் விவர்த்தோபாதானங் கூறுமையறிக. இனி இங்குவருஞ் சர்வஞ்ஞம் 56-ல் சாக்ஷாத் உபாதியினல் சர்வஞ்ஞத்தன்மை என்னும் சர்வஞ்ஞமாகாமையும் இங்குவரும் பிரகிருதி பரிணமம் 45-ல் வரும் பிரகிருதி அஞ்ஞானமாகிய பிரமம் பரிணமி ஆகாமையும் அறிக. இனி, சத்தியோடுகூடிய சிவனொருவனே ஐந்தொழிலும் செய்கின்றுன். வெகு வார்த்தையினல் என்னபயன் சாரங்கூறுகின்றேன். சாரமாவது சத்திமானன் சிவனே இவ்வெல்லாமென்பதே துணியப்பட்டது என்னுஞ் சிவபுராணம் விவர்த்தோபாதானங் கூறுமையறிக. அன்றன்று "சிவயேவேத மகிலம் சத்திமான் இதி நிச்சிதம்" என்பது விவர்த்தப் பொருளெனில், அதையும் கொஞ்சம் விசாரித்து பார்ப்போம், இவ்வெல்லாம் சிவனே என்னும் வசனம், விவர்த்தோபாதானங் கூறுகின்றதென்றல் அங்கு விவர்த்தசத்தம் காணப்படவேண்டும். அன்றன்று இச்சகத்தெல்லாம் இவனென்பது இக்குடமெல்லாம் மண்ணென்பது போலுமெனில் அற்றேல். இச்சிவாகமெல்லாம் வேதாந்த

மெனில்,வேதாந்தம் சிவாகமத்துக்கு உபாதானமாய்முடியும், முடியவே இக்குடமெல்லா மண்ணென்புழி மண் பரிணமித்துக் குடமாதல்போல பிரமம் பரிணமித்து உலகமாமென்பது பெறப்படும்படுமாயின் அது பிரமம் பரிணமி ஆகாது என்னு மிவ்வாசாரியர் சுருதியோடு மாறு பட்டு விவர்த்தமாய் முடிதலால், விவர்த்த வேதாந்தம் சிவாகமமாகமை எவ்வாறே அவ்வாறே பிரமம் சகத்தாகாமையறிக. அது நிற்க. இதி என்பதற்கு என்பதே என்று ஏவகாரம் விரித்துக் கூறினர். ஏவ காரம் விரித்தாதல் விவர்த்தம் சாதிக்கலாம் என்றுபோலும். இனி 59 அவனே பாசம்,அவனே கட்டுண்டவனே, கட்டுமதி பதியுமவனே பசுக்க ளாகின்றான் என்னும் ஈசுரகீதை 56-ல் சகற்காரணப் பிரமம், சாக்ஷாத் உபாதியால் சர்வஞ்ஞமடைந்த பிரமம், சாக்ஷாத் உபாதியால் சிருட்டிக்க யேசிக்கும் பிரமம், அஞ்ஞானப் பிரமமென்னும் பிரமம் நான்குமாகும் போலும், இதுவும் விவர்த்தங் கூறுமையறிக. அது நிற்க, இனி 59, கானல், இப்பி, தாணு, படிகம், முதலியவற்றுள், நீர், வெள்ளி, புருஷன், ரேகை, முதலியனபோல,பிரமத்தில் செம்மை,வெண்மை,கருமை,குண மும் குணசாமியமும் அனிர்வாச்சியமுமான மூலப்பிரகிருதி இருந் தது என்றார். இங்கு பிரமத்தில் மூலப்பிரகிருதி முன்னேயிருந்த தென்பது, பக்கம் 47-ல் சடமானமாயையினைக் கற்பித்து என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி, இதன்மேல் மாயை அனாதி கல்பிதம் நாமுடையதென்றும், ஆதி நாசமின்றிய தென்றும், பலவித மாய் சுருதியாதிகள் கூறுமென்றார். ஆதிப்பொருள் நாசமில்லதென் றால், ஆதியான சகத்து நாசமில்லாமல் இருக்கவேண்டும். இனி அனாதிப்பொருள் நாசமடைதல் வேண்டும். ஆனதால் ஆதியான சகத்து நாசமாகாதென்றும், அனாதியான பிரமம் நாசமாகுமென்றும் கூறும் சுருதியாதிகள் மாயாவாதமேயாம். இனி பிரமமொன்றே சத் தியம் பிரமத்தின் வேறான எல்லாம் மித்தியமென்று போதிக்கும் வேதம் மித்தையென்றும், அவ்வேதங் கூறும்பொருள் அம்மித்தை யென்றும், கூறுகின்ற வாதமு மாயாவாதமாம். அது நிற்க, இனி இங் குக்கூறும் மூலப்பகுதி ஒன்று, மேற்கூறும் சிற்சத்தியொன்று, அதன் மேற்கூறும் அசிற்சத்தியொன்று, இப்பிரமமொன்று ஆக நாற்பொருள் கள் கூறுதலால் தமது ஏகான்ம வாதத்துக்குத் தாமே நாசந்தேடினர்: இதுபற்றியும் அவர் விவர்த்தவாதம் விவர்த்தமாதல் அறிக. இனி 60-ல் மாயையாவது அனாதி அந்தமுடையது. பிரமாண அப்பிரமாண சாதாரணமானது, சத்துமன்று, அசத்துமன்று, இவ்விரண்டுமன்று,

இவற்றின் வேறுமன்று, இயல்பாக அதிகயானது விகாரமில்லாதது, நிரூபிக்குமிடத்து இதர லக்ஷணமில்லாதது என்றார். அனாதி அந்தமென்பது விவர்த்தமாதல் முற்கூறினும். பிரமாணம் அப்பிரமாணம் என்னும் விருத்த தருமமிரண்டும் ஒரு தருமியிலிருத்தல் விருத்தமென்பது 180-ல் ஆசாரியர் தாமே மறுத்தார். இனி சத்து அசத்து சதசத்தல்லாதது சூனியமாம். ஆதலால் அது 86-ல் 1 மாயை சத்து என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி இயல்பாக அதிகமானது என்பதும், விகாரமின்றியதென்பதும், இதர லக்ஷணமில்லாததென்பதும், பிரம லக்ஷணமாய் முடிதலால் அது விவர்த்தமாதலறிக. இனி அங்கவனைப் பிரியாத மாயையும் மற்றவன் போலனாதியாகும் என்னும் கூர்ம புராணத்தோடு முற்கூறும் சர்வசாரமும், ஈசுர கீதையும், மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி சூதசங்கிதை, வாயுசங்கிதை, இலிங்கபுராணங்கள், விவர்த்தோபாதானங் கூறாமையறிக. இனி 61-ல் அச்சிவத்தின் கண் ஆயிர அம்சத்திலிருந்து பராசத்தி பிறந்தது என்பதுமவ்வாறும். இனி சிவனிடத்துச் சிவன் தோன்றி யொடுங்குமென்று மகாநாராயணம், அத்வயதாரகம், யோகசிகை, ருத்திர இருதயம், சரஸ்வதிரகசியம், மைத்திராயணிகளும், மாயையும் அதன் காரியமும் நசித்தால் ஈசுரத்துவம் இல்லையென்று வராகமும் கூறுமென்றார். இக்கூற்று விவர்த்தோபாதானமோ, அன்றி பரிணாமி உபாதானமோ என்பதுபற்றி கூறிற்றிலர். ஆனால் இவ்வாறு கூறியது எதற்கெனில் முன்னே 59-ல் மாயையைப் பற்றி ஆகமமொருவிதமாய்க் கூறுவது போல, சுருதியாதிகள் ஒருவிதமாய்க் கூறாமல் பல் விதமாய்க் கூறும், அதுபோல் சிவனைப் பற்றியும் சுருதியாதிகள் ஆகமங்கூறுமாறுபோல ஒருவிதமாய்க் கூறாமல் பலவிதமாய்க் கூறும் என்பது கூறுதற்காக இவ்வாறு கூறினார் போலும். ஆனாற் சிவன் தோன்றும் ஈசுரத்துவமில்லவே இல்லை. மாயை நசிக்குமெனவே சிவாகமம் சிவனிடத்து சிவன் தோன்றாது. மாயையும் அதன் காரியமும் நசிக்காது, ஈசுரத்துவம் நசிக்காது, என்று ஒருவிதமாய்க் கூறுமாதலாலும் அவ்வாகமத்தை மறுக்காத சுருதியாதிகள் அவற்றை மறுத்து பலவிதமாய்க் கூறுமென்று அவர் கூறுங் கூற்று அவர்தாம் ஆகமத்தை மறுத்து கூறுங் கூற்றை சுருதியாதிகளின் தலையில் வைக்கும் விவர்த்தக் கூற்றே தவிர வேறன்று என்று அறிக. அது நிற்க. இனி ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு விதமாய்க் கூறாமல் தம்முள் மாறாகப் பலவிதமாய்க் கூறல் கூடுமென்கிறார் தாமே 180-ல்

அவ்வாறு கூறுதல் கூடாதென்றல் விவர்த்தமல்லது வேறியாதென்ப தாம். அது நிற்க. இனி சுருதியாதிகள் மாயையைப்பற்றி ஒருவித மாய்க் கூறுமல் பலவிதமாய்க் கூறுமென்றமையால் மாயைப்பற்றி பல விதமாய்க் கூறப்படுவதுடன் ஒருவிதமாய்க் கூறப்படுமென்பது பெறப் படும். படவே மாயையைப்பற்றி பலவிதமாய்க் கூறுவது சுருதியாதி களும் ஒருவிதமாய்க் கூறுவது ஆகமுமென்பது பெற்ரும். இனி சுருதி யாதிகள் மாயை பற்றி பலவிதமாய்க் கூறுதல் கூறவேண்டா மென்ப தாம். ஆகவே ஒரு விஷயத்தைப்பற்றி ஒருவிதமாய்க் கூறுமல் பலவித மாய்க் கூறுதல் பிராந்திக்கூற்றேயன்றி வேறறியாதாமென்க. அற் றேல் சுருதியோ சுயம்பு, அந்த சுயம்பு பிராந்தமாமோவெனில்; பலவித மாய்க் கூறுதல் பிராந்தமோ, அப்பிராந்தமோ, 45-ல் பவுட்கரம் முத லிய ஆகமங்களை பிராந்த வாக்கியமென்று கூறினர். இங்கே சுருதி யைப் பிராந்த வாக்கியமென்று கூறுகின்ரூர், நித்யப் பிராந்தனுகிய சிவன் ஆக்குதலால் சிவாகமம் சாந்த வாக்கியம் ஆகும் என்ருர். அது போற் சுருதி பிராந்தவாக்கியமாதற்கு ஏதுவென்னே? சுருதியோ சுயம்பு, ஆதலால் அது பிராந்தமாகாது. ஆனதால் அச்சுருதிப் பொருளை பிராந்தி பற்றி இவர் தாமே ஒருவிதமாகக் கூறுமல் பலவிதமாய்க் கூறு கின்ரூரே தவிர, சுருதி ஒரு விதமாய்க் கூறுமல் பலவிதமாய் கூறுது. இனி, அது மாயைப்பற்றி பலவிதமாய்க் கூறுமெனில் அவ்வாறே எல்லாப் பொருள்களைப் பற்றியும் பல விதமாய்க் கூறுமென்பது பெறப்படும். படவே, ஒரு பொருளைப்பற்றி ஒருவிதமாய்க் கூறு மல் பலவிதமாய்க் கூறுதல் நிச்சயமாகாமல் பயனற்றதாம். ஆன தால் அவ்வாறு கூறுநூல் சுருதியாகாது. ஆதலால் சுருதிமாயைப் பற்றி ஒருவிதமாய்க்கூறுது. பலவிதமாய்க் கூறுமென்று கூற்று, இவர் கூற்றேயாதல் தெற்றெனவறிக. அறியவே, இவர் உரையாகிய தத்துவப் பிரகாசத்தில் தத்தைப்பற்றி ஒருவிதமாய் கூறுமல், பலவிதமாய்க் கூறு தலும், துவத்தைப்பற்றி ஒருவிதமாய்க் கூறுமல் பலவித்மாய்க் கூறு தலும் பெறப்பட்டன. படவே, அவர் அர்த்தம் விவர்த்தமாதலறிக. அது நிற்க. இதனுலே சிவனிடத்தில் சீவன்தோன்றி ஒடுங்குதலும், மாயை யும் அதன் காரியமும் நசித்தலும், அதனுல் ஈசுரத்தவம் நசித்தலும், சுருதியாதிகள் ஒருவிதமாய்க் கூறுமல் பலவிதமாய்க் கூறுங்கூற்று விவர்த்தமாதலறிக. பிரம சுயம்பு பிராந்திப்படுமானல் வேதப்பிர மனும் பிராந்தமாகும்போலும். 61ல் இனி, மாயாசத்தியானது முற் கூறி பிரமாணங்களால் இன்னகாலத்திற் கற்பிக்கப்பட்டதென்று அறி

யப்படாமையாலும், அனாதிஞானத்தால் கெடுதலாலும் நாசமுடையதென்றும், மகாப்பிரளயத்து ஒடுங்கித்தோன்றுதலால் ஆதியென்றும், மகாப்பிரளய பரியந்தம் அல்லது பிரமஞானம் உண்டாகும்வரையில் நிலைத்திருத்தலாலும், காலதத்துவத்திற்கும் காரணமாயிருத்தலாலும் நித்தியமென்னும், அவ்வாறே கீழ்ப்பட்ட தத்துவங்களை முன்னிட்டு வியாபகமென்றுங் கொள்ளுவர் பெரியோர். அவ்வாறே பாசமும் பாசத்தாற் சத்துவமும் இன்னகாலத்துண்டானதென்று நிச்சயிக்கக்கூடாமையால் அனாதியென்றும், முத்திபரியந்தம் நிலைத்திருத்தலால் நித்தியமென்றும், பாசநீங்கியபோது சிவத்துவமாகிய வியாபகத்துவம் வெளிப்படுங்காரணத்தால் சிவனை வியாபகமென்றும், அவ்வறிவு ஆணவமலத்தால் தகையகப்பட்டுள்ளபோது அணுவென்றும், அவ்வியாபகவறிவை மறைக்குமேதுவால் பாசத்தினை வியாபகமென்றுங் கொள்வர் அறிஞர். இவற்றிற்கெல்லாம் போதுமான பிரமாணங்கள் முற்காட்டப்பட்டது அன்றி, பின்னும் காட்டப்படும். இதற்குவேண்டிய யுத்திகள் பெருநூல்களில் மிகவிரிவாய்க் கூறப்பட்டிருத்தலாலும் புத்திக்கு மிகக் கடினமாகலாலும், சத்தினிபாதத்துத்தமரான பரம ஆஸ்திகர்களுக்கு ஆமப்பிரமாணமொன்றேயமையும் எனறு விடுக்கப்பட்டன என்றார். யுத்திகள் பெருநூல்களில் மிகவிரிவாய்க் கூறப்படுமெனவே, இது சிறுநூலாதலால் மிகச்சுருக்கமாய்க் கூறப்பட்டது, என்பது பெறப்பட்டது. இனிப் பெருநூல் என்பது மாயாவாத நூல்களும், சிறுநூலென்பது இந்நூல் முதலிய சிவாகமுமாதல் அவர் கருத்தென்பது முற்கூறினாம். இனி இவற்றிற்கெல்லாம் போதுமான பிரமாணவசனங்கள் முற்காட்டப்பட்டதென்னும் இலிங்கவேற்றுமை ஒற்றுமை அறிகிலம் அறிகிலம். அதுநிற்க. இனி முன்னுள்ள பாசமானது வியாபகமாதற்குக் காரணம் வியாபக அறிவை மறைத்தல் என்னுமிவ்வசனமுன்னெங்கும் கூறக்கண்டிலம். ஆதலால் அது அவ்வாறாமென்று அதற்குப் பிரமாணம் எங்குக்கூறினார். ஆனால் அவர் இல்லதையுள்ளதென்றும், உள்ளதை இல்லதென்றும் கூறும் வழக்கமுடையவர். ஆனதால் பாசம் வியாபகமாதற்குக் காரணம் வியாபக அறிவை மறைததல் என்பதற்கு பிரமாணங்கூறாமல் இதற்குமேல் அப்பிரமாணமே கூறியிருக்கின்றார். அது கூறும், பாசம் நீங்கியபோது சிவத்துவமாகிய வியாபகத்துவம் வெளிப்படுமெனவே பாசம் நீங்காமலிருக்கிறபோது வியாபகத்துவமில்லை என்பது பெறப்பட்டது. படவே சீவனிடத்து பாசமிருக்கிறபோது வியாபகவறிவு இல்லை. வியாபகவறிவு வந்தபோது பாச

மில்லையாதலால் பாசம் வியாபகமாதற்குக் காரணம் வியாபகவறிவை மறைத்தலென்பது, பாச நீங்கியபோது வியாபகத்துவம் வெளிப்படு மென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இன்னு மிவ்வாறே பிர மாணம் பிரமாணமென்று அவர் கூறுவனவெல்லாம் அப்பிரமாணமாத லிதுபற்றி யுறிக. இன்னுமொன்று கூறுதும். சிவனிடத்து சீவன் தோன்றியொடுங்குவதாக மகாநாராயணம் நாலாவது அத்தியாயத்துக் கூறுவதுந்தவிர அத்வயதாரகம் யோகசிகை ருத்திரவிருதயம் வரா கம் சரஸ்வதிரகஸ்யம் மைத்திராயணி என்னும், ஏழும் பிறவும் கூறு மென்று கூறினர். மகாநாராயணம் நாலாவது அத்தியாயத்தில் கூறுமாறு அவித்தியாகாரியங்கள் முதலில் உண்டாகின்றன. காரிய காரண உபாதிகள்பற்றி சீவேசுர பேதம் காணப்படுகின்றன. காரண உபாதி ஈசுரன், காரிய உபாதிசீவன், மகாவிஷ்ணு சிரீடாசரீரமுடையவர், அவ்விஷ்ணு ஒருவரே வணங்கற்குரிய கடவுள், அன்னியரதற்குரியவ ரல்லர், அவித்தியாகாரியங்களாகிய அந்தக் கரணங்களில் பிரதிபிம்பிக் கும் பிரமசைதன்னியம் சீவனென்று கூறப்படும் சர்வ சீவரும் அந்தக் கரண உபாதியென்று கூறுவார். இனி சர்வ சீவர்களும் மகாபூத சூக்ஷ மாங்கவுபாதியென்று சிலர் கூறுவர். புத்திப்பிரதிபிம்ப சைதன்னிய மென்று வேறு சிலர் கூறுவார். சர்வ பரிபூரண நாராயணன் சுவேச்சை யாற் கிரீடிக்கின்றான் என்று அதனுளிவ்வாறு கூறப்பட்டது. இதனுள் சிவசப்தங் கிடையவே கிடையாது. ஆதலால் சிவனிடத்து சீவன் தோன்றி யொடுங்குமென்ற மகாநாராயணம் நாலாமத்தியாயங் கூறு கின்றதென்று கூறுகின்றார். சிவனென்றேதோ சொப்பனங் கண்டு அவ் வாறு கூறுகின்றார்போலும். இவர் சிவசாத்திரத்தில் கூறும் சிவசத் தோச்சாரணப் பகைவராதலால், அது சொப்பன வுணர்ச்சியே யென் பது நிச்சயமாயுறிக. அன்றியும் சிவாகமங்கள் மாயாவாத நூலென்று சாதித்தாற்போல், மாயாவாத நூலைச் சிவாகமமென்று சொப்பனங் கண்டு, இவ்வாறு மாறிக்கூறினர்போலும். அது நிற்க. இனி அவர் பாசம் வியாபகமாதற்குக் காரணம், வியாபக அறிவை மறைத்தல் என் பது, பாசநீங்கியபின் அறிவுண்டாகும் என்பது விவர்த்தமாதலே எவ் வாறு. அவ்வாறே சுருதி சிவத்துவம் அனுதிமாயை, அந்தமாயை ஆதி மாயை அந்தம்மாயை யென்றென்று கூறுமவற்றிற்கு அவர் காரணங் காரணமென்று கூறுவனவெல்லாம் விவர்த்தமாதலறிக. இனி பாசம் நித்தியமென்பதற்கு அது முத்தி பரியந்தம் நிலைத்தலாதல் நித்திய மென்றும், மாயை நித்தியமென்பதற்கு அது மகாப்பிரளய பரியந்தம்

நிலேத்தலால் நித்தியமென்றும், வேறு வேறு காரணங் கூறினர். அம் முறை மாறிக் கூறுதலுமாகுமாதலால் அக்கூற்று விவர்த்தமாதலறிக. இனி இங்கு மாயைவேறு பாசம் வேறென்பது 147 ஆணவமாகிய மாயை என்று கூறுங் கூற்றோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இத ஞலே மாயையும் அதன் காரியமும் நசித்துப்போனல் ஈசுரத்துவம் இல்லை என்பது சூனிய வாதமாதலறிக. அது நிற்க. இனி இவற் றிற்கு வேண்டிய யுத்திகள் பெரு நூல்களில் மிகவிரிவாய்க் கூறப்படுத லாலும், புத்திக்கு மிகக் கடினமாதலாலும், ஆஸ்திகருக்கு ஆகமப் பிர மாணமொன்றே யமையும் என்று விடுக்கப்பட்டன வென்ருர். பெரு நூலில் இவற்றிற்கு வேண்டிய யுத்திகள் மிகவிரிவாய்க் கூறப்பட்டிருத் தலால் விடுவிக்கப்பட்டனவெனவே, இவற்றிற்கு வேண்டிய யுத்தி பிர மாண மிரண்டினுள் பிரமாணமிங்குக் கூறினும். யுத்தி பெருநூல்களில் மிக விரிவாய்க் கூறப்பட்டிருத்தலால் அவையாங் கூறுதல் அநாவசிய மாதலால் விடுக்கப்பட்டன என்று பெறப்படும். அவ்வாறு பெறப்படு தல் மற்றைப் பிரமாணத்திற்கு மொக்கும். ஒக்கவே அந்தப் பிரமா ணங்களெல்லாம் பெருநூல்களிற் மிகவிரிவாய்க் கூறப்பட்டிருத்தலால் இவர் அங்கே அநாவசியமாய்க் கூறுதல் வேண்டாமே, ஆதலால் இவ் வியாக்கியானம் அநாவசியமாதலறிக. விரிவாய்க் கூறப்பட்டிருத்த லால் இரண்டும் கூறுதலும் அநாவசிமாம். ஆதலால் பேர் விதந்து கூருமல் பெருநூலென்று கூறுதலும், மிக விரிவாய்க் கூறுதலால் விடுக்கப்பட்டனவென்று கூறுதலும், விவர்த்தமாத லெவவாறு அவ் வாறே, யுத்திகள் புத்திக்கு மிக கடினமாதலால் விடுக்கப்பட்டனவென் பதும் விவர்த்தமாதலறிக. அன்றன்று பிரமாணங்கள் புத்திக்கு மிகக் கடினமில்லை. யுத்திகள் புத்திக்கு மிகக் கடினம், ஆனதால் விடுக்கப் பட்டனவெனில் பிரமாணம் கொஞ்சம் கடினம், யுத்தி மிகக் கடின மென்பதற்கு பிரமாணமென்னை? ஒன்றுமின்ரும். ஆதலால், அது விவர்த்தமாதலறிக. அன்றியும் இவற்றிற்கு வேண்டிய யுத்தியெனவே இவற்றையறிதற்கு யுத்திகள் இன்றியமையாது வேண்டப்பட்டன என்பது பெறப்பட்டது படவே, இன்றியமையாத யுத்திகளின்றி ஆகமப் பிரமாண மொன்றே போதுமென்று அவை கூருது விடுக்கப்பட்டன 'என்றும் வாயிலாக யுத்தியின்றியமையும் என் பது யுத்தி யின்றியமையாதென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாத லறிக. இனி யுத்திகள் கூருமல் விடுக்கப்பட்டனவென்று பிர திஞ்ஞை கூறி புத்திக்கு மிகக் கடினமாதலாலும் 'பெரு நூல்களில் மிக

விரிவாய்க் கூறப்பட்டிருத்தலாலும் என்று ஏதுக்கூறப்பட்டது. இப்பிரதிஞ்ஞாவேதுக்களை நையாயிகளும், வையாகரணிகளும், பார்த்து இவ்வுரையாசாரியாரது நியாயநூல் வியாகரணநூல் ஆற்றல்களை தெரிந்துகொள்ளவும். தெரிந்தால் "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தால் மொழித் திறத்தின் முட்டறுப்பானாகும், மொழித்திறத்தின், முட்டறுத்த நல்லோன் முதல் நூற்பொருளுணர்ந்தென்பது பற்றி, இவர் முதல்நூற் பொருளுணர்தற்குரியவர் தாமென்பதறிவார்கள். அது நிற்க, இனி கூறப்பட்டதாக்க் கொள்ளுவர் பெரியோர் என்றும், கூறிய தென்றுகொள்வர் அறிஞர் என்றும், வேறு வேறு கூறினர். கூறவே, இம்முறை மாறிவைத்து கூறப்பட்டதாகக் கொள்ளுவரறிஞரென் றும், கூறியதென்று கொள்வர் பெரியோரென்றும், கூறினலாகுங் குற்ற வேற்றுமைகளென்னை. அன்றன்று, பெரியோர் வேறு, அறிஞர் வேறாத லால் அவ்வாறு மாறிக்கூறப்படாதெனில் அது மாயாவாதமுறை போலும். அது நிற்க. கூறப்பட்டதாகக் கொள்ளுவர் பெரியோ ரென்று எதிர்காலத்தாற் கூறவே, அவ்வாறு கூறப்பட்டதாக இன்னும் கொள்ளவில்லை, இனிமேல் தான் அவ்வாறு கொள்ளுவர் பெரியோர் என்பது பெறப்பட்டது. 66-ல் பிரமா முதல் தம்பமீறனவை பொய் மாத்திரமான உபாதி என்றார். ஆதலால் பொய்யானது மெய்யான கிருத்தியஞ் செய்யுமாறு எவ்வாறு. ஆதலால் அது விவர்த்தமாதலறிக. இனி சிவயோகத்தால் பிரமத்தன்மையாலும், வியாபித்தற் றன்மையா லும் பிரமாவும், சகத்துக்குப் பிரபுவாகிய அவர் மிகுதியாகும் தன்மை யால் பிரபுவான விஷ்ணுவும் அவர் என்றார். இனி அவர் மிகுதியா குந் தன்மையால் பிரமாவாதலும், சிவயோகத்தாற் வியாபித்தற்றன் மையால் விஷ்ணுவாதலுமுடையரென்பது, சர்வசாஸ்திரங்களின் சம் மதம். இவர் அவைகட்கு மாறாக கூறுதல் விவர்த்தமாதலறிக். இனி பிரமத்வாத பிரமணேத்வாச்ச பிரம்மைவ: சியோகத: விஷ்ணு: பிரபவோசகதாம் பிரபு: என்னும் மூலத்திற்கு சிவயோகத்தால் பிர மத் தன்மையாலும் வியாபித்தற்றன்மையாலும் பிரமாவேயாவர். சகத் திற்குப் பிரபுவாகிய அவர் மிகுதியாகுந் தன்மையினால் பிரபவரான விஷ்ணு ஆவர் என்று இவ்வாறு பொருள் கூறல் விவர்த்தமாதலறிக. அறியவே கூறியதென்று கொள்வர் அறிஞர் என்பது மிவ்வாறேயாம். ஆகவே, இதுகாறுங் கூறியவாறு பற்றி யாமே பெரியருமறிஞருமாதல் பெறப்படுதலாலும், முன்னே அவை யெல்லாம் பொருந்தாவென்று கூறுங் காரணங்களாலும், பெரியருமறிஞருமாகிய யாங்கூறப்பட்ட

தாகக் கொள்ளாமையாலும் மேலும் கூறியதென்று கொள்வமல்லமாத லாலும் அது விவர்த்தமாதலறிக. இதனாலே பரிபூரணானந்த போத வாசாரியர் தம்மைத்தாமே பிறர்போல் வைத்துக் கூறினரென்று கூறி யதுபோல இவ்வாசாரியரும் கொள்ளுவர், பெரியோரென்றும், கொள்ளு வாரறிஞரென்றும், தம்மைத்தாமே பெரியரென்றும், அறிஞரென்றுங், கூறினாரல்லது, பெரியோரும் அறிஞரும் அவ்வாறு கொள்ளாரென் பது நிச்சயமாதலறிக. என்றும் என்றும் என்றும் வருமூன்றென் றுங் கூறப்பட்டது என்று முடிதலும், என்றும், என்றும் என்றும் என்றும் என்றும் வருமைந்தென்றுங் கூறியது, என்று முடிதலும் வையாகரணுமாதல் நையாயிகளுக்கே தெரியும். அது நிற்க. இனி புத்திக்கு மிகக் கடினமென்று விடுக்கப்பட்டது எனவே, நானும் அறி யேன் அவளும் பொய் சொல்லாள், என்பதுபற்றி, யுத்திகள் அவர் புத்திக்கு மிகக்கடினமாதல் பற்றி அறியமுடியாமையால் அவரால் கூறுமல் விடப்பட்டன என்பது பெறப்பட்டது. படவே,விடப்படாது கூறப்பட்டனவும், அவ்வாறே அறியாமை பற்றிக்கூறப்பட்டதென் பது பெற்றும். அது நிற்க, 63 இனி, பிரமாதி மூவர் முத்தொழில் செய்பவர்களாக இருக்கவும், சிவனே முத்தொழிலும் செய்வனென் பது எவ்வாறு பொருந்துமெனில், அவனே பிரமாதி வடிவாயிருந்து நடத்தலால் பொருந்தும் என்றார். அது பரமாத்மாவே பிரமாவிஷ்ணு என்னும் நிராலாம்பமும்தானே, பிரமா, தானே, விஷ்ணு என்னும் அத்தியாத்மம் அதர்வசிரசுகளும் பிரமாணமென்றார். அவற்றில் சிவசத்தமே கிடையாது. ஆகவும், சிவன் மூவராதலும் பிறவும் சூனியமாம். இனி முத்தொழில் செய்வான் என்று முன்கூறிய அவர் தாமே 65-ல் அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனுயிருந்து பஞ்சகிருத் தியம் செய்வன் என்று, அதற்கு மாறாக கூறுதலால் அது விவர்த்த மாதலறிக. அது நிற்க.

இனி இதுகாறுங் கூறுமாறுபற்றி அவர் 45ல் கூறியவாறு பிரமம் விவர்த்தோபாதானமாவதேயன்றி, பரிணாமி ஆகாது என்பதற்கு அவர் கூறும் பிரமாணம்போல்வன வெல்லாம் அப்பிராணமாய் விவர்த்தமாத லும், மாயையைப்பற்றிக் கூறுவனவும், 61-ல் சிவனிடத்திலே சீவன் தோன்றுமென்று கூறுவதும், 63-ல் அவனே பிரமாவாதியரா யிருப் பன் என்பதும், பிறவும் விவர்த்தமாதல் உண்மையேதுவாயிலாக இனிது சாதிக்கப்பட்டமை யறிக. அதுநிற்க 65 இனி, அவதாரிகை உள்ளென்று துணியப்பட்ட அக்கருத்தா சகத்தை சிருட்டித்தற்

கேதுகூறுகின்றதென்பது, இரண்டாஞ் சூத்திரத்தின் அவதாரிகை யென்றூர். உளரென்று துணியப்பட்ட அக்குப்புசாமிராசு தத்துவப் பிரகாசிகையினை ஆக்குதற்கேது என்றூல், குப்புசாமிராசு உண்டோ இன்றோ என்று சந்தேகப்பட்டு இன்றென்பதை மறுத்து குப்புசாமி ராசு உண்டென்று துணியப்படும் புரோவாதம் பெறப்படுமாறல், உள ரென்று துணியப்பட்ட அக்குப்புசாமிராசு, தத்துவப் பிரகாசிகையினை ஆக்குதற்கேது என்பது அனுவாதமாதல் பெறப்படும். அதுபோல், கர்த்தா உண்டோ இன்றோ என்று சந்தேகப்பட்டு, இன்று என்பதை மறுத்து, உண்டென்பது புரோவாதமாய்ப் பெறப்படுமாறல், உள னென்று துணிய அக்கர்த்தா சகத்தினை சிருட்டித்தற்கேது கூறப் படுமென்பது அனுவாதமாதல் பெறப்படும். முன்னே உலகிற்கு வேருக ஒரு பொருள் இல்லை என்பாரை மறுத்து உலகிற்கு வேருக ஒரு பொருள் உண்டென்று கூறியதல்லது, இவ்வாறு கூரு மையில், அவதாரிகை அவ்வாறு கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி சத்திநுக்கு கருத்தா உண்டோ இன்றோ என்னுஞ், சங்கைபற்றி. கருத்தா இன்றென்பாரை மறுத்து, கருத்தா உண்டெனச் சாதித்தால் அவ்வாறே உளனெனத் துணியப்பட்ட அக்கருத்தா என்று கூறுத லும் பொருந்தும். அவ்வாறன்றி வறிதே உளனெனத் துணியப்பட்ட அக்கருத்தா என்று கூறுதல் பொருந்தாமை யறிக. இனி உளனுயி னும் சகமியற்கையாதலால், சகம் கர்த்தா செய்யும் செயற்கையல்ல வென்றூல், அதை மறுத்து அது அவன் செய்யும் செயற்கை என்று சாதிப்பில், அவ்வாறு சகம் செயற்கையாயில் அவன் சகத்தைச் சிருட் டித்தற்கேது என்னை எனில், உளன் எனத்துணியப்பட்ட அக் கருத்தா சிருட்டித்தற்கேதுக்கூறுதல் என்றது ஒக்கும். மேற்கூறு மாறு கர்த்தா உண்டே இன்றோ என்று சகம் இயற்கையோ என்றும், அச்செயற்கைக்கு ஏது யாது என்றும், முன் வினு நிகழாமல் வறிதே உள்ளெனச் சாதிக்கப்பட்ட கர்த்தா சிருட்டித்தற்கேது கூறுதலென் பது, குப்புசாமி, உளரோ இலரோ என்றும், உளராயினும் தத்துவப் பிரகாசம் இயற்கையல்லது அவர்ாற் செய்யப்பட்டதன்றென்றும், இனி அவர் செய்யப்பட்டதாயில் செய்தற்கேது யாது என்றும், வினு நிகழாமல் வறிதே உளரென்று துணிபப்பட்ட குப்புசாமிராசு தத்து வப்பிரகாசமாக்குவதற் கேதுக்கூறுதலென்பதோடொக்கும். ஆத லால் அது விவர்த்தமாதல் அறிக. அது நிற்க. இனி, இப்போது என்பது முதல் இருகாறுங் கூறுமாறு பற்றி, தீ தண்ணிது, நீர்

வெய்து, என்பதுபோல அவர் யாதுங்காரணமின்றி நிமித்தோபாதானம் விவர்த்தோபாதானம் இதுவே தடத்திலக்கணம் என்றென்று இவைபோலப் பிரமாணமின்றிக்கூறும் வெறுங்குப்பைகளை எல்லாம் விவர்த்தமென்றும், உண்மை ஏதுவாயிலாகக் கண்டித்தாம். ஆதலால் அவ்வாறே அவர் உரை முழுதும் விவர்த்தமேயாம். ஆதலாலும் அவர் சூத்திரமென்றென்று கூறியவற்றில் பிரமாணம் பிரமாணமென்று கூறினவெல்லாம், அவர் முதற் சூத்திரமென்று கூறியதனுள் கூறும் விஷயமே தவிர வேறல்ல. ஆதலாலும் அவர் பிற்கூறும் பொருளெல்லாம் விவர்த்தமாதல் யாம் முன்கூறும் ஏதுவாயிலாகப் பெறப்படுதலால், மறுபடியும் கூறியாதுகூறலாக விவர்த்தமென்று கூறுதல் வேண்டாமை அறிக. ஆதலால் உளனென்று துணியப்பட்ட அக்கருத்தா, சகத்தினைச் சிருட்டித்தற் கேது கூறுதலென்னும், அவதாரிகை யாங்கூறுமாறுபற்றி விவர்த்தமாதல் எவ்வாறு, அவ்வாறே ஆன்ம இயல்பு ஆன்மாவுக்குச் சுதந்தரமின்மை, சிவனது சிறப்பு அனுபவிப்பது யாது, தன்மயமாதல் சீவன் முத்தித்தன்மை சாதனம் என்னும் அவரது அவதாரிகை யெல்லாம் விவர்த்தமாதலுய்த்துக்கொண்டுணர்க. இனி அவர் சூத்திர அர்த்தம் வருமாறு, வியாப்தியினால் சகத்தினும் வேறாகாத கர்த்தாவாகிய சிவன் உலகத்தின் வேறாயிருந்துகொண்டு நீக்கமின்றி இருக்குந் தனது ஆணையாகிய சத்தியினால் சீவர்களுக்கு அவரவர் கருமத்தின் பரிபாகத்தினை யனுசரித்துச் சம்சாரத்தைச் செய்கிறாள் என்பதாம். இதில் சிருட்டித்தற்கேதுவும் அவதாரிகையிற் கூறியபடி கூறப்படாமையால் அவதாரிகையோடு சூத்திரார்த்தம் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. அஃதன்று சம்சாரமென்பதே சிருட்டியாமெனில், அவ்வாறேல் உலகத்தில் எனது சம்சாரமிறந்துவிட்டதெனில் எனது சிருட்டி இறந்துவிட்டதென்று அர்த்தமாதல் வேண்டும். ஆதலால் சம்சாரத்தை சிருட்டி என்று கூறுதல் விவர்த்தமாதலறிக. ஆதலால் உளனென்று துணியப்பட்ட அக்கருத்தா சகத்தினைச் சிருட்டித்தற்கேது கூறல் அவதாரிகை என்பதும், சம்சாரத்தினைச் செய்கிறானென்பது சூத்திரார்த்தமென்பதும், விவர்த்தமாதலறிக. 65 இனி அவர் வியாக்கியானம் வருமாறு இங்கு ஆரோபித்தான சகத்து அதிட்டான சகத்தையினும் வேறாகாமையால் வியாப்தியினால் சகத்தினும் வேறாகாதவென்றும் அங்ஙனம் வாஸ்தவ அபேதம் இருந்தும் கற்பிதபேதத்தினால் அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனாயிருந்து பஞ்ச கிருத்தியஞ்

செய்தலால், உலகத்தின் வேறாயிருந்துகொண்டென்றுங் கூறினார். இதிற் பிரமாணங்களிவை என்றார். அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனாயிருந்து பஞ்ச கிருத்தியம் செய்வனென்பது 100-ல் சகத்தை யுண்டுபண்ணும் சாமர்த்திய சத்தியே பிரகிருதியாம் என்றவிடத்து, சிருட்டிகர்த்தா பிரகிருதி என்றதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி இங்கு ஆரோபிதமான சகத்து அதிட்டானமான சத்தையினும் வேறாகாமையால், அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனாயிருந்து பஞ்ச கிருத்தியம் செய்கிறானென்று சிருட்டிகூறி, சிருட்டித்தற் கேதுக் கூறாமை சிருட்டித்தற் கேதுகூறுதலென்னும் அவதாரிகையோடு மாறுபட்டு விவர்த்தமாதலறி. இங்கு ஆரோபிதமான சகத்து எனவே, அங்கு ஆரோபிதமாகாத சகத்து ஒன்று உண்மையும் பெறப்பட்டது. படவே ஆரோபிதமான சகத்து மாயாவாதமும் ஆரோபிதமாகாத சகத்து மாயாவாதமாகாமையும் பெற்றாம். இங்கு என்று சுட்டுகின்ற தெதையோ அறிகிலம். அது இங்கு ஆரோபிதமென்று அவ்ஆரோ பிதத்தோடு முடிகின்றதா,? அன்றி சகத்து அதிட்டானம் சத்தை வேறாகாமை வியாப்தி என்பவற்றோடு முடிகின்றதா? இனி இங்கு கூறினாரென்று முடியுமானால், அங்குக் கூறாரென்பது பெறப்படும். ஆதலால் அதுவும் இட்டவிகாதமாய் விவர்த்தமாதலறிக. இனி சத்தையினும் என்னும் உம்மைப்பொருள் என்னை அதிட்டான சத் தையின் வேறாகாமையின் என்பதும், அதிட்டான சத்தையினும் வேறாகாமை என்பதும், தம்முள் ஒரு பொருளாகாது, வேறு வேறு பொருளாம். ஆகவே சத்தையின் வேறாதலும், அதனின் வேறாத லன்றி வேறாகாமையும், எனப்பொருள்பட்டு மெய்ப்பொருளுந் தோன்றுமாறு காண்க. அவ்வாறே சகத்து சத்தின் வேறாதல் சிவாகம முறையானால், ஆரோபிதம் அதிட்டானமென்னும் விசேடண விசே டியங்களாதல் கூடாதெனில் அற்றன்று. நிமித்த மாத்திரம் பெறப் படும். பிரபு என்ற சொல்லு நிமித்தோபாதானமாய் மாயாவாதத்திற் கிணங்குமாறு மிகுத்துக்கூறிய தெவ்வாறு, அவ்வாறே ஆகமத்துக் கிணங்குமாறு குறைத்துக்கொள்ளப்படும். இலதுளதாயில் அவ் வாறே உளதிலதாதலும் தருக்க நூற்றுணிபேயாம். அது நிற்க. இனி சகம் ஆரோபிசகத்து அதிட்டானமென்பதற்கு பிரமாணமென் னை 53-ல் சகம் பொய்யென்று கூறுமதுவே பிரமாணமானால், அற் றேல் மாயாவாத நூலில் சகம் பொய்யென்று கூறுதலெவ்வாறு, அவ் வாறே சிவாகத்துள் சகம் பொய்யென்று கூறாமையால் அது விவர்த்த

மாதலறிக. இனி ஆரோபிதமான சகத்து அதிட்டான சத்தையினும் வேறாகாதென்பது ஆரோபிதமான இத்தத்துவப் பிரகாசிகை அதிட்டானமான மாயாவாதத்தினும் வேறாகாமைபோலும், என்பது பெறப்பட்டது. அது நிற்க. இனி வாஸ்தவ அபேதமிருந்து மென்பது வாஸ்தவ உரையிருந்தும் என்பதுபோலும். போலவே தத்துவப் பிரகாசம் அவாஸ்தவ உரையென்பது பெறப்படும். அதுபோல அவாஸ்தவ அபேதமும் பெறப்படும். படவே, முற்கூறுமாறு அவாஸ்தவ அபேதமும், வாஸ்தவ அபேதமும் பெறப்பட்டன. இனி கற்பித பேதத்தினல் அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனுயென்ற விடத்து, அவனே எனச் சுட்டியதெவனை, முன் எவனையும் எவளையும் எடுத்துக் கூறாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி சத்தைச் சுட்டியதெனில், அவ்வாறேல் அதுவே என்றன்றோ சுட்டல்வேண்டும். ஆதலால் சத்தைச் சுட்டு மென்றலும் விவர்தமாதலறிக. இவ்வாறு சகதா பேதம் கூறப்புகுந்து இலிங்காபேதம் கூறினர். காமாலைக்கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாவதுபோல, அபேதமெழுதும் பயிற்சிபற்றி எழுதுவனவெல்லாம் அபேதமா யெழுதுகின்றார். ஆதலால், இவ்வாறு சத்து அவனென்று இலிங்கபேதமின்றி எழுதுவோர் சகத்து சத்தைகளின் இலிங்கபேதமும், அறியார் என்பது கூறவேண்டாமையறிக. ஆதலால் அரோபிதசகம் அதிட்டான சகத்தை கற்பித பேதமென்னும் மாயாவாத முறைகூறி, இவ்வாறு வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று காட்டுகின்றார். ஆதலால் அவதாரிகையோடு சூத்திரார்த்தமும் சூத்திரார்த்தத்தோடு வியாக்கியானமும் இணங்காமல் விவர்த்தப்படுதல் அறிக. அறியவே அவர்கூறும் அம்மூன்றும் இவ்வாறு இணங்காமல் விவர்த்தப்படுதலால், இவ்வாறு விவர்த்தப்படு மிவற்றின் பிரமாணமென்று அவர் காட்டுவனவெல்லாம் பிரமாணப் போலியாய் விவர்த்தமாதல் கூறாமலேவிளங்கும். ஆதலால் நிமித்தோபாதானம் விர்த்தோபாதானம் ஆரோபிதம் அதிட்டான மென்பனவெல்லாம் மாயாவாத முறையல்லது சிவாகமப் பொருளாகாமை யறிக. இதனாலே பொன்னப்பலப்பிள்ளையவர்கள் வேதாந்த சித்தாந்த மிரண்டுமொன்று அல்லது ஒரு கருத்து என்று கூற. ஒரு கருத்தென்று கூறல் சிறிதுமாராயாமல் கூறும் கூற்றாய். விவர்த்தமாதலறிக. இனி அது அவ்வாறே விவர்த்தமாதலொன்றின் வைத்துக்காட்டுதும். விவர்த்தாசாரிய ரெடுத்துக்கொண்ட பிரதிஞ்ஞையாவது ஆரோபிதசகம் அதிட்டான சத்தையின் வேறாகாமையாம். இனி அவன் கற்பித பேதத்தால் வேறு கர்த்தாவாகிக்

கிருத்தியஞ்செய்தல் பிரதிஞ்ஞையாமெனில், அற்றன்று, இதில் பிரமாணம் ஏகவசனம் பற்றிக் கூறுதலால், இனி முன்னே இலிங்கபேதமின்றிக் கூறுமாறுபோல் இங்கே வசன பேதமறியாமல் கூறினரென்றலுமொன்று. அவ்வாறு ஆயினும், அபேதம் பஞ்ச கிருத்தியஞ் செய்தல் என்னுமிரண்டும் பிரதிஞ்ஞை என்று கொள்ளுவோம், கொண்டு அவற்றிற்கு இதில் பிரமாணமென்று கூறும் அந்தப் பிரமாணங்கள் பிரமாணமோ அன்றோ என்று நோக்குதும். "சதேவசோமியேதம் அக்ர ஆஸீது ஏகமேவாத்து விதீயம்" என்பது, இது முன் இரண்டாவதற்ற சத்தாகவே இருந்தது என்பதாம். இது என்பது எது, என்றவாவியவிடத்து அது சகமென்று கொள்ளுவோம். கொண்டு, இச்சகம் முன் என்பது சிருட்டிக்கு முன்எனக்கொள்ளுவோம். கொள்ளவே இச்சகம் சிருட்டிக்கு முன்காலத்தில் இரண்டாவதற்ற சத்தாக இருந்ததென்பது பெறப்பட்டது. படவே, சிருட்டிக்குப் பின்காலத்தில் இரண்டாயுள்ள சத்தா யிருக்கின்றதென்றாயிற்று. ஆகவே இவ்வாறு இரண்டு சத்தாக இருக்கிறதானது ஆரோபிதசகம் அதிட்டான சத்தையினும் வேறாகாமைக்கு பிரமாணமாதலெவ்வாறு. இனி அது கற்பித பேதத்தால் அவனேவேறு கர்த்தாவாகிய ஈசனாய் பஞ்சகிருத்தியஞ் செய்வன் என்பதற்குப் பிரமாணமாமெனில், அற்றன்று, கல்பிதம் பஞ்ச கிருத்தியம் என்பன அப்பொருள் படாமையால் ஆதலால் ஆரோபித சகம் அதிட்டான சத்தையின் வேறாகாமை கல்பிதபேதத்தால் வேறு கர்த்தாவாகி கிருத்தியம் செய்தல் என்பவற்றிற் கெல்லாம் இரண்டாவதற்ற சத்தாக இருந்ததென்பது பிரமாணமாகாமையறிக. அது நிற்க. இனி அடுத்த வசனத்தை விசாரிப்போம் "நேகநா நாஸ்திரஞ்சந" இங்கு நாநா என்பது எதுவுமில்லை என்பதாம். ஆகவே இங்கு பொருளொன்றே என்பது பெறப்பட்டது. படவே, ஆரோபிதமானசகத்து அதிட்டான சத்தையினும் வேறாகாமை கற்பித பேதத்தால் வேறு கர்த்தாவாதல் கிருத்தியஞ் செய்தலென்பன, அதில் காணப் படாமையால் அது பிரமாணமாகாமை அறிக. இனி 15. இதுமுன் நிச்சயமாக ஆத்மாவாக இருந்தது. இது முன் புருஷனை ஆத்மாவாக விருந்தது. சிருஷ்டிக்கு முன் ஒரே அத்துவிதமான சத்தாக விருந்தது. 18 இவ்வெல்லாம் பிரமம் 19 இவ்வுலகு புருஷன் 20 இது முன் சத்தாகவே இருந்தது என்னுமிவை எல்லாம் முதற்சூத்திரத்தில் பிரமோபாதானத்துக்காக அவர் கூறிய பிரமாணங்கள் எவை எவையோ, அவையவைகளே இங்கு ஆரோபிதசகம் அதிட்-

டான சத்தையின் வேறுகாமை கற்பிதபேதத்தால் வேறு காத்தாவாதல்களுக்கு பிரமாணமென்று கூறுகின்றூர். ஆதலால் முன் சூத்திரத்தில் வரும் பிரமாணங்களும் இச்சூத்திரத்தில் வரும் பிரமாணங்களும் ஒரு பிரமாணங்களே யாம். தம்முள் வேறுகிய சூத்திர மிரண்டற்கு ஒரு பொருள்படும் வசனங்கள் பிரமாணமாமாறு எவ்வாறு, ஆதலால் முதற் சூத்திரத்தில் அவர் பிரமாணமென்றென்று கூறப்படுவன எவைகளோ அவைகளே இரண்டாஞ் சூத்திரத்திலும் பிரமாணமென்று கூறப்பட்டன. ஆதலால் அவை பிரமாணமாகாமை சாதித்தற்கு முற்கூறிய ஏதுக்களே போதுமாதலால், இங்கு அவர் பிரமாணமென்று கூறும் குப்பையெல்லாம் பிரமாணமாகாமைக்கு ஏது வேறு கூறவேண்டாம். ஆதலால் அவற்றைத் தனித்தனி காட்டி, இவை இவ்விவ்வாற்றுல் பிரமாணமல்ல என்று கூற வேண்டாமையறிக. இனி 66 தொடங்கி 96 பக்கம் வரையும் வருவனவற்றுள், அவதாரிகைப் பொருளாகிய சிருட்டித்தற்கு ஏதுக்கூறப்படாமையாலும், ஆரோபிதசகம் அதிட்டானசத்தையினும் வேறுகாமை கூறப்படாமையாலும், இவ்வசனங்களே முதற்சூத்திரத்தில் பிரமாணவசனமாக வருதலாலும் அதனுல் இரண்டிற்கும் வேற்றுமை இல்லாமையாலும், அவை அப்பிராமண்யமாதலறிக. இனி 96· 93· 94, இவைகளுக்குள் பட்டினத்தார்வசனம் பத்திரகிரியார் வசனங்கள் என்பனவற்றில் பட்டினத்தார் பாடலென்பன பதினோராந்திருமுறையில் வராதபடியால், அவை தெருப்பாட்டேபாய விவர்த்தமுறைக் குறைவனவன்றி, ஆகமத்துக் கொவ்வாமையால் விவர்த்தமாதலறிக. 96 இனி அவையேதானேயாய் என்பது இதிற் பிரமாணமெனக்காட்டினர். இதில் ஆரோபிதசகம் அனுட்டானசத்தையின் வேறுகாமை கற்பித பேதத்தால் வேறு கர்த்தாவால் கூறப்படாமையால் அது பிரமாண மாகாமையறிக. அதில் ஆரோபித சகம் அதிட்டானசத்தையினும் வேறுகாமை என்னும் சத்தமே இல்லாதிருக்கவும், சகம் பிரமம் என்பதற்கு அது பிரமாணமென்கின்றூர். ஆனல் நாராயண சத்தமேயன்றி சிவசத்த மில்லாத மகாநாராயணம் 4-வது அத்தியாயம் சிவனிடத்து சிவன் தோன்றி ஒடுங்குதற்கு பிரமாணமாம் என்று, இலது உளதாய்க் கூறும், ஆசாரியருக்கு இது பிரமாணமாயினும் ஆகும்போலும். 7 அந்தமாதி சங்காரமே முதல் முதலேயே முதலாக உலகம் ஒடுங்கின இடத்தினன்றி, உளதாகாமை என்பன உபாதானமாதற்கு பிரமாணமாகாமை எவ்வாறு அவ்வாறே "அவையேதானே" என்பதும் பிரமாணமாகாமை யறிக.

இனி அவ்வளவிலும் அமையாமல் "அத்துவிதம் என்ற சொல்வானே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அன்னிய மின்மையை உணர்த்தும்" இவ்வான்மாக்கள் பலவும் முதல்வன்தானேயாய் நிற்கும், "அவனுளனுமாய் அல்லனுமாமங்கு" என்பன ஆரோபிதசகம், அதிட்டானசத்தையாயினும் வேறாகாமைக்கு பிரமாணவசனமென்று கூறினர். கூறும்போது, அன்னியநாத்தி என்பது, அன்னியமென்று பொருள்பட்டாலும் படுமென்று கருதி, அன்னியநாத்தி என்பது அன்னிய மில்லாமை என்றும், "அவனுளனுமாய் அல்லனுமாமங்கு" என்று மெய்கண்டதேவர் விபரீதமாய் பாடினரென்று, யாமுன் கூறியவாறே நையாயிகரான ஆசாரியார் அதன்மேலும் வையாகரணியாதலால் அவனுளனாகிய என்பதை, அவனுளனுமாய் என்றும், வியாகரணத்திற் கிணக்கங்கூறினர். அவ்வாறு கூறினும், உளனும் அல்லனும் என்பது அனேகாந்தவாதமாய் முடியும். அல்லது ஆரோபித வாதமாகாமையறிக. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும் எழுத்தறிவார்க் காணினிலையாம், என்பது பற்றி எழுத்து முதலிய சர்வசாஸ்திர பாரங்கதனாகிய எம்முன்னே அவர்விவர்த்தமாய்க்கூறும், விவர்த்தக்கல்விப் பெருக்கமெல்லாம் சூனியமாதல் காண்க. இனி இவ்வாசாரியர் "ஒன்றென்றதொன்றே காண்" என்ற உதாரணப்பாட்டிற்கு அர்த்தம் கூறுகின்றார். பொன்னம்பலப்பிள்ளையவர்கள் சிவஞானசுவாமி கூறிய உதாரணங்களை அனுசரித்து, அவசியமான இடங்களில் விரிவுரை கூறினரென்றார். என்று கூறிய, சிவஞானஸ்வாமி உதாரணமும், இவ்விரிவுரையும் வருமாறு "பாசத்தோடுளேகாண்" என்பதற்கு பிராந்திசித்தனாய் இருக்கின்றாயென்று இவ்வாசாரியார் விரித்தார். சிவஞானசுவாமி அதற்கு பாசத்தோடு கட்டுற்றாய் என்று சுருக்கிக் கூறினர். இவ்வாற்றால் பொன்னம்பலப்பிள்ளை இவ்வசாரியார் சிவஞானசுவாமி உரையை அனுசரித்து விரித்தார் என்ற அனுசாரவிரி காண்க. இனி சிவஞானசுவாமி பாசத்தோடுளே என்று மெய்கண்டதேவர் கூறும் கூற்றுக்கு பாசத்தோடு கட்டுற்றாய் என்று கூற, இவ்வாசாரியர் மெய்கண்டதேவர், சிவஞானஸ்வாமிகள், இருவரையும் மறுத்து, பாசத்தோடுளே என்பதற்கு பிராந்தி சித்தனாய் என்று கூறுதலால், பாசம் பிராந்தி என்பன, அவர் பிராந்திநூல் முறைபற்றி ஒரு பொருட் கிளவியாயினும், சிவாகம வழக்குப்பற்றி ஒரு பொருட் கிளவியாகாமை யறிக. இனி, அகர உயிரின்றேல் என்பதற்கு சிவ

ஞானசுவாமி அகரஉயிரில்லையாயினென்றுரைக்க, இவ்வாசாரியர் முதற்காரணமாகிய அகர உயிரில்லையாயில் என்று விரித்துரைத்தார். அவனுளமாய் என்பதையுமவ்வாறே, அவனுளமாயென்றும், விரித்துரைத்தார். அது நிற்க, பிரபு என்றதற்கு முதற்காரணமென்று கொள்ளாக்கால், அவரது முதற்சூத்திரம் பிரமத்தின் தடத்தலக்கணமாதலமையாது என்றார். தாமே மறுபடி அவரது இரண்டாஞ் சூத்திரத்திலும், முதற்காரணமாகிய அகரஉயிர்போல முதற்காரணமாகிய "சத்துரூப பிரமமென்கிறார்" என்றிவ்வாறுகூறும் வாயிலாக, இரண்டாஞ்சூத்திரமும், முதற்காரணமான தடத்தலக்கணம் கூறுகின்றதென்கின்றார். மாயாவாதநூல், முதல், இடை, கடை, எங்கும் பிரமமொன்றே யுள்ளது, வேறுபொருளில்லை என்று கூறும், கூற்றுப் பயிற்சி பற்றி இந்த நூலிலும் எங்கும் பிரமோபாதனமென்றென்று கூறுகின்றார்போலும். அது நிற்க. இனி 68-ல் அக்கரங்கட்கெல்லாம் அகர உயிர் என்றாற்போல் என்று அவர் கூறினவிடத்து முதல்காரணமாகிய அகர உயிர் என்று அவர் கூறாமையால் அந்த அகரஉயிரும் இந்த அகரஉயிரும் வேறாமெனில் அற்றன்று. அவர் உலகிற்கு வேறாக ஒரு பொருளுண்மை சாதிக்கும் வாயிலாக முதலாஞ்சூத்திரத்தில் பிரமோபாதானஞ்சாதித்தார். மறுபடி சிருட்டித்தற் கேதுக்கூறும் வாயிலாக, இரண்டாஞ்சூத்திரத்தில், முதற்காரணமாகிய அகரஉயிர் என்று சாதித்தார். அவ்வாறே இரண்டாஞ் சூத்திரத்திலும் சாதித்த பிரமோபாதானமே அங்கு சாதித்தாராதலால், இது அதுவாகாமை எவ்வாறு, ஆதலால், அது அவர் பிராந்தி சித்தம் பற்றி கூறும் விவர்த்தமாதல் தெற்றெனவறிக. அது நிற்க, இனி இருக்கு என்பதற்குசிவஞானசுவாமி 289-ல் ஏகனென்பதற்கு விபரீதமாய் உரைத்ததுபோல, வேதமென்று விபரீதமாயுரைத்தார். இவர் அவ்வாறு விவரீதஉரை கூறாமல் இருக்காகிய வேதமென்றுரைததார். இருக்கு என்பது, நான்கு வேதத்தில் முதல்வேதமென்றறியாமல் சிவஞானசுவாமி தடுமாற இவர் தடுமாறாமலுரைத்தாராயினும் மற்றை மூன்று வேதங்களும் கூறுதல், இவை என்று கூறாமைமாத்திரம் விபரீதமே தவிர, இது விபரீதமின்மையறிக. அது நிற்க.. இனி உலகெலாமாகி என்றும், அவனே யாவுமாய் என்றும், வரும் சித்தர், சிவப்பிரகாசர்பாட்டுக்களும், அவனே அவனிமுதலாயினன் என்னும், களிற்றுப்படியுடையார் பாட்டும், ஆரோபித சகத்திற்கு பிரமாணமாகாமை யறிக. அதன் அடுக்கவுள்ள பட்டினத்தார் பாட்டைப்

பற்றி முன்னே கூறினோம். அது நிற்க, 90 இனி நீக்கமின்றி நிறகுந் தனதாணையாகிய சத்தினுயில் என்று கூறப்பட்டுள்ள ஆஞ்ஞாரூப சத்தி மூலப்பிரகிருதியாகிய விந்துரூபமேயாம். இதனைப் பரிக்கிரக சத்தி என்று கூறுவர். அதற்குப்பிரமாணம் வருமாறு என்றார். (62) விதந்து பெரியோர் என்று பொதுப்படக்கூறவே, பெரியோரும் அறிஞருமல்லாத சிறியரும் அறிவீனருமே அவ்வாறு கூறுவரென் பது பெறப்பட்டது. படவே, அவர் கூறும் கூற்றை ஒப்புவோர் சிறிய சிற் சிறியரும், அறிவீனருள் அறிவீனருமாதலறிக. அது நிற்க. இனி "மாயாந்துப் பிரகிருதம் வித்யாதுமாயிருந்து மகேஸ்வரம் என்பது மாயையினைப் பிரகிருதி என்னும் மாயையை உடையவனை மாகேஸ்சுர னென்றும் அறிக. என்பது பிரமாணம் என்றார். என்றதனுள் ஆஞ்ஞாசத்தி மூலப்பிரகிருதியாகிய விந்துமாயை என்னுமது பரிக்கிர சத்தி என்றும் கூறப்படுகிறது என்கிறார். மாயாந்துப் பிரகிருதிம் என்பதனுள், ஆஞ்ஞாசத்தி மூலவிந்து, ரூபவிந்து மாயை, பரிக்கிரக சத்தி என்னும் சத்தங்களில்லாமையால் அதற்கு இவை பிரமாண மாகாமை யறிக. அது நிற்க. இனி இறப்பில்லாள் ஒருத்தி, செம்மை, வெண்மை வடிவினள், வெகு பிரசைகளைச் சிருட்டிப்பவள் என்பதனுள் ளும், அப்பொருள் காணப்படாமையால் அதுவும் அதற்குப்பிரமாண மாகாமையறிக. இனி அடுத்த நிராலம்பமும் அவ்வாறும். இனி 100, நிஷ்களஸ்ஸ் பராசத்தி என்பது, சர்வஞானோத்தர மென்றும், இதுவே ஆஞ்ஞாசத்தி மூலப்பிரகிருதியாகிய விந்து மாயை என் பதற்கு பிரமாணமென்றுங் கூறினர். அது சர்வஞ்ஞானோத்தர நூலி லில்லவே இல்லை, இனி உண்டெனக் கொள்ளினும், அதில் ஆஞ்ஞா சத்தியே மூலப்பிரகிருதியாகிய விந்துமாயை என்று கூறப்படாமை யால், அது, அதற்கு பிரமாணமாகாமையறிக. இனி பிரகிருதி "சைவிசிவேன திருஷ்டாசம்பவாத்" என்பதற்கு சிவசம்பவாத், என்ப தற்கு சிவசத்தியான பிரகிருதி, சிவனுல் பார்க்கப்பட்டதாய் செவ்வை யாய் உண்டாயிற்று என்பது, அர்த்தமென்று கூறினர். பிரகிருதி என் பது விகிர்தியல்லது என்னும் பொருளாதலால் அவர் பொருள் விவர்த்தமாதலறிக. இனி நூறு பிரஜைகளைச் சிருட்டிப்பவள் என் பது 65-ல் அவனே வேறு கர்த்தாவாகிய ஈசனு இருந்து, பஞ்சகிருத் தியம் செய்வன் என்பதனோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி தனது சத்தியாகிய மாயையினுல் உலகத்தை உண்டுபண்ணுகின்றார் என்னும், பவுட்கரம், ஆஞ்ஞாசத்தியே மூலப்பிரகிருதியாகிய விந்து

என்று கூறுமையால் அது அதற்கு பிரமாண மாகாமையறிக. இனி 100 தொட்டு 105 வரையில் வருவன அவ்வாறே, அதற்கு பிரமாண மாகாமை யறிக. இனி 105 கருமத்தை யனுசரித்து சம்சாரத்தைச் செய்கின்றான் என்றதால், இறைவனுக்குச் சீவர்களை ஏற்றத்தாழ் வுள்ளவராகப் படைத்தல், சிலரை இம்சித்தல் முதலியவற்றால் ஆகும் பக்ஷபாதமுடைமை, இரக்கமில்லாமை முதலிய, தோஷமில்லாமை யும், கருமம் அனாதியேயுள்ள தென்பதும், அறிவிக்கப்பட்ட தென்கின் றார். இது சிவாசாரியர் வியாக்கியானம் 34-ல் கர்மானுசாரத இதி பதம்வைஷம்மிய நைர்கிர்ண்ய தோஷ வியாவர்த்தமாம்; என்று கூறி இருப்பதைக் கண்டு எடுத்தெழுதி, தமது சொந்தம்போல் காட்டி, அபிநயித்ததுந்தவிர, விரிவுரை ஆசாரியரானபடியால், கருமம் அநாதி, என்று இது ஒன்று, அதிகமாக விரித்துக்கூறினர். சிவாசாரியார் வியாக் கியானம் 33-ல் உபாதானமான சடரூபமாயையோடு சச்சிதானந்த ரூப அனந்தேசுரர் விருத்ததருமமுடையரானபடியால் பின்னமுடையர் என்ற விடத்து சிவாசாரியார், சச்சிதானந்தத்துக்கு சடரூபமாயை மறு தலை என்று கூறப்பட்டதென்றுகூறி, 34-ல் கர்த்தா "அன்யசசவ வியாப்திதோ அனன்ய" என்னும் பதத்தால் பிரபஞ்சம் பிரமவிவர்த்த மாதலால், நிரூபாதான விஷமமென்றும், பிரமமாத்திரம் உபாதான மென்றும், மாயை மாத்திரம் உபாதானமென்றும், பரமாணு உபாதான மென்றும், கூறும் இவைமுதலியவற்றை நீக்கும் வாயிலாக மாயாவிசிட் டோபாதானம் கூறப்பட்டது. ஆதலால் சூத்திரத்தில் சிருட்டிக்கின்ற தென்று கூறும் வாயிலாக, விவர்த்தோபாதானம் நிமித்த மாத்திரோபா தானம் என்று கூறும் வாதிகளை மறுத்துக் கூறினர். அது அறியா மல் இவர் அவர் கூறியது தமக்கனுகூலமென்று கருதி, 8-ல் கர்த்தா ஏவ என்று எழுதினரென்று எடுத்துக்காட்டிக் கெட்டார். இனி 63 பிரமாதியர் முத்தொழில் செய்பவர்களா யிருக்க, சிவனே முத் தொழில் செய்வனென்பது அவனே பிரமாதியர் வடிவாயிருந்து செய் தலால் பொருந்தும் என்பதற்குப் பிரமாணம், ஏகோ என்னும் முதலை உடைய பராக்கியாகமம் பிரமாணமென்று கூறுகின்றார். சிவாசாரியர் வியாக்கியானம் 10-ல் ஏகோகி என்னும், பராக்கிய வசனம் சிவனே முதற்கருத்தா, பிரமாதிகள் அவாந்தரகருத்தா என்பதற்கு பிரமாணம் என்று அவர் காட்டினர். இவர் அதனைக் கண்டு அதற்கு மாறுபடக் காட்டினர். இவ்வாறே அவர் ஒரு விஷயத்திற்குக் காட்டும் வசனத் தை இவர் பிறிதொரு விஷயத்திற்குக் காட்டுவதுந்தவிர பொருள்

விவர்த்தமாய்க் கூறுவார். அன்றியும் சிவாசாரியர் கூறும், சுகசந்து பாரமேஸ்வரம், சிந்தியம், அசிந்திய விசுவசா தாக்கியம், சுவாயம்புவம், சர்வஞ்ஞானோத்தரம், வாதுளம்,காமியம், முதலாகிய வசனங்களை இவர் அச்சில்வாராத ஆகமங்களையெல்லாம் தாங்கண்டு பிடித்துக் கூறுவார் போல அபிநயித்துக்கூறினர். சிந்தியமென்பது தவறி அச்சில் அசிந்தியமென்றிருப்பதறியாமல் அசிந்தியமென்றும் இன்னுமிவ் வாறே சில ஆகமங்களின் பெயரை அச்சில் மாறியிட்டதறியாமல், தானுமவ்வாறே விபரீதமாய், எழுதியும், விபரீதப்பொருள் கூறியும், இடர்ப்பட்டார். இவர் சிவாகமமூலையுந் தெரியாமல் அச்சிட்ட சிவா சாரியர் வியாக்கியானத்தில் வரும் வசனங்களையே கூறினரென்பதற்கு சாட்சி, உபநிடதவசனங்களுக்கு கணக்கிட்டு, ஆகமவசனமென்று காட்டியவைகளுக்கு, சிவாசாரியர் கணக்கிடாமையால் தாமும் கணக் கிடாமையே சாட்சியாதலறிக. அது சாம்சித்தாதி விஷயத்தைப் பற்றியும், திரிவிதான்ம விஷயத்தைப் பற்றியும், சிவாசாரியர் நூற் பெயர் கூறுமல் கூறுமவ்வசனங்கள், மிருகேந்திரம் பவுட்கரங்களிலுள் ளனவென் றறியாமல், இவர் அவைகளுக்கு ஆகமமுணர்ந்தோர் வாக் கென்று விபரீதப்பெயர் கூறுதல் பற்றியுமறிக. இன்று மிவ்வாறே சிவாசாரியர் கூறிய விபரீதமறியாமல், விபரீதம் படக்கூறுவன எண் ணில்லனவாம். அது நிற்க. இனி பிரமமே சீவன், பிரமத்தின் வேருய்ச் சீவன் இல்லை என்று, முன்னும் பின்னும் சாதித்த இவர், தாமே பிரமம் இங்கு சீவர்களை படைக்கின்றதென்று வேற்றுமை சாதிக்கின்றுர். அவ்வாறு உளதிலதென்றலும், இலதுளதென்றலும், அவர்க்கியல்பாதலால் அவர் விவர்த்தமிவ்வாறென்றறிக. இனி கர்ம மில்லை, மாயை இல்லை, சிவனில்லை, பந்தமோக்ஷமொன்றுமில்லை, என் பார்க்கு கருமமேது, அதனை அநுசரித்துச் செய்யும் சம்சாரமேது, கருமமென்றும், சிவனென்றும், சீவனென்றும்,கருமம் அனுதி என்றும் கூறுதல் எல்லாம், அம்முறை கூறும் 45-ல் பவுட்கரமுதலிய சிவாக மங்களை தூஷிக்கும் தூஷண வார்த்தையே தவிர, யதார்த்தவார்த்தை யாகாமையால் அது விவர்த்தமாதலறிக. அது நிற்க. 106 இனி அவர் சகத்தினைச் சிருட்டிக்கும் முறையினை பின்வரும் பிரமாணங்களால் காண்க. என்று (9)-ல் எதினின்று இப்பூதங்கள் பிறக்கின்றனவென் றும் (10)ல் ஆனந்தத்தினின்று அவை தோன்றின என்றும், இவ்வெல் லாவற்றையும் படைத்ததென்றும், ஆன்மாவினின்று ஆகாய முண்டா யிற்றென்றும், 17-ல் ஆன்மாவினின்று எல்லாமுண்டாயின 20 புரு-

னின்று எல்லாமுண்டாயின என்றும், சகத்தை சிருட்டிப்பேன் என்று பார்த்தது என்றும், 37 அதனின்று காயங்களுண்டாயின என்றும், இன்னும் இவ்வாறு வருமவாவசனங்கள் எல்லாம், சகத்தினைச் சிருட்டித்தலையே கூறுமென்றார். ஆதலால் அவதாரியுள் சகத்தினைச் சிருட்டித்தற்கேதுக் கூறுகின்றதென்றது, இங்கு சகத்தினைச் சிருட்டிக்கும் முறைகூறுகின்ற தென்றதனோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இவ்வாறே ஓரிடத்தில் சத்தியே மாயை என்றும், ஓரிடத்திற் சத்தி வேறு மாயை வேறு என்றும், ஓரிடத்துப்பிரமம் வேறு, மாயை வேறு என்றும், ஓரிடத்து மாயை பிரமத்தின் வேறில்லை என்றும், ஓரிடத்தில் ஆனாதி அந்தம் என்றும், ஓரிடத்தில் மாயை சத்தியமென்றும், ஓரிடத்து மாயை அசித்து என்றும், ஓரிடத்து மாயை கர்த்தா என்றும், ஓரிடத்துப் பிரமம் கர்தா என்றும், ஓரிடத்து மாயை உபாதானமென்றும்,ஓரிடத்துபிரமம் உபாதானமென்றும்,ஓரிடத்துபிரமம் வேறு அஞ்ஞானம் வேறு என்றும், ஓரிடத்து பிரமம் காரியமென்றும், ஓரிடத்து பிரமம் காரணமென்றும், இன்னுமிவ்வாறு அவர்கூறும் விவர்த்தங்கள் எண்ணிறந்தன. அவை எல்லாம் இவை இவை என்று கூறுதல், ஆயிரநாவுள்ள அனந்தனாலும் முடியாது. அது நிற்க. இனி 107 சிவசத்திகளின் சம்பந்தம் பரமாத்மா என்றார். எனவே, சிவசத்திகளின் சம்பந்தம்அபராத்மா என்பது பெறப்பட்டது. அது நிற்க. இனிபராசத்தி சிற்சத்தி, ஆனந்தசத்தி, இச்ஞானக்கிரியாசத்தி என்னும், சத்திகள் மேனின்ற முறையே,ஒன்றினொன்று தோன்றுமென்றார். என்பது, 79-ல் மாயை அவித்தை கிரிபை கிரியாமயமான ஞானம் என்பன சிவத்தினின்று உண்டாயின என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி சிற்சத்தி ஞானசத்திகளின் வேற்றுமையும், விவர்த்த வேற்றுமைபோலும். 108-ல் தனது இச்சையால் சகத்தில் சிருட்டிக்க முயன்ற மகேசன் என்றார். 105-ல் கருமத்தை அனுசரித்துச் செய்தலால் சீவர்களை ஏற்றத்தாழ்வாகச் சிருட்டித்தல், இம்சித்தல் முதலிய தோஷமில்லாமை கர்மானுசாரமென்புழி, கர்மானுசாரத்தாற் செய்தலென்பது இங்குகூறிய இச்சைவழி ஒழுகுதற்கு, தடையாதலால் கர்மானுசாரமென்னுஞ் சிவாசாரியரது விவரீதவசனங்கண்டு இவர் கூறுதல் விவர்த்தமாதலறிக. 108 இனி வயிந்தவம் சுத்தமாயதத்துவம் சிவதத்துவம், மூலவிந்து, சுத்ததத்துவம் பிரதான மாயை, சுத்தமாயை, மூலப்பிரகிருதி ஊர்த்துவமாயை, நிட்களம் அருவம், இலயம் சகள நிட்களம், ரூபாரூபம் போகம் சகளம் உருவம், அதிகாரம் என்

பனவெல்லாம் கேள்விப் பேச்சுக் கேட்டெழுதும் தெருப்பாட்டாத லால் அவை சிருட்டிக்கு முறை கூறுமையறிக. 110 சர்வகர்த்ரு வடிவு, சர்ஞத்வடிவ. பூரணத்துவவடிவ, நித்தியதத்துவவடிவ, வியா பகதத்துவவடிவ, சுருங்கியவடிவ, சத்தி என்றார், என்னுமிடத்து சுருங்கியவடிவும் வியாபகவடிவும் ஒரு பொருட்கு உளவதாதல் விருத்தமாகாமை 180-ல் விருத்தமான இரண்டு தருமம், ஒருதருமியில் இருத்தல் பொருந்தாதென்று அவர் கூறும் கூற்றுக்கு விருத்த மாகாமை பற்றியறிக. இனி இங்கு வியாபகம் உண்டென்பது 22 வியாபகத்தன்மை மித்தை என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாத லறிக. இனி 111 பிரகிருதி புத்தி அகங்காரம் முதலிய வெல்லாம் விவர்த்தமாம். 114 இனி கலையிலிருந்து பூதம் தோன் றல் முதலியன விவர்த்தமாம். 115 அதீதம், மாயை அவ் வியத்த மூன்றும் அதீதம் முதலிய வென்று கூறுதலும், நிவிர்த்தியாதிகளின் இயல்பு கூறுதலும், விவர்த்தமாம். 1 கலையைந்தி னும் வியாபிக்கப்படுதல் என்பது 22-ல் வியாபகம் மித்தை என்ப தோடு மாறுபட்டு விவர்த்தமாம். இனி 118 சிவேச்சையினுல் பரா சத்தி சிவத்துவ ஒருமையினை அடைந்ததாகி, ஆதிசிருட்டியில் அதி னின்று வெளிபடுகின்றது என்றும், நாதாதிகள் ஒன்றிலொன்று தோன்றும், விந்துவினின்று சதாசிவன் தோன்றினுன், சதாசிவனில் மகேசுரன் தோன்றினுன். என்றுங்கூறுவனவெல்லாம் மாயாவாத முறையன்றி, சிவாகம முறையன்மையறிக. 120 பிரகிருதியின் பரி ணமியாகிய இச்சகம் சத்தார்த்த தன்மையினுல் இருவகையாம் என் ருர். அது 44-ல் பிரகிருதியின் வேறுகாத பிரமம் பரிணுமி உபாதான மாகாது என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி 121 ஒன்றற்கொன்று வியாப்பிய வியாபகத்துவம் சொல்லப்படுகின்றதென் பது 22-ல் வியாப்பிய வியாபகத் தன்மை மித்தை என்பதோடு மாறு பட்டு விவர்த்தமாதலறிக. அது நிற்க இனி 123 பவுட்காம் என்று கூறுகின்றனர். ஆகமங்கிடந்த மூலையுமறியாரிவரென்பது யாம் இது யரையும் கூறியவாறு பற்றியறியப்படும். அச்சில் வந்த சிவாசாரியர் வியாக்கியானத்திலுள்ள வசனங்களை அச்சில் வாராத ஆகம வசன மென்று அச்சில் வாராத நூல் படியாத சிவஞான சுவாமி அச்சில் வந்த நூல் படித்த இவர்போல்; படியாதவர் என்போர்கள் தம்மைப் புகழும்படி மறைத்துக்கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி 123 நாதரூபமாக சாஸ்திரம் உண்டானது. அதின்கீழ் சிவம் பிரவிர்த்தித்

தது அது விந்துவாம். அச்சத்தியின்கீழ் சிவபிரவிர்த்தித்தது என்றார். சிவம் சத்தியோடு என்றவிடத்து, வரும் சிவமும், சிவம் பிரவிர்த்தித்தது என்றவிடத்து வரும் சிவமும், ஒன்று, அன்று, இனி நாத சொரூபமான சாத்திரம் என்னுமிடத்து வரும் நாதமும், 14-ல் சத்தியில் நாதம் உண்டாயிற்று என்னும் நாதமும், 108-ல் விந்துவினின்று நாதமாகிய சிவத்துவம் உண்டாயிற்று என்னும் நாதமும், சிவம் சத்தி என்னு நாதமும், தம்முள் ஒன்று, அன்று, இனி விந்து விந்து என வரும் விந்துவும், இவ்வாறே ஆம் ஆதலால், இவை எல்லாம் விவர்த்த முறையாகிய அனுகமமுறையன்றி சிவாகமமுறையாகாமை யறிக. அது நிற்க. இனி, 126 முதல் 130 வரை, அச்சில் வாராத சுவாயம்பு, காமிகம், பவுட்கரம், எனவரும் வசனங்களெல்லாம், அச்சிட்ட சிவாசாரியர் வியாக்கியானத்தில் கண்டு, சொந்தம் போல் கூறி, விபரீதப்பொருள் கூறுதலால், அவை விவர்த்தமாதல் யாமுற்கூறுமாறுபற்றி அறிக. இனி கலப்பில்லாமல் அது அதுமாத்திரமாயிருப்பதால் தன் மாத்திரையாமென்றார், என்பது அவைகலந்து அது அதுமாத்திரமாகாமலிருப்பதால் விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி இவற்றின் விரிவைகாண விரும்புவோர் ஆகமங்களில் காண்க என்றார். எனவே, விரும்பாதவர்கள் அனுகமமாகிய மாயாவாதத்தில் காண்க என்பது பெறப்பட்டது. இவர் சிவாசாரியருக்கு ஆகமமுணர்ந்தோரென்று பட்டங்கட்டினதுந்தவிர, அவர் வசனங்களுக்கெல்லாம் விவர்த்தப்பொருள்கூறி தாமும் ஆகமமுணர்ந்தவர்போல் காட்டி நடித்து ஆகமங்களில் காண்க என்கின்றார். ஆதலால், விரிவைக்காண விரும்புவோர் இவர் விவர்த்த வியாக்யானத்தில் காண முடியாமல், ஆகமங்களில் காணில் அவ்வாறே மற்றை சுருக்கத்தையும் ஆகமங்களில் காணலாமே, ஆகவும் சுருக்கமிவர் கூறுவதெற்றுக்கு; ஆதலால் அக்கூற்று விவர்த்தமாதலறிக. அன்றி அது எதார்த்தவசனமானல் அவ்விரிவு கூறும். ஆகமப்பெயரிது, படலப்பெயரிது என்று, விளங்கக்கூறப்படுக. அவ்வாறு கூறப்படாமையால் அது விவர்த்த விவர்த்தமாதலறிக. அதுநிற்க. இனி இச்சூத்திரத்துள்ள கர்மம் என்னும் பதம் அவித்தையாகிய மலமுண்மைக்கு உபலக்ஷணமாம். அம்மலத்தின் லக்ஷணம் பின் நான்காவது சூத்திர உரையிற் கூறப்படும்.

கர்மமென்பது ஜன்மாந்தரார்ஜிதமாய் மாயையிற் பொருந்தி இருக்கும் முக்காரண வினையின் சம்சாரமாகிய புண்ணிய பாபவடிவ

அதிருஷ்டமாம். அபூர்வமெனவும்படும் அதுவே, சரீர சுகதுக்காதிகட்கேதுவும் அநாதியுமாம் என்றார். கர்மமென்னும் பதம், அவித்தையாகிய மலமுண்மைக்கும் உபலக்ஷணம் எனவே, இவர் சிவஞானபோதத்திற்கு விபரீத வியாக்கியானம் பண்ணின சிவசாரியர் வியாக்கியானத்தையே எடுத்துக்கூறி கெட்டாரென்பது பெறப்பட்டது. என்னை 8-ம் சூத்திரத்தில் இந்திரிய மென்பதை அவர் உபலக்ஷணமென்று கூறுவதைக்கண்டு இவர்கர்மம் உபலட்சணமென்று விவர்த்தம் கூறினராதலால், கூறியவாறு இந்திரியமாவது கர்மமாவது உபலக்ஷணமாகாமை மீமாஞ்சை நியாம் உணர்ந்தார்க்கு இனிது விளங்கும். அந்தரகசியம் விவர்த்த வியாக்கியானிகட்கு கூறப்படாது. ஆதலால் கர்மம் உபலக்ஷணமென்பதும், அவித்தையாகிய மலமென்பதும், அவித்தை இலக்ஷணம் 4-ம் சூத்திரத்தில் கூறப்படுமென்பதும் விவர்த்தமாதலறிக. அவித்தையாகிய மலமெனவே அவித்தையாகாத மலமுண்மையும் பெறப்பட்டு உண்மை தோன்றுமாறுங்காண்க. இனி கீழ்வரும் அவ்வியத்தமாகிய பிரகிருதி என்பதும் அவ்வாறாம். இனி அவித்தையாகிய மலமென்பது 147ல் ஆணவமாகியமாயை என்றும், 183ல் மலமாகிய அவித்தை என்றும், 198ல் மலமாதி பாசமைந்தும் மலமாம் என்றும், வருவனவற்றோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி கர்மம் அநாதி என்று கூறுதலும், அக்கருமம் இயல்பு என்று கூறுதலும், விவர்த்தமாதல் யாமுற் கூறியவாறுபற்றியறிக. அதுநிற்க. இனி, இவ்வாறு முதலாவது இரண்டாவது சூத்திரங்களால் கர்த்தாவாகிய பதியின் பிரமாணலக்ஷணங்களும், மாயாகன்மாதி பிரமாணமும் கூறப்பட்டன என்றார் என்பது, சிவாசாரியர் விவர்த்த வியாக்யானத்தில் கண்டு கூறும் விவர்த்தக்கூற்றேயாம். மலமாயாகர்மாதி என்று இவர் முதற் சூத்திரத்தில் ஆதிசத்தம், அதாவது நபுஞ்சகாதி என்பதற்கு, நபுஞ்சகம் முதலிய என்றுகூறி, இலிங்கம் நாலு கூறுதல்போல், பாசமும் நாலு கூறுகின்றார். சங்கராசாரியர் சர்வதரிசனத்தில் கூறும் சைவதரிசனத்தில் பாசம் நாலு கூறுதலால், அவர் சீடராகிய இவரும் நாலுபாசங் கூறினார்போலும். இனி சிவாசாரியர் மாயாகன்மம் பிரமாண லக்ஷணமென்றார். இவர் மாயாகனப்பிரமாணமென்கின்றார். காக்கை தன்பேர்லும் பிணத்தை மகிழ்தல்போல, மூர்க்கரை மூர்க்கர் மகிழுவர், என்னும், பழமொழிக்கு மாறாக, தாங்கதி தேடிய, மூலவியாக்கியானி கூறிய இலக்ஷணத்தை, இவர் வெறுக்கின்றார். இனி சிவாசாரியர் இதில் ஆத்மபசுத்வ பிரமாணம் அசுத்தாத்

துவா உற்பத்திக்கிரமங்களும் கூறப்பட்டன என்று கூறினர். இவர் ஆத்மாபகுத்வப் பிரமாண மென்பதற்கு பிரமாணமில்லை யென்றும், அசத்தாத்வா உற்பத்திக்கிரமமென்பதை கர்த்தாவின் செய்கை என்றும் கூறினர். அது நிற்க. இனி இவை நிரூபிக்கும் வாயிலாக தத்துவமசி மகாவாக்கியத்தின் தற்பத வாக்கியார்த்தம் கூறப்பட்டதென்றார். 161ல் தொம்பத வாச்சியார்ச்சியார்த்தங்கூறி 178ல் அவற்றின் லக்ஷியார்த்தங் கூறுமிடத்து, அவை விவர்த்தமாதல் கூறுதும். அதுநிற்க. இனி மாயாகர்மாதி கூறுமிடத்து, தற்பதவாக்கியங்கூறுதல், அவர்தம் சகப்பிரமவாதம்பற்றிப்போலும். இனி கர்த்தாவாகிய எனவே, கர்த்தாவாகாத பதியுண்மையும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி தத்துவப்பிரகாசிகை என்னும் வியாக்கியானத்திலுள்ள தத்துவ வாக்கியத்தின் வாச்சியார்த்த லக்ஷியார்த்தங்களின் விரிவை காண விரும்புவோர், மாயாவாத வேதங்களில் காண்க. ஆசாரியர் இவ்வாறு கூறாராயினும் அவர் தாமே முன் இவற்றின் விரிவைக்காண விரும்புவோர் ஆகமங்களிற் காண்க என்றார். என்ற உபலக்ஷணம் பற்றி இங்கும் இவற்றின் விரிவைக் காண விரும்புவோர் மாயாவாத வேதத்திற் காண்க என்பது கருத்து. வேதம் ஆகமம் இரண்டும், ஒன்றென்று ஆசாரியர் கூறார். வேதப்புறம் ஆகமம் என்பர். ஆசாரியர் கூறியதறியாமல் பொன்னம்பலப்பிள்ளையவர்கள் ஆசாரியரை மறுத்து இரண்டு மொன்றென்று கூறுவர். அது நிற்க, இதனாலே சிவாசாரியர் வியாக்கியானத்தை சந்திவிக்கிரகஞ் செய்யும் வாயிலாக வியாக்கியான கர்த்தாவான இவ்வுரையாசிரியர், சிவஞானசுவாமி வியாக்கியான கந்திவியாக்யான கர்த்தா முத்தையப்பிள்ளை போல் வாராதலறிக. அது நிற்க, இனி அவதாரிகை வருமாறு. இனி இவ்வுடலில் உடலாதிகளின் வேறாகி அவற்றை யறியுமான்மா ஒன்றுளதென அநுமான அளவையால் சாதிக்கின்றாரென்றார்.

இனி என்பதின் பொருள் என்னவோ அறியேம். ஆயினும், அடுத்த சூத்திரம் முதலியவற்றில் அவ்வாறு கூறுமையால், அது விவர்த்தமுறையேயாம். இனி உடலாதிகளின் வேறாய் ஆன்மா ஒன்றுளது என்பது 66-ல் உடலாதி பொய் என்றதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. முதற்பாகவில் ஆத்மா நானாத்துவம் என்று கூறி, இதில் ஆன்மா ஒன்று என்று கூறுதல் ஏகான்மப் பயிற்சிபற்றி ஆதலால், அவர் அனேகான்மவாதங்கூறினும், ஏகான்ம வாதமாய் முடிதல் காண்க. இனி அநுமான அளவை என்றது, 66 இதில்

வேதஅளவையே பிரமாணமென்பதோடும் 481 மற்றவற்றிலும் சுருதி பிரமாணமென்பதோடும் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி அவர் சூத்திரார்த்தம் வருமாறு. தத்துவங்களெல்லா வற்றையும் இங்ஙனமன்று இங்ஙனமன்றென்று நீக்குதலானும், உட லாதிகளில் எனதென்னும் தன்மையினுதிக்கம் இருத்தலானும், இந் திரியங்களின் ஒடுக்கமாகிய சொப்பனத்தினை அறிதலில் உறக்கத்தில் போகமில்லாமையாலும் சாக்கிரத்தில் அறியுந்தன்மை இருத்தலாலும், சரீரத்தில் யானென்றுஞ் சொற்பொருளாகிய அணுவாகிய சீவாத்மா உளது என்றார். இந்திரியங்களது ஒடுக்கமாகிய சொப்பனம் எனவே அவற்றினது ஒடுக்கமாகாத சொப்பனமும்,யானெனதென்னுஞ் சொற் பொருளாகிய அணுவாகிய சீவாத்மா எனவே, யான் என்னும் சொற் பொருளாகாத அணுவாகாத சீவாத்மாவும் பெறப்பட்டு, உண்மைப் பொருளும் தோன்றுமாறு காண்க. இனி "மமதோத்ரேகாத்" என் பதற்கு எனதென்னும் தன்மையி னுதிக்கமென்றார் என்பது விவர்த்த விவர்த்தமாதலறிக. இனி இதனால் அஞ்ஞானத்மவாதம் முதலிய வாதங்கள் மறுக்கப்பட்டன என்றார். என்றது, அவரது அஞ்ஞானப் பிரமாத்மவாதம்போலும். இனி காரியப்பிரபஞ்சமான இதுவும், கார ணப்பிரபஞ்சமான இதுவும், அல்லவென்று நியதிகளைதற்கு நேதித என்றார் என்று கூறினர். நியதிகளைதலென்பது மாயாவாத முறையே யாம். அல்லது நேதி என்பது, அவர் விற்பத்தியால் நியதிகளையுமென் றும் பொருள்போலும். அதுநிற்க. இனி காரியப்பிரபஞ்சமான இதுவு மெனவே, காரணப்பிரபஞ்சமும், காரணப்பிரபஞ்சமான இதுவு மெனவே காரியப்பிரபஞ்சமும், பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி நியதிகளைந்தது தேகமென்றால், தன்னின்வேறாய் வெவ்வேறு, பெயர்களால் விவரிக்கப்படுதலால் அது ஆத்மா அன்றென்றார். தன் னில் என்பது எதனை? பெறப்படாத உயிரைச்சுட்டும் போலும். 140 இனி உறக்கத்தில் போகமில்லாமைமல் அங்குள்ள அஞ்ஞானம் ஆத்மா என்றால், சாக்கிரத்தில் எல்லாவற்றையும் அறிதலால், அஞ் ஞானத்தின் வேறாய் அறிவு வடிவ் ஆத்மா உண்டென்றார். உறக்க காலத்திலுள்ள அஞ்ஞானமெனவே, உறக்கமில்லாதகாலத்தில் உள்ளது மெஞ்ஞானமென்றும், சாக்கிரத்தில் எல்லாவற்றையும் அறிவதெனவே உறக்கத்தில் கொஞ்சமறிவதென்றும், அறிவுவடிவு ஆத்மா எனவே அறியாமைவடிவு ஆத்மா உண்மையும் பெறப்பட்டு அவை விவர்த்த மாதலறிக. விஞ்ஞானத்மா என்பதை இவ்வாசாரியர் அஞ்ஞானத்மா

என்கின்றார். அது விமலன், அமலன், என்று அவ்வெழுத்திரண்டும், ஒரு பொருட் கிளவில் வருதல் பற்றி போலும், உள்ளபடியே இவர் விஞ்ஞானத்மா என்று கூறினால், பிரமத்தை பாதிக்குமென்று பயந்து, அஞ்ஞானம் பிரமமாகாதென்று கொண்டு, அஞ்ஞானத்மா வென்று 541 அஞ்ஞானம் பிரமத்தின் வேறில்லை என்று தான் கூறியதனை மறைத்துக்கூறினர். கூறினும், அது முறபடியும் கட்டகுடீ, பிரபாத, நியமமாய் பிரமான்மவாதத்தை மறுதத்தலால் "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்பதுபற்றி எவ்வுபாயஞ் சூழ்ந்தாலும் பிரமான்மவாதியாகிய தாமே தமது பிரமான்மவாதத்தை மறுத்தவாறு காண்க. அது நிற்க, இனி இதனால் சாக்கிராதி மூன்றவத்தைகளிலும் நிகழுமியல்புபற்றி, ஆன்மாவினுண்மை கூறப்பட்டது. இது சீவனது தடத்தலக்ஷணமாம். அணுவென்பதும், ஜீவாத்மாவுக்கு ஓர் பெயர் என்றார். சாக்கிராதி மூன்றவத்தைகள் நிகழும் பிரஸ்தாபம் முன்னில்லாமல் சாக்கிராதி மூன்று அவத்தை என்றும், அந்நிகழ்ச்சிபற்றி ஆன்மா உண்டென்றுங்கூறுதல் விவர்த்தமாதலறிக. இது சீவனது தடத்திலக்கணமென்றவிடத்து இதுவென்றது, முன் ஆன்மாவினது உண்மை கூறப்பட்டது என்ற ஆன்மாவின் உண்மையேயாம். ஆகவே ஆன்மாவினுண்மை ஆன்மாவுக்கு தடத்தலக்கணமென்கிறார். அவ்வாறே ஆன்மாவினுண்மை ஆன்மாவுக்குத் தடத்தலக்கணமானால் 7-ல் இது இறைவனது தடத்தலக்கணம், அதாவது முதற்காரணமாதல் பிரமத்துக்கு தடத்தலக்கணமாதல்போல, ஆன்மா ஆன்மாவுக்கு அல்லது, அஞன்மாவுக்கு முதற்காரணமாதல் வேண்டும். அவ்வாறு கொள்ளாக்கால், 7-ல் இவ்வாறு அதாவது பிரமோபதானங் கொள்ளாக்கால் பிரமதடத்தம் பெறப்படாதென்பதுபோல், இங்கே ஆன்மாவின் உடலுக்கு ஆன்மா உபாதான மென்று கொள்ளாக்கால், ஆன்மதடத்தம் பெறுமையால் அது விவர்த்தமாவதூங், தவிர 66-ல் ஆன்ம இன்மை கூறுதலால் அது விவர்த்தமாதலறிக. அது நிற்க, இனி அணு என்பதும் சீவாத்மாவுக்கு ஓர் பெயரென்றார். 62-ல் அறிவு ஆணவமலத்தால் தகையப்பட்டுள்ளபோது அணுவென்று அறிஞர் கொள்வர் என்றவிடத்துக் கூறும் அணுவென்பது, தகையப்படாதபோது அறிஞர் அணுவென்று கொள்ளாமை பெறப்பட்டது. படவே, அணுவென்பது ஓர் பெயரன்றி இருபெயராதலும் ஆகாமையால், அது விவர்த்தமாதலறிக. இனி அணுவென்பதும் ஓர் பெயரெனவே,

அணுவென்னுமை ஓர் பெயரல்ல என்பது பெறப்பட்டு விவர்த்தமாத லறிக. இனி 24-ல் விபு என்பது மித்தை என்று கூறி, இங்கு ஆன்மா விபு என்றும், அது அமித்தை எனறும் கூறுதலே விவர்த்த மாதலறிக. அது நிற்க. இனி மேல் உண்டெனத்துணியப்பட்ட ஆத்மாவினியல்பினைச் சூத்திரார்த்தம் கூறும் வாயிலாக கூறுகின்றார். சிவனாகிய ஆத்மா உட்கருவினும் வேறானவனாயினும், மந்திரியும் அரச னும்போல் அதனோடு கூடினவனாய் அவித்தையாகிய ஆணவமலத்தி னால் தகைக்கப்பட்ட ஞானக்கிரியைகளை உடையவனாய், அவத்தை யைந்தினும் இருப்பவனாவன் என்பது சூத்திரார்த்தமென்றார். இனி வியாக்கியானம் வருகின்றது இச்சீவன் இயற்கையாக நித்தியஞான சொரூபி என்பது தோன்ற, ஆத்மா என்று கூறினார். ஆத்மா என்பது இடையீடின்றி சொல்லுதலில், அதாவது அறிதல் என்னும் தாதுவின் வினைமுதலடியாய்ப் பிறந்ததாதலால், ஆத்மாவென்னுஞ் சொல்லிற்கு நித்தியஞான ஸ்வரூபமான வியாபக வஸ்து என்பதே பொருளாம் என்றார். இந்த விற்பத்தி சிவாசாரியர் விற்பத்தியாதல் காணப்படுகின்றது. 141-ல் மேல் ஆன்மா உண்டெனத்துணியப் படாமையாலும் 33-ல் சிவாசாரியர் வியாக்கியானத்தில் ஆணவப்பிர மாணம் என்று கூறுதலாலும், இவர் அவர் வியாக்யானத்தை யனுசரித் தெழுதுவோராதலாலும் அது விவர்த்தமாதலறிக. இனி உட்கருவியி னும் வேறானவனெனவே, உட்கருவின் வேறாகானென்பதும் பெறப் பட்டு விவர்த்தமாதலறிக. இனி அவித்தையாகிய ஆணவமெனவே அவித்தை ஆகாத ஆணவமுண்மையும் பெறப்பட்டு, உண்மைப் பொருளும் பெறப்படுமாறு காண்க. இனி அவித்தையாகிய ஆணவ மென்பது 144-ல் ஆணவமாகிய மாயை என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி ஏகதேசியாகி ஐந்து அவத்தையினும் இருப்பவனென்பது 62-ல் ஆன்மா வியாபக மென்பதோடு மாறு பட்டு விவர்த்தமாதலறிக. இனி சீவன் இயற்கையாக நித்திய ஞான சொரூபி என்பது 162-ல் அநித்திய அந்தக்கரண பிரதிவிம்பசிதாபாச அறிவாகிய ஜீவாத்மா என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி ஆன்மா என்னும் சொல்லிற்கு நித்தியஞானஸ்சொரூபமான வியா பகத்துவ மென்பது பொருளென்றார், 62-ல் ஆன்மாவிற்கு வியாபகத் துவமுண்டென்பது அவ்வாத்மா பிரமமாதற்கு முன்னில்லை என்ப தாலும் 162-ல் அனித்தியா ஞானமென்பதாலும் 42-ல் வியாபகத்து வம் மித்தை என்பதாலும் விவர்த்தமாத லறிக. அது நிற்க. இனி

ஸ்மிருதியில் 142-ல் எதனால் அடைகின்றதோ எதனால் கொள்கின்றதோ எதனால் புசிக்கின்றதோ எதனால் இருப்பு இடையின்றியதோ அதனால் ஆத்மாவென்று சொல்லப்படும் என்று பேரு மூருமில்லாத மிருதி கூறுமென்றார். யாரேனும் விபரீதமாய் எழுதுவனவற்றை சொந்தம் போல மாறிக் கூறுமிவர் முன் ஆன்மா இடையீடின்றிச் செல்லுதலால் ஆன்மா என்னும் சொற்பொருள் நித்திய ஞானஸ் சொரூபமான வியாபகம் என்றார். அந்த வியாபக முடையதென்பதை இந்தஸ்மிருதி கூறுகின்றதென்றார். ' இதில் நித்திய ஞான சொரூபமாவது வியாபகமாவது கூறப்படாமையறிக. இனி நித்திய ஞானசொரூபமான வியாபக வஸ்து எனவே, அநித்திய ஞான' சொரூபமான வியாபக வஸ்து ஒன்று பெறப்பட வேண்டும். அவ்வாறு பெறப்படாமையால், அது விவர்த்தமாத லறிக. இனி ஆன்மா நித்திய ஞானஸ் சொரூப வியாபகமென்றால், அவ்வியல்பு ஆகாயம், காலம், திக்கு, மனம்களினும், காணப்படுதலால் அவையும் அவ்வாறுதல் வேண்டும், அவ்வாறு கூறாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி ஆத்மாவுக்கு வியாபகத்துவம், உபாதானத்துவம், அருகிருந்துணர்த்துவம் உண்டென்றார். அக்கூற்று விவர்த்தமாதல் முற்கூறுமாறுபற்றி, யறிக. இனி நித்தியஞானஸ் சொரூபன் என்றமையால் ஞானம் நித்தியமாகவே, கிரியை அனித்தம் என்பது பெறப்பட்டது. படவே, அது 141-ல் ஞானக் கிரியை இரண்டும் நித்தியம் என்று அவர் கூறும் கூற்றோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி இயற்கையான நித்திய ஞானஸ் சொரூபம் எனவே, செயற்கையான நித்திய ஞானஸ் சொரூப முண்மையும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி 142-ல் அவ்வான்மா நித்திய ஞானஸ் சொரூபனுயினும், அனுதிமல சம்பந்தத்தால் ஞானமில்லாதவனுய், அந்த ஞானத்தினை பெறுமாறு, அந்தக்கரணங்களோடு கூடி அவத்தை ஐந்திலும் இருப்பவனுவன் என்றார். அவ்வாறே நித்திய ஞானஸ்சொரூபனுயினும் மல சம்பந்தத்தால் ஞானமில்லை என்பது, சூரியன் நித்திய ஒளியை உடையவனுயினும், இருள் சம்பந்தத்தால் ஒளி இல்லை என்பது போலும். ஆதலால் அது சிவாகமதூஷணமாதலறிக. இவர் இவ்வாறு விவர்த்தங்கூறிச் சிவாகம தூஷணஞ் செய்தல், 'காணுந் தோறும் பொன்னம்பலப் பிள்ளையவர்கள் இவரைப் பற்றிக் கூறும் நாஸ்திகமாத்மியங்கள் நமக்கு ஞாபகப் படுகின்றது. அது நிற்க. இனி மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும், இந்த நான்கின் விருத்திகளை உடைய உள்ளமெதுவோ அது அந்தக்கரண

மென்றார். அவ்வாறு கூறும் அனுகமம் எதுவோ, பெயரிலாகமமோ ஆகமுணர்ந்தோர்வாக்கோ அறியோம். 112-ல் புத்தியாதி மூவடிவி னது எது, அது சித்தமென்றது. இங்கு சித்தமாதி நால் வடிவுடைய உள்ளம் என்றதோடும் 144 உள்ளமல்லாத நான்கு அந்தக்கரண மென்பது, உள்ளமானது, அந்தக்கரண மென்பதோடும் மாறு பட்டு விவர்த்தமாதலறிக. 143 இனி இந்தத்தன்மைய ஆன்ம இயல்புக்கு பிரமாணம், அஸ்வதந்திரன் என்னும் ஆசர்வ ஞானோத்தரமும், மனம், புத்தி, யகங்காம், சித்தம் என்னும் சிவ கீதையும், சிவபுராணமும், கடவல்யமுமாமென்று கூறினர். அவர் கூறிய பிரமாணம், ஆன்மை இயல்பைக் கூறாமையால் அதற்கு அவை பிரமாணமாகாமை யறிக. 145-ல் சிவகீதைப் பொருள் சர்வஞானப் பொருளோடும் கயிலாசசங்கிதைப் பொருளோடு மாறுபடுதலாலும், கயிலாசசங்கிதையோடு கடவல்லி மாறுபடுதலாலும், அவை பிரமாண மாகாமை அறிக. இனி 145-ல் சீவனது முன்னுள்ள வியாபகத்தினை மறைத்து அணுத்துவமாக்குதலால், ஆணவம் அணுவெனப் படுமென் றார். அது 62-ல் வியாபகம் முன்னில்லாமல் பின்னே அதாவது பிரம மாகும் காலத்து வியாபகம் உண்டாகின்றது என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி அவித்தையானது. விசுத்தனான ஆன்மா வின் பசுத்துவ விவகார ஏதுவாதலால் மலமென்றும், ஜீவனது பந்தத் திற்கு மூலமாய் இருத்தலால் மூலமலம் என்றும், ஜீவனோடு உடன் தோன்றியதாதலால் சகசமலம் என்றும், விவகரிக்கப் படுகின்றது. அம்மல லக்ஷணம் காமிகத்தில் ததாதி என்று கூறப்பட்டது என்றார். சிவாசாரியர் வியாக்கியானம் 40-ம் பக்கத்தில் காமிகமென்ற இவ்வச னம் காணப்படுதலாலும், அவர் அவித்தை விசுத்தனான ஆன்மாவின் பாசத்துவ ஏதுவாதலால் மலமென்றும், பந்தமூலமாதலால் மூலமல மென்றும், ஜீவனோடு உடன் தோன்றுதலால் சகசமலம் என்றும் கூறி, இவர் கூறுமவற்றிற்கு இது பிரமாணமென்று கூறாமையாலும், இவர் அவர் கூற்றுக்கு மாறாகக் கூறுதலாலும். இவர் கூறும் பொருள் விப ரீதமாதலறிக. ஆதலால் ஆணவம், அவித்தை, விசுத்தன், பசுத்துவம், மலம், மூலமலம், சகசமலமென்பன வெலாம், மாட்டுக்காரர் பாட்டாத லறிக. இனி அது அவ்வாறானால் விசுத்தனான ஆன்மாவின் பசுத் தத்துவத்துக்கேது. அந்தக்காரணமென்பது இவர் கொள்கை யாத லால் அந்தக்கரணமும் மலமாதல்வேண்டும், அவ்வாறு கூறாமை யால் ஆணவமுதலிய பெயர்பற்றிக் கூறும் கூற்று மூலமலம், சகசமலம்

அந்தக்கரண பிரதிவிம்பமெனபவற்ருேடு மாறுபட்டு விவர்த்தமாத லறிக, 146பர் யாவர் என்னும், மிருகேந்திரவசனம் ஆன்ம இயல்பு கூறுகின்றதென்றும் விபரீதப்பொருள் கூறுகின்ருர். இது சிவாசாரி யர் வியாக்கியானம் 1401-ல் முன்கூறும் ததாதி என்றும் காமிகவச னத்தின் பின் காணப்படுகின்ன்றது. அந்த வசனத்தை அவர் கூறியது போல் மிருகேந்திரவசனத்திற்கு அடுக்கக்கூருமல் விபரீதமாக சர்வ சாரஞ், சூதகீதை, என்னும் வசனங்களின் கீழ்கூறி விவர்த்தப்பொருள் கூறுகின்ருர். இவையெல்லாம் ஆன்ம இயல்பு கூருமையாலும், சிவா சாரியர் 1331ல் ஆணவப் பிரமாணம் கூறுகின்றன என்பதாலும் அது விவர்த்தமாதலறிக. இனி சீவனேடு உடன் தோன்றியதெனவே அது மாயாவாத முறைப்படி சீவன்தோன்றியவுடனே அவித்தையும் தோன் றியதென்னுமுறையேயாம். ஆகவே, அவித்தை, அழுக்கு, ஆகாவது அசுத்தம் எனவே, அவித்தையாகிய அசுததத்தோடு உடன்தோன்றிய ஆன்மா அசுத்தமேயாம். ஆகவே, சீவன்தோன்றியபொழுதே அசுத்த னுதல் பெறப்பட்டது. படவே சீவன் அசுத்தனுயிருக்கவும் விசுத்த னை ஆன்மவென்பது, எத்தனேயோ பாஷை படித்தவர்கள் பேசும் பேச்சாமோ, அசுத்தம் சுத்தம், சுத்தம் அசுத்தம் என்று, அறிந்து வேண்டாதவாறு கூறி, இடர்ப்படாத இவர் 148ல் அவித்தியா சமா தானங்கூறினபோது, இஃதறியாதார்தத்தமக்கு வேண்டியவாறேகூறி இடர்ப்படுவர், அவர் கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூல்களிற்காண்க என்ருர். பேரில்லாத பெருநூல் மாயாவாத நூலாயினும், யாமவ்வாறு வெறுங்கூற்றுக்கூருமல், ஐந்துவரிக்குள் இவர்கூற்றுக்களின்கணடன மண்டனங்காட்டினும். இவர்போல் பெரு நூலென்று படாடோபம் கூருமையும் தவிர, அச்சில் வந்த ஆசாரியர் வசனங்களே, அச்சில் வாராத வசனம் ஆருமறியாதன யாமறிந்தோம் என்று கூறுகிற்றிலம். அது நிற்க. 141-ல் முதலிய என்பதால் பாசம் அசுத்திபந்தம், வியாகாதம், களங்கம், மோகம், கேவலம், ஆவரம், தமசு, சடம், படலம், நிரோதம், ஆசாதனங்களும் கொள்ளப்படுமென்ருர். இவை சிவாசாரியர் வசனமாதலறிக. அது நிற்க, இனி இங்கு ஆணவமாகிய மாயையினை ஏகமென்றமையால், ஒரு ஆத்மாவுக்கு ஞானத்தால் பந்தமொழியில் எல்லோரும் முத்தராதல் வேண்டும், அத ஞல் பந்த மோக்ஷ வியவஸ்தை சித்தியாதாகுமேயெனில், அங்ஙன மன்று. இருளொன்றேயாயினும் அம்சபேதத்தால் பலவற்றை மறைத்து பிரகாச முண்டாயவிடத்து மாத்திரமே நீங்கி, ஒழிந்த

விடத்தில் மறைத்திருப்பது போல, அவித்தையுமொன்றேயாயினும்
அம்சபேதத்தால் பலவாய்ப் பலஆத்மாக்களை மறைத்து, ஞான
முதிக்கப்பெற்ற ஆன்மாவில் மாத்திரம் மறையாமல், பிறஆத்மாக்
களை மறைத்தே நிற்றலால், பந்த மோக்ஷ வியவஸ்தை பொருந்தும்.
இஃதறியாதார்தத்தமக்கு வேண்டியவாறே கூறியிடர்ப்படுவர். அவர்
கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூல்களிற்
காண்க என்றார். பந்தமோக்ஷ வியவஸ்தை பொருந்துமென்பது,
140-ல் பந்தமோக்ஷ மிரண்டு மில்லையென்று அவர் கூறுங் கூற்றோடு
மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி யிருளொன்றே யாயினும்,
அம்சபேதத்தால் பலவற்றை மறைக்கும் என்னுமுவமை உவமேயத்
தோடுமாறுபடும். அதாவது, இருளொன்றேயாயினும் என்னும் உவ
மானம்போல் கூறாது, அவித்தையும் ஒன்றேயாயினும் என்று
உம்மை கூட்டியும், அம்சபேதத்தால் பலவற்றை மறைத்து, என்ற உவ
மானம்போல் கூறாமல், அம்சபேதத்தால் பலவாய், பலவாத்மாக்களை
மறைத்து என்று உவமேயத்திற் பலவாய் என்னும் சொல்கூட்டியும்,
இவ்வாறு தமக்குவேண்டியவாறே கூறி, இடர்ப்பட்டனர். ஆதலால்
இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி யிடர்ப்படுவர். இவர்
கூற்றுக்களின் கண்டன மண்டனங்களெல்லாம் பெருநூல்களிற்
காண்க. என்று கூறுதற்கு இவரே உரியவர். ஆயினும், யாம் சிறு
நூல்களிற் காண்க. என்றுங்கூறாமல், அவ்வாறு கூறுமவர் கூற்றுக்
குள்ளேயே அவர் கூற்றின் கண்டனமண்டனங்கள் காட்டினும். ஆணவ
மாகியமாயை, ஆணவமாகிய அவித்தை, ஆணவமாகிய கர்மம் என்
றென்று, இவர் மாறிக்கூறி இஃதறியாதார் தத்தமக்குவேண்டிய
வாறே கூறி இடர்ப்படுவர். இவர் கூற்றுக்களின் கண்டனமண்டனங்க
ளெல்லாம் இச்சிறுநூலிற்றானே காண்க. இவர் பெருநூலிற்காண
என்றென்று நடிப்பனவெல்லாம் தெருப்பாட்டாதலறிக. இஃதறி
யாதார் என்று இவர் தூஷித்துக்கூறியது, சிவாகமிகள் சிவாகமிகளைப்
பூஷித்தல்போல் மறைந்து தூஷிக்குமிவர், ராவணசன்னியாசம்நியா
யம்பற்றி மெல்லமெல்லவந்து வெளிப்பட்டுத் தூஷித்தார். அதுநிற்க.
149-ல் இனி, அம்மலத்தின் பேதம் பவுட்கரத்துக் கூறப்படுவ
தென்று விவரீதப்பொருள்கூறி; அச்சாகாத வசனமென்று அச்சுவச
னங் காட்டினார். அதுநிற்க. 147-ல் இனி அவித்தையும் ஒன்றே
யாயினும், அம்சபேதத்தால் பலவாய் என்னுமந்த அவித்தைபேத
மென்று, அவர் அநேகமங்கூறுமல்லது மலத்தின்பேதம் ஆக

மங்கூறுமையறிக. அவித்தையு மொன்றேயாயினும், எனவே வித்தை யிரண்டாகாமல் யொன்றுதலுந் தவிர, அவித்தையுமொன்றே என்று பொருள்படும். அவித்தை வித்தைகள் எல்லாம் சகல வித்தியாரண்யமயமாகிய பிரம நிஷ்டர் கூறும் பெருநூல் கூறும் போலும். இவரை பொன்னம்பலப்பிள்ளை அவர்கள், . புது வித்தியாரணியா என்பார். வித்தியாரணியர் பிரஸ்தாபம் அவரறியாதபடியால் கூறுமல் போனர். பழைய வித்தியாரணியருக்குகூட இவ்வளவு பரிபாஷைவல்லவ் மிருக்குமென்று நாம் நம்பவில்லை. ஒருக்கால் இருந்தாலும் பொன்னம்பலப்பிள்ளையவர்கள் தானபிப்பிராயப்பட்டதே உண்மை என்றதுபோல, அதாவது சிவஞானசுவாமி அச்சுள்ள காலத்திலிருந்தால் இன்னும் அதிகமாய்ப் படித்திருப்பாராலும், குப்புசாமிராசு சிவஞானசுவாமியிலும் கல்வியில் பெரியவரென்று பட்டங்கட்டினதுபோல, இவ்வாசாரியர் வித்தியாரணியரென்று கூறுவதைப்பற்றி நிராட்சேபணை என்பதே எனதபிப்பிராயம். அது நிற்க. இனி அவித்தையும் பலவாய் என்னும் உம்மை பிரமம் பலவாதலேயன்றி, அவித்தையும் பலவாம் என்று கூறலுமொன்று. இதுவே, ஆசாரியர் கருத்தாம். அது நிற்க, இனி இங்கு கூறும் அவத்தை ஐந்தாவது சாக்கிர முதலிய ஐந்தாம். அது மண்டலப் பிரமாணத்தில் அறியப்படுமென்றார். இங்கு அவத்தை ஐந்து யென்றது, சாக்கிராதியல்ல. அது அசிதாகமத்தில் கூறப்படுமாற்றால் அறிக. 501 தொடங்கி 512 வரை சாக்கிராதி ஐந்து அவத்தையும் 512-ல் இவ்வைந்து அவத்தைகளின் தானங்களும் காரணங்களும் 155-ல் இவை யெல்லாம், சகல கேவல சுத்தமென்று மூன்று வகை 156-ல் இவ்வவத்தைகள் மூவகை அணுக்களுக்கும் சாதாரணம் 1 மூவகை அணுக்களாவார் என்று இவ்வாறு அவைகளுக்கு விவர்த்தப் பிரமாணவசனங்கள் காட்டி நடித்தார். 501-ல் சாக்கிராவத்தையில் பதினன்கு கரணம் என்னுமவர் சுருதி விவர்த்தமாதல் 551, 541-ல் முப்பத்தைந்து கரணஞ் சாக்கிரத்தில் என்பதுபற்றி யறிக. இவ்வாறே அவர் சுருதி கூறும், சொப்பனம், சுழுத்தி, சுரியங்களும் விவர்த்தமாதல் சிந்தியத்துள் கூறுமுறைபற்றி யறிக. இனி 541-ல் அசிந்தியங் கூறுகின்றார். இந்த வசனத்தை சிவாசாரியர் சிந்தியாகம வசனமென்கின்றார். இவர் ஆகமப்பெயர் மூலையும் அறியாதவர். ஆனபடியால் சிதாகமத்தை அசிதாகமமென்றும், சிந்தியத்தை அசிந்தியமென்றுங் கூறினர். துவிதம் அத்துவிதமாதல் அவர் முறையா

யினும், சிந்தியம் அசிந்தியமாகாமை, அது அவர் நூலாகாமை பற்றி யறிக. இனி நாரதபரிவிராசம் இவை ஒவ்வொன்று நன்னான்கு கூறும். நிர்க்குணமான துரியாதீதத்தில் இவ்வாறு பாகுபாடில்லை என்று கூறும் இவற்று இலக்கணங்களை பிறவிடங்களிற் காண்க. இஃதன்றி சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, மூர்ச்சை, மரணம், என்று ஐந்தவத்தை யுளவென்று பைங்கலமும், அப்பிரபுத்தன் புத்தன், புத்தியமாளன், பிரபுத்தன், சுப்பிரபுத்தன், என்று ஐந்தவத்தையுடைய னென்று இலக்ஷணங்களோடு சுவச்சந்தபாரமேசுரமும் கூறுகின் றனவென்றார். 521-ல் முமிகசாக்கிரம் என்னும் வசனம், சிவாசாரி யர் வியாக்கியானத்தில் காணப்படுகின்றது. அதற்கு இவர் விபர்த்தங் கூறினார். 149-லும் 155-லும் அப்பிரபுத்தன் முதலாக ஐந்த வத்தை சுவச்சந்தபாரமேச்சுரம் கூறுகின்ற தென்றார். சிவாச்சாரி யார் வியாக்கியானம் 143-ல் அவ்வசனங் காணப்படுகிறது. அத னுள் அபுத்தஃ என்பதற்கு, அப்பிரபுத்தன் என்று விபரீதப் பொருள் கூறுதல் மேலும், அவை அவத்தை என்பதும் விபரீதமாதலறிக; இனி இவற்றின் இலக்கணங்களை பிறவிடங்களிற் காண்க, இஃதன் றிச் சாக்கிராதி ஐந்தவத்தைகளுளவென்று பைங்கலங் கூறுமென்றார். இவர் சாஸ்திரியும் நையாயிகயுமாதன் மேலும், வையாகர்ணியுமென்பது முற்கூறினும். ஆதலால் இவற்றினிலக்கணங்களைக் காண்க. இஃதன்றி ஐந்தவத்தைகளுள் ஒன்றும், வியாகரண பாண்டியத்தியங்கூறுங்கூற்று வியக்கற்பாலதேயாம். பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் கூறியபடி வேதாகமமொன்றென்று கூறுமைமேலும், வேதம் இரண்டுவித மென்கின்றார். அதாவது பைங்கலங்கூறிய சாக்கிராதி ஐந்தவத்தை வேறு, நாரத பரிவிராசங் கூறும் சாக்கிராதி ஐந்தவத்தை வேறு, இவற் றின் இலக்கணங்களை பிற இடங்களிற் காண்க என்றார். முன் இவற் றின் பிரிவை ஆகமங்களிற் காண்க என்றும், அதன்பின் உபலக்ஷணம் பற்றி வேதங்களிற் காண்க என்றுங் கூறினவர், இங்குப்பிற இடங்க ளிற் காண்க என்கின்றார். ஒருவிதமாய்க் கூறாமல் பலவிதமாய்க் கூறும் மாயாவாதாமே பிறவிடம். ஆதலால் பிறவிடமாவது, இடத்திற்குப் பிற விடம்; அதாவது முன்னிடம் பின்னிடங்களின் என்றவாறு. முன்னி டம் பின்னிடங்களில் இல்லாமையால் இதன் கீழுமேலுமே பிறவிட மெனப்படுமாதலால், இதன்கீழ் இலக்ஷணங்களோடு என்னுமவ்வில க்ஷணம் அறிந்து கொள்ளப்படும். ஆயினும் 156-ல் அவற்றினிலக்கண முதலியவற்றை விரிந்த நூல்களிற் காண்க என்று அவர்

கூறும், அதர்த்தமா வென்னும் சுவாயம்புவவசனம் சிவாசாரியர் வியாக்கியானம் 147-ல் காணப்படுகின்றது. ஆதலால் விரிந்த நூலென்பது சிவாசாரியார் செய்த விபரீத வியாக்யான நூலே போலும். இனி, அதர்த்தமா வென்னும் வசனம் ஒன்றெழுதி ஆதி சத்தமுங் கூடி சுவாயம்புவாதிகள் கூறுமென்றூர். சிவாசாரியர் சுவாயம்புவம் ஒன்றிலேயே உள்ளதென்கின்றூர். சிவாசாரியர் ஆகமங்களை நேரே பார்த்தெழுதினவ ரானபடியாலும், இவர் ஆகமங்களை நோக்கக் காணுமல் அவர் எழுதினதைக் கண்டு எழுதி, அச்சில் வாராதவைகளை எழுதுகின்றேனென்று தெருப்பாட்டு பாடுபவராதலாலும், சுவாயம்புவ வசனமொன்றேயன்றி, பிற ஆகமவசன மெழுதாதபடியாலும், சுவாயம்பு வாதிகளென்பது விவர்த்தமாதல் மேலும், கேவலம் ஐந்து, சகலம் மூன்றும், ஒன்றென்றைந்து சுத்தம் ஐந்து அவற்றினிலக்கண முதலியவற்றை விரிந்த நூல்களில் காண்க என்பதும், இவ்வவத்தைகள் மூவகை அணுக்களுக்குஞ் சாதாரணம் என்பதும், விவர்த்த விவர்த்தமாதலறிக. இனி 156 மூவகை அணுக்களை சிவச்சம் என்பன முதலிய ஆகம வசனங்களால் காண்க என்றூர். என்ற அவ்வசனம் சிவாசாரியர் 148-லும் 160 வியாக்யானஞ் சம்சித்திகோ என்னும் வசனம் சிவாசாரியார் வியாக்யானம் 148-லும் காணப்படுகின்றன. இவற்றை சிவாசாரியர் வேத வசனமென்றுவது ஆகமவசனமென்றுவது பெயர் கூறவில்லை. இவர் ஆகமம் ஆகமம் என்று இரண்டு பொதுவாகமப்பெயர் கூறுகின்றூர். அவரெழுதிய வசனத்தை எடுத்தெழுதி அவர் கூறுதவாறே பெயர் கூருமல், விடாமல், ஏதேதோ ஆகம மூலையெல்லாந் தெரிந்தவர் போல் பெயர் கூறிபாகவஞ் செய்கின்றூர். சர்வசாஸ்திர பாரங்கனுகிய எமக்கு முன்னே இவர் காட்டுஞ் சாலமெல்லாம் பலிக்குமா கொஞ்சமும் பலியாது. ஆதலால் ஆகமம் ஆகமமென்று அபிநயித்தலும், ஏகாணுவாதி மூவணுக்கூறுதலும் விவர்த்த விவர்த்தமாதலறிக. 157 158 159 இனி வித்தியாரணியர் திருவாக்கென்னும் தெருவாக்குகள் முழு விவர்த்தமாதல் முகவுரையில் அவர் வாக்கு, விருத்தம் காட்டும் வாயிலாக காட்டினும். ஆதலால் மறுபடியும் விவர்த்தமாதல் கூறவேண்டாம் ஆயினும் கூறுகின்றும் 149-ல் மலத்தின் பேதமென்பது 147-ல் மலத்தின் பேதமென்பதோடும் அவத்தை யென்பது 146-ல் சாக்கிராதி மூன்றவத்தை என்பதோடும் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி 159-ல் பாச மூன்றால் பந்திக்கப்பட்டவர்கள்,

கலாதிகளின் சம்பந்தத்தால் சகலராகின்றூர். அச்சகலருக்குள் 118 பேர் சிவானுக்கிரகத்தால் மந்திரேசுரராகின்றூர் என்றும், வித்தியா ரண்ணியர் கூறும் வசனம் விவர்த்த விவர்த்தமென்பது பிரளயாகலரிற் பக்குவப்பட்ட சிகண்டர் முதலிய பதினெண்மரும், வீர பத்திரர் முதலிய நூற்றுவரும், அவ்வதிகாரமுடையரென்று சூட்சுமாகமம், மிருகேந்திராகம முதலியன கூறுதல் பற்றியறிக. அது நிற்க இனி 161-ல் "மனோவாகனு சேஷ்டயா" என்பதற்கு மனோ வாக்குக்களை அனுசரித்துச் செவ்வையாய் ஆர்ச்சிக்கப்பட்ட என்றூர் மனோ வாக்குகளுக்கு ஆதாரம், காயமே ஆனபடியாலும், வாக்கு சேட்டை நிகழுமானுல் காயச்சேட்டையும், காயச்சேட்டை நிகழுமானுல் வாக்கு சேட்டையும் நிகழும். ஆதலாலும், காயச்சேட்டை நிகழாமல் வாக்கு சேட்டை நிகழாமையறிக. மாட்டுக்காரர் பாட்டுக்கேட்டு பாடுகிறவருக்கு இப்பாட்டாவது, இப்பாட்டின் பொருளாவது சரி, சரியின்மை தெரியவருமா, வாக்தனு சேஷ்டையா என்று பாடாந்தரங் காணப்படுகின்றது. ஆதலால் வாகனு சேஷ்டை என்பது விவர்த்தமாதலறிக. 156-ல் சிவார்ச்சவென்னும் வசனத்தில் "பசவதிரி விதேஞ்ஞேப" என்னும் படாததை மாற்றி "சீவாச்பதிரி விதாக்ஞ்ஞேபா" என்று பாடினூர் இவ்வாறு மூலங்காணுமல் விவர்த்தபாடம் பாடுவதுந்தவிர அச்சிட்டுள்ள சிவாச்சாரியர் வியாக்கியானத்திற் கண்டெழுதுவதை மறைத்திருப்பதுந்தவிர, தமது சொந்தம் போற் காட்டி அவர் சுவாயம்புவம் என்றன முதலியனவற்றை, இவர் சுவாயம்புவாதி சுவச்சந்தாதி என்றென்று கூறுவனவெல்லாம் விவர்த்தமாதலறிக. அது நிற்க. 161 இனி இவ்விரண்டு சூத்திரங்களால் துவம் பதவாச்சியார்த்தம் கூறப்பட்டதென்றூர் 178-ல் துவம்பத லக்ஷியங் கூறியவிடத்து அதன் விவர்த்தங் கூறப்படும். அது நிற்க.

இனி அவ்வாத்மா அறிதலும், சுவதந்திரமாயின்றி சிவனுலே அறியுமென்று கூறுகின்றூர் என்று அவதாரிகை கூறினூர். அவ்வாத்மா என்பது எவ்வாத்மாவை? முற்சூத்திரத்தில் ஆத்ம பிரஸ்தாபமே இல்லாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி அதற்கு முற் சூத்திரத்தில் யான் என்னும் சொற்பொருள் ஆகிய அணுவாகிய ஆத்மா என்று கூறப்பட்டதெனில் அவ்வாருனுல் அணுவாகிய ஆத்மா நியதிகளையும், ஆத்மா யானென்னுஞ் சொற்பொருளாகிய ஆத்மா, அஞ்ஞானத்மா, சீவாத்மா, நித்தியஞான சொருபாத்மா என்று ஆத்மாக்கள் பலவுளவாதலால், இங்கு இதுவென்று

விதந்து கூறாமல், அவ்வாத்மாவென்று ஒன்றன் சுட்டால் கூறுதலால் அது விவர்த்தமாதலறிக. இனி அறிதலும் என்னும் உம்மை புசித்தலேயன்றி, யறிதலுமென்று பொருள்படுமென்றால், அஃதன்று. அவ்வாறேல். இது இச்சித்தல் முதலியவற்றையுந் தழுவுமாதலாலும், அவற்றை முற்கூறாமையாலும் உயிர்போக்கா என்று முற்கூறப்படுதலாலும் அறிதலுமென்னுமும்மை விவர்த்தமாதலறிக. இனி சுவந்தரமேயின்றி சிவனாலே அறியுமென்பது விவர்த்தமாதல்; சுதந்தரமா யறிதலென்று அவர் தாமே பின்னே கூறப்படுமிடத்து கூறப்படும். அது நிற்க. இனி அவர் சூத்திரார்த்தம் வருமாறு 162 இந்திரியங்கள் விஷயங்களை புருஷனாகிய சீவனால் அறிகின்றன. அச்சீவனும் தானே அறிவதில்லை. சம்புவினால் அறிகிறான். அதனால் சீவன் விகாரியாவனெனில் விகாரியாகான். அச்சிவின் காந்தம் இரும்பினைச் சேட்டிப்பிப்பதுபோலச் செலுத்துகிறானென்றார். புருஷனாகிய சீவனெனவே புருஷனாகாத சீவனுண்மையும் பெறப்பட்டது. அவர் கூறும் மற்றைப் பொருளும் இவ்வாறே விவர்த்தமாதலறிக. இனி அவர் வியாக்யானம் வருகின்றது. இதனால் இந்திரியவாயிலாகப் புருஷனறிவதுபோல் சீவன் வாயிலாக சிவனே யறிகிறான். சீவனுக்கு சுதந்தரமான அறிவில்லையென்பது, பெறப்பட்டதென்று ஏவகாரங் கூட்டிக் கூறினர். இந்திரிய வாயிலாக புருஷன் அறிகின்றானென்பது, சிவாச்சாரியர் வியாக்கியான வாயிலாக குப்புசாமி ராசுவே வியாக்கியானஞ் செய்தார் என்பதுபோலும். இனி இந்திரியத்திற்குச் சுதந்தரமில்லை. புருஷனுக்கே சுதந்தரமென்பது பெறப்படும். அதுபோல சிவாச்சாரியருக்கு சுதந்தரமில்லை. குப்புசாமிராசுவுக்கே சுதந்தரமென்று பெறப்படுமானால், வியாக்கியான மிரண்டாதல் கூடாது மேலும், குப்புசாமிராசுவானவர் வசனங்களைதான் சுதந்தரமாயறிதலில்லாமல், சிவாச்சாரியர் சுதந்தரமா யெழுதிய வசனங்களை யெடுத்தெழுதி சிருட்டித்த வியாக்கியானமே இவர் வியாக்கியானமாதலால் சுதந்தரம் அவருக்கில்லை. இவருக்கேயுண்டென்று பிரிநிலை ஏகாரத்தால் கூறுவதெவ்வாறு. ஆதலாற் சீவன் வாயிலாக சிவனே அறிவனென்னும் அவ்வேகாரத்தால் ஆன்மா அறிவிலி என்பதைக் குறிக்குமல்லது, சுதந்தரமில்லாமை பெறப்படாமையால் அது விவர்த்தமாதலறிக, அவ்வாறு விவர்த்தமாதல், அவர் திட்டாந்தம் பற்றியுங் காட்டுதும். அவர் கூறும் திட்டாந்தம் வருகின்றது. சூரியன் நேரே பிரகாசித்தற் கேதுவாகாத இருட்டறையிலுள்ள ஒரு பதார்த்தத்தினை ஒரு

கண்ணுடியினது சாயாப்பிரகாச வாயிலாக விளங்குவதுபோல, சிவன் அவித்தையினுல் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை, அந்தக் கரண பிரதிவிம்பசிதாபாசவறிவாகிய சீவாத்மாவின் வாயிலாக அறிவனென் பதனுல் பொருந்துமாறு காண்க என்றுர். இனி இத்திட்டாந்த தாட் டாந்தங்களின் பொது வியல்பை முன்விசாரிப்போம். சூரியன் உவ மானம் சிவன் உவமேயம் 'இருட்டறை உவமானம்' அவித்தை உவமே யம், இருட்டறைப்பதார்த்தம் உவமானம், பிரபஞ்சவிஷயம் உவமே யம், கண்ணுடிச் சாயை உவமானம், அந்தக்கரணபிரதிவிம்பசிதாபாச அறிவாகியசீவாத்மா உவமேயம் விளக்குதல், உவமானம் அறிதல், உவ மேயமாம். இனி சூரியன் விஷயங்களை தான் அறியாமல் பிறர்க்கு விளக்குவதுபோல், சிவம் விஷயங்களை தான் அறியாமல் சீவாத்மா வுக்கு விளக்கவில்லை. அச்சீவாத்துமாவுக்குரிய விஷயங்களை சீவாத்மா அறிய ஒட்டாமல் தானே யறிகின்றுன். இனி அவ்வாறு சூரியன் பிறர்க்குரிய விஷயங்களை பிறரறிய ஒட்டாமல் தானறியவில்லை. ஆத லானும் அதனுல் உவமான உவமேயம் மாறுபடுமாதலானும் அது விவர்த்தமாதலறிக. ஆதலால் அவர் மனம்போனவழி போய்யிவ்வாறு தமக்கு வேண்டியவாறே கூறி, பிரமம் தன்னுடைய அவித்தையினுல் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை அந்தக்கரணபிரதிவிம்பசிதா பாசஅறிவாகிய சீத்துமா வாயிலாக வறிதலுக்கு பெரியோரும் அறி ஞரும் இதையே திட்டாந்தமாகக் கொள்ளுவரென்று கூறினுல், அஞ் ஞானியும் சிறியோருமாகிய தாங்கள் அவ்வாறே யொப்போலை எழுதிக் கொடுத்துவிடுக. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறே கூறி யிடர்ப்படுக. அவர் கூற்றின் கண்டன மண்டனங்களெல்லாம் பெரு நூல்களிற் காண்க. கண்டு பிரமநிஷ்டனுஹாகுக. இனி பிரமம் அவித்தையினுல் மறைபட்ட பிரபஞ்சத்தை யெனவே, பிரமத்தின் வேருகாத அவித்தையாகிய அவரதஞ்ஞானம் பிரமத்துக்கு எதிரி யாய் வந்து, அந்த பிரமம் அறியும் பிரபஞ்சத்தை அறிய ஒட் டாமல் தடுக்கின்றது என்பது பெறப்பட்டது. அது 54-ல் அஞ் ஞானம் பிரமமே, அஞ்ஞானம் பிரமத்தின் வேறில்லையென்று கூறுவ தோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. ஆனுல் சித்தாகிய பிர மம் மாறுபட்டுச் சடமாகிய உலகமாதல்போல, பிரமமாகிய அஞ் ஞானம் தனக்குத்தானே மாறுபட்டு தன்னைத் தானே தடுத்தலு மாகும்போலும். அது நிற்க. இனி இருட்டறையாவது ஒளி இல் லாத அறையாம். ஆகவும், அவர் கண்ணுடிவைத்துள்ள அறையை

யிருட்டறை யென்கின்றார். கண்ணாடிவைத்துள்ள அறையில் அக் கண்ணாடிப் பிரகாசம் இருளையோட்டி அங்குள்ள பதார்த்தங்களை விளக்குதலால் அது ஒளி அறையாகுமேதவிர இருட்டறை எனப் படாது. இவர் சூரிய கிரணம் புகாமையால் அதை இருட்டறை என்கின்றார். அவ்வாறானால் சூரியனில்லாத இரவில் விளக்கிருக்கும் அறையும் அவ்வாறே இருட்டறையாதல்வேண்டும். ஆதலால் அவ் வுவமானம் விவர்த்தமேயாம். ஆகவே, உவமேயமும் விவர்த்தமாத லறிக. இதனால் அவருடைய அலங்கார சாஸ்திரவன்மையும் இனிது விளங்கும். அதுநிற்க. இனி, 163-ல் சீவனுக்குச் சுதந்தரமில்லாமை யால், சிவனறிவனென்பதற்கு அவர்கூறும் பிரமாணங்கள் வருகின் றன. எதனால் எல்லாவற்றையும் அறிகிறானோ, அதனை எதனால் அறி வான், அறிகிறவனை எதனால் அறிவான் என்னும் பிருகிதாரணியம், கேனம், பாசுபதப்பிரமம், பிரமகிதை, தேவாரம், திருவிசைப்பா, அந் தாதி, சூத்திரம் என்பனவாம். இவையெல்லாம் சீவனுக்கு சுதந் தரமே கூறுகின்றன. அன்றி, சுதந்தரமில்லாமை கூறாமையால் அவை அதற்குப் பிரமாணமாகாமை யறிக. 166 இனி பவுட்கரமென்றும் பராக்கியமென்றும் இரண்டு வசனங்கூறினார். அவை சிவாச்சாரியார் வியாக்கியானம் 52-ல் காணப்படுகின்றன. அச்சிவாச்சாரியர் அவ் வசனங்கள் சிவசமவேத சிற்சத்தி பிரகாசத்திற்கு பிரமாணமென்று காட்டுகின்றார். இன்னும் சிவாச்சாரியர் அதற்குக் காட்டிய மூன்று வசனங்களில் இவர் ஒரு வசனத்தைக் காட்டாமல் விட்டார். காட் டாமை சந்திவிக்கிரம முறையேபோலும். அது நிற்க. இனி, 168 சிவன் அங்ஙனமறியினும் தானோர் விகாரமுமின்றி இருப்பனென்று காந்ததிட்டாந்தத்தால் கூறியதுபோல, கடவல்லி பிருகதாரண்யங் களும் கூறுமென்று காட்டினார். அவை சர்வ பூதாந்தராத்மா லோக துக்கத்தினால் அவற்றின் புறம்பாகி பற்றப்படாது என்று வரும் இவைபோது மவர்காட்டும் பிரமாணங்களில் சிவன் அவ்வாறு அறி யினும் தானோர் விகாரமின்றி இருப்பன் என்னும் பொருள்காணப் படாமையால், அவை அதற்குப் பிரமாணமாகாமையறிக. இனி பிரமம், லோகதுக்கத்தினால் அவற்றின் புறம்பாகி பற்றப்படாதென் றார். அது 162-ல் பிரபஞ்ச விஷயங்களை சீவாத்துமாவின் வாயிலாக பிரமமே அறிந்துபற்றும் என்பதனோடு மாறுபட்டு விவர்த்தமாத லறிக. இனி, அகர உயிர்போலும். அதாவது அகர வுயிரானது சிவனறிதலுக்குத் திட்டாந்தமென்றார். அது 97 அகரவுயிர் என்

பது எழுத்துகளுக்கு முதற்காரணமான அகரவுயிர். அதுபிரமம்
முதற்காரணமாதற்கு உவமை என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாத
லறிக. இனி, 148-ல் ஆகமிகளை மறுத்து திட்டாந்த சமாதானங்
கூறிய ஆசாரியர் அகரவுயிர்த் திட்டாந்தம் ஓரிடத்தில் முதற்காரணத்
திற்கும், ஓரிடத்தில் முதற்காரண மில்லாமைக்கும், கூறுதல் வேண்
டாதவாறு கூறி இடர்ப்படாமையால், அவர் கூற்றின் கண்டனமண்ட
லங்கள் அதன்கீழ்ப் பெறப்படுமாறு காண்க. இனி, 169-ல் கூர்ம
புராணமும் பவுட்காரமும் அதற்குப் பிரமாணமெனக் கூறினர்.
அவை சிவன் பிரபஞ்சத்தை அறிவன் அறியான் என்று கூறுமையால்
அவையும் அதற்கு பிரமாணமாகாமையறிக. இனி, 170-ல் இதனல்
சிவனொருவனே சுயம்பிரகாச வடிவ சுவதந்திரஞானஸ்சொரூபனென்
பது அறிவிக்கப்பட்டதென்றார். 181 அவருடைய எழாஞ் சூத்திர
முடிபிலும் 8-ஞ்சூத்திர முடிபிலும் 10-ஆஞ் சூத்திர முடிபிலும் 11-
12-ல் இவ்வாறு இதனல் என்று கூறுமையால் அது விவர்த்தமாத
லறிக. இனி, சுயம்பிரகாசவடிவ சுவதந்திரஞானசொரூபமெனவே;
சுயம்பிரகாச வடிவமாகாத சுவந்தரஞான ஸ்சொரூபம் உண்மையும்
பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. அதுநிற்க. இனி, அவதாரி ஆத்மா
வுக்கு உபகாரகனன சிவனது சிறப்பியல்பாகிய சொரூபலக்கணம்
யாதெனக் கூறுகின்றார். சிறப்பியல்பாகிய சொரூபலக்கணமெனவே
சிறப்பியல்பாகாத சொரூபலக்கண முண்மையும் பெறப்பட்டு விவர்த்த
மாதலறிக. இனி, ஆன்மாவிற்கு உபகாரகனன சிவன் எனவே
ஆத்மாவுக்கு உபகாரகன் ஆகாத சிவன் உண்மையும் பெறப்பட்டு
விவர்த்தமாதல் காண்க. 162-ல் சிவன் சீவாத்மாவின் வாயிலாக
அறிவனென்பது, குப்புசாமிராசு, சிவாச்சாரியார் வியாக்யானவாயிலாக
இவ்வியாக்யானஞ்செய்ய அறிந்தாரென்றால், சிவாச்சாரியருக்கு சுவதந்
தரமுண்மையும், குப்புசாமி மிராசுவுக்கு சுவதந்திரமில்லாமையும், எவ்
வாறு, அவ்வாறே சிவன் சீவாத்மாவாயிலாக அறிகின்றான் என்பதுமாம்.
ஆகவே சிவாசாரியர் வியாக்யான வாயிலாக குப்புசாமிராசுவுக்கு அசு
தந்திரமும் சிவாச்சாரியருக்கு சுதந்தரமும் பெறப்படுதல் போல், அறி
தற்கு வாயிலாகிய சீவனுக்கு சுவதந்திரமும், சீவனுக்கு அசுவதந்திர
மும் பெறப்பட்டன. படவே, சீவனுக்கு சிவன் உபகாரியாகாமை
அறிக. அறியவே ஆத்மாவுக்கு உபகாரனன சிவனென்பது விவர்த்த
மாதலறிக. அல்லாமலும் சீவன் சிவனென்று பேதங் கூறில் அது
அத்வைத ஆணியாகும். ஆதலால் இதில் சிவன் சுவதந்திரனென்பதும்,

அவன் ஆத்மாவுக்கு உபகாரகனென்பதும், சொரூப லக்கணம் கூறுகின்றாரென்பதும் விவர்த்தமாதலறிக. இனி அவர் சூத்திரார்த்தம் வருகின்றது. சுகஸ் சொரூபனான சிவனது ரூபம் காணப்படாததெனில் ரூபமின்றிய தன்மையாம் காணப்பட்டதெனில் அறிவின்றிய தன்மையாம். அவ்விரண்டின் வேறாக அதாவது சத்துத்தன்மை சித்துத் தன்மையாக அறியத் தக்கதாமென்று அறிஞர் அறிவர் என்றார். சுகஸ் சொரூபனான சிவன் எனவே சுகஸ் சொரூபனாகாத சீவனுண்மையும் பெறப்பட்டது. இனி காணப்படும் பொருள் சேதனமும் அசேதனமுமாம். ஆகவே அறிவுள்ள பொருளும் காணப்பட்டனவேயாம். அவ்வாறே அறிவுள்ளது காணப்படவும் சிவம் காணப்படுவதென்றால் அறிவின்றிய தன்மையாம் என்பது விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி 48-ல் ஈசுரசொரூபம் அதீந்திரியம் அதற்கு சுருதியே பிரமாணமன்றி வேறு பிரமாணமில்லை என்று கூறிவிட்டு இங்கு ஈசுர சொரூபத்தை அறிஞர் அறிவரென்பது விவர்த்தமாதலறிக. இனி அசத்து என்பதன் அவர்த்தமாவது ரூபமின்றிய தன்மை யென்றார். அவ்வாறானால் சத்து என்பது ரூபமுள்ள தன்மையாதல் வேண்டும். ஆதலால் அதுவும், சமமாம் ஏது என்பதற்கு அறிவின்றிய தன்மையாமென்றார் அதுவும் விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி எது முக்காலத்தும் வாதிக்கப்படாத சத்துரூபமும் குன்றாப்பிரகாசமான சித்துரூபமுமாமோ அதுவே மேலான பிரியத்துக்கு விஷயமாகிய ஆனந்தரூபமாம் என்றார். எனவே கீழான பிரியத்துக்கு விஷயமான ஸ்திரீ ஆனந்தமும், ஆனந்தமெனப்படுதலால், அவ்வானந்த முடைய ஸ்திரீயும் சம்புவெனப் படுதல்வேண்டும். ஆதலால் அது விவர்த்தமாதலறிக. இனி குன்றாப் பிரகாசமான சித்து எனவே, குன்றும் பிரகாசமான சித்தும் முக்காலத்தும் பாதிக்கப்படாத சத்து எனவே, முக்காலத்தும் பாதிக்கப்படும் சத்தும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி 16-ல் சிருட்டிக்கு முன் சத்தாக இருந்தது என்றார். எனவே சிருட்டிக்குப் பின் அசத்தாக இருந்து பாதிக்கப்படுதலால் சத்து முக்காலத்தும் பாதிக்கப்படாதென்பது விவர்த்தமாதலறிக. 11-ல் சித்து விவர்த்தமான சகத்து எனவே, சித்துசகத்தான காலத்து பிரகாசம் குன்றுதலால் குன்றாப் பிரகாசமென சித்து என்பது விவர்த்தமாதலறிக. ஆகவே மேலான பிரித்துக்கு விஷயமான ஆனந்தரூபமென்பது விவர்த்தமாதலறிக. இனி, அவ்வானந்தத்தினது இலக்ஷணத்தினை சம்புவென்னும் பதம் அறிவித்தமையுங்காண்க. என்

ளுர். எனவே, அறியாமையுங்காண்க என்பது பெறப்படுதலால் அது அறிவித்தவாறு விவர்த்தமாதலறிக. ஆதலால், முக்காலத்தும் பாதிக்கப்படாதது எதுவோ அது சித்தும் குன்ருப் பிரகாசமானது எதுவோ அது சத்துமே யாதலறிக. இனி, சத்தென்னும் பதம் முக்காலத்தும் இருத்தற்றன்மையாகிய நித்திய தத்துவத்தினையும் இருக்கிறது இருக்கிறது என்னும், வடிவத்தால் எங்கு மிருத்தற்றன்மையாகிய பூரணத்துவத்தினையும் சத்தின் வேருனவஸ்து இல்லாமையால் அனங்கத்தன்மையினையும் அறிவித்தல்காண்க. இவ்வாறே பிற இலக்கணங்களையும் சத்துவசித்துவங்களால் ஊகித்தறிக. இதனல், வாக்மனேகோசரனுயினும் சிவத்தின் ரூபம் பிரபஞ்ச இலக்கணமான அசத்துவசடத்துவ துக்கத்துவ முதலியவற்றை, நிஷேதிக்கும் வாயிலாக அவற்றின் வேருனதென்றறிவிக்கப்பட்டதென்ருர். 54-ல் குடஞ்சுவர் முதலிய யாவும் பிரமம், அஞ்ஞானமும் அதன் காரியமும் பிரமம், ஆதலால் இவ்வெல்லாம் அஞ்ஞானமென்று பேசுதலும் பேச்சன்று என்ற விடத்து, குடஞ்சுவர் அஞ்ஞானம் முதலியன எல்லாம் பிரமமென்று விதிக்கப்படுதல் இங்கு அவற்றை நிஷேதிக்கும் வாயிலாக, அவற்றின் வேருயுளது பிரமரூப மென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதல் அறிக. இனிசத்தென்னும் பதம் முக்காலத்திலும் இருத்தற்றன்மையாகிய நித்தியதத்துவமெனவே, முக்காலத்து மிருத்தற்றன்மை ஆகாத நித்திய தத்துவமும் எங்கு மிருத்தற்றன்மை ஆகாத பூரணத்துவமும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி, உண்மையில் சத்தின் வேருனவஸ்து இல்லையென்ருர். என்றவர் தாமே அவற்றின் வேருனது சத்துரூபம் என்கின்ருர். அது அவித்தையின் காரியத்தின் காரியத்தாலாகும் விவர்த்தவிவர்த்தமேயாதலறிக. இனி, இவ்வாறே பிறவிலக்கணங்களையும் சத்துவ சித்தங்களால் ஊகித்தறிக என்ருர். அவ்வாறே சத்துவ சித்தங்களால் பிறவிலக்கணங்களை ஊகித்தறியும் வல்லமை யுடையவர்க்கு, ஊகியாது அறிதற்குரிய சூத்திரத்தின் விவர்த்தார்த்தமிவர் கூறி, அறிவிக்க வேண்டியதில்லையே ஆதலால், ஊகித்தறிக என்று படாடோபம் பண்ணுதலெல்லாங் குடாகாயமாய் முடிதல் காண்க: 17-ல் இனிப் பிரபஞ்சத்துக்கு வேருமென்பதற்கு அவர் கூறும் பிரமாணம் வருகின்றன. சத்தியம், ஞானம், அனந்தம், பிரமம், என்பன முதலியனவே, பிரமாணம் அவற்றுள், பிரமம் பிரபஞ்சத்தின் வேறென்று கூருமையால் அவை, அதற்குப் பிரமாணமாகாமை யறிக. குட முதலிய

பிரபஞ்சம் பிரமமென்றவர் தாமே பிரபஞ்சத்தின் வேறென்கின்றார். இனி 173-ல் அவிநாசியாவது, தேசகாலவஸ்து. நிமித்தங்கள் நசிக்குமிடத்தும் நசியாததெது அது என்றார். 126-ல் மாயா தத்துவமும் அவிநாசி எனப்படுதலால் அதுவும் அவ்வாறே தேசகால வஸ்துக்கள் நசிக்குமிடத்தும் நசியாததேயாம். ஆகவே, பிரமம், அந்தமாயை முதலியவற்றின் வேறுமென்பது விவர்த்தமாத லறிக. இனி, உற்பத்தி நாசமில்லாத சைதன்னியம் ஞானமென்றார். 59-ல் மாயை அனாதி நாசமில்லாதது என்று கூறுதலால், அந்த லக்ஷணம் மாயைக்குமுள்ளபடியால், மாயையும் ஞானமெனப்படல் வேண்டும். அவ்வாறானால் பிரமத்துக்கும் மாயைக்கும் வேற்றுமை இன்றாம். ஆகவே, மாயைக்கு வேறு பிரமமென்பது விவர்த்தமாதலறிக. இனி, 45-ல் சடமாகிய மாயை என்று கூறுதலால் அது விவர்த்தமாதலறிக இனி, பிரபஞ்சங்களில் பூரண வியாபகமான, சைதன்னியம் அனந்த மெனப்படுமென்றார். அது 22-ல் வியாபகம் மித்தை என்றலால் விவர்த்தமாதலறிக. இனி ஆனந்தமாவது, சுக சைதன்னிய ரூபமும் அபரிமித ஆனந்த சமுத்திரமும் ஆன அவசிஷ்ட சுகரூபம் ஆனந்த மெனப்படு மென்றார். அது விவர்த்தமாதல் வியாபகம் மித்தை என்பது பற்றி அறிக. இனி 174 தொடங்கி 178 வரையுமுள்ள வசனங்கள், பிரமம் பிரபஞ்சத்தின் வேறென்று கூறாமையால், அவை அதற்கு பிரமாணமாகாமை யறிக. 178-ல் இனி இதனால், "துவம்பதலக்ஷிய மான சித்தே தத்பதலக்ஷியமாகா சிவமென்பது" அறிவிக்கப்பட்டதென்றார். கசு பக்கத்தில் துவம்பத லக்ஷிய அர்த்தம் கூறப்பட்டதென்றார். இங்கே துவம்பத லக்ஷியமான சித்து என்கின்றார். 139-ல் தத்பத வாச்சியார்த்தம் கூறப்பட்டதென்றார். இங்கே தத்பத லக்ஷியமான சிவங் கூறப்படுகின்றதென்கின்றார். "துவம்பத லக்ஷியமான சித்து தத்பதலக்ஷியமான சிவம் என்றாரல்லது, அவ்வாறு கூறுமாகமம் சுவச்சந்தபார மெச்சுரம் அல்லது, ஆகமம் அல்லது ஆகமமுணர்ந்தோரவர்க்கு என்று பிரமாண மொன்றுங் கூறாமையாலும், இவர் கூற்றுக்கு மாறாக, துவம்பதலக்ஷியம் சிவம், தற்பத லக்ஷியம் சித்து, என்று இருக்கு வேதங் கூறுதலாலும், அக்கூற்று விவர்த்தமாதலறிக. ஆதலால் தற்பதலக்ஷியம் துவம்பத லக்ஷிய மென்று நிரூபிப்பின் விவர்த்தவாதலறிக. நிரூபித்தாலும் நிரூபிக்காதுபோனாலும் எல்லாம் பிரமமேயாகவும், இவ்வாறு வெகு பிரயாசைப்பட்டு நிரூபித்தலாவதொன்றுமில்லாமையறிக. ஆதலால்

அவர் கூறுந் தத்துவலக்ஷியமெல்லாம், யாமிதுகாறும் கூறுங் கண்டன மண்டனங்களால், காற்றெதிர்ப்பட்ட பஞ்சுபோல், காசிதேசந் தேடியோடி ஒளித்தவாறு காண்க. அது நிற்க. இனி 178-ல் பிரபஞ்சத்திற்கும் சுத்தசித்திற்கும் பந்தமோக்ஷங் கூடாமையால், அவற்றை அனுபவிப்பது யாதெனக்கூறுகின்றார் என்றார். 162-ல் அவித்தையால் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை, சிவம் ஜீவாத்மா வாயிலாக அறியுமெனவே, சுத்தசித்தாகிய பிரமமே பந்தப்படுதல் கூறப்பட்டது. அவ்வாறே அது பந்தம் நீங்கி மோக்ஷமடைகின்றதென்று பிறவிடங்களில் கூறப்படுகின்றதும் தவிர, 54-ல் அஞ்ஞானம் குடம் முதலிய பிரபஞ்சம் பிரமமென்று கூறப்படுகின்றது. மேலும் 21-ல் போக்தாபோக்கியம் பிரேரிப்பவன மூன்றும் பிரமமென்று கூறப்படுகின்றது. ஆகவே பிரபஞ்சம் சுத்தசத்து இரண்டற்கும் பந்தமோக்ஷ அனுபவம் கூடுதலால், அவ்விரண்டற்கும் பந்தமோக்ஷ அனுபவங்கூடாமையால் அவற்றை அனுபவிப்பது யாதெனக் கூறுகின்றாரென்பது விவர்த்தமாதலறிக. இனி, அவர் உத்திரார்த்தம் வருகின்றது. அசத்தான சடப்பிரபஞ்சம் சத்தாகிய சித்துரூபத்தின் முன் பிரகாசியாது, பிரபஞ்சம் சிவமென்னும் அவ்விரண்டும் ஒன்றனை ஒன்று அறியா, பிரபஞ்சம் சிவம் இரண்டனையும் உணர்பவனெவனோ அவ்வாத்மா சடசித்துக்களின் வேறாம் என்றார். அசத்தான சடப்பிரபஞ்சமெனவே, அசத்தாகாத சடப்பிரபஞ்சமும் சடப்பிரபஞ்சமெனவே, சடமில்லாத பிரபஞ்சமும், சத்தாகிய சித்துரூப சிவமெனவே, அசத்தாகிய சித்துரூபசிவமும், சித்துரூப சிவமெனவே அசித்துரூபசிவமும், பெறப்பட்டு விவர்த்தமாதல் காண்க. இதனுள் பந்தமோக்ஷ அனுபவம் கூறாமையால் அவதாரி விவர்த்தமாதலறிக. இனி, வியாக்கியானம் வருகின்றது. சித்தாகிய சிவம் சுட்டறிவின்மையாலும், சூரியன் முன் இருள் போல் தன் முன் பிரபஞ்சம் பிரகாசியாமையாலும், அசத்தாதலாலும் பிரபஞ்சத்தினை யறியாது. இனி, பிரபஞ்சம், கேவலம் அறிவின்றிய சடமாதலால் சிவத்தினை யறியாது. ஆதலால் சடமாகிய அசித்து, சித்தாகிய சத்து என்னும் இரண்டின் வேறான அதாவது, சதசத்து வடிவ ஆத்மாவே இரண்டினையும் உணரும். எனவே பந்த மோக்ஷங்களை சித்சட மில்லாத சித்து போலியான சிவனே அனுபவிப்பவன் என்று சித்தித்தது. அவன் பிரபஞ்சத்தினை நோக்க சத்தும் சித்தும் ஆதலாலும், சிவத்தை நோக்க

அசத்தும் சடமுமாதலாலும், அவனுக்கு சதசத்து ரூபமும் சிற்சட ரூபமும் வடிவாமென்று கூறுவர். பளிங்குபோல் சித்தைச் சார்ந்தபோது சித்து வடிவமும், அசத்தைச் சார்ந்தபோது அசத்து வடிவமும் ஆதலால், அல்லது அஞ்ஞானதிசையில் சிவத்துவத்தோடு இருத்தலால் சீவன் உளவென்று சத்து ரூபனும், அஞ்ஞானம் நீங்கிய முத்திதசையில் சீவத்துவம் நீங்கி சிவமாமிருத்தலால் சீவனிலனென்று, அசத்து ரூபனுமிருத்தலால் சதசத்துரூபனுமென்பர். இவ்வாறன்றி ஒரே காலத்தில் ஒரு தருமியில் விருத்தமாகிய இரண்டு தருமங்கள் இருத்தல் பொருந்தாமை காண்க. அன்றியும், சிற்சடங்களுக்கு வேறுமெனவே, சித்தும் சடமும் அதாவது சத்தும் அசத்துமான இருவடிவத்தினை கொள்ளுதலும் பொருந்தாது. இது பற்றியே, சூரியனை சார்தற்கும் சூரியனால் விளக்கக் கூடாத விஷயங்களை விளக்கும் யோக்கியமான கண்ணாடி முதலிய உபாதியால் அமைந்த சூரியச் சாயையினைப் போல, சிவத்தினைச் சார்தற்கும், சிவத்தினாற் சுட்டி அறிப்படாத விஷயங்களை அறிதற்கு யோக்கியமான சுட்டுணர்வாகிய சீவனை சிதாபாசன் என்றும், சிற், பிரதி, விம்பனென்றும், சிற்சாயையென்றும், சுருதியாதிகள் கூறுகின்றன என்றார். சித்தாகிய சிவமெனவே அசித்தாகிய சிவமும் பெறப்பட்டு விவர்த்தவாதலறிக. அது நிற்க. இனி, சுட்டறிவின்மையால் என்பது 203-ல் கேவலம் கிரீடையினால் அரன் அன்னபான முதலியவற்றாலும், ஸ்திரீகளாலும், திருப்தி யடைகின்றான். அவ்வாறே சொப்பன காலத்திலும் சம்புவானவர் சிவத்தன்மையால் பிரகாசிப்பவராய், தன்னால் படைக்கப்பட்ட சுகதுக்காதி போகங்களை புசிக்கிறார் என்றவிடத்து, சிவனுக்கு சுட்டறிவுண்மை பெறப்படுதலோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. ஆகவே, அவர் கூறும் விஷயங்களெல்லாம் இவ்வாறே விவர்த்தமாதலறிக. இனி, பிரமத்தின் முன் பிரபஞ்சம் பிரகாசித்தலாலும், 54-ல் குடம் சுவர் முதலிய பிரபஞ்சமும் பிரமமென்று கூறுதலாலும், 54-ல் அஞ்ஞானமும் அதன் காரியமும் பிரமமென்று கூறுதலாலும், பிரபஞ்சம் கேவலம் சடம், ஆதலால் சிவத்தினை அறியாது என்பது கூடாமையால், அது விவர்த்தமாதலறிக. ஆகவே சடமாகிய அசத்து சித்தாகிய சத்து என்னும் இரண்டின் வேறான அதாவது சதசத்வடிவ ஆத்மா இரண்டினையும் அறியும் என்பதுங்கூடாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி சடமாகிய அசத்து எனவே, சடமாகாத அசத்தும், சித்தாகிய சத்தெனவே சித்தாகாத சத்தும் பெறப்பட்டு

விவர்த்தமாதலறிக. ஆகவே, இரண்டின் வேறான ஆத்மா உண்டென்பது கூடாமையறிக. இனி சடமும், அசத்தும், சித்தும், சத்தும், ஒருபொருட் கிளவியென்பது சிவாத்துவித விபரீத வியாக்யானஞ் செய்த சிவாச்சாரியர் கூறுதல் கண்டு கூறுங் கூற்றே. அல்லது, உண்மை முறையல்லாமையால், சடமாகிய அசத்து, சித்தாகிய சத்து, என்று கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி, சதசத்துவடிவ ஆத்மாவெனவே, சத்சத். வடிவமாகாத ஆத்மா ஒன்றுண்டென்பதும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. ஆதலால் பந்த மோக்ஷங்களை சிற்சடமல்லாத சித்துப்போலியான சீவனே அனுபவிப்பனென்பது சித்தித்ததென்பது சித்தியாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி, 140 சுவேச்சாசாரியான எனக்கு இங்கு பந்தமோக்ஷ மிரண்டு மில்லை என்று கூறுதலால் பந்தமோக்ஷ முண்டென்பது விவர்த்தமாதலறிக. இனி பிரமத்தைத் தவிர வேறு வஸ்து வில்லை, பிரமம் அவித்தையால் பந்தப்பட்டு சாதன சதுட்டயத்தால் அது நீங்கி, முத்தியடையு மென்றென்று அங்கங்கு கூறுதலை மறந்து, சிதாபாசனுக்கே பந்தமோக்ஷம், சுத்த சித்து, பிரபஞ்சம் சிதாபாசனென்று மூன்று பிரமமுண்டென்பன வெல்லாம் விவர்த்தமாதலறிக. 179 இனி, பிரபஞ்சத்தினை நோக்கி சத்தும் சித்துமாமென்று, சத்தும் சித்துந்தம்முள் வேறுமென்பது, முன் சித்தாகிய சத்து என்று சித்து சத்து இரண்டும் ஒரு பொருட் கிளவியாய்க் கூறுதலோடும், சிவத்தை நோக்க அசத்தும், சடமுமாமென்பது, முன்சடமாகிய அசத்து என்று அவ்விரண்டையும் ஒரு பொருட் கிளவியாய்க் கூறுதலோடும் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. ஆதலால் சதசத்ரூபம் என்று கூறுவரென்பது விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி, 81-ல் கூறுவர் என்பர் என்னும் இரண்டும் 62-ல் கூறியபடி கொள்ளுவர் பெரியோர் கொள்வர் அறிஞர் என்பனபோல் இவரென்று கூறாமல் பொதுப்படக் கூறுவர் என்றும், என்பர் என்றுங் கூறுதலால் கூறுவர் என்பர். இவரும் அறிஞரும் பெரியரும் அல்லர். அதாவது அறிஞரும் பெரியருமாகாத மாயாவாதியாராகிய இவரே பரிபூரணானந்த போதகாசிரியர்போல தன்னைப் பிறர் போலவைத்து அவ்வாறு கூறினாராதலால், சதசத்ரூபமும் சிற்சடரூபமும் வடிவு என்பது விவர்த்தமாதலறிக. இனி, அசத்துரூபமென்பது சடரூபம் அன்று என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி, பளிங்கைப்போல சித்தைச்சார்தல் அசத்தைச்சார்தல் அல்லது, அஞ்ஞானதசையில் சிவத்

துவத்தோடு இருத்தல், அஞ்ஞானம் நீங்கிய முத்திதசையில் என்பன வெல்லாம் அநுகமமுறையாதலாலும், அவை ஆகமுறை ஆகாமை யாலும் விவர்த்தமாதலறிக. இனி, 54-ல், அஞ்ஞானமும் அதன் காரியமும் பிரமம் என்று கூறியதனை மறந்து, அஞ்ஞானம் நீங்கிய முத்திதசையென்று பாடுவதெல்லாம் தெருட்பாட்டாதலறிக. இனி, இவ்வாறன்றி ஓரே காலத்தில் ஒரு தருமியில் இரண்டு தருமங்கள் இருத்தல் பொருந்தாமை காண்க என்று கூறுவோர் தாமே, விருத்த தருமங்கள் ஒரு தருமியிலிருக்கக் கூறினர் என்பது முன்னும் கூறி னும், மிருகேந்திரம் பரமோக்ஷநிராகரணப்பிரகரணத்தில், சேதனு சேதனரூப பிரபஞ்சத்துக்கு பிரமத்தை யுபாதான காரணமாகச் சொன்னால், காரியங் காரணத்தின் சுபாவமுள்ளதாக இருக்குமென் னும் நியாயத்தால் பிரமமும், சேதனு சேதன ரூபமாகவேண் டும். ஆனால் இருளும் வெளிச்சமும்போல சைதன்னியமும் அசை தன்னியமும் ஓரிடத்தில் ஒருகாலத்திலிருப்பது யுத்தமின்று. இது முதலான பல தோஷமிருக்கிறபடியால் ஆன்மத்துவைதம் ஒரு போதுமொவ்வாது. ஆகையால் வேதாந்தமதம் நிராகரிக்கப்பட்ட தென்றவிடத்து, இருளும் வெளிச்சமும்போல, சைதன்னியமும் அசைதன்னியமும் ஓரிடத்தி லொருகாலத்திலிருப்பது யுக்தமன்று என்பதில், பிற்பாதியை ஒப்புக்கொண்டு, முற்பாதியை விதந்து கூறாமல் விருத்ததருமமிரண்டும் என்று மறைத்துக்கூறினர். சிவாச்சாரியார் வசனங்களையு மிவ்வாறேகூறுவர். அது நிற்க. இனி சிற்சடங்களுக்கு வேறானதெனவே, சித்தும் சடமும் அதாவது சத்தும் அசத்துமான இருவடிவத்தினை கொள்ளுதல் பொருந்தா தென்றார் என்பது விவர்த்தமாதல், சித்து, சத்து, அசித்து, அசத்துக் கள் ஒரு பொருளாகாவென்று கூறும் வாயிலாக முற்கூறினும். இனி கண்ணாடிஉவமம் பொருந்தாதென்பது, 162-ல் காட்டி கண்டித்தாம். இனி சிவத்தினால் சுட்டி யறியப்படாத விஷயங்களை அறிதற்கு யோக் கியமான சுட்டுணர்வாகிய சீவனை சிதாபாசன் என்று சுருதியாதிகள் கூறும் என்பது விவர்த்தமாதல் 162-ல் மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை சிவன் சீவாத்மா வாயிலாக அறிகிறான் என்ற விடத்து, சிவனே விஷயங்களைச் சுட்டி யறிகிறான் என்று கூறுதலாலும், 203-ல் சுகதுக்காதி போகங்களை புசிக்கிறான். ஸ்திரீயாதிகளாலும் திருத்தி யடைகிறான் என்ற விடத்து, 'பிரமத்துக்கு சுட்டுணர்வு கூறப்படுத லாலும், 54-ல் குடம் சுவர் முதலிய வெல்லாம் பிரமமென்று கூறுத

லாலும் அறிக. ஆதலால் அவர் தம்பிரமத்துக்கு சுட்டுணர்வு இல்லை என்று கூறுதலும், சீவனும் சுட்டாத உணர்வு இல்லை என்று கூறுதலும் விவர்த்தமேயாம். இனி, 181-ல் அதற்கு பிரமாணம், யோககுண்டலி என்றும், மெய்கண்டார் என்றும், மனவாசகம் கடந்தார் என்றும், அவர் கூறுவன விவர்த்தமாதல் முன் கூறுமாறு பற்றியறிக. அறியவே பிரபஞ்சத்திற்கும் சுத்தசித்திற்கும் பந்தமோக்ஷ அனுபவம் கூடாமையால் அவற்றை அனுபவிப்பது யாது எனக் கூறுகின்ருரென்றும் அவதாரி விவர்த்தமாய் முடிதல்காண்க. இவருக்கு வியாக்கியான வழிகாட்டி சிவாத்துவிதியாகிய சிவாசாரியார் 55-ல் 67-ம் சூத்திரங்களில் சிவலக்ஷணங் கூறப்படுவதென்று கூறுமாதலறிக. முன்போல இதில் வெறுங்குப்பைகள் வாரிக்கொட்டாமல் விட்டார். முன்வந்த குப்பைகளே இருத்தலாலும், வேறு குப்பைகளில்லாமையாலும், அது கிடக்க.

இனி, அவதாரிசை பிரபஞ்சத்தை நோய்க்கித் தன்மயமாய்ப் பந்தப்பட்டுள்ள இவ்வான்மா சிவத்தினை அடைதல் எவ்வாறு எனக் கூறுகின்ருர் என்ருர். பிரபஞ்சத்தை நோக்கி பந்தப்படுமெனவே, பிரபஞ்சத்தை நோக்காதாகில் பந்தப்படாதென்பது பெறப்பட்டது. படவே, இங்கு பிரபஞ்சம் வேறு, ஆன்மா வேறு என்று கூறுவது (54)ல் குடம், சுவர் முதலிய பிரபஞ்சம் எல்லாம் பிரமமே, வேறில்லை, என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இவர் சிவாசாரியருடைய வியாக்கியானம் (60-ல்) சிவானுபவம் எந்தமார்க்கத்தில் சித்திக்கும் என்று ஆசங்கித்து அதற்குத் தாம் (8-வது) (9-வது) சூத்திரங்களில் கூறப்படுகின்றது என்பதைக் கண்டு இவ்வான்மா சிவத்தினை யடைதல் இவ்வாறென கூறுகின்ருர் என்று, தானே சொந்தமாய் அறிந்து கூறுகின்றவர்போல் கூறுகின்ருர். இவர் சொந்தமாய் அறிந்து கூறினுலும், சிவாசாரியார் கூற்றுக் கண்டு கூறினுலும், இரண்டும் விவர்த்தமாதல் யாமுன் கூறுதலாலும், பின் கூறுதலாலும் அறிக. ஆதலால் அவ் அவதாரி, விவர்த்தமாதலறிக. இனி, அவர் கூறும் சூத்திரார்த்தம் வருகின்றது. அனேக சன்மார்ச்சித சுகிர்தனை பாக்கியவான் தம் முதல்வனை குருவினுல் இந்திரியங்களான வேடர்களோடு கூடியிருந்து, உன்னை நீ சிவமென்று அறிந்தாயில்லை என்று போதிக்கப்பட்டவனுய் இந்திரிய வேடர்களை விட்டு, அன்னியமில்லாதவனுய், தற்பதமான சிவரூபத்தினை அடைகின்ருன் என்ருர். 12-ல் சுகிர்தவானை பாக்கியவான் எனவே,

சுகிர்தவானாகாத பாக்கியவானும், தம்முதல்வனான குரு எனவே, தம் முதல்வனாகாத குருவும் பெறப்பட்டு விவர்த்தமாதல் காண்க. இன்னும் பாக்கியவானுடைய முதல்வனெனவே, அவன் பாக்கியம் இல்லாதவனுக்கு முதல்வனில்லாமை பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி. "துவாம்நவேத் சீதி" என்பதற்கு உன்னை நீ சிவமென்று அறிந்தாயில்லை என்றார். மூலத்தில் சிவசத்தமே இல்லாமையால் அப்பொருள் விவர்த்தமாதலறிக. இனி, பாக்கியவானானவன் தம்முடைய முதல்வனென்பது, வ்யுத்தியவையாகரண விசேஷமாதலறிக். இனி, அது அவ்வாறானால் குப்புசாமிராசு என்னைப் பார்த்து உன்னை நீ அறிந்தாயில்லை என்றால், உன்னை நீ சிவமென்று அறியவில்லை என்று அர்த்தமாதல் வேண்டும், அவ்வாறாகாமையாலும் இது அது உன்னை நீ விஷ்ணுவென்று அறியவில்லை என்று வைஷ்ணவர் போதித்தலாலும், அவன் சிவமேயன்றி விஷ்ணுவல்ல என்பதற்கு நியாமகமில்லாமையாலும், உன்னை நீ உண்மையறிந்து எனது வியாக்கியானத்தைக் கண்டிக்கிறவன் என்று அறிந்தாயில்லை யென்பது போலும். ஆதலாலும் அன்றி அதற்கு மூலத்திலில்லாத சிவமென்று அறிந்தாயில்லை என்பது அதின்பொருளானால், அவவாறே உன்னை நீ மூலத்தில்லாத ரசபுத்திரன் என்று அறிந்தாயில்லை யென்னும் பொருளும் ஆகலாம். ஆதலாலும், "துவாம் நவேத்சீதி" என்பதற்கு உன்னை நீ யறிந்தாயில்லை யென்று பொருள் கூறலன்றி, உன்னை நீ சிவமென்றறிந்தாயில்லை யென்று பொருள் கூறல் விவர்த்தமாதலறிக. இனி தத்பதம் என்பதற்கு தத்பதமான சிவரூப என்றார். எனவே தத்பதமாகாத சிவரூபமும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. ஆதலால் சிவத்தினை யடைதலெவ்வாறென்னும் ஆசங்கைக்கு அச்சூத்திரப் பொருளில் இவ்வாறென்று விடைபெறுமையால் இரண்டும் விவர்த்தமாதலறிக.

இனி, அநேக சன்மங்களால் செய்துவந்த சரியாகியா யோகங்களால், இரு வினையொப்பு மலபரிபாகம் அடைந்து, சத்திநிபாத்து உத்தமனான "உத்தம் சிஞ்ஜாசு" என்பது தோன்ற தன்னியனென்றார் என்று கூறினர். இவர் சிவாத்து விதியாகிய சிவாசாரியர் வாக்கியங்களை உண்மை வாக்கியங்களென்று விவர்த்தமாக எடுத்துக் கூறவதுந் தவிர, அவை அவர் வாக்கியங்களென்று கூறாமல், தன் சொந்த வாக்கியம் போல் கூறி, தன்னைப்புகழுமியல்புடையரென்பது முற்கூறினும். சிவாசாரியர் வியாக்யானம் 61-ல் தன்னிய னென்பது,

பிராகிருத, கிரியாசரியா யோக அநுஷ்டானத்தால் கர்ம நாசமாகி, மல பரிபாகத்தால் சத்தினி பாதம் பிறந்து, நிர்வாணதீக்ஷை பெற்றவன் யாவன் அவனே புண்ணியனுவான். அதாவது தன்னினனெனப்படு வன் என்று கூறும் வாக்கியத்தை கண்டு, இவர் சந்திவிக்கிரகம் பண்ணி, பிராகிருத என்பதற்கு அர்த்தம் தெரியாமைமேலும், அரு வருப்பால் கைவிட்டு நிர்வாணதீக்ஷையை விக்கிரகித்து வெறுத்து, நிஞ்ஞாசு என்று சந்தி செய்து கூறினர். அவருக்கு சிவாசாரியப் பட்டமிருத்தலால் அவர் கூறுவனவெல்லாம் சிவாகம உண்மைப் பொருள் என்று விபரீதமாகக் கொண்டு அவற்றை தம் சொந்தம் போல் மாறிக் கூறினர். எவ்வாறு கூறினும் சிவாசாரியார் வியாக்யானம் விவர்த்த வியாக்கியானம் என்பது, சிவஞான பரமாசாரியர் பேருப தேசப் பெரும்பரப்பு என்னும் அந்நூலில் கூறப்படுதலால் அவ் வியாக்கியானமும், அதன் உப வியாக்ஞானமாகிய இதுவும் விவர்த்த மாதல் தெற்றென அறிக. அது நிற்க. இனி, இருவினை யொப் பாவது, அசுவமேத பிரமகத்திகளிஞெப்பனென்றும், மலபரிபாக மாவது அவித்தை நாசமென்றும், சத்தினிபாதம் என்பது அவித்தை யின் க்ஷயம் என்றும், அவைகளின் இயல்பு தெரிந்தவர் போல் சிவா சாரியர் வியாக்கியானத்தில் கூறப்படுவனவற்றை எடுத்துக்கூறினர். அவை யெல்லாம் விவர்த்தமென்று பவுட்கரத்தில் கூறுமாறு பற்றி அறிக. அது நிற்க. தத்பதம் என்பதற்கு தத்பதமான சிவரூப மென்று பொருள் கூறினர். அது கூடாதென்பது பின்னே கூறுதும். அது நிற்க. இனி, (183-ல்) மலபரிபாகமாவது அவித்தை, தான் க்ஷயமாதற்குரிய சாமக் கிரியைகளோடு பொருந்துதவாம் என்றார். இவர் எது கூறினும் பிறர் கூறியது கண்டு கூறுவதல்லது சொந்தக் கூற்று ஒன்று மில்லை என்பது முன்னே கூறினும். சிவஞானசுவாமி, மலபரிபாகமாவது மலர்ந்தேய்தற்குரிய சாமக்கிரியைகளோடு பொருந் துதல் என்று கூறுவதைக்கண்டு, இவர் தேய்தலென்பதை க்ஷய மென்று விவரீதமாக கூறிக் கொள்ளுவதுந்தவிர, மலமென்பதை மல மாகிய அவித்தை என்று விவரீதவிவரீதங்கூறினர், தேயதலக்ஷயம் என்பனவும், மலம் அவித்தை என்பனவும், மலம் மாயை என்பன வும், ஒரு பொருட் கிளவி யாகாமை நிருத்தியில் காண்க. இனி, அவர் மலமாகிய அவித்தை யென்பது (147-ல்) மலமாகிய மாயை யென்றும், (147-ல்) மலம் வேறே மாயை வேறே என்றும், அவித்தை யாகிய மலமென்றும் கூறுவனவற்றோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக

இனி சத்திநிபாதமும், சத்திநிபாதப்பொருளும், சத்திநிபாதவேற்றுமையும், சத்திநிபாதக்கிரமும், மாயாவாதமுறைபற்றி கூறி, அவற்றிலக்கணங்களை பிற இடங்களிற் காண்க, என்று, அபிப்பிரயித்தார். அவற்றிலக்கணங்களை பிற இடங்களில் காண்போர் அவ்வாறே, அவற்றின் கிரமாதிகளையும் பிற இடங்களில் காணுவார். அவ்வாறாகவும் இவர் சிரமப்பட்டு கூறவேண்டியதில்லையே, ஆதலால் யாரேனும் எழுதியவற்றை தாம் எடுத்து எழுதி, தமது சொந்தம்போல சந்தர்த்தி என்போர் அவர் எழுதாதவற்றை எழுதத்தெரியாமையால், அவற்றை பிற இடங்களில் காண்க. என்பது விபரீதமாதலறிக. அது நிற்க. இனி, அனேக சென்மங்களால் செய்து வந்த சரியாதிகளால் இருவினை யொப்பு மலபரிபாகம் வந்த சக்திநிபாதர் என்பதற்கு, பிரமாணமில்லாதபடியினாலும், அன்றியும் சென்மங்களால் செய்தலென்பதற்கு, கையாற் செய்தலென்பதுபோல் வினைமுதல் வேறு வேண்டப்படுதலாலும், அந்த நிமித்தப்பொருள் இதுவென்று கூறப்படாமையாலும், நிமித்தமெனவே உபாதானமும், பெறப்படுமென்பது அவர் மாயாவாதமுறையாதலானும், அனேக சென்மங்களால் செய்துவந்த சரியாதியென்று கூறல் மாயாவாதமுறையாதலறிக. இனி, சத்திநிபாத கிரமத்துக்கு பிரமாணங்கூறுகின்றார். நல்வினை பரிபாகத்தால் வெகு சன்மமுடிவில் மோக்ஷ இச்சை பிறக்கும், அப்போது குருவை ஆசரித்து நெடுங்கால சேவையால் ஒருவன் பந்தமோக்ஷத்தை அடைகின்றான் என்றும், (180ல்) சத்திநிபாதமானது திரோபவசத்தியாகிய நிக்கிரகசத்தியே, அனுக்கிரகவடிவ, அருட்சத்தியாய், ஆத்மாவிடத்தில் செவ்வையாய் விழுதல் என்றும் கூறினர் பிரமாணமாக அவர் காட்டிய, பைங்கலம் யோககுண்டலிகளில், திரோபவசத்தி நிக்கிரக சக்தி, அனுக்கிரகசக்தி, அருட்சக்தி, விழுதல், எழுதல், என்னும் பிரஸ்தாபமே இல்லாமையால் அவை பிரமாணமாகாமையறிக. இனி திரோபவசத்தியாகிய நிக்கிரகமெனவே, திரோபவ சத்தி ஆகாத நிக்கிரகமும், அனுக்கிரகவடிவ அருட்சத்தி எனவே, அனுக்கிரக வடிவும் ஆகாத அருட் சத்தியும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி திரோபவசத்தி, நிக்கிரகசத்தி யென்பன, சகம் பிரமமென்னும் பிராந்த வாக்காதலறிக. இனி 185-186-187-ல் கூறப்படும் பௌட்காரம், மிருகேந்திரங்களில் (183ல்) கூறிய சத்திநிபாதக்கிரமம் கூறப்படாமையாலும், பசித்துண்டு என்ற விடத்தும் அவ்வாறாதலாலும், அவை அதற்கு பிரமாணம் ஆகாமையறிக.

இனி (187ல்) குருவினையொழிந்து சிவனுக்குச் சுதந்திரமாக சிவஞானம் பெற எல்லாவற்றாலும் ஆற்றலில்லை. என்பது தோன்ற குருவினால் உபதேசிக்கப்பட்டவனுப் என்று கூறினர். குருவினை யொழிந்து சிவனுகிய இவருக்கு, சுவதந்திரமாக ஞானம் பெற எல்லா வற்றாலும் ஆற்றலுண்டாய், இந்த விவர்த்த வியாக்கியானம் உண் டாக்குதலால், அக்கூற்று விவர்த்தமாதலறிக. இனி, (188ல்) ஞான வாயிலாக முத்தியைப் பெறுதற்கு அருவனுயினும், கருணையினுல் சகளிகரித்து வெளிப்படும் சிவமாகிய குரு மூர்த்தியே, பரம சாதன மென்பதனை இப்பிரமாணங்களால் காண்க என்றார். 288-ல் ஞானமே பரம சாதனமென்று கூறுமேவகாரத்தோடு குரு மூர்த்தியே பரம சாதனமென்னுமேவகாரம் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி, ஞான வாயிலாக முத்தியைப் பெறுதற்கு குருமூர்த்தியே பரமசாதனம் என்பதன் தாற்பரியம் என்னேயோ அறிகிலம், (288-ல் ஞானமே பரம சாதனம் என்று கூறுதலால், பரமசாதனமாகிய, ஞான வாயிலாக முத்தியைப் பெறுதற்கு குருமூர்த்தியே பரமசாதனமென்று கூறவே முத்திக்கு ஞானம் பரமசாதனமாதற்கு, குருமூர்த்தி பரமசாதனம் என்றும், முத்திக்கு குருமூர்த்தி பரமசாதனமாதற்கு ஞானப்பரம சாதனம் என்றும், இவ்வாறே மாறி மாறி இரண்டும் பரமசாதனம் என்பது பெறப்பட்டு, அன்னியோன்னியாச்சிராயதோஷமாம். அன்றி அவ்வாறு கொள்ளினும், இப்பரமசாதனம் இரண்டில் உயர்ந்த சாதனமிது, தாழ்ந்த சாதனமிது, என்று கூற முடியாமையால் அவ் வாறு கூறுதல் சர்வாகம விரோதமாதலால், ஞானமேயான பரம சாதனத்தால் முத்திபெறுதற்கு குருமூர்த்தியேயான பரமசாதனம் வேண்டுமென்று எல்லாந்தெரிந்தவர் போல் பாடுதல் தெருப்பாட்டாத லறிக. அது நிற்க. இனி, அருவனுயினும் சகளீகரித்து வெளிப் படுமென்பது, அருவமாகிய பிரமம், உருவமாகிய சகமாகுமென்னும் பிரமவாத நூல் முறையாதலாலும், சிவாகமமுறை யல்லாமையாலும், அருவனுயினும் கருணையினுற் சகளீகரித்து வெளிப்படும் சிவமாகிய குருமூர்த்தி யென்பது விவர்த்தமாதலறிக. இனிச் சிவமாகிய குரு மூர்த்தியெனவே, சிவமாகாத குருமூர்த்தி அதாவது பிரமமாகிய குருமூர்த்தியும் பெறப்படும். ஆயினும் பிரமம் குருமூர்த்தியாய் வருமென்று பிரமவாதநூலுட் கூறப்படாமையால், மனிதனுகிய குரு மூர்த்தியென்பதே அதன் கருத்துபோலும் கூறுமாறுபற்றி ஞான வாயிலாக முத்தியைப் பெறுதற்கு குருமூர்த்தியே பரமசாதனமென்

பது விபரீதமாகவே அதற்கு அவரோதும் பிரமாணங்களும் விவர்த்த மாதல் கூறவேண்டா, ஆனுலும் அவற்றுள் ஒன்றை விசாரித்து கூறி விடுவாம். அவர் கூறும் பிரமாணம் வருகின்றது. 188 ஆசாரியனை யுடைய புருஷன் அறிகிறுனென்பது சாந்தோக்கியம். இதில் ஞான வாயிலாக முத்தியைப்பெறுதல், அருவன் சகளீகரித்தல் சிவமாகிய குருமூர்த்தியே பரமசாதனமாதல்கள் கூறப்படாமையால் அதற்கிது பிரமாணமாகாமை யறிக. இன்னுமிவ்வாறே அதற்கவர் பிரமாண மென்று கூறும், முண்டகம், வரர்கம், ருத்ர இருதயம், யோகசிகை சூதசங்கிதை, சூதகீதை, சிவபுராணங்களும், அவறெடுத்துக்கொண்ட பிரமேயம் கூறுமையால் பிரமாணமாகாமை யறிக. அது நிற்க. இனிப் பாசம் நீங்குதற்கு ஆசிரியன் செய்யும் தீக்ஷை, சக்ஷு, பரி சம், வாசகம், மானசம், ஸாஸ்திரம், யோகம், அவுத்திரி என்னும், அனேகவித மென்னும் ஆகமங்களில் சொல்லப்பட்ட தென்றும் கூறினர். 7 என்று கணக்குக்கு கூறி அனேகவிதமென்று கூறுதல் அனேகான்மவாதமாதலால், அது ஏகான்ம முறைக்கு விவர்த்தமாத லறிக. 191 இனி குண்டலமண்டலாதிகளை மனதினலே பாவித்து செய்வது ஞானவதி, புறத்திலே குண்டல மண்டலாதி சாதனங்களைக் கொண்டு செய்வது கிரியாவதி, அவ்விரண்டும் மறுபடியும் நிரப்பீசம் சபீசம் என்று இருவகைப்படுமென்று 191-ல் கூறினர். அதனுள் குண்டல மண்டலாதி யென்று முதலிற் கூறினதும் தவிர மறுபடியும் குண்டலமண்டலாதி யென்று கூறுதலால் அது கைப்பெசகாவது, அச்சுப் பெசகாவது அல்ல, சிவாகமங்களில தீக்ஷாங்கம் குண்டான் மண்டான் என்று கூறப்படுமன்றி, இவர் கூறுமாறு, குண்டலம் மண் டலமென்று கூறப்படாமையால் அவ்வாறே அக்குண்டலதீக்ஷை நூபுரதீக்ஷை, பதக்கதீக்ஷை என்றவர் கூறும், அநேக விதமான தீக்ஷைகளெல்லாம், மாயாவாதமலடிமகனுதல் தெற்றெனவறிக. பெயர் கூற தெரியாமல் குண்டலங் குண்டலமென்று கூறுகின்றவர், தீக்ஷாவிதியெல்லாம் தெரிந்தவரென்றும், ஆகம விதியெல்லாம் அளந்தவரென்றும், மகாஜாலங் காட்டுகின்றுர். தமது மூல வியாக்கி யானி தமக்கெதிரி முதலியோர்களெழுதியவற்றைக் கண்டு இவர் எழுதுகிறுரல்லது, சொந்தமாய் எழுதத்தெரியாதவர் பிறரெழுதக் கண்டெழுதுவதும் சரியா, யெழுதத் தெரியாமல் இவ்வாறு விவர்த்த வியாக்கியானம் பண்ணினர். அஃதறியாமல் பொன்னம்பலபிள்ளை யவர்கள் சிவஞானசுவாமியை பிரமமாகிய இவருக்கு ஒப்பிடுகிறது

மகாபாதக மென்றார். இவர் சிவஞானசுவாமி யெழுதிய குண்டாவீன பிசகென்று குண்டலமென்று திருத்தியதை, பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் கண்டாராஞல், இவர் கூற்றின் கண்டன மண்டனங்களெல்லாம் அச்சிறுநூலிற் காண்பர். அது நிற்க.

193 இனி, இவர், சுவாயம்புவம், காமிகம் என்று கூறும் வசனங்கள், சிவாசாரியார் வியாக்கியானம் 72-ல் காணப்படுகின்றன. அவர் வேதாந்த ஞானமொன்றே மோக்ஷப்பிரசித்தம், ஆகமதீக்ஷைபாலாகும். சித்தாந்தஞானத்தால் மோக்ஷமென்பதெவ்வாறு என்று சங்கித்து, அதற்குச் சமாதானம் கூறும் பிரமாணம் இவ்வசனமென்று கூறினர். இவர் குருவே பரமசாதனமென்பதற்குப் பிரமாணம் இவ்வசனமென்றார். அவ்வாறு கூறுதல் மாறுபடுதலால் அது விவர்த்தமாதலறிக. இனி குண்டலங் கூறுகின்றவர். 192-ல் தந்திர வசனமென்றென்று கூறி, இவற்றின் விரிவை ஆகமங்களிற் காண்க வென்றார். அவர் கூறியவாறே அது குண்டலாகமங்களில் தேடிப் பார்த்துங்கண்டிலம். ஆதலால் அது விவர்த்தமாத லறிக. இனி 194-ல் பாசமென்பது ஆணவம், மாயை, கன்மம், மாயாகாரியமான மாயையும், சிவனுக்கு சென்மாந்தரகாரிய முதலியவற்றை மறைப்பதான திரோதானவென்னுஞ் சிவசத்தி ஆகிய இவ்வைந்தையும் பாசமென்று கூறுவர். இப்பாசத்தினை மலமென்பர் என்று கூறினர் சிவனுக்கு சென்மாந்திர காரிய முதலானவற்றை மறைப்பது அவித்தியா என்னுஞ் சிவசத்தி யென்று குண்டலதீக்ஷை கூறும் மாயாவாத நூல்களில் கண்டிருக்கிறோம். இவர் அதற்கு மாருக கூறுகிறார். இனி 147-ல் ஆணவமாகிய மாயை யென்று கூறும் வாயிலாக இரண்டுமொன்றென்று கூறினவர், இங்கு ஆணவம் மாயை இரண்டும் ஒன்றல்ல, இரண்டென்று கூறுகிறார். அன்றியும் இவ்வைந்தும் மலமென்னும் பெயர் பெறுமென்றவர். 183-ல் ஆணவமாத்திரந்தான்மலமென்று பெயர் பெறுமென்பது கூறுகின்றார். மேலும் மலமாகிய அவித்தியென்றும் கூறினர். இனி அங்கு மலமாகிய அவித்தை யென்றவர் தாமே 147-ல் மலமாகிய மாயை யென்றும் இனி 141-ல் அவித்தையாகிய ஆணவ மலமென்றும் கூறுகின்றார். ஆதலால் ஆணவம் மாயை வேறில்லை என்றும், ஆணவம் மாயை வேறென்றும், மலமும் அவித்தையும் வேறில்லையென்றும், மலமும் அவித்தையும் வேறென்றும், இன்னுமிவ்வாறே அவர் கூறும் விவர்த்தமெல்லாம், குண்டலாகமங் கூறுமுறை போலும். இனி,

195 அநாதியாகி சுத்த தன்மையை மறைத்தலால் மலமெனப்படு மென்றார். அது சுத்தப்பிரமமான சர்வ சாக்ஷியென்று கூறும், குண்டலதீக்ஷை ஆகமமுறையே போலும். அது நிற்க.

இனி இங்கு ஓர் அரசகுமாரன் வேடர் வசப்பட்டு அறியாமை யால், யான் வேடனென்று கீழ்மையடைந்திருந்தான். அவனை ஓர் ஆப்தன் நீ வேடனல்ல ராஜகுமாரனென்றறிவிக்க அவ்வறியாமை நீங்கி, முன்னரே சித்தித்துள்ள, ராஜத்தன்மையினை அடைந்தான். கர்னன்போலென்னுந் திருட்டாந்தமும் தாட்டாந்தத்திற் பொருந்து மாறு, இந்திரியங்களான வேடர்களோடு கூடியிருந்து என்று ரூபகப் படுத்திக் கூறினார் என்றும், இந்திரிய பதமபாசோபலக்ஷணமாம். என்றும், முன்னரே சிவமாயிருந்த ஆத்மா பரசவசப்பட்டு சம்சாரி யாய்ப் பின் உபதேச வாயிலாக பாசத்தினீங்கி சிவமாதலால், அது பின் வரும் பிரமாணங்களாற்றெளிக வென்றுங் கூறினார். பிரமமானது தான் வேடனென்று கீழ்மையடைதலும், ஆப்தன் வேடனல்லவென்று கூறுதலும், முன்னரே சித்தித்துள்ளது. சுத்ததன்மை யென்று கூறித லும், இந்திரியமான வேடரோடு கூடியிருந்து என்று ரூபகப்படுத்த லும், குண்டலாகமமுறையாதலால், அம்முறை சிவாகமப்பொரு ளென்று கூத்தாடுதல் விவர்த்தக் கூத்தாதலறிக சிவாசாரியரது விவர்த்த வியாக்கியானம். 61-ல் இந்திரியங்களோடு கூடி யென்னும் இந்திரியபதம் பாசோபலக்ஷணமென்றும், “தஸ்ய ரூபகத்வேன நிர் திஷ்டம் வியாத்பதம் விதி நேக்ஷதாந்தர பிரவர்த்த கதியோதகம் ஞான தனுபகாரகம்” என்றுங் கூறுதலை கண்டெடுத்தெழுதி, அதில் தாம் சந்தி விக்கிரகம் செய்யுமுறை பற்றி இவ்வாறு விவர்த்தங் கூறி னார். இனி இந்திரிய பதம் பாசோப லக்ஷணமாகாது. அது பாச மைந்தினுட்படாமையால், இனி முன்னரே பாசமில்லாமல் இருந்த பரமாத்மா அவித்தையால் பந்தப்பட்டு, பிரமமாமென்பது குண்டா லகம் முறையல்லது, சிவாகமமுறை, யாகாமையால் அது விவர்த்தமாத லறிக. இனி அவர் சுத்தமாகிய சிவமாயிருந்த ஆத்மா, அவித்தை யால் பந்தப்பட்டு, அப்பந்தம் நீங்கும் என்பதற்குக் கூறும் பிரமாணங் களை சிறிது விசாரிப்போம். 196 நிட்கலம், நிர்மலம், சாந்தம், சர்வா தீதம், நிராமயமாயுள்ளதெது அதுவே சிவரூபத்தால் புண்ணிய பாவங்களாற் சூழப்பட்டது என்றார். இதில் சிவசத்தம் வாராமை மேலும், அச்சிவம் பந்தப்படுதல் விடப்படுதல்கள் கூறாமையால், இது அதற்குப் பிரமாணமாகாமையறிக. இவ்வாறே 196 தொடர்ச்சி

241 வரையுமுள்ளன சிவம், அவித்தையால் பந்தப்பட்டு நீங்கு மென்று கூறுமையால் அவையதற்குப் பிரமாணமாகாமையறிக. 196-ல் இனி பரமாத்மா புண்ணிய பாவங்களாற் சூழப்பட்டதென்றூர். என்றது, 200-ல் இப்பிரத்தியேகாதமாது வந்துவம்மாகிய புண்ணியமில்லாதது என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி 208-209. இவைகளில் பிரமம் வியாபகமென்பது 22-ல் வியாபக மித்தையென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி, 209 பிரமம் அஞ்ஞானத்தாற் பந்தப்பட்டு, அவ் அஞ்ஞானத்தின் நீங்குகின்றதென்பது 54-ல் அஞ்ஞானமும் அதன் காரியமும் பிரமமும் என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இவ்வாறே யிடையிலுள்ள விவர்த்தங்களையு முணர்ந்து கொள்க. இனி 241 மூலத்திலுள்ள தற்பதம் என்பதிலுள்ள, தத்தென்பது, சிவத்தின் வாசகமாம் அதனை "ஓம் தத் சித்திதேசோ பிரம்மணஸ்திரவத" என்பதால் காண்க என்றும், பதமென்பது வஸ்து, வாசகமென்பது, நிகண்டு முதலியவற்றால் பிரசித்தமாமென்றுங் கூறினர். தத்வமஸி என்பதில், தன் என்பது, நாராயணவாசகமென்று பாஞ்சராத்திரிகள் கூறுதலால், தத் என்பது. சிவத்தின் வாசகமென்பது விவர்த்தமாதலறிக. இனி, பதமென்பது வஸ்து, வாசகமாதல் நிகண்டிற் பிரசித்தமென்றூர். அது குண்டல நிகண்டுப்பிரசித்தம் போலும். ஆதலால் சிவம் பந்தப்படுதல் விடுதலெல்லாம் கவுடபாதகாரிகை, சங்கரபாஷியம் முதலிய, குண்டலாகமங்கூறும். பௌதிக சிவனல்லது சிவாகமங்கூறுஞ் சிவனல்ல ஆதலால் அக்கூற்று விவர்த்தமாதலறிக. இனி, 142 அவதாரிகை முன் ஆசிரியனால் உபதேகிக்கப்பெற்ற ஞானம் திடமாமாறு அனுட்டிக்கும் முறைமையினைக் கூறுகின்றூர் என்றூர். சிவாசாரியார் அவ்வாறு கூறுமையாலும், இவர் அவர் வியாக்கியானத்தைப் பார்த்து சந்திவிக்கிரகம் பண்ணினராதலாலும் அது விவர்த்தமாதலறிக. இனி, முன்னே ஆசிரியனால் உபதேசிக்கப்பெற்ற ஞானமெனவே, குப்புசாமிராசுவால் கொடுக்கப்பெற்ற வியாக்கியானம் என்பது போல் முன்னில்லாத ஞானமானது உபதேசித்தால் பின்னே கிடைக்கப்பெற்றமைபெறப்பட்டது. படவே அது 194-ல் முன்னரே சிவமாயிருந்த ஆத்மா என்றும் 142-ல் ஆத்மா நித்தியஞானச் சொரூபன் என்றும் 141-ல் சிவன் இயற்கையாக நித்தியஞானச்சொரூபி என்றுங்கூறுங்கூற்றுக்களோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி, ஞானந்திடமாமாறு அனுட்டிக்கும் முறைமை என்

பது, இந்த ஞானத்தை அனுட்டிக்கும் முறைமையா, அல்லது ஞானந்திடமாகும்படி அனுட்டிக்கும் முறைமையா என்று சந்தேகமாம். இனி, ஞானத்தை அனுட்டிக்கும் முறைமை யென்றும், ஞானந் திடமாகும்படி அனுட்டிக்கும் முறைமை யென்றும், தாற்பரியமாகாமையால் விவர்த்தமாதலறிக. இனி ஆசாரியன் உபதேசித்த ஞானம் திடமாகும்படி எனவே; அவன் அதிடமான ஞானத்தை உபதேசித்தான் என்பது பெறப்பட்டது. படவே, அவ்வாறு திடம் பிறவாதஞானம் உபதேசிக்கும் ஆசிரியன் 188ல் குருமூர்த்தியே பரமசாதனம் என்னும், பரமசாதனமாகாமையால் அது விவர்த்தமாதலறிக. இனி தனக்கு மேலான சாதனமில்லாத சாதனமெதுவோ, அது பரமசாதனமாம். ஆகவே, உபதேசிக்கப்பெற்று பரமசாதனமான ஞானம் திடம் பிறவாதாக வேறொன்றால் திடமாகும்படியுள்ள அந்த திடமாகாத ஞானம் பரமசாதனமென்பது விவர்த்தமாதலறிக. அறியவே குருபரம சாதனம் ஞானம் பரமசாதனமென்னு முறை குண்டலாகம முறையல்லது, சிவாகமமுறை யாகாமையறிக. இனி அவர் சூத்திரார்த்தம் தருகின்றது.

நற்புத்தியுடையோன் சிவஞான திருட்டியால் ஆத்மாவாகிய தன்னிடத்தில் ஈசனை அதாவது அந்தர்யாமியாயுள்ள சிவத்தினை அனன்னியமாயறிந்து, சிவத்திற்கு அந்நியமான பொய்ப்பொருளை அறியுங், கானற் ஜல வுணர்ச்சிபோன்ற பொய்யுணர்ச்சியினைவிட்டு, சிவப்பொருளான சோதிசொரூபத்தைப்பெற்று, அது திடமாமாறு பஞ்சாக்ஷரப் பொருளினை பாவிக்கக்கடவன் என்றுகூறினர். இனி அவர் வியாக்கியானம் வருமாறு. சித்தாகியசிவம், சித்துரூப திருட்டியினாலன்றி சுட்டுணர்வால் அறியப்படாதென்பார், ஞானதிருட்படியினாலென்றும், ஆரோபிதமான தன்னிடத்தில் தனது அதிட்டான ரூபமான சத்தியமான சிவத்தினை அறியவேண்டுமென்பார், தன்னிடத்தில் ஈசனை அறிந்து, என்றும் உலகம் பொய்யாதலால் அதனுணர்ச்சியினை கானற் ஜல,உணர்ச்சி என்றும், அவ்வுணர்வு மெய்புணர்வால் நீங்கவே, எஞ்சுவது அதிட்டான சிவரூபமேயன்றி வேறில்லாமையால், சிவப்பொருளான சோதி சொரூபத்தினைப்பெற்று என்றுங்கூறினர். இனி சாயையென்பது சோதிக்கொருபெயர் என்பதனை, அமரமுதலிய நிகண்டுகளிற்காண்க என்றும், சிவன், ஈசனருளாகிய ஞானதிருட்டியினாலேயே சிவத்தை யறியவேண்டுமென்பதற்குப் பிரமாண மிருக்கின்றதென்றுங் கூறினர். சாயையென்பது சோதிக்கொருபெயர் என்பதனை அமர

முதலிய நிகண்டுகளில் தேடியாங்கண்டிலம். இவர் வியாக்யானத்திற்கு மூலமாகிய சிவாசாரியர் வியாக்கியானம் 74ல் "சிவபதச்சாயாம்லப் தேதி சிவபதச்சாயையை அடைதலென்று பொருள்கூறி, அநாதியில் அசுத்தமில்லாமையால் சிவமென்னும் பெயருடைய பதம் வஸ்து வாசகம் என்றும், சாயாம் என்னும் பதம் பரஞ்சோதிமயம் என்றும், லப்தாவென்பது, அடைதலென்றுங்கூறி, சாயா என்பது சூரியனைப் பிரியாதகாந்தி, அதாவது சூரியப்பிரதிவிம்பம் என்பது அமரத்துட் கூறப்பட்டதென்றும். சாயா என்பதன் பொருளாவது நிர்மலசொரூப வஸ்துவான சோதிமயம் எனப்படும் என்றும், பிராம்பியம் என்பது அடைதலென்றுங் கூறினர். இவர் அவர்சாயையென்பது சூரியனைப் பிரியாத காந்தியென்று கூறுவதையறியாமல், சாயை என்பது சோதிக் கொருபெயரென்றும், அது அமரத்திற் கூறப்படுகின்றதென்றுங் கூறினர். அவர் சிவமென்னும் பெயர்ப்பதம் வஸ்து என்றார், இவர் விபரீதமாக "தத்" என்பது சிவத்தின வாசமென்றார் குண்டமென்பதை குண்டலமென்று சிவாகமங்கிடந்த மூலேயு மறியாமல் பதபேதமறியாமல் கூறுவதுபோல, குண்டலாகம முறைபற்றி இவ்வாறு கூறினர் போலும். எவ்வாறு கூறினும் இவரை அநாகமி என்று கூறுவதல்லது ஆகமி என்று கூறுவர் யாருமில்லை. அது நிற்க, இனி சித்துரூஸா, என்பதற்கு, சிவஞானமென்றும், ஈசம் என்பதற்கு சிவத்தினை என்றும். "வினுத்தி மதியக்துவா" யென்பதற்கு சிவத்திற்கு அந்நியமான பொய்ப்பொருள் திடமா மாறுபாவித்தலென்றுங் கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி, ஆத்மாவாகிய தன்னிடத்திலெனவே, ஆத்மா ஆகாத தன்னிடத்திலென்றும், அந்தரியாமியாயுள்ள சிவமெனவே அந்தரியாமியாயில்லாத சிவமென்பதும், சிவத்துக்கு அந்நியமான பொய்ப் பொருளெனவே, சிவத்துக்கு அந்நியமாகாத பொய்ப் பொருளும் திடமாமாறு எனவே, திடமாகாதவாறு என்பதும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி சிவபதச்சாயா மென்பதற்கு மூலவியாக்யானக்காரர் பரஞ்சோதி யென்று பொருள் கூறுதலால் இவர் சிவப்பொருளான சோதி சொரூபமென்பது விவர்த்தமாதலறிக.

இனி, 143-ல் சத்தாகிய சிவமெனவே சத்தாகாத சிவமுண்மை பெறப்பட்டு விவர்த்தமாதன் மேலும், சத்தாகிய சிவமென்பது கவுடபாத காரிகையுள் சிவம் அசத்தென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி சீவனது சுட்டுணர்வென்பது சுட்டுணர்வாகிய சீவனென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி ஆரோபிதமான

தன்னிடமென்பதும், அதனது அதிட்டானமான சிவசொரூபமான சத்தி சிவமென்பதும், குண்டல தீக்ஷை நூலில் காண்க. இனி 54-ல் இவ்வெல்லாம் அஞ்ஞான மயமென்று பேசுதலும் பேச்சல்ல, பிரமத்தின் வேறாகிய அஞ்ஞானமில்லை. அஞ்ஞான்மும் அதன் காரியமும் பிரமம். குடம் சுவர் முதலிய வெல்லாம் பிரமம் என்ற விடத்து பிரமம் வேறு, அஞ்ஞானம் பேறிலப என்று கூறியதை மறந்து, உலகம் பொய், அவ்வுணர்ச்சி மெய்யுணர்வால் நீங்கும் என்றும், அது பொய்யாகிய அஞ்ஞானம் பிரமத்தின் வேறென்றும் கூறுகின்றார். ஆதலால் அவர் கூறுவனவெல்லாம் விவர்த்த விவர்த்தமாகித் தெருப்பாட்டாதலறிக. இனி சாயை என்பது சோதிக்கொரு பெயர். அதனாலது நிழலென்று கொண்டு சிராந்தியின் விசிராந்திக்கு ஏதுவான நிழலாம். பதியென்று பொருளுரைப்பதும், ஒன்றென்றார். அதுவும் குண்டல தீக்ஷாகம முறையின்றி சிவாகமமுறை ஆகாமையால் அது விவர்த்தமாதலறிக.

இனி ஈசனருளாகிய ஞானதிருட்டியினாலேயே சிவத்தை அறிய வேண்டும் என்றார். என்பதற்கு, அவர் கூறும் பிரமாணம் வருமாறு. ஈசனருளாகிய ஞான திருஷ்டி எனவே ஈசனருளாகாத ஞான திருட்டியும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி ஈசனருள் ஞான திருஷ்டி என்பன ஒரு பொருட் கிளவி என்றார். அவ்வாறுதல் அவரது குண்டலதீக்ஷாகமமுறையல்லது சிவாகம முறையாகாமையறிக. அது நிற்க. இனி அவர் பிரமாணம் வருமாறு இனி ஈசுரரால் அனுக்கிரகிக்கப்பட்ட பிரஞ்ஞையினால் நீ யறிவாயாக என்றார். இதில் ஈசன் அருள் ஞானம் திருட்டி யென்பன கூறப்படாமைபோலும், சிவத்தை யறிதலைப்பற்றிக் கூறப்படாமையால், அவர் பிரமேயத்துக்கு இது பிரமாணமாகாமை யறிக. இனி "நாயம் ஆத்மா பிரவசனே நலப்பியோ" என்பதற்கு ஆத்மாவாகிய சிவம் என்று கூறினார். ஆத்மாகிய விண்டு என்று பாஞ்சராத்திரிகள் கூறுவதை மறுத்துக்கூறாமல், சிவமென்று கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி 244-ல் நீ நான் என்னும் சொற்பொருளின் இலக்ஷியார்த்தமென்பது 178-ல் துவம்பதலக்ஷியமான சித்தே தத்பத லக்ஷியமான சிவம் என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. ஆதலால் அது ஈசனருளாகிய ஞானதிருஷ்டியால் சிவத்தை அறிதல் கூறாமை யறிக. இனி, 245 தன்னிலே தலைவனை ஈசனைக் காணவேண்டும் என்பதற்குப் பிரமாணம் கூறுகிறார். ஆத்மாவிலுள்ள அவனை யெத்தியர்கள்

பின்பற்றியறிகிறுர்களோ என்றுர். இதில் தலைவனென்றுவது ஈச னென்றுவது கூறப்படாமையாலும், இன்னும் இவர் பிரமாணம் பிர மாணம் என்று கூறப்படுவன எல்லாம், அவ்வாறுதலும் அதற்கவை பிரமாணமாகாமை யறிக். ஆதலால் தன்னிலே தலைவனுன ஈசனைக் காணுதல் கூறுமையால் அக்கூற்று விவர்த்தமாதலறிக. இனி 147-ல் சிவஞானத்தால் பாசம் ஒழியும் என்பதற்கு பிரமாணங்கூறுகிறுர். அவ்வியத்தத்தினும் மேலானதும் வியாபகமும் அலிங்கனுமாகிய புருஷனே அவன், அவனை அறிதலால் சீவன் பாசத்தினின்று விடு படுகிறுன். அமிர்தத்தினை அடைகிறுன் என்றுர். இதில் சிவஞான மாவது கூறப்படாமையால் இது அதற்குப் பிரமாணமாகாமையால் விவர்த்தமாதலறிக. இன்னும் அவர் அதற்கு பிரமாண மென்று கூறப்படுவன எல்லாம் இவ்வாறேயாம். ஆதலாலும் சிவஞானத்தால் பாசமொழியுமென்பது குண்டலாகமமுறையாதலாலும் அதுவிவர்த்த மாதலறிக. இனி, "முச்யதே சந்து:" என்பதற்கு பாசத்தினின்று விடுபடுகின்றுன் என்றுர். அதில் பாசசத்த மில்லாமையால் அது அதற்குப் பிரமாணகாமை யறிக. இனி, 248 தொடங்கி 254 வரை கூறப்படுவன வெல்லாம் சிவஞானத்தால் பாசமொழிதற்கு பிரமாண மென்றுர். அது அவற்றிலில்லாமையால் விவர்த்தமாதலறிக. 254 சிவஞானத்தால் பாசமாகிய அனர்த்தம் நீங்கவே, எஞ்சிய பரமானந்த சிவத்தினை யடைகிறுன் என்பதற்கு பிரமாணங்கூறுகிறுர். பாச மாகிய அனர்த்தமெனவே பாசமாகாத அனர்த்தமும், பரமானந்த மான சிவமெனவே பாரமானந்தமாகாத சிவமும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. அனர்த்தம் நீங்குதல் எஞ்சிய பரமானந்தமான சிவத்தை யடைதலெல்லாம் குண்டலமுறையல்லது சிவாகமமுறை யல்ல, ஆனுலும் அவர் கூறும் பிரமேயம் அவர் கூறும் பிரமாணத்தி லுள்ளதோ இல்லதோயென்று விசாரிப்போம். 255 எப்போது இவன் இதயத்திற்சார்ந்த காமங்களெல்லாம் நீங்குகின்றதோ அப்போது மரண தர்மமுள்ளவன் அமிர்தனுகின்றுன், இங்கு பிரமத்தினைச்செவ்வையாய் அநுபவிக்கின்றுன் என்றுர். இதில் சிவசத்தமாவது சிவானந்த பர மானந்த சத்தங்களாவது கூறப்படாமையாலும், அவ்வாறே அதற்கு அவர் கூறும் மற்றைப் பிரமாணங்களிலும் அவை கூறப்படாமை யாலும், அதற்கவை பிரமாணமாகாமையறிக. இனி, 254 தொடங்கி 275வரை கூறும், வெறும் குப்பைகளெல்லாம் பரமானந்தமான சிவத் தைப்பற்றி கூறுமையால் அதற்கவை பிரமாணமாகாயறிக. 275 இனி

இவ்வாத்மா சிவஞானத்தாற் பாசம்நீங்கி சிவத்துவம்பெறினும், அநாதி வாசனாவசத்தால் பாசத்தினைநோக்குமாதலால் அவ்வாசனை அடியோடு நீங்கி, சிவானுபூதியில் அழுந்தாமற, பஞ்சாக்ஷரப்பொருளை பாவிக்க்கடவன் என்றார். இங்கு அநாதிபாச அசுத்தனென்பது 195ல் அநாதியான சுத்ததன்மையை மறைத்தலால், மலம் என்று கூறப்படுவதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. முன் ஆத்மா அநாதியிற் பாசமில்லாத அநாதி சுத்தன் என்றிவ்வாறு மாறுபடும்படி குணடலநூலார் கூறுங் கூற்றும் ஒருவியாக்கியானமென்றும், அதில் குற்றமேதவிர குணமுமிருக்குமென்றும் விசாரிக்குநாமே விவர்த்தவாதியல்லது; அவர் விவர்த்தவாதியல்லர். ஆதலால், அநாதிபாசவாசனாவசமென்பதுங் அடியோடுந் தலையோடும் நீங்குமென்பதும் விவர்த்தமாதலறிக.

இனி இங்குப் பஞ்சாக்ஷிரி என்பதுசோகம். அதாவது சிவோகம் பாவனையாம். அதுவே பண்டைவாசனையை ஒழித்து சிவானுபூதியில் அழுத்திவைப்பதாதலால், அகார உகாரமகார விந்து நாதாத்மகமான ஓமென்பதும், சிவாயநம என்பதுமாம். அவற்றிற்கும் சிவனே நானென்பது பொருளாம். சூதசங்கிதையில் பிரணவபஞ்சாக்ஷரங்களினது பொருளுரைத்த இடங்களில் தெளிவாய்காண்க. என்றும் இச்சோகம்பாவனையையே, சோகம் அகம்பிரமாஸ்மி என்று சுருதியாதிகள் கூறுதுகாண்க என்றும், அகாரம்முதலிய ஐந்தெழுத்து வடிவினதாம் பிரணவமென்னும் ஓங்காரம் சோகமென்பதேயாம். அது, சகார ககார உபாதிகளான மெய்யெழுத்துக்களை விட்டபோது ஓம் என்று நிற்கிறது. என்றும், உபதேசித்தார். இவருக்கே சகபாடியாய் இவர் வியாக்கியானத்துக்கு மூலவியாக்கியானமான செய்த சிவாசாரியர் வியாக்கியானத்தில் பஞ்சாக்ஷரதியானமென்பது, அஞ்சு அக்ஷரங்களின் கூட்டமிதுவோ அதுவே, பஞ்சாக்ஷரம், பிரணவம், அகார உகாரமகாரபிந்து நாதவடிவாம். அதற்குப்பொருள் சிவமாம். அதன் பொருளாகிய சிவமே நானென்று பாவிக்கவேணுமென்பது அர்த்தமாம் என்றும், தியானமாவது பாவனை என்பதின் பரியாயம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சிவாசாரியர் தத்பதவாச்சியப்பொருள் சிவமே, அச்சிவம் நானென்று பாவித்தல்வேண்டும் என்று கூறியிருப்பதை அறியாமல், பதினெண்பாஷைவல்ல இப்பண்டிதாசாரியர் ஓமென்பதும், சிவாயநமஎன்பதும், பஞ்சாக்ஷரங்கள் அவற்றிற்கும் சிவனே நானென்பது பொருளாம் என்று, பிரமஞானம் மொழிபெயர்த்தது

போல, மூலவியாக்கியானத்தை மொழிபெயர்த்து உபதேசித்தருளினர். இன்னுமொரு உபதேசம் வருகின்றது. அதாவது வடமொழிச்சோகம் வேறு, தென்மொழிச்சோகம் வேறு என்கின்றார். 176ல் மேலும் இச்சோகம்பாவனையையே, "சோகம் அகம்பிரமாஸ்மி" என்னும் வடிவமாக சுருதியாதிகள் கூறுவதுகாண்க என்றார். எனவே, இத்தென்மொழிச் சோகத்தையே சுருதி ஆதிகள் "ஸோகம் அகம் பிரமாஸ்மி" என்று கூறும் என்பதாம். இனி, அதற்கவர் விபரீதமாக பிரமாணமென்றுகூறும் குப்பைகளை விசாரித்தல் யாதும் பிரயோசனமில்லாமையறிக. 276 இனி தொடங்கி 287 வரையும், அவர் கூறும் குப்பைகளில் பாசம் அடியோடும் முடியோடும் நீங்குதல், பிரணவபஞ்சாக்ஷரமிரண்டிற்கும் சிவமேநானென்னும் பொருள், பண்டைவாசனை யொழிதல், சிவானுபூதியில் அழுந்தல்கள், இல்லாமையால் அவை விவர்த்தமாதலறிக. இனி 287 சிவன் கொடுப்பவன், சிவன் புசிப்பவன், இவ்வுலகம் யாவும் சிவன், யஞ்ஞங்களால் யஜிக்கின்றான், சிவன் எவனே, அவன்யானே, நிச்சயம் என்பது, ஆகமம் உணர்ந்தோர் வார்க்கு என்றார், என்று இப்பொருளுள்ள "சிவோதாதா சிவோ போக்தா, சிவசர்வமிதம் சகத்சிவோயசதி யஞ்ஞச்சயஸ் சிவச்சோகம் மேவத்" என்னும் வாக்கு ஆகமம் உணர்ந்தோர் வாக்கென்றிவர் கூறியவர்க்கு, இவர் சகபாடிவியாக்கியானத்தில் காணப்படுகின்றது. சகபாடியானவர் இதனை இன்ன நூலிலுள்ளதென்று கூறினாரில்லை. கூறாதபடியால் இவர் தமது சகபாடிக்கு ஆகமம் உணர்ந்தோர் என்று பட்டங்கட்டி, ஆகமமுணர்ந்தோர் வாக்கென்று இதற்குபேர் கூறினார். அவர் இவர் கூறுமாறே ஆகமத்தினுண்மை யுணர்ந்தவரானால், ஆறுவது ஏழாவது சூத்திரங்களால் சதசத்நிருபணமாம் என்று, நூலாரம்பத்தில் கூறி, பின், அவ்வாறாவது ஏழாவது சூத்திராரம்பத்தில் அவைகளால் சிவலக்ஷணங் கூறப்படுகின்றது என்று இவ்வாறு முன்பின் விரோதமாகக் கூறுதலும், சிவாத்துவிதங்கூறுதலும், இன்னுமிவ்வாறே விபரீதம் கூறுதலுமாக நிரப்பி வியாக்கியானம் செய்யார். சர்வசாஸ்திர பாரங்கதனாகிய எம்மைப்போல இவருக்கு சிவாகம உணர்ச்சி இருந்தால் அவ்வாறு கூறார். இவர் தனக்கு சிவாகம உணர்ச்சி இல்லாமையால், அவர் சிவாகம வசனங்களை எடுத்து, உதகரித்த மாத்திரையில் உலகம் பிரமமென்று கூறும், விவர்த்தப் பயிற்சி பற்றி, அவர் சிவாகமமுணர்ந்தவரென்று விவர்த்தமாய்க் கூறினர், அவ்வாறு கூறினது யாதுக்கோ எனில் சிவாகம மூலையின்

மூலேயும் அறியாத மாயாவாதிகள் இவர் தானெடுத்தெழுதினதைக் கண்டு, அச்சில் வாராத வசனங்களை சிரமபட்டு எழுதி, சிவாகமங்களை யெல்லாம் குண்டல தீக்ஷா நூலாகிய மாயாவாதமாக்கி விட்டார், என்று கொண்டு அதனல் தனக்கும் சிவாகம முணர்ந்தோர் என்று பட்டங்கட்டுவார்கள் என்னும் விவரீதக் கருத்தேயாம். அது நிற்க இனி 288 இதனல் மோக்ஷத்துக்கு ஞானமே பரமசாதனமென்பது நிருபிக்கப்பட்டதென்முர். இதன் உபக்கிரமத்தில் கூறியது சரியா, உபசம்மாரத்தில் கூறியது சரியா என்று விசாரித்தால், இரண்டும் விவர்த்தமேயாம். எதனலெனில், இரண்டையும் பரமசாதனமென்று கூறுதலாலும், இரண்டும் பரமசாதனமல்லாத படியாலும, ஆதலால் குருமூர்த்தி பரம சாதனம் அல்லது, ஞானம் பரமசாதனம் அல்லது குருமூர்த்தி பரம சாதனம் ஞானம் அப்ரசாதனம் அல்லது ஞானம் பரமசாதனம், குரு மூர்த்தி அப்ரசாதனமென்று, ஒன்றும் இச்சூத்திரத்துட் கூறப்படாமையால் ஆதலால் அது விவர்த்த விவர்த்தமாத லறிக. அது நிற்க.

இனி இவ்வாறு சிவப்பேற்றினை அடைந்த சிவன்முத்தனது இயல்பினைக் கூறுகின்முர் என்று கூறினர். 308-ல் இவ்வாறு, பரா பக்தியினைச் செய்த சிவன்முத்தனது சரீரம் பிரார்த்தக்ஷயத்தில், நீங்கவே, நிருபாதிகனய் சிவரூபகனகவே எஞ்சியிருப்பனென்ற விடத்து, சீவன் முத்தனுடைய சரீரம் நீங்க, அவன் பின்பு பிரம மாகிறுன் என்னும் வாயிலாக, சீவன் முத்தன் சிவப்பேறடைதல் பின்பு என்று கூறுதலால், அதனேடு இங்கு சிவப்பேற்றினை முன்னே யடைந்த சிவன் முத்தன் என்று கூறுவது மாறுபட்டு விவர்த்தமாத லறிக. அன்றியும் சீவன் முத்தன் சிவப்பேற்றினை யடைந்தான் என்று புரோவாதங்கூருமல், சிவப்பேற்றிணை யடைந்த சீவன் முத்தனென்று, அனுவாதங் கூறுதல் குண்டலாகம முறையாத லறிக. இனி சூத்திரார்த்தம் வருமாறு. சிவஞானம் பெற்ற சீவன் முத்தனகிய சித்தன் சிவத்தோடு ஒருமைபடைந்தவனய், அச்சிவன் வசத்தான தனது வியாபாரத்தினை உடையவனய், மல மாயை முதலிய வற்ருல் தகைபப்படாதவனய், சிவரூபமான தன் தனுபவத்தையுடைய வனகின்முன் என்முர். சித்தன் என்பது சீவன் முத்தன் என்னும் அர்த்தமாமென்முர். இவர் சாயை தற்பதம் முதலிய பதங்கள், சிவம் முதலிய பொருளாதற்கு அமரம் முதலிய பிரமாணங் காட்டியது போல, சித்தன் என்பது சீவன் முத்தன் என்னும் பொருளாதற்கு

பிரமாணங்காட்டாமையாலும், சிவப்பேற்றினை யடைந்த சீவன்முத்தன் என்று இங்கு கூறியவர் 308-ல் சிவப்பேற்றினை அடையாத சீவன் முத்தன் என்று அங்கு மாறுக கூறுதலாலும் அது விவர்த்த மாதலறிக. இனி, சிவனைக்கியம் என்பதற்கு சிவத்தோடு ஒருமையென்று பொருள் கூறினர். அது கூடாமை வியாகரண நிருத்த நியாய நூல்களில் காண்க. இனி, சிவானு பூதிமான் என்பதற்கு சிவ ரூபமான தனது அநுபவத்தை யடைதலே யாமெனில், அது பொன்னம்பலபிள்ளையவர்களியல்பாவது குப்புசாமிராசு இயல்பாகிய மாநுபவத்தை அடைதலென்பது போலும். ஆதலால் அது பிரம ரூபமான தனது அநுபவங்கூறுந் தமது குண்டலாகமப் பொருள் போலும். அது நிற்க.

—இனி சிவஞானத்தாற் சர்வானர்த்த வடிவ பாசங்களும் நீங்கிப் பிரமானந்தவடிவ சிவத்தினைப் பெற்று கிருத கிருத்தனும், பிராப்த பிராப்பியனுமான சீவன் முத்தனுக்கு இதன்மேல் பெறும்பேறு வேறில்லை. ஆதலால் அவனைச் சித்தனெனவுரர் என்றும்.

ஞான திருஷ்டியால் பார்க்குமிடத்து சிவத்தைவிட வேறு தோன்றுமையாலும், பசுத்துவம் நீங்கினமையால் யானென்றும், சுட்டுணர்வின்மையாற் சித்தாகிய சிவ சொரூபமே யாதலாலும், சிவத்தோடைக்கியத்தினை அடைந்தவனுய் என்றார். என்றும்,

இங்கு ஐக்கியமென்ற சொல்லிற்குப் பிரமாணமின்றிய, யுக்திகளாற் பலவாறு பொருளுரைப்பர். ஏகத்தின் (ஒன்றின்) பாவம் (தன்மை) ஐக்கியமென்னும் பதவிற்பத்தியினுலே தெளியலாம் அவ்வாறு விபரீதவுரை செய்யாதவாறு மெய்கண்ட தேவரும்.

"ஏகனுகி" என்று மொழி பெயர்த்து,

"அவனிடத்தேகனுய் நிற்க" என்று பொழிப்புரைத்ததும் காண்க என்றும்,

முன்னர் பாசவசத்தால் பேதமாகிய, துவைத்த தோற்றமுடையவனுகிய இவன், பாச நீங்கிய வழி அந்த துவைத்த தோற்றமொழிந்து, அத்துவிதனுய் ஏகனுய் நிற்றலாகிய இதனையே, இரண்டறக்கலத்தல், அதாவது, இரண்டென்பதொழியக் கலத்தல் என்பதாம். எனவே. ஒன்றென்பதென்ற வாறுயிற்று, இவ்வாறின்றி இரண்டென்பது தோன்றுது கலத்தலெனப் பொருள் செய்யின் ஏகனென்றும், சொல்லிற்குப் பொருளாகாமையோடு சிவபூரணத்தன்மைக்கும் குறைவுண்டாகும் என்றும், இவ்வைக்கியத்திற்கு ஒருமையே பொருளென்னும்,

அபிப்பிராயமுள்ள சுருதியாதிகள் இவையாம் என்றுங்கூறினர். பிரமாணமின்றிய, யுத்தியெனவே, பிரமாணமுள்ள யுத்தியுண்மை பெறப்படும். அதுவும் பிரமாணமுள்ள யுத்தியில்லை என்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி பராபத்தியினைச் செய்த சீவன் முத்தனென்று சீவன் முத்தனுக்கு கிருத்தியங்கூறுதல், 308 சீவன் முத்தன் கிருத கிருத்தியனென்பதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி சீவன் முத்தனது சரீரம் பிராரத்தக்ஷயத்தில் நீங்க, நிருபதிகனாகி சிவரூபனாக ஆகின்றான் என்று கூறுதல், பிராப்த பிராப்பியனுமான, சீவன் முத்தன் என்றும், இதன்மேற் பெறும்பேறு வேறில்லையென்றும், கூறுதலோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி சர்வானர்த்த வடிவபாசமெனவே, சர்வானர்த்த வடிவமாகாத பாசமும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி யாமிதுகாறுங் கூறும்...பற்றி ஞானதிருட்டி இல்லாமையாலும், சிவத்தைவிட வேறு தோன்றாதலாலும், பசுத்துவ மில்லாமையாலும், யான் என்பது சுட்டுணர்வாகாமையாலும், அசித்தாகிய சிவரூப மில்லாமையாலும், சிவத்தோடையிக்கியத்தினை அடைந்தவனென்பது விவர்த்தமாதலறிக. இனிச் சித்தாகிய சிவரூபமெனவே, அசித்தாகிய சிவரூபமும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி அயிக்கியமென்ற சொல்லுக்கு பிரபிரமாணமின்றிய யுக்திகளால் பொருளுரைப்பர் என்றார். 621 பிரமாணம் வேறு, யுத்திவேறு, பிரமாணத்தைக் காட்டிலும் யுத்திமிகக் கடினம், ஆதலால் யுத்தியில்லாமல் பிரமாணத்தால் அறியலாம் என்று கூறினவர் தாமே இங்ஙு பிரமாணமில்லாத யுத்தியால் பொருள்கூறில் அது விபரீதமென்கின்றார். அது அவருக்கு இயல்பேயாம். அது நிற்க. இனி பெரியர் அறிஞர் என்று கூறுதல் இவர்முறையாதலால் பிரமாணமின்றிய யுக்திகளால் பொருளுரைப்பவர் என்போர் இவரே அல்லது பிறரல்லர் என்பது, யாம் இதுகாறுங் கூறிவந்த பிரமாணங்களால் இனிது விளங்கும். இனிகொள்ளுவர் பெரியர், கொள்ளுவர் அறிஞரெனவே, இம்முறைமாறி, பெரியர் கொள்கையை அறிஞரும், அறிஞர்கொள்கையை பெரியரும், ஒப்புக்கொள்ளாரென்பது பெறப்படுமாறுபோல, பிரமாணமுள்ள யுத்தியென்றிவரொப்புக்கொள்ளும் யுத்திக்கு பிரமாணம்வேண்டாம் என்று, இவரே ஒப்புக்கொள்ளாமையால் வறிதே பிரமாணமின்றிய யுக்திகளால் பலவாறு பொருளுரைப்பரென்று தெருப்பாட்டுபோடி 45ல் சிவவாக்கியமாகிய, சிவாகமம் சிவபெருமான் சிவனடியார் இவர்களைத் தூஷித்ததுபோல், இங்கும் பிர

மாணமின்றிய யுக்திகளாற்பலவாறு பொருளுரைப்பரென்று தூஷித்து கூத்தாடுகின்றூர். இக்கூத்து பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் முதலிய அபிப்பிராயக்காரர்களுக்கு செல்லுமல்லது நமக்குச் செல்லாமையால் அது விவர்த்தமாதலறிக. அது நிற்க இனி ஒன்றின் தன்மை அயிக்கியம் என்னும் பதவிற்பத்தியால் தெளியலா மென்றூர். அவ்வாறொரு பதவிற்பத்தியை யாம் கண்டிலம், அதுநிற்க. இவ்வாறு விவரீதஉரைசெய்யாதவாறு மெய்கண்டதேவர் கூறினரென்றூர். பிரபு என்பதற்கு முதலென்றும், ஆதியென்றும், விபரீதமாய் பெயர்த்தாரென்று, முன்வெட்டவெளியில் தூஷித்ததுபோலில்லாமல் (290) இங்கு அவரை பூஷித்ததுபோல் தூஷிக்கின்றூர். அது நிற்க. இனி (290) முன்னர் பாசவசத்தால் போகமாகிய துவைதத்தோற்ற முடையனாகிய இவுன், பாசம் நீங்கிய வழி, அந்தத் துவைதத் தோற்ற மொழிந்து, அத்துவிதனுய ஏகனுய் நிற்றலாகிய இதனையே, இரண்டறக் கலத்தல், அதாவது, இரண்டென்ப தொழியக் கலத்தல் என்பதாம். என்று தெருப்பாட்டுப் பாடுகின்றூர். (54)ல் குடம் சுவர் முதலிய பதார்த்தாம் பிரமத்தின் வேருக இல்லை, அவை எப்போதும் பிரமமே, இவ்வெல்லாம் அஞ்ஞானமயமென்று பேசுதலும் பேச்சன்று, பிரமத்தைவிட வேருக அஞ்ஞானமில்லாமையால், அஞ்ஞானமும் அதன் காரியமும் பிரமமே, வேறில்லை என்று கூறினதை மறந்து கூறுங் கூற்ருதலால், பேதமாகிய துவைதத் தோற்றம் என்றும், அஞ்ஞானத்தாலென்றும் அஞ்ஞானம் நீக்கம் என்றும், இவ்வாறு கூறுவன கூத்தாடி சிலம்பம்போல் சொற்சம்பிரமமே அல்லது வேறின்மையறிக. இனி, அத்துவிதனுய் ஏகனுய் என்றூர், அத்துவிதன் என்பது துவிதமில்லாதவன், அதாவது ஏகனென்பதே அவர் கூறும் பொருளாம். ஆகவே, யேகனு யேகனு என்ருல், அத்தாற்பரியம் யாதோ அறியோம், ஏகவாதப் பயிற்சி மிகுதி பற்றி யேகனு யேகனு என்று, இரண்டுமுறை கூறி, பெரிது அவலாஷிக்கின்றூர். ஏகனு யென்று இரண்டு முறையன்றி, இருபது முறை கூறினுலும், அத்துவிதம் ஒருக்காலும் ஏகமே யாகாது. ஏகம் அத்துவிதமே யாகாது. இந்த ரகசியம் இங்கே கூறத்தக்கதன்று. ஆதலால் இந்த ரகசிய முறை யறியாமல் இதனையே இரண்டறக் கலத்தல், அதாவது இரண்டென்பதொழியக் கலத்தல் என்பதாம். எனவே, ஒன்றென்பது ஆயிற்று. இவ்வாறன்றி இரண்டென்பது தோன்ருமற் கலத்தலென்பது பொருள் செய்யில் ஏகனென்னும் சொல்லிற்குப் பொரு

ளாகாமையோடு சிவபூரணத் தன்மைக்கும் குறைவுண்டாகு என்றென்று, வாய் நீர் குடித்து, யானை பெருத்தம் பொலிய என்பதை ஆவக்காளை அத்தான் பொலிய என்று புதுப்பாடங் கூறி, ஆனை எருத்தம் பொலிய என்னும் பாடம் கூடாதென்று குற்றங் கூறினவர் கதைபோல, இரண்டறக் கலத்தல் அதாவது இரண்டென்ப தொழிய கலத்தல் எனவே, ஒன்றென்பதாயிற்று. என்னுந் தெருப்பாட்டின் கண்டன மண்டனங்களெல்லாந் தாமே கூறி, அது யாரோ கூறினார் போல தெருப்பாட்டுப் பாடி திரிகின்றார். அவ்வாறு கூறியதுண்டானால் இன்னார் கூறினர், அல்லது இன்ன நூலிற் கூறப்பட்டது என்றன்றோ கூறல்வேண்டும். அவ்வாறு கூறாமல் இவ்வாறு கூறுதல் விவர்த்தவிவர்த்தமாதலறிக. ஆதலால் இரண்டறக் கலத்தல் இரண்டென்பதொழியக் கலத்தல், இரண்டென்பது தோன்றாமற் கலத்தல் என்பனவெல்லாம், குண்டலாகமமுறையல்லது சிவாகம முறையுண்மையறிக. இனி 290 இவ் அயிக்கத்திற்கு ஒருமையே பொருளென்றும், அவ்வபிப்பிராயமுள்ள சுருதியாதிகள் இவையாமென்றுங் கூறினார்.

அவை வருமாறு, எதில் சர்வ பூதங்களும் ஆத்மாவேயாயிற்று என்று விசேஷமாய் அறிபவனாகிய ஏகத்துவத்தினைக் காண்பவனுக்கு அதில் மோகமேது என்றார். இதில் அத்துவிதனுப் எசனுய் இரண்டறக்கலத்தல் இரண்டென்பதொழியக் கலத்தல் என்னும் பொருள்வாராமையால், இது அவற்றிற்கு பிரமாணமாகாமையறிக. இனி அடுத்ததையும் விசாரிப்போம். சலத்திற்சலமும், பாலிற்பாலும், நெய்யில் நெய்யும், வார்க்கப்பட்டபோது எப்படி விசேஷ மின்றியதாகின்றதோ அப்படியே, சீவபரமாத்மாக்களின் ஐக்கியமாம் என்றார். சீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, சீவபரமாத்மாக்களின் ஐக்கியம் என்று கூறினார். அவ்வாறு கூறுதற்கு மூலத்துள் ஐக்கியசத்தம் எங்கிருக்கின்றது, இல்லாத ஐக்கிய சதத்தை இழுத்துக்கொண்டு திண்டாடுகின்றார். இவ்வாறே இல்லா அயிக்கியம் உண்டாதலும், உள்ள அத்துவிதம் இன்றாதலும், குண்டல தீக்ஷாகமமுறைபோலும். இனி, இந்தவசனம், பைங்கலோபநிஷத்தில் காணப்படுகின்றது. அதில் வரும் சீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, சீவபரமாத்மாக்களின் ஐக்கியம் என்று, ஐக்கியசத்தம்விரித்த, பண்டிதாசாரியார், சிவாசாரியர் வியாக்கியானம், 71ல் அசிந்திய விசுவசாதாக்கியமென்று கூறப்பட்ட சலேசலம் என்னும் வசனத்தையும் எடுத்து, 293ல் எழுதி விவர்த்த அர்த்தம் பண்ணுகின்றார். இதில்

வரும் சீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, சீவபரமாத்மாக்களின் அவிசேஷம் உண்டாகிறதென்றார். பைங்கலத்தில் வரும் சீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, சீவபரமாத்மாக்களின் அயிக்கியமாமென்றார். அவ்விரண்டிலும் வரும் சீவாத்மா பரமாத்மா என்னும் பாடமொன்றேயாம். அவ்வாறாகவும் பைங்கலத்துவரும், சீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, சீவபரமாத்மாக்களின் அயிக்கமென்றும், அசிந்திய விசுவசாதாக்கியமென்பதில் வரும் ஜீவாத்மா பரமாத்மனே என்பதற்கு, ஜீவபரமாத்மாக்களின் அவிசேஷ மென்றும் இருபொருள் கூறற்கு நியாமகமென்னை? சிவாசாரியார் வசனத்தை எடுத்து மறைத்தெழுதினமட்டிலும் விடாமல், அசிந்தியவிசுவசாதாக்கியமும் பிற ஆகமுமாம் என்றும், ஆகமங்களெல்லாம் உணர்ந்தவர்போல சுவச்சந்தாதி என்றும், ஆதிசந்தமாக்கிக் கூறுவர். இவ்வாறு சீவாத்மா, பரமாத்மனே என்பதற்கு, சீவாத்மாக்களின் அயிக்கியமென்று இழுத்துக்கூறிய ஐக்கியசத்தமல்லது, மூலத்துள் அயிக்கிய சத்தமே இல்லாமையறிக. இனி 291 தொடங்கி 298வரையும், அவர் பிரமாமணம் பிரமாணமென்று கூறுவனவெல்லாம் கூறுமாறு பற்றி, அயிக்கியத்தைக் கூறுமைபால் பிரமாணமாகாமையறிக. இனி 298 "தத்துவமசி அயமாத்மா, பிரமம் பிரக்ஞானம் பிரமம் அகம் பிரமாஸ்மி" முதலிய மகாவாக்கியங்களும், இவ் ஐக்கியத்தினை உணர்த்துவனவேயாம். இவ்வைக்கியங்களினர்த்தம் சூதசங்கிதை, கைலாசசங்கிதை, முதலியவற்றில் விஸ்தாரமாய் கூறப்பட்டுள்ளது என்றும், இன்னும் இதற்குமுன் இவ்வுரையில் பல விடங்களில் வந்துள்ள பிரமாணங்களையும், இங்குப் பொருத்திக்காண்க என்றும் கூறினர். நான்கு மகாவாக்கியங்களுக்கும் இவ்வயிக்கயமே பொருளென்பது 176-ல் ஓமென்பதற்கும், சிவாயநம என்பதற்கும், சிவனே நான் என்பதுபொருள் என்று, விவர்த்தப்பொருள் பொருள்விரித்ததெவ்வாறு விவர்த்தமோ, அவ்வாறே விவர்த்தப் பொருளாதலறிக. "சீவாத்மா, பரமாத்மனோ' என்பதற்கு, எவ்வாறு இல்லாத அயிக்கத்தை இழுத்துக் கூறினரோ, அவ்வாறே பிரமாணமென்று வருவனவற்றில் அயிக்கத்தை யிழுத்துக்கூறினரல்லது, அவைகளில் இயல்பாக அயிக்கிய சத்தம் இல்லாமையால் அவை அதற்குப் பிரமாணமாகாமையறிக. இனி சூதசங்கிதை, ஞானசங்கிதை, கைலாசங்கிதை, வாயுசங்கிதை, என்றிவரெடுத்தெழுதும் சங்கிதாகமங்களெல்லாம், சிவாசாரியர் வியாக்கியானத்தில் கண்

டெழுதப்பட்டனவேதவிர, சொந்தமொன்று மில்லாமையறிக. இவ்வயிக்கியப் பிரமாணம் இன்னுமிவ்வுரையில் பல விடங்களில் வந்துள்ளன, அவைகளை இங்குப் பொருத்திக்காண்க என்றார் 54-ல் அவர் இவ்வெல்லாம் அஞ்ஞான மயமே என்று பேசுதலும் பேச்சேயன்று என்று கூறினர் அது போல இவ்வயிக்கத்திற்கும் பிரமாணங்கள் இவ்வுரையில் பல விடங்களில் வந்தன வென்று பேசுவதும் பேச்சன்று எல்லாம் இவ்வயிக்கப் பிரமாணமே யாதலாலென்பதாம். ஆகவே, எல்லாம் மாயாவாத முறையல்லது சிவாகமமுறை யில்லாமை கூறப்பட்டது. இனி, அவர் பிரமமென்று நிரூபித்தலும், நிரூபியாது போனலும் பிரமமாதல் நிச்சயமென்று கூறுதல்போல பொருத்தினுலும், பொருத்தாமற்போனுலும், எல்லாம் மாயாவாத அயிக்கிய பிரமாணமே யாதலால் பொருத்தவேண்டாம் என்றுணர்க. அதுநிற்க.

இனி இவ்வாறு அயிக்கியமடைந்த சீவன் முத்தனது கரணங்களெல்லாம் சிவகரணங்களானமைபால், பிராரப்தம் நசிக்குமளவும், கர்த்திருத்துவம் இன்றிச்செய்யும் அவன் செயலெல்லாம் சிவசெயலே யாமென்பார். அவன் வசத்தான தனது விருத்தியினையுடையவனுய் என்றார் என்றும், இதனல் பிரார்த்தம் புசித்துத் தொலையுமளவும் செய்யப்படுவனவாகிய ஆகாமிய கர்மங்கள் கர்த்திருத்துவமின்மையால் இவனைப் பற்றுவென்பது பெறப்பட்டது என்றும், சஞ்சிதமோ, ஞானக்கினியால் நீறுயிற்று, தற்போதமின்மைபால் மலமும் இவனை யணுகிதற் கிடமில்லை, மலகர்மங்களிலவாகவே, அவை காரணமாகப்பொருந்தும் தனுகரணபுவன போகவடிவமாயையு மிலதாகும். இதுபற்றியே மாயை முதலியவற்ருல் பற்றப்படாதவனுயென்றார் என்றும், முதலியவென்பதனல் கர்மமும் கொள்ளப்படும் என்றும், அப்படியானல் ஞானேதயத்தின்பின் அவன் பால்நிகழும் புண்ணிய பாவங்கட்குக் கதி யாதெனில், 308 சீவன் முத்தனது சரீரம், பிராரப்தக்ஷயத்தின் நீங்கவே, நிருபாதிகனுய் சிவசொரூபனுகவே எஞ்சியிருப்பன் என்றும் கூறினர், அயிக்கியமடைதல் பின்னே கூறுதலால் அயிக்கியமடைந்த சீவன் முத்தனென்று முன்னே கூறுவது விவர்த்த விவர்த்தமாதலறிக. இனி சீவன் முத்தராகிய இவர் ஐக்கியமடையாதிருத்தலாலும், இவர் திரிகரணங்களும் சிவநிந்தை சிவாகமநிந்தை முதலிய தூஷணம் செய்தலாலும், சீவன் முத்தனது கரணம் சிவகரணமென்பது விவர்த்தமாதலறிக. இனி 308ல் பராபத்தியினைச் செய்து சீவன் முத்தன் என்று கூறுதலால், செய்வான்

றன்மை முதலியன இன்றிசெய்தலென்பது விவர்த்தமாதலறிக. ஆகவே கர்த்திருத்துவ மிருத்தலால், ஆகாமிய கர்மங்கள் இவனைப் பற்றும், பற்றவே, கர்த்திருத்துவமில்லாமையால், ஆகாமியகர்மங்கள் இவனைப்பற்றாதென்பது விவர்த்தமாதலறிக. இனி 299 சஞ்சிதம் சஞ்சிதம் ஞானக்கினியால் நீறாயிற்றென்பது, குண்டலாகம முறை போலும் விரிந்த சஞ்சிதவினைகள் அன்புடன் நாம் விழிக்கவெந்தது என்று, சிவாகமங் கூறுதலாலும், இவர் மூலவியாக்யானி இதைப் பற்றியெடுத்துக் கூறாமையாலும், சஞ்சிதத்தைப்பற்றி மாயாவாத நூல் கூறாமையாலும், சஞ்சிதம் ஞானக்கினியால் கெடுமென்பது விவர்த்தமாதலறிக.

இனி தற்போதமில்லாதுபோனால், தத்துவப்பொரு ளில்லாமற் போம். ஆதலால் தற்போதமில்லாமையால் அவித்தை இவனை அணுகு தற்கு இடமில்லையென்பது விவர்த்தமாதலறிக. அறியவே தனுவாதி களாகிய மாயையும் இல்லையென்பது விவர்த்தமாம். இனி ஆதி சத் தத்தால் கர்மமும் கொள்ளப்படுமென்பது "ஸ்திரீ புங்நபுஞ்சகாதி" என்னுமாதிக்கு "நபுஞ்சகம்" முதலியவென்று நான்குலிங்கங் கொண்டு பொருள்கூறும் குண்டலாகமக் கூற்றாய் விவர்த்தமாதலறிக. 299ல் அப்படியானால் ஞானோதயத்தின்பின் அவன் பானிகழும் புண் ணிய பாவங்கட்குக் கதியாதெனில், அக்கதிக்குப் பிரமாணங் கூறு கின்றார், பிரமஞானோதயத்தின் பின் புண்ணிய பாவங்கள் உண்டா காமை குண்டலாகம முறையாம். உண்டாகாவது சிவாகம முறை என்று விபரீதமாய்க் கூறுகிறார். அது நிற்க, இனி அவர் பிரமாணம் "பிரார்த்தம் போகத்தினால் நசிக்கும், சஞ்சிதம் ஞானத்தினால் சர்ம்ப ராம்மற்றை ஆகாமியமான இருவருவகைக் கர்மம் அவனை நிந்திப்பவர் கட்குந் துதிப்பவர்க்குமாம் என்று பாரதங் கூறுமென்று, பாரத ராமா யண பாண்டித்தியங் காட்டினார். இப்பாரத வசனமென்பது இவர் மூலவியாக்கியானத்தின் 84-ல் காணப்படுகின்றது. அதில் சிவாசாரியர், முதலில் தேவிகாலோத்திரமும், இரண்டாவது பாரதமும், மூன்றாவது சிவதருமோத்தரமும் உதகரித்தார், இவர் அந்தமுறை சரியல்லவென்றோ அல்லது, அதிற் பார்த்தெழுதியதை மறைத்தற்கோ, யாதுக்கோ, அந்த முறை மாறி பாரதவசனம் முதலிலும், தேவிகாலோத்தரத்தை அதன் பின்னும், உதகரித்துந் தவிர, தேவிகாலோத்தர வசனமிரண் டரையில், அரையை மாத்திர முதகரித்து, சிவ தருமோத்தரத்தை முழுதும் நீக்கினார். ஆனால், இவர் அவருக்கு ஆகம முணர்ந்தோ

றென்று பட்டங்கட்டினபடியினாலும் புண்ணியபாவங்கட்கு கதியில்லை யென்பதுபோல, அவர் வியாக்கியானத்தை விட்டால் வேறு கதி யில்லாதபடியாலும், சந்தி விக்கிரக முறைபற்றி அவ்வாறு செய்தார். அது நிற்க. "பிராரத்தம் போகதோ நஸ்யது சேஷம் ஞாநேநதக்யதே இதாந்து விவிதகர் மகத்வேஷி பிரியவாதி நாம்" என்ற இடத்தில் சேஷம் சஞ்சிதமென்றும், இதாமாகாமியமென்று" நியாமகமில்லாமற் பொருள் கூறினர். ஆதலால் சேஷம் மேலே கூறப்படும் பிரார்த்த சேஷமாமல்லது சஞ்சிதமாதற்குச் சம்பந்தமில்லாத படியாலும், விரிந்த சஞ்சிதவினைகளன்புடன் நாம் விழிக்க வெந்தது என்னும் வசனத்தோடு மாறுபடுதலாலும் அது விவர்த்தமாதலறிக. இனி 300 மலாதி சாராதாகவே, எப்போதும் சிவ சொரூபமாகவே நிற்பன என் பது தோன்ற, சுவாநுபவத்தை யுடையவனாகின்றான் என்றார் என்று கூறினர். மலாதி சாராதென்று அவர் கூறியது விவர்த்தமென்று முன்னே கூறினம். ஆதலாலும் 308-ல் இவ்வாறு பாரப்த்தியினைச் செய்த சீவன் முத்தனது சரீரம் பிராப்த லக்ஷயத்தில் நீங்குமென்று அவர் கூறுதலாலும் எப்போதும் நிற்கமாட்டாமை மேலும் ஒரு போதுகூட சிவசொரூபனாக நிற்கமாட்டான். ஆதலால் எப்போதும் சிவசொரூபனாகவே நிற்பன் என்பது விவர்த்தமாதலறிக. இனிச் சிவ ஞானி பந்தமின்றி சுவானுபூதி யுடையவனா யிருப்பன் என்பதற்கு பிரமாணங் கூறுகின்றார் 301 எங்குமிருப்பதும் சாந்தமுமான சித்து பிரமமென் றனுபவிக்கின்றானென்றார். இதில் சிவஞானம் சிவஞானி பாசபந்தம் சிவானுபூதி என்பவையில் ஒன்றுங் கூறப்படாமையால் அது அதற்குப் பிரமாணமாகாமையறிக. இன்னுமதற்கு அவர் பிரமாணமென்று காட்டும், பைங்கலம் பாசுபதப் பிரமம் முதலிய வெல்லாம் அவ்வாறு சிவஞானி பந்தமின்றி சிவானுபூதி யுடையனா யிருப்பனென்று கூறாமையால், அவை அதற்குப் பிரமாணமாகாமை யுந்தவிர, 306-ல் அவன் ஸ்திரீகளோடும், ஞானங்களோடும், ஞாதிக ளோடும், புசித்தும், கிரீடித்தும், ரமிப்பவனாய் அங்குப் பொருந்து கின்றான் என்று கூறுதலால், அதற்கு மறுதலையாய சுவானுபவமில் லாமையுந் தவிர, ஸ்திரீ முதலிய பரானுபவமுடையவனா யிருப்ப னென்று கூறுதல் விவர்த்தமாதலறிக.

இனி அவதாரிகை சீவன்முத்தன் பிராரத்தவசத்தால் விஷயங் களை யறியுங் காலத்தும், அச்சுவானுபூதி நழுவா திருக்குமாறு செய்ய வேண்டிய திதுவெனக் கூறுகின்றாரென்று கூறினர். இனி சூத்தி

ரார்த்துவம் வருமாறு. கண்களுக்குக் காட்டுவானும், உம்மையால் காண்பானும் ஆத்மாவாம். ஆத்மாவுக்கு காட்டுவானும் காண்பானும் சிவனுவன். ஆதலால் ஆத்மாவுக்கு உபகரிப்பவஞன அச்சிவனிடத் தில் பராபக்தியினைச் செய்யவேண்டும் என்ருர்.

இனி வியாக்யானம் விஷயானுபவத்திலும் அவனே அறிவித்து அறிகின்ருன் என்னு முணர்ச்சி உளதாயின் யானென்னுந் தன்மை யின்றி, சிவானந்தாகாரவிருத்தியே நிகழும். நிகழவே அவ்வன்னியா கரா விருத்தியாகவே இடைவிடாமல் நிற்றலாகிய பராபத்தியினைச் செய்யவேண்டும், செய்யவே, அவன் சிவானுபூதியினின்று நழுவான் என்பது கருத்து. இவ்வாறு பராபத்தியினைச் செய்த சீவன் முத்த னது சரீரம் பிரார்த்தக்ஷயத்தில் நீங்கவே, நிருபாதிகனுய் சிவசொரூப னுகவே விஞ்சி இருப்பன். அது பரமுத்தியென்றும் விதேகமுத்தி யென்றும், கூறப்படுமென்ருர். அவதாரிகையில் சீவன் முத்தன் விஷயங்களை யறிதல் பிரார்த்த விஷயமென்ருர். அது வாஸ்தவ மானல் 306 சரீரத்தினின்றெழுந்து பரஞ்சோதியையடைந்த உத்தம புருஷன் ஸ்திரீஞானம் ஞாதிகளோடு புசித்தும் கிரீடித்தும் இருக் கிருன். அதாவது விதேகமுத்தியடைந்தவன் ஸ்திரீயாதிகளை அறிகிரு னென்று முன்னே கூறினுர். அது ஸ்திரீயாதிகளின் விஷயங்களே யன்றி வேறல்ல. ஆதலால் அந்தவிதேகமுத்தன் ஸ்திரீயாதி விஷயங் களை அறியுங்காலத்து சுவானுபூதி நழுவுமன்ருே, அவ்வாருனல் அவன் அது நழுவாதிருத்தற்கு இவர் கூறிய சாதனமென்னுய முடிந் தது. பரமுத்தனுக்கு நழுவுமென்று அவரே கூறுதலால், சீவன் முத்தன் பிராரப்தவசத்தால் விஷயங்களை யறியுங்காலத்தும், சிவானு பூதி நழுவாதிருத்தற்கு செய்யவேண்டியதிதுவென்பது விவர்த்தமாத லறிக. அதுநிற்க, இனி சிவப்பேற்றினையடைந்த சீவன், முத்த னென்று கூறி, 300ல் அவனே சிவஞானி என்றுகூறி, 306ல் சீவன் முத்தனை விதேகமுத்தனென்றுகூறி, 307ல் அவனே மாறிச்சீவன் முத்தனென்று கூறி, 308 அவன் பரமுத்தனென்றுகூறினுர். இவ் வாறுகூறும், விலாங்குநியாயமெல்லாம் குண்டலாகம முறைபோலும். இனி ஆத்மாவுக்கு உபகரிப்பவஞன சிவனெனவே ஆத்மாவுக்குப கரிப்பவனுகாத சிவனுண்மையும்பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி 307விஷயங்களை அறியுங்காலத்தும் சிவானுபூதிநழுவாதிருக்கச் செய்வ திது எனவே, உம்மையால்விஷயங்களை அறியாதகாலத்தும், சிவானு பூதி நழுவும் என்பது பெறப்படுதலால், அதுநழுவாமைக்குச் செய்வ

திதுவென்று கூறுமையால், அறியுங்காலத்து நழுவாமைக்கு மாத்திரம் செய்வதிதுவென்று கூறுதல் விவர்த்தமாதலறிக. இனி ஆத்மாவுக்கு காட்டுவானும் காண்பானும் சிவன் என்றவிடத்து, சிவன் ஆத்மாவுக்குக் காட்டுவான், அதாவது சிவன் ஆத்மாவுக்கு விஷயத்தைக்காட்டுவோன் என்பதுபோல், சிவன் ஆத்மாவுக்கு காண்பான் என்றால், அதன் தாற்பரியமென்னை, சிவன் ஆத்மாவுக்கு காண்போன் என்பது, குப்புசாமிராசு பொன்னம்பலப்பிள்ளை யவர்களுக்கு காண்போன் என்பது போலுமா, அல்லது சூரியன் கண்ணுக்குக் காண்போன் என்பது போலுமா, ஆதலால் சிவன் ஆத்மாவுக்குக் காண்போன் என்பவன் தாற்பரிய மின்னதென்று விளங்கவில்லை, மாயாவாத நூலில் காட்டிக் காணும் விவகாரமில்லாதபடியாலும், காணும் விவகாரமொன்றே மாயாவாத வழக்கமாதலாலும், தமக்கில்லாத காட்டுதலும், தனக்குத் தெரிந்தவர்போலக் கூற வந்து, காகம் அந்நடை நடக்கப்போய் தன்னடையும் இழந்ததுபோல், தனக்கேற்பட்டுள்ள காண்பான் வழக்குக்கூறத் தெரியாமல், சிவன் ஆத்மாவுக்கு காண்பான் என்று விவர்த்தம் கூறுகின்றார். தனக்கெதிரியிருந்தவர் சகாரப் பொருளறியாமல், இதற்கு பிறர் விவரீதப் பொருள் கூறினரென்றெழுதியதைக் கண்டு, தான் சகாரப் பொருள் தெரிந்தவர்போல் சகாரத்தால் சிவன் ஆத்மாவுக்கு காண்பானுமாம் என்று கூறி பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் கூறியபடி பரிபாஷார்த்தம் பண்ணினர். இனி சிவன் ஆத்மாவுக்கு காண்பான் 162 சிவன் சீவாத்மாவின் வாயிலாக அறிவனென்பது பொருளென்றால் அங்கும் இவ்வாறே சிவன் சீவாத்மாவுக்கு அறிவன் என்று எழுதல்வேண்டும். எழுதாமையானும், அவ்வாறு கொண்டாலும் சிவன் சீதாத்மாவின் வாயிலாக அறிவனென்பது சீவனுக்கு சுவதந்ர மில்லாமையை அறிவிக்குமென்பதால் இங்கு மவ்வாறு சுதந்திரமில்லாமையை அறிவிக்குமென்பது பெறப்படும், படுமாயின் படுமென்று எழுதினமையாலும், அது விவர்த்தமாதலறிக. இனி, சிவன் சீவனுக்கு காண்பானென்பது, சிவன் சீவன் கண்ணுக்கு காணமல் போகான். எப்படியும் சிவன் சீவன் கண்ணுக்கு காண்பானே யாமாதலால் சிவன் சீவன் கண்ணுக்கு காணுன் என்று பிறர் கூறுவர். அது கூடாமையால் சிவன் சீவனுக்கு காண்பானென்பது பெறப்பட்டு அது பிரமம் குட்டிச்சுவராய் காணப்படுமென்னு மாயாவாத முறையாதலறிக. இவ்வாறாதலால் ஆகமங்கிடந்த மூலையுமறியாது ஆகமங்கட்கெல்லாம் அச்சாணி

யாகிய இந்நூற்கு உரைசெய்வார் போர்புகுந்து இவ்வாறே அவர் கூறுவனவெல்லாம் விவர்த்தமல்லது, விவர்த்தமில்லாதது ஒன்று மில்லாமை இதனாலறிக. அதுநிற்க இனி யிங்கு சிவன் ஆத்மா வுக்கு காட்டுவோனென்பது 162ல் சீவன்வாயிலாகச் சிவனே யறி கின்றானென்றவிடத்து சீவன் சிவத்துக்குக் காட்டுகின்றான் என்ப தோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இதனாலே சீவன் முத்தன் விஷயங்களை அறிவான். அறியுங்காலத்துச் சிவாநுபூதி நழுவும் என்ற அவதாரிகைப்பொருள் சூத்திரத்தில் காணப்படாமல் விவர்த்த மாதன் மேலும், சிவன் காட்டுவனென்னும் சூத்திரப்பொருள் சீவன் முத் தன், சிவன் காட்டக் காணமல் தானே யறிகிறானென்பதோடு மாறு பட்டு விவர்த்த மாதலறிக. இனி 16ல் சீவன் அவித்தையினால் மறை மறைபட்டுள்ள பிரபஞ்ச விஷயங்களை சீவாத்மா வாயிலாக வறியும். அதாவது சீவாத்மாவின் உதவியால் அறியுமென்று கூறி இங்கு சீவ னுக் சிவனுபகரிப்போனென்று யாறிக்கூறுதல் விவர்த்த விவர்தமாத லறிக. இனி பத்தினியென்பது பூச்சியரிடத்தி லுண்டாகும் தொடர்ந்தபிரியம். அது கனிஷ்டபக்தி, பிரேமபக்தி, பராபக்தியென, மூவகைப்படும் அவற்றுளிங்குக் கூறியது மூன்றாவதான பராபக்தி யாம், இவற்றின் விரிவெல்லாம் எம்மாற் செய்யப்பட்டுள்ள நாரத பத்தி சூத்திர உரையிற் காண்க என்றார். இவற்றின் விரிவெல்லாம் பெருநூல்களில் காண்க என்றென்று, அங்கங்கு. இவ்வாசாரியர் கூறு வனவெல்லாம் இந்நூலென்பது இப்பொழுதுதான் நாம்நிச்சயித்தாம் ஆதலால், அப்பத்தி சூத்திரமுதலியவெல்லாம் குண்டலாகம மாத லானும், சிவாகமம் குண்டலாகமத்தோடு மாறுபடுதலானும், சிவாக மத்திற்கூறி யதனை குண்டலாகமத்திற் காண்க என்பது விவர்த்தமாத லறிக. இனி. 308 விஷயானுபவத்திலும் அவனே அறிவித்து அறிகின்றானென்னு முணர்ச்சி உளதானல் யானென்னுந் தன்மை யின்றி, சிவானந்த ஆகாரவிருத்தியே நிகழுமென்றார். அது 162ல் சிவனே சீவனுக்கு அறிவிக்கின்றதில்லை என்று அவர் கூறுவதோடு மாறுபட்டு விவர்த்தமாதலறிக. ஆதலால் சிவானந்த ஆகார விருத்தி நிகழுமென்பது விவர்த்தமாகவே அன்னியாகார விருத் தியே இடைவிடாது நிற்றலாகிய பராபத்தியினைச் செய்ய வேண்டுமென்பது விவர்த்தமாம். அது விவர்த்தமாகவே அவன் சிவானுபூதியினின்று எவ்வாற்றானும் நழுவா னென்பது விவர்த்த மாதலறிக.

இனி (288) சிவப்பேற்றினை யடைந்த சீவன் முத்தன் என்று சீவன்முத்தன் சிவப்பேறடைந்தமை கூறுவதும் தவிர, பாசம் நீங்கின வன் சிவத்தினைப் பெற்றவன், கிருகிருத்தியன், பிராப்த பிராப்பியன், அவனுக்கு இதன்மேற் பெறும்பேறு ஒன்றுமில்லை யென்றுங் கூறி, யிங்கு சீவன் முத்தன் பராத்தி செய்கிறான் சரீரம் போகும், இன்னு மவன் அடையவேண்டிய திருக்கிறது. இனி விதேக முத்தி யடை வன் என்று கூறுவன வெல்லாம் விவர்த்த விவர்த்தமாதலறிக. அது நிற்க. இனி—(308-ல்) சீவன் முத்தனது செயல்களையும் பர முத்தியினையும் கூறும் சுருதியாதிகள் வருகின்ற தென்றார் அவை, 309 அங்குஷ்டமாத்திரமும், புகையின்றிய ஜோதி வடிவினதும். பிரகாசிக்கின்றதும், உள்ளிருப்பதும், கூடஸ்தமும், அவ்வியமுமான ஆத்மாவினைத்தியானிக்க எந்தமுனி சுழுத்திபரியந்தமும், மரணபரி யந்தமும் தியானித்துக்கொண்டிருக்கிறானோ அவன் சீவன் முத்த னென்று அறியத்தக்கவனாகின்றான். அவன் தன்னிபன் கிருதகிருத் தியனாகிறான். தனது தேகம் காலவசப்படவே (விழவே) ஜீவன் முத்தபதத்தினைவிட்டு, வாயு தனது அசைவின்மையைப் பெறுவது போல, அதேகமுத்தத்தன்மையினை படைகிறான். சப்தமின்றியதும், பரிசமின்றியதும், ரூபமின்றியதும், அவ்வியயமும், அவ்வாறே இரச மின்றியதும், நிததியமும் கந்தமின்றியதும் அனாதி, அனந்தமும், மகத்திற்கு மேலானதும் துருவம், அதாவது சாசுவதமும், பூரண மும், நிராமயமும் எதுவோ, அதுவே மிஞ்சுகின்றது என்பது பைங்க லோபநிஷதம் இதில் சீவன் முத்தன் இயல்பு கூறப்படுகின்றதன்றி, சீவன் முத்தன் செயல் கூறப்படாமையாலும், இயலும் செயலும் ஒன்றாகாமையாலும், இது அதற்குப் பிரமாணமாகாமை யறிக. 308 தொடங்கி 320வரையும் வரும் அவர் பிரமாணங்களெல்லாம் அவ் வாறே அதற்குப் பிரமாணமாகாமையறிக. பக்கம் (௩௨௧) இனி இச் சூத்திரத்திற்கு சிவனோடு ஐக்கியமுறினும், அந்தர்யாமியாகவும், குரு வடிவாகவும் இருந்து, உண்மைபுணர்த்திய உபகாரியாதலால் அச்சிவத் தின் செய்நன்றிபுணர்தலாகிய கிருதஞ்ஞத்துவம் உளதாமாறுமேலான பத்தியினைச் செய்யவேண்டும் என்றுரை செய்வதுமுண்டு. அதுவும் சுருதியாதிகட்குடன் பாடேயாம் என்றார். உரைசெய்தலும் ஒன்று என்று கூறுவது இவ்வாசாரியர்முறை, மற்றை உரைசெய்வதுமுண்டு என்பது, குண்டலாகமமுறைபோலும். அதுநிற்க. இனி, பத்திசெய் தால் ஏகத்துவம்விட்டு அனேகத்துவமாய் முடியுமென்பது அறியா

மல் பத்தியினை செய்யவேண்டுமென்றல், 291-ல் ஏகனுயே எகனு
யென்றென்று அனேகம் வந்துவிடும் என்றஞ்சிக் கூறுதலோடு மாறு
பட்டு விவர்த்தமாதலறிக. இனி 321 இப்பிரசங்கத்தால் குருபத்தி
ஆவசியம் என்று அதற்குப் பிரமாணங் கூறுகின்றார். அவர் கூறும்
பிரமாணங்கள் அசிந்திய விசுவசாதாக்கியம் பராக்கியங்களாம். அவை
இவ்வியாக்கியானத்திற்கு மூலவியாக்கியானமாகிய சிவாசாரியர்
வியாக்கியானத்தில் 67-ல் காணப்படுகின்றன. அவர் அவற்றை 8-ம்
சூத்திரத்தில் உதகரித்தனர். இவர் வியாக்கியானம் அவர் முன்
கூறியதை பின்னும், பின் கூறியதை முன்னும், இடையில்
கூறியதை முன்னும் பின்னும் 8-ல் கூறியதை 10-லும்
10-ல் கூறியதை 7-லும், 4 வசனத்தில் 2 சந்தியும், 2 விக்
கிரகமும் செய்யும் சந்திரவிக்கிரகவியாக்கியானமாதலால், அவர்
8-ல் உதகரித்த வசனங்களை இவரிங்கு உதகரித்தருளினர். இவர்
அவர் விபரீதமறியாமல் விவர்த்த வியாக்கியானத்தில் விழுந்தவராத
லால் இவை யெல்லாம் விவர்த்தமாதலறிக. 329 இனி அவதாரிகை
இனி ஞானவாயிலாக முத்தியைப் பெறுதற்கு முக்கிய சாதனம்
யாதெனக் கூறுகின்றார் என்றார். இவர் வியாக்கியானத்திற்கு மூல
வியாக்கியானம் 86-ல் ஞானியானவன் கிருதக்னதோஷபரிகாரார்த்த
மும் லோகானுக் கிரகார்த்தமும், சிவயோக சரியை கிரியைகளை
முறையே அந்தர் பாக்கியங்களிற் செய்தலையே ஏகாதச துவாதச சூத்
திரங்கள் கூறுகின்றன என்று கூறுதலைக்கண்டு, இவ்வாறு சந்தி
விக்கிரகம்செய்தார். ஆதலால் முன்னே அவருக்கு ஆகமமுணர்ந்தோ
னென்று பட்டங்கட்டினதுந்தவிர இங்கு உரைசெய்வதுமுண்டு அது
வுஞ் சுருதியாதிகட்குடன் பாடேயாமென்று அவரை வேதம்
உணர்ந்தோரென்றும் பட்டங்கட்டுகின்றார். எத்தனை பட்டங்கள்
கட்டி எதிர்த்தாலும் சிவாகமியாகிய எம்மோடு எதிர்த்தல் முடியா
தென்பது யாம் இதுகாறும் கூறுமாறுபற்றி இனிது விளங்கும்.
ஆதலால் சுருதியாதிகட்கு உடன்பாடென்பது விவர்த்தமாதலறிக.
அதுநிற்க. 329ல் இனி ஞானவாயிலாக முத்தியைப் பெறுதற்கு
முக்கிய சாதானம் யாதெனக்கூறுகின்றார் என்று கூறினர் 308ல்
சீவன் முத்தன் சரீரம் நீங்கி முத்தியடைந்து விட்டானென்றும்,
288ல் சிவப்பேற்றினையடைந்த சீவன் முத்தனென்றும், 289 சிவத்
தினைப் பெற்ற சீவன் முத்தனுக்கு, இதன்மேற் பெறும்பேறில்லை
யென்றும் கூறி, இங்கு முத்தியைப் பெறுதற்கு முக்கிய சாத

னம் யாது என்று பழைய முத்தியைவிட்டு புது முத்திக்குசாத னம் எது என்று கேட்டல், மிருகேந்திரத்தில் சிவன் காரணப் பிரமமாயில் யிப்பதமுத்தி யென்றால், மறுபடி அங்கிருந்து உதிக்கிற படியால் வேதாந்திகளுக்குப் பந்தமோக்ஷம் அடிக்கடி உண்டாகின் றது என்றபடி அது குண்டலாகமமாகிய, வேதாந்த முறைபோலும். ஆதலால் அது முன்னே முத்தியடைந்தவன் மறுபடி முத்தி யடை தற்குச் சாதானம் கூறும் மாயாவாத முறையே யாதலறிக. இனி 188-ல் ஞானவாயிலாக முத்தி பெறுதற்கு குருமூர்த்தியே முக்கிய சாதனம் என்று முத்திபெறுதற்குரிய முக்கிய சாதனம் முன்னே தாமே கூறியதை மறந்து, மறுபடி இங்கு ஞானவாயிலாக முத்தி பெறுதற்கு முக்கிய சாதனம் யாது என்று வளவள குளகுள என்று அடிக்கடி மாறிமாறி கூறுதல் மாயாவாத முறையே யாதலறிக. மெய்ச்சோதி தங்கு சிறு கொள்ளி தன்னை விரகின்மைகொண்ட குரு கார்கச் சோதமென்று கருதி, குடம்பைதனி லுய்த்து மாண்ட கதை போல், இவ்வாறு விவரீதங்கொண்டு கூறுதல் தனக்கே கெடுதியாய் முடிந்து விவர்த்தமாதலறிக. இனி ஞான வாயிலாக முத்தியைப் பெறுதற்கு முக்கிய சாதன இரண்டென்று, அதாவது ஞானம் முக் கிய சாதனம், குரு முக்கிய சாதனம், என்று இரண்டு முக்கிய சாத னம் முன்னே கூறி, இங்கும் அவ்வாறு ஒரு முக்கிய சாதனம் கூறுதலால், முக்கிய சாதனம் மூன்று பெறப்படுகின்றன. விவர்த்தோ பாதானம் அபின்ன நிமித்தோ உபாதானம், பிரமோ உபாதானம், பெறப்படுதல் போல, மூன்று முக்கிய சாதனங்கள் பெறப்படுதல் குண்டலாகம முறையேபோலும். அது நிற்க, இனி அவர் சூத்தி ரார்த்தத்தை விசாரிப்போம். முத்தியின் பொருட்டு சிவஞானிகளான சத்துக்களை யடைந்து அவர்கள் வேடத்தினையும் சிவாலயத்தினையும் பூசிக்கக் கடவன், இவ்வாறு சிவஞானபோத சைவார்த்த நிர்ணை யத்தினை அறிக என்றார் சிவஞானிகளான சத்துகளெனவே சிவ ஞானிகளாகாத சத்துக்களும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. சைவார்த்த நிர்ணயத்தினை சிவஞான போதமென்னும் நூலில் அறிக என்பது, 148 அவர் கூற்றுக்களின் கண்டன மண்டனங்களை பெரு நூல்களிற் காண்க என்பது போலாம். ஆகவே கண்டன மண்டனங் கள் இந்த நூல் கூறுதபடியால் அவற்றைக் கூறுவது பெருநூலாத லானும், அவற்றை அதிற் காண்டல்போல இங்கு அவர் கூறும் அசைவார்த்த நிர்ணயமாகிய மாயாவாதப் பொருள் அசைவ நூலா

கிய மாயாவாதநூல் கூறுமாறு போல, சைவார்த்த நிர்ணயத்தை சிவஞான போதங் கூறுமென்பது பெறப்பட்டது. படவே அந்த நிர்ணயத்தை சிவாகமங் கூறாது என்று சிவாகம தூஷணஞ் செய்தவாறு காண்க. ஆதலால் அது விவர்த்தமாதலறிக. சிவாகமங் கூறும் சைவார்த்த நிர்ணயத்தை சிவஞான போதத்திற் காண்க என்பது, இங்கு குப்புசாமிராசு கூறும் மாயாவாதப் பொருளை பகவற்கீதையிற் காண்க என்றால், குப்புசாமிராசு சிவஞான போதத்தில் இல்லாத மாயாவாதப் பொருளை கூறினார். அவர் கூறிய மாயாவாதப் பொருள் அதிலில்லாதபடியால் பகவற்கீதையில் காணப்படுமாறு போல, சைவார்த்த நிர்ணயம் சிவாகமத்திலில்லாதபடியால் அதை சிவஞான போதத்திற் காண்க என்று சிவாகம தூஷணமாய் முடிதல் காண்க. இதனால் சூத்திரங்கள் தோறும் கூறுகின்றார் கூறுகின்றார் என்றென்று கூறும், அவதாரி முறை சிவாகம முறையாகாமை யெவ்வாறு, அவ்வாறே, சைவார்த்த நிர்ணயத்தினை சிவஞான போதநூலில் கூறிக என்பது சிவாகம முறையாகாமல், குண்டலாகம முறையாதலால் விவர்த்தமாதல் காண்க. இனி 329 சமம், சந்தோஷம், விசாரம், சாதுசங்கம் என்னும், மோக்ஷத்துவாரம் நான்கினும், சாதுசங்கமே முத்திக்கு இன்றியமையாத முக்கிய சாதனமென்பது தோன்ற, முத்தியின் பொருட்டு சத்துக்களை அடைந்து என்றார். சத்துக்களை யடைந்தபோது அவர்களாற் சொல்லப்படும் ஈசுர வழிபாட்டினைச் செய்தற்கு அவன் அவாங்கமனசகோசரனாதலால் சாநித்ய மிக்க அவனத் தாவர சங்கம வடிவங்களை வழிபடுக என்பார் அவர்கள் வேடத்தினையும், சிவாலயத்தினையும், பஜிக்கக்கடவன் என்றார். அங்ஙனமன்றி இச்சூத்திரத்துக்கு மலம் நீங்கிச் சிவனோடைக்கியமடைந்த சீவன் முத்தன் மலம் நீங்குமாறு வழிபடுக என்று பொருள்கொள்ளின், முன்னரே மலம் நீங்கிய அவன் பின்னரும் அது நீங்க வழிபடுதல் 27 பிட்டபேஷண நியாயமாவதோடு, முற் சூத்திரங்களிலும் கூறப்பட்டுள்ளவற்றிற்கு விரோதமாதலும் காண்க. அவ்வாறாயின் லோகரக்ஷணையின் பொருட்டுச் செய்வானெனக் கொள்ளின் இழுக்கென்னை யெனில் அவ்வாறு செய்தல் சுருதியாதிகட்கு உடன்பாடேயாம். அவனுக்கு இயற்கையுமாம் அது இச்சூத்திரப் பொருள் ஆகாமை முக்தியின் பொருட்டு, "செம்மலர் நோன்றாள சேரலொட்டா அம்மலங்கழீஇ" 28 என்னும் சூத்திர [illegible]லாற் காண்க. ஈசனடியார்களாகிய சத்துக்களை இவர்க[illegible]ளைக் கண்டு தெளி

தல் கூடாமையால் அவர்கள் வேடத்தினை என்றார் என்று கூறினர். சந்தோஷம் முதலிய நான்கும் மோக்ஷத் திவார மென்பது இதன்மேல் ஞான வாயிலாக முத்தி யென்பதோடும், குரூபதேசம் முத்திவழியில் என்பதோடும் மாறுபட்டு விவர்த்தமாதலறிக. இனி அந்த நான்கினுள் சாதுசங்கமே முத்திக்கு இன்றியமையாத முக்கிய சாதனமெனவே மற்றவைகளெல்லாம் அமுக்கிய சாதனமென்பது பெறப்பட்டது. இனி, 188-288 களில் ஞானமே முக்கியசாதனம், குருவே முக்கிய சாதன மெனவே, மற்றைவைகளெல்லாம் அமுக்கியசாதனமென்பது பெறப்படுமாதலால் முக்கிய சாசனம் மூன்றினுள் ஒன்றைநாட்டும் வழி மற்றவைவிட்டொழிதலால், இது மயில்நடநியாயமாகிய குண்டலாகம முறையல்லது, சிவாகமமுறை யாகாமையால், ஞானமே முக்கிய சாதனம், குருவே முக்கியசாதனம், சாதுசங்கமே முக்கியசாதனம், ஞான வாயிலாக முத்திபெறுதற்கு குருவே முக்கிய சாதனம், குருவாயிலாக முத்திபெறுதற்கு ஞானமே முக்கிய சாதனம், சாதுசங்க வாயிலாக முத்திபெறுதற்கு சிவாலயமே முக்கிய சாதனம், சிவாலயவாயிலாக முத்திபெறுதற்கு சாதுசங்கமே முக்கியசாதனமென்றென்றுங்கூறும், குண்டலாகமங்கூறும் சாதன முத்திகளையெல்லாம் அபிப்பிராயக்காரர் முதலிய சாது சங்கங்களுக்கே உபதேசிப்பாராக. அதுநிற்க. இனி 330 சத்துக்களை யடைந்தபோது அவர்களாற் சொல்லப்படும் ஈசுர வழிபாடென்றார் எனவே, சத்துக்களை யடையாதபோது அவர்களால் ஈசுரவழிபாடு சொல்லப்படாது விடுபடு மென்பது பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி சத்துக்களை யடைந்தபோதெனவே அடைதல் நியதமல்ல என்பது பெறப்படுதலால், சாதுசங்கம் முக்கிய சாதனம் ஆகாமையறிக. இனி அவர்களால் கூறப்படும் ஈசுர வழிபாடெனவே, ஈசுரவழிபாடு அவர்களாற் கூறப்படுமல்லது நூலாற் கூறப்படுவதன்று என்பது பெறப்படுதல், ஈசுரவழி பாடிந்த நூலிற் கூறப்பட்டுள்ளதென்று அவர் கூறுங் கூற்றோடு மாறுபட்டு விவர்த்த மாதலறிக. இனி, அவன் அவாங்கமனகோசரனுதலால் சாநித்தியமிக்க அவனது தாவர சங்கமங்களில் வழிபடுக என்றார். இதனது தாற்பரியமென்னை, குப்புசாமிராசு வெகு தூரத்திலுள்ள காசியிலிருப்பவராதலால் சாந்நித்தியமிக்க அவரது படத்தை வழிபடுகவென்றால், குப்புசாமிராசு வெகு தூரத்திலிருக்கிறார். அவரிருக்கிற விடத்திற்குப்போய் வழிபடுவது சாத்தியப்படாது என்று, சாநித்திய மிக்க அவரது படத்தை வழிபட்டால், வழிபட்டவனுக்கு அவராலாகிற

தென்னை ? அவரோ காசியிலிருக்கின்றார், அவரதுபடத்தை கன்னியா குமரியிலுள்ள ஒருவன் வழிபடுவது அவருக்குத் தெரியாது, தெரியா தாகவே அந்தப்படத்தை வழிபடுவோனுக்கு இவராலாவதொன்றுமில்லையே, அதுபோல, அவாங்மனகோசரத்துக்கும், தாவரசங்கமத்துக் கும் வெகுதூரம். ஆதலால் அவ்வழிபாட்டா லாவதென்னை ஒன்று மில்லையே, ஆதலால், ஏகான்மாவேதவிர, பூச்சியன் பூச்சிகள் என்றிரண்டான்மா இல்லை என்பவர் வழிபாடெல்லாந்தெரிந்து, வழிபட்டவராகப் பட்டங்கட்டி படாடோபம்பண்ணி, பூச்சி காட்டுவவெல்லாம் சிவாகமிகளிடம் பலிக்காது. ஆதலால் சாதுசங்கமே முக்கிய சாதனமென்று குண்டலதீக்ஷைகூறும் குண்டலாகமமுறைபற்றிக் கூறுவன எல்லாம் விவர்த்தமாதலறிக. இனி அங்ஙனமின்றி இச்சூத்திரத் துக்கு மலம் நீங்கிச் சிவனோடு ஐக்கியமடைந்த சீவன் முத்தன்மல நீங்குமாறு வழிபடுகவென்று பொருள்கொள்ளில், முன்னரே மலநீங்கின அவன் பின்னருமலநீங்க, வழிபடுதல் பிட்டபேடண நியாயமாவதோடு முற்சூத்திரங்களிலும் சுருதியாதிகளிலும் கூறப்பட்டுள்ளவற்றிற்கும் விரோதமாதல் காண்க என்றார். நியாயங்களும் விரோதங்களு மறிந்து கூறுவதில் இவரே பண்டிதரென்பது யாம் இதுகாறுங் கூறுமாறு பற்றி அறியப்படும், அதுநிற்க. இனி, 288-ல் சிவப்பேற்றினை யடைந்த சீவன் முத்தன் என்று, சீவன் முத்தன் சிவப்பேறடைந்தமை கூறுவதுந்தவிர, சீவன் முத்தன் கிருத கிருத்தியன், பிராப்த பிராப்பியனை அந்தச்சீவன் முத்தனுக்கு இதன்மேற் பெறும்பேறு வேறில்லை என்றுகூறி, 308-ல் பராபத்தியினைச் செய்த சீவன் முத்தனென்று கிருத்தியங் கூறுதலும், சரீரம் நீங்க சிவ சொரூபனாகின்றானென்று மோக்ஷங் கூறுதலும், பிறவும், முன்னரே மலநீங்கிய அவன் பின்னருமல நீங்குகின்றானென்று கூறுதல், பிட்டபேடண நியாயமாவதோடு முற்சூத்திரங்களிலும் சுருதியாதிகளிலும் கூறப்பட்டுள்ளவற்றிற்கு விரோதமென்று கூறுதலுமில்லையல்லவா? இவ்வாறிந்த நியாய விரோதங்கள் கண்டு காட்டுதல் இவர்க்கல்லது, வேறுயார்க்கு முடியும். இவர் கூற்றுக்களெல்லாம் கூறியது கூறல் முதலிய குற்றம் பத்தும், பிட்டபேடண நியாயமுதலிய தோஷ நியாயம் நூறும் அமைந்தனவென்பது யாம், ஸ்தாலிபுலாக நியாயம்பற்றிக்காட்டுதலால் விளங்கும். ஆதலால், சுருதி விரோதமே யொருவடிவாய்ச் செய்த அவர்வியாக்கியானத்தில் சுருதிவிரோதம், பிட்டபேடணநியாயம் என்று அவர் கூறுவன எல்லாம் சொற்சம்பிரமமேயல்லது வேறின்மையறிக. இனி, அவ்

வாறுனல் லோகரக்ஷணையின்பொருட்டு செய்வானெனக் கொள்ளிலி ழுக்கென்னை எனில், இழுக்கின்று. அவ்வாறு செய்தல் சுருதியாதிக ளுக்கு உடம்பாடேயாம். அவனுக்கு இயற்கையுமாம், அது இச் சூத்திரப் பொருளாகாமை முத்தியின் பொருட்டு, "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீ'' என்னும் சூத்திரப் பொருளாற் காண்க வென்றார். வழிபாடு செய்வானென்றல்— இழுக்கென்னை, இழுக்கில்லை. அது சுருதியாதிகளுக்குடன்பாடு அஃதவனுக்கு இயற்கை, ஆனாலும், அது இச்சூத்திரப் பொருளல்ல என்று கூறும் வாயிலாக முன் வழிபாடு செய்யலாம், அஃதவனுக்கு இயற்கைதானென்றொப்பி ஆனாலும் அந்த விஷயம் இச்சூத்திரப் பொருளல்லவென்று இவ்வுபசம்மாரத்திற் கூறுதலாலும், சுருதி யாதி என்று அவர் கூறுவன எல்லாம் மாயாவாத சுருதி என்பது எல்லார்க்கும் விளங்குமாதலாலும், சுருதியாதிகளுக்குடன்பாடான தும், அது இச்சூத்திரப்பொருளல்லவென்றதனாலும், அவர் இங்குக் கூறும் ஏகான்ம வாதப்பொருள் மாயாவாத சுருதிக்குடன்பாடேயல் லது, அது இச்சூத்திரப் பொருளல்லவென்பது பெறப்பட்டது. படவே, அவரது உபலக்ஷணம்பற்றி இதுவரையில் சுருதியாதி சுருதியாதி என்று அவர் கூறுவனவெல்லாம் மாயாவாத சுருதிக ளென்பதும், அவ்வச் சுருதியாதிகளெல்லாம் அவ்வச் சூத்திரப் பொருளல்ல என்பதுமாம் என்று அவருடம்பட்டு கூறியவாறாயிற்று. ஆகவே, நானுமறியேன், அவளும் பொய்சொல்லாள் என்னும் பழ மொழிப்படியும் நோயுந்தான் நோய்க்கு மருந்துந்தானென்றபடியும், தாமே தமது அபிப்பிராயத்தை கூறியவாறு காண்க. அதாவது ஆதி தொட்டு இவ்வந்த பரியந்தம், சுருதியாதி சுருதியாதி என்று கூறின வெல்லாம் மாயாவாத சுருதி என்றும், தான் கூறும் பொருளெல்லாம் சிவாகமத்துக்குடன் பாடாகாமல் மாயாவாத சுருதிக்கு உடன்பாடா மென்றும், அந்த மாயாவாத சுருதிப்பொருள் கூறுவது தமக்கு இயற்கையாமென்றும் ஆனாலுமப்பொருள் இப்பன்னிரு சூத்திரப் பொருளல்ல வென்றும், தன்னுடைய உள்ளக் கிடக்கையை உள்ள படி முடிவில் கூறியவாறு காண்க. அது நிற்க. இதை மற்றப் பதினொரு சூத்திரங்களின் இறுதி தோறும் இவ்வாறு வைத்து அவ் வக்கு கூறும் பொருள் மாயாவாத சுருதியாதிகட்கு உடன்பாடேயாம். அவ்வாறு மாயாவாதப் பொருள் கூறல் எனக்கு இயற்கையுமாம். ஆனாலும், அது அவ்வச் சூத்திரப் பொருளாகாமை காண்க. என்று

துக்கொண்டு அவ்வச் சூத்திரங்கள் தோறும் அவர் கூறுவன லாம் மாயாவாத சுருதிக்கு உடன் பாடென்றும், மாயாவாதப் ருள் கூறல் அவர்க்கியற்கையென்றும், அது அவ்வச்சூத்திரப் பொருளல்லவென்றும் உணர்ந்துகொள்க. அதுநிற்க. இனி, மலம் நீங்கி ஐக்கியமடைந்த சீவன் முத்தன் மலம் நீங்குதற்பொருட்டு மறுபடி வழிபடுதல் நியாயவிரோதமென்றார். அவதாரிகையில் ஞானவாயிலாக முத்தியைப்பெறுதல் யாதெனக்கூறுதல், 'ஞானவாயிலாக முன்பெற்ற முத்தியைப் பெறுதற்கு மறுபடி முக்கியசாதனம் யாதெனக் கூறுதல் என்பன நியாயவிரோதமா, விரோதமில்லையா, "சொல்லுதல் யார்க்குமெளிய" என்பதால் இவரிவ்வாறு சொல்லுவாரல்லது சொல்லியவண்ணஞ் செய்யுமாற்றலில்லாதவராம். இனி லோகரட்சணையின் பொருட்டு வழிபாடு செய்வனெனக்கொள்ளில் இழுக்கில்லை, சுருதியாதிகட்கு உடன்பாடே என்பது இவர் வியாக்கியானம், மூலவியாக்கியானத்தில் கிருதக்கினதாதோஷ பரிகாரார்த்தமும், லோகானுக்கிரகார்த்தமும் அந்தர் பாகிய பத்தியாகிய சிவயோகசரியா கிரியைகள் 11-12 சூத்திரங்களால் கூறப்படுகின்றன என்று இருப்பதைக்கண்டு எழுதியதன்றி, இவர் சொந்தமாகாமையறிக. சிவாசாரியர் வியாக்கியானம், வியாக்கியான லக்ஷணமில்லாமைமேலும், சிவாகமத்தின் உண்மை முடிபாகாமல் சிவாத்துவித முடிபாதலாலும், பூர்வாபர விரோதமாய் கூறுதலாலும், அவர் கூற்று விபரீதமாதலால், லோகானுக்கிரகமென்பது யார் கூற்றாயினும் விவர்த்தமாதலறிக. இனி 331 ஈசனடியார்களாகிய சத்துக்களை இவர்களென்று கண்டு தெளிதல் கூடாமையால், அவர்கள் வேடத்தினை என்றார், ஈசனடியார்களாகிய சத்துக்களெனவே, ஈசனடியார்களாகாத் சத்துக்களும் பெறப்பட்டு விவர்த்தமாதலறிக. இனி சத்துக்களை இவர்களென்று கண்டு தெளிதல்கூடாது. அதனால் அவர்கள் வேடத்தை என்று கூறினரெனில், அவ்வேடம் அசத்துக்களிடத்தும் இருத்தலால், அவ்வசத்துக்களும் சத்துக்களாதல்வேண்டும் அன்றியும், வேடமில்லாதவரும் சத்துக்களா யிருக்கிறார்கள் ஆதலால், வேடமில்லாதபடியால் சத்துக்களும் அசத்துக்களாதல்வேண்டும். ஆதலால் சத்துக்களை கண்டு தெளிதல் கூடாமையால் வேடத்தை யென்றாரென்பது விவர்த்தமாதலறிக. இனி "வேட நெறிநில்லார் வேடம்பூண்டென் பயன் வேட நெறி நிற்போர் வேடமெய் வேடம் வேடநெறி நில்லாரை வேந்தனுறுத்து வேடநெறி செய்யில் மெய்நெறியாமே என்று சிவா

கமம் கூறுதலால், தெளிதல் கூடாதென்று கூறுதல் வி மாதலறிக. சத்துக்களை இவர்களெனக்கண்டு தெளிதல் தானால், வேந்தனெறுத்தலாகாது. ஆகவே, வேடநெறி நிற்பி முடியாது, முடியாதாயின் உலகம் கெடும் என்று கூறிய, கூற்றை மறுத்த தூஷணக்கூற்று இவர் கூற்றுய்முடிதல் காண்க. ஆனல் சிவ தூஷணம், சிவாகமதூஷணம், பண்ணும் இவருக்கு, திருமந்திர தூஷ ணம் பண்ணுதல் பொருளல்ல. அதுநிற்க. இனி, 333ல் சிவாகமங் களில் கூறப்பட்ட பதிபசு பாசங்களின் நிச்சயம் இங்கு சைவார்த்த நிர்ணயம் எனப்பட்டதென்ருர் எனவே, சிவாகமங்களிலே பதி பசு பாசங்கள் நிச்சயமாகக் கூறப்படவில்லை அந்த நிச்சயம் இங்குள்ளது என்ற வாருயிற்று. அவ்வாறு பதி பசு பாசங்கள் சிவாகமங்களில் நிச்சயப்படக் கூறவில்லை. என்பதற்குப் பிரமாணம், இவர் சுருதியாதி யாகிய மாயாவாதசுருதியேபோலும், ஆதலாலிவ்வாறு பதிபசுபாச நிச்சயம் சிவாகமங்களில் கூறப்படவில்லை, ஆதலால் மாயாவாத சுருதி யைக் காட்டிலும் சிவாகமம் தாழ்ந்தது என்று கொண்ட உள் கொள்கை வெள்ளவெளியாய் வந்துள்ளமைகாண்க. அதுநிற்க. இனி "என்றலுமே சிவமேது ஞானமே தங்கிலங்கியிடும் போதமே தியம் பூவிரேல்" என்னும் வினவுக்கு, "நின்ற சிவமொன்றதனைத் தேர்தல ஞானம்" என்று பரமாப்தர் கூறுஞ் "சிவஞ்ஞான போதே சைவார்த்த நிர்ணயம்" என்பதே சாமஞ்சசமாதலாலும் சிவாகமத்தின் மூலை யின் மூலையுமறியாமல் அவ்வாறு கூறுதல் அசாமஞ்சசமாதலாலும் அது விவர்த்தமாதலறிக. அன்றி சைவார்த்த நிர்ணயமாவது சிவாக மங்களுள் கூறப்பட்ட பதி பசு பாச நிச்சயமேயானல் அது சிவாக மத்தில் காணமல் இதில் காண்க என்றுகூறுவது யாதுக்கு ஆதலால் அது விவர்த்தமாதலறிக. அன்றன்று பதி பசு பாச நிச்சயங்கூறும் சிவாகமத்தின் சாரமே சிவஞானபோதமானபடியால் சிவாகமத்தில் கூறும் பதி பசு பாச நிச்சயத்தினை சிவஞான போதத்தில் காண்க என் ருர் என்று அவர் கூறில், அவ்வாறே சிவஞானபோதம் சிவாகமத்தின் சாரமானல் சிவாகமம், அசாரமாயொழிதல் வேண்டும். அன்றியும், பழத்தின் சாரமானது பழத்தினின்று பிரிந்து வேறு நிற்குமானல், மறுபடி அப்பழம், பழக்கோது எனப்பெயர் பெறுமேயல்லது பழ மென்று பெயர் பெருமை யெவ்வாறு, அவ்வாறே சிவாகமத்தின் சாரம் அச் சிவாகமத்தினின்று வேறு பிரிந்து சிவஞான போதமாய் விட்டால், அச்சிவாகமம் சிவாகமமென்று பெயர் பெருமல், சிவாகமக்

கோது என்று பெயர் பெறுமாறு காண்க. காணவே, சாரமில்லாத கோது என்று சிவாகமத்தைத் தூஷணஞ் செய்தவாறு காண்க. ஆதலால், சிவாகமத்தில் கூறும் பதி பசு பாச நிச்சயத்தை சிவஞான போதத்திற் காண்க என்று, சிவாகமமெல்லாங் கரைகண்டவர்போல அபிநயித்துக் கூறுதல் விவர்த்தமாதலறிக. 307-ல் இது சிவன் சீவனுக்கு விஷயத்தைக் காண்பான் என்றவர் கூறுதல் போலும். குப்புசாமிராசு கம்பேனியாருக்குச் சிவாகமத்தைக் காண்பவராதல் போலும். இனி, சிவன் சீவனுக்கு விடயத்தைக் காணுமையெவ்வாறு அவ்வாறே குப்புசாமிராசு கம்பெனியாருக்குச் சிவாகமத்தைக் காணும் அதினெதிர் மறையாதலுமறிக. இதினுலே சிவாகமத்தில் கூறும் பதி பசுபாச நிச்சயத்தை சிவஞான போதத்திற்காண்க என்றது, எவ்வாறு விவர்த்தமோ அவ்வாறே அவர் சிவஞான போதத்திற்குக் கூறிய தத்துவப் பிரகாசமும் விவர்த்தமாதலறிக. அறியவே சிவஞானபோதம் சிவாகம சாரமென்றும், பின் வேதாகம சாரமென்றும், மாறிமாறிக் கூறிய பிரமநிஷ்ட பண்டிதரும் அவருக்குச் சகபாடியாய் நின்று, சிவஞானபோதஞ் சிவாகம சாரமென்று கூறின, சுவாமிநாதபண்டிதரும், சிவஞானபோதம் உபநிடத சாரமென்று கூறின சிவாநந்த சுவாமிகளும், சிவஞானபோதம் சிவாகமத்தில் நன்றாய் விளங்குமென்று கூறின வடிவேற் செட்டியாரும், சிவஞான போதம் சகலாகமசாரமென்றுகூறின சுப்ரமணிய சாஸ்திரிகளும், சிறந்ததான படியால், சிவஞானபோதமென்று கூறின பாலசுப்பிரமணியபிள்ளையும், சிவஞானபோதம் சித்தாந்த வாதரவுவென்று கூறின பொன்னம்பல பிள்ளையும், என்னுமெழுவரும் கூறுவனவெல்லாம் விவர்த்தமென்றும், அவை விவர்த்தமாகவே வியாக்கியானம்போலத் தோன்றுமிது விவர்த்தமென்று கூறவேண்டா மென்றும், அதுவிவர்த்தமாதற்குச் சாட்சி, அதற்கு மூலமான சிவாசாரியர் செய்த விபரீத வியாக்கியானமேயென்றும், அதனுல் அவரது தத்துவப் பிரகாசம் சகல மாயாவாத நூன்மயமாய் நின்று சிவாகம தூஷணமே பொதிந்து கிடக்கின்றதென்றும், அதனுல் அது சிவாகமத்துக்கு நேரே விரோதமாமென்றும் பெறப்பட்டவாறறிக.

சிவத்துவப் பிரகாசிகை ஒருவாறு முற்றிற்று.

British India Press, Royapettah, Madras.

இப்புத்தகம் கிடைக்கும் இடங்கள்.

ஆடூர்-பெரியசாமி பிள்ளை,

சிவஞானத்திருத்தளி,

செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெ

ஸ்ரீ சித

ஸ்ரீமத்-இராமலிங்க சுவாமிகள்,

திருநாவுக்கரசு சுவாமிகள் மடம்,

சாமி சந்நிதித் தெரு,

திருநெல்வேல